மஹாமகம்
சுதேசி பொருட்காட்சி, சங்கீத விழா
கும்பகோணம்

12—2—45ல் திறக்கப்பட்டு
25 தினங்கள் நடைபெறும்

5 MAR 1945

திறப்பாளர்:

ஸர். டி. ஆஸ்டின் C.I.E., K.C.I.E., I.C.S.,
அவர்கள்

★ வியாபாரப் பெருக்கு

★ இன்னிசைக் கானங்கள்

★ விநோத வைபவங்கள்

M. V. தியாகராஜன்,
தலைவர்

C. ராமசாமி முதலியார்,
C. L. ஆராவமுதய்யங்கார்,
காரியதரிசிகள்.

2000 வருஷங்களுக்கு முன்

முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.

மைசூர்
சந்தன சோப்

சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே

★ ★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★ ★

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A.ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

பிப்ரவரி 9 உ முதல்

வெற்றிகரமாக நடைபெறுகிறது.

×

காரைக்குடி
தஞ்சாவூர்
சித்தூர்
காகினடா
ஏலூர்
மதனபள்ளி
பெர்ஹாம்பூர்
ராமச்சந்திரபுரம்

×

Y. V. ராவ்
கமலா-கோட்னிஸ்
பானுமதி
நாராயணராவ்
பலிஜபள்ளி
நடித்தது

நரஸூ ரிலீஸ்

"ஆஸ்க்யூ"

(மரச்சாமான்களுக்கு நீடித்து உழைக்கும் சக்தியை கொடுப்பது)

இருபதாம் நூற்றுண்டில் கண்டுபிடிக்கப்பட்ட உலக அதிசயங்களில் ஒன்று

மட்டரகமான எவ்வித காட்டு மரங்களுக்கும் முதல்தரமான தேக்கு எஃகு, இரும்பு முதலியவைகள்போல்நீடித்து உழைக்கும் சக்தி அளிப்பது "ஆஸ்க்யூ"

"ஆஸ்க்யூ"வினுல் பாதுகாக்கப்பட்ட எந்த மரமும் நீரிஞலோ, வெயிலிஞலோ கெட்டுப்போவதில்லை. தீ பிடிப்பதும் சுலபமானதல்ல.

எஃகு பித்தளை வெண்கலம் முதலிய உலோகங்களை பாதிக்காததும், கரையான், வண்டு வகைகளை தீண்டாமல் தடுத்து ரக்ஷிப்பதும் "ஆஸ்க்யூ"

இந்திய விஞ்ஞானிகளாலும், மற்றும் அகில உலகத்திலும் அனேக கடும் சோதனைகளுக்குள்ளாகி, தனக்கு நிகரில்லை என்ற பேரும் புகழும் பெற்று முதன்மை ஸ்தானம் வகிப்பது "ஆஸ்க்யூ"

• உலகத்திலேயே மிகப் பெரிய அமெரிக்காவிலுள்ள 'பெல்டெலிபோன்' கம்பெனியாராலும், பிரபல டாடா கம்பெனி ரயில்வேக்கள், சர்க்கார் ஸ்தாபனங்கள், கண்டிராக்டர்கள் முதலிய அனேகரால் விரும்பி உபயோகிக்கப்பட்டுவருதும் ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும், வீட்டிற்கும் இன்றியமையாதது.

"ஆஸ்க்யூ"

மர உலகின் ஜீவநாடி

போன மகாமகத்தின்போது ஆரம்பித்த ஆராய்ச்சியின் பயன், இந்த மகாமகத்தில் வெற்றியடைந்து அநேகருடைய தேவையை பூர்த்திசெய்து வருகிறது.

"ஆஸ்க்யூ" பொடியாகவும் பசையாகவும் எங்கும் கிடைக்கும்.

அரை பவுண்டு ஆஸ்க்யூவை ஒரு காலன் தண்ணீரில் கலந்து உபயோகிக்கவேண்டும்.

உங்கள் தேவைக்கு எழுதவும்:-

ஸ்ரீனிவாஸ் ஜெனரல் டிரேடிங் கம்பெனி

சேலம் ஜங்ஷன்

கிளை ஆபீஸ்:— 17—A அரண்மனைகாரத்தெரு, ஜி. டி. மதராஸ்.

ராதா ஸில்க் எம்போரியம்

பட்டு ஜவுளி வியாபாரம்

119, பெரிய தெரு :: கும்பகோணம்

(Phone 8016) ஹெட் ஆபீஸ்: மயிலாப்பூர்

எங்கள் சொந்த கைத்தறிகளில் தயார் செய்யப்பட்ட அசல் கொள்ளேகாலம் பட்டு சேலைகளும் பலவூர் நூல் ஜவுளி தினுசுகளும் ஏராளமாக விலை நயமாக கிடைக்கும்.

N. B. பூரா ஜரிகை கொடி வேலைசெய்த கிங்காப் சேலை ஓர் ஸ்பெஷல் ரகம்.

ஸ்பெஷல் ஆர்டர்கள் உடனே தயார்செய்து கொடுக்கப்படும்.

(Pro.) R. K. திருவேங்கட செட்டியார்

நவீன ரகங்களில்

ப்ரெஸென்டேஷன் - செட்டுகள்
குடும்பத் தேவைக்கான வெள்ளி பாத்திரங்கள்
தங்கம் - கல் நகைகள்
புளூ ஜாகர் - வைர நகைகள்

ரெடியாக எப்பொழுதும் நாணயம் கியாரண்டியுடன் "VISI" ஸீல் போட்ட சாமான்கள்

கிடைக்கும் இடம்:

ஏ. ஆர். விஸ்வநாத செட்டியார்

[S/o ஏ. ஆர். ராஜகோபால செட்டியார்]

ஷராப் வியாபாரம்

100, பெரிய தெரு — கும்பகோணம்

ஆர்டர்களுக்கு குறிப்பிட்ட டயத்தில் செய்துகொடுக்கப்படும்.

வைத்ய ரத்ன

பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின்

ஸ்தாபிதம் 1898

ஐம்பது வருஷ புகழ்பெற்ற

"ஜீவாம்ருதம்"

ஒரு உயர்ந்த ரத்த சுத்தி திராவகம்

தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி
ஊக்கத்துடனும் உற்சாகத்துடன்
இருக்க உதவும் சிறந்த டானிக்

ஆயுர்வேதாஸ்ரமம்

தியாகராயநகர் - மதராஸ்



தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW.108-111 W. WOODWARD LTD LONDON, ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

Ic
MGS.4.6.7

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்
20-ஆவது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரை

திருவாவடுதுறை ஆதீனம்

சைவ சித்தாந்தம் என்பது வேதம் சிவாகமம் என்னும் இரண்டனையும் பரமப்பிரமாணமாகக் கொண்டு நடைபெறும் சமயமாகும். இந்தச் சைவ சிந்தாந்தம் பூர்வத்தில் பல பரம்பரைகளில் வழங்கி வந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டில் இந்தச் சமயக் கோட்பாடு மறுபடியும் நிலைநிறுத்தவேண்டிய நிலையில் இருந்தது. அப்பொழுது தமிழ் நாட்டிலே திருவெண்ணெய் நல்லூரிலே சிவபெருமான் திருவருளால் அவதரித்து இந்தச் சைவசிந்தாந்தைப் பிரதிஷ்டை செய்த மகநீயர் ஸ்ரீ மெய்கண்ட தேவராவர். அவர் ஸ்ரீ நக்ஷினுமூர்த்தியிடம் சிவஞான போதத்தை உபதேசம்பெற்ற திரு நந்திதேவர் பரம்பரையில் வந்த ஸ்ரீபரஞ்சோதி மாமுனிகளிடம் சிவஞானுபதேசம் பெறறு, அப்பரஞ்சோதிமாமுனிகள் கட்டளையின்படி வடமொழிச் சிவஞான போதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தருளி, அதற்கு வார்த்திகப் பொழிப்பும் அருளிச் செய்து, தாம் பெற்ற ஞானத்தைத் தமது மாணுக்கர் பல்லோருள்ளும் சிறந்த ஸ்ரீ அருணந்தி சிவாசாரியாருக்கு உபதேசித்தருளினுர். அவர் சிவஞானபோதத்தின் வழிநூலாகச் சிவஞான சித்தியார் (பரபக்ஷம் சுபக்ஷம்) என்னும் நூலையும், இருபாவிருபஃது என்னும் மற்ருேர் நூலையும் அருளிச் செய்து, தாம் அடைந்த அந்த ஞானத்தைத் தமது மாணுக்கர் பல்லோருள்ளும் சிறந்த ஸ்ரீமறைஞான சம்பந்த நாயனுருக்கு உபதேசித்தருளினுர். அவர்தாம்பெற்ற ஞானத்தைத் தமது மாணுக்கர் பல்லோருள்ளும் சிறந்த கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவாசாரியாருக்கு உபதேசித்தருளினுர். ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் தமிழில் சிவப்பிரகாசம் முதலிய எட்டுச் சிந்தாந்த சாஸ்திரங்களையும் வடமொழியில் ஸ்ரீபௌஷ்கராகமத்திற்கு வியாக்கியானம், சதரத்ந சங்கிரகம் முதலிய நூல்களையும் அருளிச்செய்து அவற்றைத் தமது மாணுக்கருட்சிறந்த அருணமச்சிவாய தேசிகருக்கு உபதேசித்தருளினர். அவர் சித்த மூர்த்திகளாக விளங்கும் சித்தர் சிவப்பிரகாச தேசிகருக்கு உபதேசித்தருளினுர்.

சித்தர் சிவப்பிரகாச தேசிகர் திருமூவலூரிலே பரம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே அவதரித்தருளிய (1) ஸ்ரீ நமச்சிவாய தேசிக மூர்த்திக்கு உபதேசித்தருளினுர். இவர்கள் தமது ஆசிரியர் கட்டளையிட்டருளியபடி திருவாவடுதுறையிலே எழுந்தருளியிருந்து சைவ சித்தாந்தத்தைப் பக்குவான்மாக்களுக்கு உபதேசம் புரிந்து வருவாராயினர். ஆகையால் இவர்களே திருவாவடுதுறை ஆதீனத்துக்கு முதற்குரு ஆவார்கள். இவர்களிடம் உபதேசம் பெற்ற (2) ஸ்ரீ மறைஞான தேசிகர் உபதேசம் கேட்ட மாத்திரையே சிந்தித்து, தெளிந்து இடையரு நிஷ்டையில் வீற்றிருந்தருளினர். பின்பு ஸ்ரீ நமச்சிவாய தேசிக மூர்த்தி தமது ஞானபரம்பரை விளங்கும் வண்ணம் (3) ஸ்ரீஅம்பலவாண தேசிகருக்கு அபிஷேகம் செய்து சாஸ்திர உபதேசம் செய்தருளினர். அவர் தசகாரியம் சித்தாந்தப் பஃருெடை முதலிய பல ஞான சாஸ்திரங்களை அருளிச்செய்து, தம்மை அடைந்த வைஷ்ணவப் பிராமணரும் கல்வி அறிவொழுக்கங்களிற் சிறந்த பரிபக்குவருமான உலகுடையநாயனுரென்பவருக்குச் சைவ சந்நியாசம் கொடுத்து நைஷ்டிக நிர்வாண தீக்ஷை செய்து ஞானுபதேசம் செய்தனர். உலகுடைய நாயனுர் தமது ஆசிரியர் மீது தோத்திரமாகப் பத்துப் பாடல்களை அருளிச் செய்தனர். அவை யனைத்தும் சித்தாந்தக் கருத்து நிறைந்தன. பின்பு ஸ்ரீ அம்பலவாண தேசிகர் (4) ஸ்ரீ உருத்திர கோடி தேசிகருக்கும் அவர் (5) ஸ்ரீ வேலப்ப தேசிகருக்கும் அவர் (6) ஸ்ரீ குமாரசுவாமி தேசிகருக்கும் அவர் (7) பிற்குமார சுவாமி தேசிகருக்கும் அவர் (8) மாசிலாமணி தேசிகருக்கும் அபிஷேகம் செய்து சாஸ்திரோபதேசம் செய்தருளினர்.

ஸ்ரீ பிற்குமார தேசிகர் காலத்திலே சின்னப் பட்டத்திலிருந்து பரிபூரண மடைந்த ஸ்ரீ முத்தம்பலவாண தேசிகரிடம் ஞானோபதேசமும் சங்காபிஷேகமும் பெற்ற ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் வடமொழி தமிழென்னும் இரண்டு மொழிகளிலுமுள்ள அரிய விதிகளைத் திரட்டி இலக்கணக் கொத்தென்னும் நூலையும் தசகாரியமென்னும் ஞான நூலையும் அருளிச் செய்தனர்.

இந்த ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஒருநாள் நள்ளிரவில் தஞ்சாவூரிலிருந்த மகாராஷ்டிர அரசர் பஞ்சம வேடம் பூண்டுவந்து பசியால் வருந்துபவர்போல ஓலமிட்ட காலத்தில் மடைப்பள்ளி சென்று அன்னம் கறி முதலிய எடுத்துவந்து தூரத்தே பாத்திரத்தை வைத்துப் பசி நீங்கப் புசித்துப்போம்படி சொல்லியருளினர். இச்செய்தியறிந்த மன்னர்பிரானுர் ஆதீனத்தினிடமும் ஸ்ரீ மகா சந்நிதானத்தினிடமும் கௌரவமும் பக்தியுமுடையவராயிருந்தார். பின்பு ஒரு சமயம் இத்தேசிக மூர்த்திகள் காவேரி சங்கம ஸ்நானம் செய்து திருவெண்காடு சேர்ந்திருந்தார்கள். அப்பொழுது அரசரும் அங்கே வந்திருந்தனர். அப்பொழுது அரசர் ஒரு மண்டலம் பிராமண போஜனம் சிறப்பாகச் செய்வித்து அதன் உயர்வு எல்லார்க்கும் புலப்படும்படி அவ்வுச்சிட்டத்தை ஓர் உவர்க்கூபத்திலே போடச்செய்து முடிவில் தூர்வை எடுப்பித்தனர். அக்கிணற்றிலே புழுக்களும் உவரும் நீங்காமலிருந்தன. இதனை யறிந்த இந்த ஞானதேசிகர் ஒரு மண்டலம் மாகேசுவர பூசையை அரசர் வாயிலாக நடத்தித் தம் மடாலயத்திலுள்ள உவர்க்கூபத்திலே அடியவர் பரிகலத்தைப் போடச்செய்து பின் அரசரையும் உடன்வைத்துக் கிணற்றைத் தூர்வை எடுப்பித்தபோது அதிலுள்ள உவர் நீங்கி நறுநீர் சுரந்தது. அரசர் அக்கிணற்றுக்குப் 'பரிகலக் கிணறு' என்று பெயரிட்டு மடாலயத்துக்குச் சர்வமானிய நிலமும் விட்டனர். அக்கிணறும் சர்வமானிய நிலமும் இன்னும் விளக்கமாயிருக்கின்றன.

பின்பு ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் (9) ஸ்ரீ இராமலிங்க தேசிகருக்கும் அவர் (10) ஸ்ரீ வேலப்ப தேசிகருக்கும் அபிஷேகம் செய்து உபதேசம் புரிந்தருளினர். ஸ்ரீ வேலப்ப தேசிகர் பறியலூர்ப் புராணத்தைத் தமிழிற் பாடியருளினர். அவர் (11) ஸ்ரீ பின் வேலப்ப தேசிகருக்கு அபிஷேகம் செய்து உபதேசம் புரிந்தருளினர்.

10-வது ஸ்ரீ வேலப்ப தேசிகர் காலத்தில் சின்னப் பட்டத்திலிருந்து பரிபூரணமடைந்த பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகரிடம் சைவ சந்நியாசமும் சிவ தீக்ஷையும் பெற்று விளங்கிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான போத சூத்திரங்களுக்கு ஸ்ரீ மெய்கண்ட தேவர் அருளிய வார்த்திகத்தின்மேல் மகா பாஷ்யம் செய்தருளினுர்கள். அதனுல் இவர்கள் சைவசித்தாந்த பாஷ்யகாரரென்று சொல்லப்படுவார்கள். இவர்கள் அருளிய பாஷ்யம் இவர்கள் பெயரால் சிவஞான மாபாஷ்ய மென்றும், தமிழ்மொழியில் பாஷ்ய மென்பது இஃதொன்றேயாதலாலும் வடமொழியில் பாணினி அஷ்டாத்தியாயிக்கு வரருசியார் இயற்றிய வார்த்திகத்தின்மேல் ஆசிரியர் பதஞ்சலியாரியற்றிய மாபாஷ்யம் போன்று இஃதிருத்தலாலும் திராவிட மகா பாஷ்ய மென்றும் வழங்கப்படும். இவர்கள் இலக்கணம் தருக்கம் சமயம் சம்பந்தமாக அருளிய நூல்கள் பல. இவர்கள் மொழி பெயர்த்த புராண காவியம் காஞ்சிப்புராணம் முதற்காண்டமாகும். இவர்கள் அருளிய பிரபந்தங்கள் பல. கண்டன நூல்கள் பல. சுருங்கச்சொல்லின் இவர்கள் அறிவு புகாத இடமில்லை. இவர்கள் மாணவர் கவிராக்ஷஸரென்று புகழப்படும் ஸ்ரீகச்சியப்ப முனிவர் முதலிய பன்னிருவர். தமிழ் நாட்டில் இந்த ஸ்ரீமத் மாதவச் சிவஞான சுவாமிகள் பரம்பரையினராலேதான் தமிழ்க்கல்வியும் சைவ சமய ஞானமும் பரவின.

ஸ்ரீ பின்வேலப்பதேசிகர் (12) ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகருக்கு அபிஷேகம் செய்து ஞானோபதேசம் செய்தனர். இத்தேசிகர் சிவாகமத்தில் இரண்டு லக்ஷம் கிரந்தம் உணர்ந்தஉத்தமோத்தம ஞானுசாரியர். இவர் சிவக்ஷேத்திர யாத்திரை செய்தபொழுது இராமநாதபுரத்திலெழுந்தருளி இருந்தார். அப்பொழுது மழையில்லாமல் பயிர் வாடுவதையும் ஜனங்கள் வருந்துவதையும் சேது

பதி மன்னர் இத்தேசிக மூர்த்திகள்பால் வந்து தெரிவிக்கத் தேசிக மூர்த்திகள் ஆதீன உபாசனா மூர்த்தியாகிய ஸ்ரீஞானமா நடராஜப்பெருமானுக்கு விசேஷ பூஜை செய்து ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபம் செய்து கொண்டிருந்தனர். அவ்வளவில் மேகங்கள் திரண்டு சோனாமாரியாக மழைபெய்ய நாடு செழித்தது. அரசர் மகிழ்ந்து திருவாவடுதுறை ஆதீனத்திற்கு அடிமையாகிப் பல கிராமங்களைச் சர்வமானியமாக விடுத்து தமது அரசுக்குரிய இராமநாத புரத்தில் மடாலயம் கட்டுவித்தார்.

ஸ்ரீதிருச்சிற்றம்பல தேசிகர் (13) ஸ்ரீ அம்பலவாணதேசிகருக்கும் அவர் (14) சுப்பிரமணிய தேசிகருக்கும் அவர் (15) ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்கும் அவர் (16) சுப்பிரமணிய தேசிகருக்கும் அபிஷேகம் செய்து ஞானோபதேசம் செய்தருளினர்.

இவர்கள் காலத்திலே ஆதீனத்தில் தமிழ்க் கல்வியும் சமயக்கல்வியும் தம்மின் இகலி வீறு கொண்டெழுந்தன. இவர்கள் காலத்திலே இவர்கள்பால் வந்து பரிசுபெறாத வடமொழிப் புலவரோ தமிழ்ப்புலவரோ இல்லையென்று சொல்லலாம். இவர்கள் ஸ்ரீ பாஷ்யகாரராகிய ஸ்ரீமத் மாதவச்சிவஞான சுவாமிகள் சிவஞானசித்தியாருக்கு அருளிய பொழிப்புரையைத் தழுவிப் பதவுரை செய்தருளினார்கள்.

இவர்கள் (1) 17 ஸ்ரீ அம்பலவான தேசிகருக்கும் அவர் (18) ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கும் அவர் (19) ஸ்ரீ வைத்தியலிங்கதேசிகருக்கும் அவர் இப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்தில் ஞான அருட் செங்கோல் செலுத்திவரும் (20) ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகளுக்கும் அபிஷேகம் செய்து ஞானோபதேசம் செய்தருளினார்கள்.

இந்த மகா சந்நிதானமவர்கள் (1) ஆதீனத்திற்கு இடைக்காலத்தில் ஏற்பட்டிருந்த ஒன்பது லக்ஷ ரூபாக் கடனைத் தாம் ஆட்சி கொண்ட ஏழு ஆண்டுகளுக்குள் நீக்கியருளினார்கள். (2) ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் போக்கிய (ஒத்தி) த்திலிருந்த நிலங்களைத் திருப்பினார்கள். (3) பழுதுபட்டிருந்த கிளை மடாலயங்களைச் செப்பஞ் செய்தார்கள். (4) ஸ்ரீமத் மாதவச்சிவஞானசுவாமிகள் 'ஸ்ரீ பாஷ்யம்' செய்தருளிய இடமாகிய காஞ்சிபுரத்து மடாலயத்தை முற்றிலும் புதுப்பித்தார்கள். (5) ஸ்ரீ பாஷ்யகாரர் ஜனன பூமியாகிய விக்கிரம சிங்கபுரத்தில் அவர்கள் கிருகத்தில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் ஓர் நூல் நிலயம் ஏற்படுத்தினார்கள். (6) திருநெல்வேலியில் 'தேவார பாடசாலை ஒன்று அமைத்திருக்கிறார்கள். (7) தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை முதலிய பல சைவ சபைகளுக்கு ஆண்டுதோறும் பொருளுதவி செய்து வருகிறார்கள். (8) ஆதீனத்திலிருந்து நூல் வெளியீடு செய்விக்கிறார்கள் (9) பல ஆலயங்கட்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்வித்திருக்கிறார்கள் (10) திருவிடைமருதூர்த் தேவஸ்தானத்துக்கு இடபவாகனமும் அம்பிகைக்கு அங்கியும் செய்துதவியிருக்கின்றார்கள். (11) ஆதீன பரமாசாரிய மூர்த்திக்கு வைர நெற்றிப்பட்டம் செய்தலங்கரித்திருக்கிறார்கள். (12) குருபூஜை மகோற்சவ காலங்களில் தமிழ் வித்துவான்களது உபந்யாசங்களை நேரில் திருச்செவி சாத்தி அவர்கள் மனமுவப்பச் சன்மானமும் அளிக்கின்றார்கள். இங்ஙனம் சிவ தருமங்களைப் பரிபாலித்துவரும் காருண்ய மூர்த்தியாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகசுவாமிகள் நீடுவாழ்க.

புதிய ஸ்டாக் விலையில் நயம்

'சந்திர விலாஸ்'

பிராஞ்சு :
பெரிய கடைத்தெரு,
கும்பகோணம்.

மகாமகம் உத்ஸவத்திற்கென்றே நவீன மோஸ்தரில் உள்ள பல ஊர் ஜவுளிகள் புதிய ஸ்டாக்கில் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். தங்களுக்கு வேண்டிய கோட்டிங்ஸ், ஷர்ட்டிங்ஸ், பனியன்கள், புடவைகள், வாயில்கள், பிரிண்டட் துணி ரகங்கள், சீட்டிகள், 4, 7, 8 முழ வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், கலர் டவல்கள், பெட்ஷீட்கள், ரெடிமேட் ஆடைகள் மற்றும் தேவையுள்ள அநேக துணிகள் நேரில் பார்த்து வாங்கத்தக்க சமயம் இதுவே. ஒருமுறை விஜயம்செய்து தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

திருப்பூர் சுத்த கதரும் கிடைக்கும்.

K. ராகவேந்திர ராவ்

ஜெனரல் & ஜவுளி வியாபாரம்,
சந்திர விலாஸ் பிராஞ்சு,
(ஸ்ரீ கோபாலஸ்வாமி கோவிலுக்கு எதிரில்)
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

பொருளடக்கம்

தாரண மலர் 4 } { மாசி இதழ் 7

மஹாமகம் ... 10
மஹாமகப் பொருட்காட்சிகள் ... 15
கதம்பம் ... 18
காவேரியின் வேதாந்தம் ... 21
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்
நோயற்ற வாழ்வு ... 25
தி. சே. சௌ. ராஜன்
சுதந்திரம்—க. சந்தானம் ... 30
வரம்—ரா. ஸ்ரீ. தேசிகன் ... 33
மெய் காவலன் ... 36
வி. ஜி. ஸ்ரீநிவாஸன்
இல்லறத்தில் வீரம்—மாரார் ... 39
பழிக்குப் பழி—அபர்ணா ... 43
காகிதம் ... 46
ஆர். கே. விசுவநாதன்
மல்லிகைச் செண்டு ... 50
கே. சுந்தரம்மாள்
தருமபுரம் ... 56A
புண்யாத்மா—ரா. வீழிநாதன் ... 59
சின்னாத்தாவின் கதை—சாரி ... 63
மஹாமக பலன் ... 70
யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
சித்திரத்தின் குறை ... 77
லக்ஷ்மீக்ருஷ்ண தாஸன்
சமரசம்—சித்ரா ... 87
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 89
ராமய்யா

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.



மஹாமகம்

தாரண மாசி 15௳ அன்று லக்ஷக் கணக்கான ஜனங்கள் கும்பகோணத்திலுள்ள ஒரு பெரிய குளத்தில் ஸ்நானம் செய்வார்கள். அக் குளத்திற்கு மஹாமகக்குளம் என்று பெயர். இவர்களில் அநேகர் ஆயிரக்கணக்கான மயில்களுக்கப்பாலிருந்து வருகிறார்கள். ஜாதி வித்தியாசம், உயர்வு தாழ்வு, பணக்காரர் ஏழை, இவை எல்லாம் அப்பொழுது கிடையாது. காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகளும் தீண்டாதார் எனப்படும் ஹரிஜனங்களும் அக்குளத்தில் அத்தினத்தன்று நீராடுவார்கள். ஏன்? அன்றுதான் மஹாமகம். அன்றுதான் கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரஸ்வதி, காவேரி, குமரி, பயோட்டிணி (பாலாறு), சரயு என்ற நதிகள் மக தீர்த்தத்தில் நீராட வருகின்றனவாம். எனவே அன்று மஹாமகக் குளத்தில் நீராடினால் இப்புண்ணிய நதிகளில் நீராடின புண்ணிய மனைத்தும் கிட்டுமென நம்பப்படுகிறது.

இதென்ன பைத்தியக்காரத்தனம்? கங்கையாவது, யமுனையாவது கும்பகோணம் குளத்திற்கு வரவாவது? இது நம்பத்தகுந்ததல்ல என்று இக்காலத்தில் தோன்றுவது சகஜம். பதினாறாம் நூற்றாண்டில் தஞ்சையில் ஆண்ட அச்சுதப்ப நாயகர் இத்தகைய அவநம்பிக்கையை வெளியிட்டாராம். அவருடைய பிரபல மந்திரி ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் என்பவர் உடனே அக்குளக்கரையில் கங்கையை வேண்டி, தபஸ்செய்தார். கங்கை பிரத்யக்ஷயமாகி நீர் மட்டத்திற்குமேல் தன் கைகளை உயர்த்திக் காட்டினாளாம். இதைக் கண்ணுற்ற அரசர் தம்முடைய அறியாமையைக் குறித்து வருந்தி அப்

புராதனகுளத்தைப் புனருத்தாரணம் செய்விக்கத்துலாபாரம்செய்து (தம் எடையுள்ள பொன்னை நிறுத்து) தீக்ஷிதரிடம் ஒப்படைத்தார். அதைக்கொண்டுதான் அக்குளம் அதன் நாலா பக்கங்களிலும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுப்பதினறு மண்டபங்கள் கரையைச் சுற்றிலும் கட்டப்பெற்று, புனருத்தாரணம் செய்யப்பட்டது. இதற்கு அத்தாக்ஷியாகத்துலாபார மண்டபம் ஒன்று வடகரையில் சில்பத் திறமை நன்கு விளங்கும்படி அமைக்கப்பட்டு, அதில் கல் வெட்டுக்களால் இச்சம்பவம் காட்டப்பட்டுள்ளது. இன்றைக்கும் அக்காட்சியை எவரும் காணலாம்.



துலாபாரமண்டபம்

இக்குளம் முதன் முதலில் எப்பொழுது உண்டாயிற்று. அதற்கு ஏன் மக தீர்த்தம் எனப்பெயர் வந்தது?

கும்பேசுவரர் வரலாறு

நான்கு யுகங்களில் கடைசியான கலியுகத்தின் முடிவில் பிரம்மதேவர் உலகத்திலுள்ள ஸகல ஜீவராசிகளும், வேதங்களும், ஸ்ருஷ்டி பீஜமும் அழிந்துவிட்டபொழுது மறுபடியும் அவைகளை எப்படி ஸ்ருஷ்டிப்பது என்று தெரியாமல் மஹாவிஷ்ணுவைப் பிரார்த்தித்தார். அவர் நியமனப்படி உத்தமமான ஸ்தலங்களிலிருந்து கொஞ்சம் மண்ணை எடுத்து அமிர்தத்தை விட்டுப் பிசைந்து ஒரு கலசம் செய்து, அதில் அமிர்தம் கலந்த மண்ணைப் போட்டு ஸ்ருஷ்டி பீஜத்தையும் அதில் புதைத்துச் சுற்றிலும் வேதம், ஆகமம், புராணம், இதிகாஸம் முதலியவைகளையும் வைத்து, கலசத்தை அமிர்தத்தால் நிரப்பி மேருமலையின் தென்பாகத்தில் ஸ்தாபித்தார். கொஞ்ச காலத்தில் பிரளயமுண்டாகி, வெள்ளமும் காற்றும் அதிகமாகவே, கலசம் தெற்கு முகமாக மிதந்துகொண்டே சென்று ஓரிடத்தில் அசையாது நின்றது. அப்போது பரமசிவன் வேடரூபந்தரித்து அம்பால் அக்கலசத்தை அடித்து உடைத்தார். கலசத்தின் மூக்கு உடைந்து குடவாயில் என்றவிடத்தில் விழுந்தது. அமிர்தம் வழிந்தோடி இரண்டு குளங்களை உண்டாக்கிற்று. அவை மஹாமக தீர்த்தமும் பொற்றாமரைத் தீர்த்தமுமாம்.



பொற்றாமரையுடன் சாரங்கபாணி கோவிலின் தோற்றம்

சிவபெருமான் நின்று பாணம் விட்டவிடம் பாணபுரியென்னும் பெரிய க்ஷேத்திரமாயிற்று. அங்கேயுள்ள லிங்கத்திற்குப் பாணபுரீசரெனப்பெயர். பிறகு சிவபெருமான் அக்கலசத்திலுள்ள மண்ணைப்பிடித்து ஒரு லிங்கத்தைச்செய்து அதில் மறைந்தார். தேவர்கள் பார்வதியை லிங்கத்திற்கு இடப் பாகத்திலிருக்கச் செய்து மங்களாம்பிகையெனப் பெயரிட்டனர். இவர் தாம் ஆதி கும்பேசர். பிரம்மா, ஆதிகும்பேசருக்குப் பத்துநாள் உத்ஸவம் நடத்திக் கடைசி நாள் இந்த மஹாமகக் குளத்தில் தீர்த்தம் கொடுக்கச் செய்தார். இதுவே வருஷந்தோறும் மாசி மாதத்தில் உத்ஸவரூபமாக நடைபெறுகிறது

இது தவிர கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நருமதை, கோதாவரி, மஹாநதி, பயோட்டிணி. (பாலாறு), காவிரி, ஸரயூ, ஆகிய நவ நதிகளும் தம் பிரவாகங்களில் ஸ்நானம் செய்யும் ஜனங்களின் பாபங்களைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதால், அவைகளை போக்கிக் கொண்டு தங்களுடைய அம்சங்களில் பாதியோடு அக் குளத்தில் தங்கினார்கள். இந்தக்காரணம்பற்றி இக்குளத்திற்கு, "கன்னியா தீர்த்தம்" எனப் பெயருண்டாயிற்று.



கும்பேசுவரர் கோவில்—முன்புறம்

இப் புண்ணிய தினம் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறை குரு சிம்மராசியில் இருக்கும்பொழுது மாசி மாதத்தில் மக நக்ஷத்திரத்தன்றுவரும். அன்றுதான் கங்கை முதலிய தீர்த்தங்களும், பிரமன் முதலிய தேவர்களும்—புல்பூண்டு ரூபங்கொண்டு மக தீர்த்தத்தில் வசிக்கிறார்கள் என்று புராணம் கூறுகிறது.

மஹாமக ஸ்நானம் செய்யும் விதம்.

ஸ்நானத்திற்கு முன் விசுவநாதர் ஸந்நிதியில் நவ கன்னியரையும் பூஜித்துப் பிரதக்ஷிணமாக அபிமுகேசுவரர், கௌதமேசுவரர், கும்பேசுவரர், ஆகிய மூன்று மூர்த்திகளையும் தரிசனம் பண்ணிக்கொண்டு குளத்தின் வடகரையிலிருக்கும் அச்வத்தமரத்தை சுற்றிவந்து நவகன்னியரையும் தியானஞ் செய்து கொண்டு ஸ்நானஞ் செய்யவேண்டும்.

மகாமக ஸ்நானத்தால் மஹா பாதகங்களும் நீங்கும். புத்திர ஸந்தானம் முதலிய நன்மைகள் ஏற்பட்டதாகவும் புராணத்தில் பல கதைகள் இருக்கின்றன. பழைய நாட்களில் மஹாராஜாக்களும் இந்தப் புண்ணிய காலத்தில் ஸ்நானம் செய்யக் கும்பகோணத்திற்கு விஜயம் செய்வது வழக்கமென்று தெரிகிறது. மிகவும் பிரசித்திபெற்ற விஜய நகரத்தின் அரசரான கிருஷ்ணதேவராயர் கி. பி. 1517-ம் ஆண்டு மஹாமகத்திற்குக் கும்பகோணத்திற்கு விஜயம் செய்து தானங்கள் செய்ததைப்பற்றிக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

கும்பகோணமும் அதன் கோயில்களும்

கும்பகோண க்ஷேத்திரம் தக்ஷிண கங்கையான காவிரியின் கரையிலிருக்கிறது. இத் தலத்தில் பிரம்ம விஷ்ணு ருத்திராகிய

மும்மூர்த்திகளும் ஸாந்நித்யம் செய்துஸூர்ய பகவானுல் பூஜிக்கப் படுவதால் இதற்குப் பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் பெயருண்டு. முன்காலத்தில் சோழ மன்னர்கள் சில காலம் இந்த ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்தனரென்று தெரிகிறது. ஸமீப காலத்திலும் இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள சோழன் மாளிகை என்னும் பழமையான கட்டிடம் இருந்தது. இவ்வூரில் ஒருபாகத்திற்கு நாணயக்காரன் பேட்டையெனப் பழம் பெயர் வழங்கி வருகிறது இது தவிர மாதலம் பேட்டை என்பது ஒரு சோழராஜனின் சேனை தங்குமிடமாக ஏற்பட்டிருந்தது. இந்த ஸ்தலத்திற்கு, புராணங்களில் குட மூக்கு என்றும், குடந்தை யென்றும் பெயர்கள் வழங்கி வந்திருந்தன. இப்போதும், வைஷ்ணவர்கள் இந்த ஊரைத்திருக்குடந்தை யென்றே வழங்குகிறுர்கள்.



காசி விசுவநாதர் கோவில்



நாகேச்வரர் கோவில்—சரித்திர விசேஷமுள்ள ஒரு சிலை

ஸ்தல புராணத்தில் சொல்லப்பட்ட கும்பத்தின் ஸம்பந்தமாக இங்கு ஸாந்நித்யமான சிவ பெருமானுக்கு ஆதிகும்பேசுவரரென்ற பெயர் வழங்கி வருகிறது. இந்தக் கோயில் புராதனமானது. புராணத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மனுக்கு மங்களாம்பிகை யென்று பெயர்.

ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயில்

இது மகாமகக்குளத்தின் வடகரையில் இருக்கிறது. இந்தக்கோயிலில் கங்கை, யமுனை முதலிய நவகன்னிகைகளுக்கும் தனியே ஓர் ஸந்நிதி இருக்கிறது. பெண் மக்களனைவரும் நவகன்னியரைப் பெரிய தெய்வமாகப் பாராட்டுகின்றனர். நெடுநாள் பருவமடையாத பெண்களும், குழந்தையில்லாத ஸ்திரீகளும் மஹாமக தீர்த்தத்தில் நீராடி நவகன்னியரைப் பூஜை செய்து மனோபீஷ்டத்தை அடைகிறுர்கள்.

இந்த விசுவநாதர் நவகன்னியர் வேண்டுகோளுக்கு இணங்கி, காசியினின்றும் வந்து இங்கே கோயில்கொண்டிருக்கிறுர் என்பது புராண வரலாறு.

ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோயில்

முன்னொரு காலத்தில் ப்ருகு மஹரிஷி ஹேம ரிஷியெனப் பெயர்பூண்டு பொற்றாமரைக்குளத்தின் கரையில் தவம் புரிந்து மஹாலக்ஷ்மியைப் புதல்வியாக அடைந்தார். மகாவிஷ்ணுவும் வைகுண்டத்திலிருந்து சாரங்கபாணியாக ரதாரூடராய்ப் பிரஸன்னமாகி அந்தப் பெண்ணை மணம் புரிந்தார். பகவான் வைகுண்டத்திலிருந்து இறங்கினு

ரென்னும் வரலாற்றை ஒட்டிக் கர்ப்பக்ருஹமானது யானை குதிரைகளுடன் கூடிய ஒரு ரதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப்பெருமாளை பூதத்தாழ்வாரும், திருமழிசை ஆழ்வாரும், நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும், "அபர்யாப்தாமிர்தன்" என்றும் "ஆராவமுதன்" என்றும் அனுபவித்துப் பாடியுள்ளார். நாலாயிரதிவ்யப்பிரபந்தம் இந்த ஸ்தலத்திலிருந்தே வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆதலால் இத்தப் பெருமாளுக்குப் பிரபந்தம் வெளியிட்ட பெருமாளென்றும், ஆராவமுது ஆழ்வார் என்றும் திருநாமங்கள் வழங்குகின்றன.



ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில் முன் கோபுரம்

ஸ்ரீ ராமஸ்வாமி கோயில்

இது தஞ்சாவூரில் ஆண்டு வந்த ரகுநாத நாயகரால் கட்டப்பட்டது. அந்த அரசர் குளம் வெட்டும்போது ஸ்ரீராமர் ஸீதை முதலிய விக்ரஹங்கள் அகப்பட்டதால் இந்தக்கோயில் கட்டுவதற்கு ஸந்தர்ப்பம் வாய்ந்தது. ஸாதாரணமாக ஸ்ரீராமர் ஸந்நிதிகளில் கோதண்டராமர் நின்ற திருக்கோலமாக இருப்பது வழக்கம். ஆனால், இவ்விடத்தில் பட்டாபிஷேக திருக்கோலம் கொண்டுள்ளார். முன் பிராகாரத்திலுள்ள நேர்த்தியான பதுமைகள் ராமாயண கதையை ஒட்டியிருக்கின்றன. திருப்பணி மிகவும் அழகாக அமைந்திருக்கிறது.

ஸ்ரீ சக்ரபாணி கோயில்

இது காவிரிக்கரையில் கொஞ்சம் உயர்ந்த மேட்டின்மேல் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ மஹாவிஷ்ணு, தமது முக்கிய ஆயுதமான சுதர்சனமென்று பெயருள்ள சக்ரத்தில் ஆவிர்பவித்து ஸ்ரீ சக்ரபாணியாய் இவ்விடத்தில் தரிசனமளிக்கிறார். இந்தக் கோவிலில் சூரியன், அக்னி, பிரம்மா, இவர்களுக்கும் பூஜையுண்டு.

மஹாமகப் பொருட்காட்சிகள்

இங்கு வரவிருக்கும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் சுகாதார முறையில் ஊரில் வந்து போக ஏராளமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதி மிகவும் குன்றியிருக்கும் இக்காலத்திலும் ரயில்வே அதிகாரிகள் யாத்ரீகர்களை வரவேண்டாமென்று அறிவிப்பதை நிராகரித்தும் ஜனங்கள் வழக்கம்போல் திரள்திரளாகக் குழுமிவிட்டார்கள்.

இதன் சூசகம் என்ன? மக்களின் மதப்பற்று சிறிதளவெனும் குன்றவில்லை என்பதற்கு இது பெருத்த அத்தாக்ஷி. ஹிந்துக்களுக்குள் மதம் என்பது ஒரு வாழ்க்கைப் பாதை. மனதை அடக்கி எல்லாம்வல்ல ஈசன்பால் செலுத்தச்செய்யும் ஒரு நல்வழி. மேல்நாட்டு நாகரிக மோகங்கொண்டு ஒரு சிலர் இவ்வழி நடக்க மறுக்கலாம்; இது அர்த்தமற்ற கட்டுப்பாடு என்று வாதிக்கலாம். ஆனால் இப்பிரசாரம் மக்களைப் பாதிக்கவில்லை. ஏன்? மதப்பற்று என்பது ஹிந்துவின் ரத்தத்தில் ஊறிவிட்டது; அதை அழிக்கமுடியாது.

உத்ஸவத்திற்காகக் கும்பகோண நகர பரிபாலன சபையார் மிகவும் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள். அதில் முக்கியமானது மஹாமகப் பொருட்காட்சி. சென்ற (1933) மஹாமகத்தில், நகரில் இரண்டு பொருட்காட்சிகள் நடைபெற்றன. சுதேசியை வளர்க்கவே அவை அமைக்கப்பட்டன. இவ்வருடப் பொருட்காட்சியும் அதே நோக்கங்கொண்டுதான் ஏற்பட்டிருக்கக்கூடும். அப்படியிருக்கையில் சுதேசி என்ற பெயரை மட்டும் ஏன் நீக்கினார்கள் என்பதுமட்டும் மர்மம். அதிகாரிகளின் தலையீட்டினாலிருந்தால் அதை நிராகரித்து நடத்துவதன்றோ தேசியமாகும்?



மஹாமகக் குளத்தில் சூரிய அஸ்தமன தோற்றம்

ஆனால் பெயரில் என்ன இருக்கிறது? செயலில் காரியம் வெற்றிகரமாக நடந்தால் சரியே.

பொருட்காட்சி பிரும்மாண்டமாக நன்கு விளங்குகிறது. பொதுஜன ஆதரவும் நன்றாக இருக்கிறது. இருந்தும் தேசியக் கலப்பைக் காணவில்லை. கதர் ஆடைகள் காணப்படுகின்றன. ஆனால் கதர் மனப்பான்மையைத் தேடும்படியாக இருக்கிறது. யுத்தப் பிரசாரக் காட்சி ஒன்று சங்கீத மேடையை அலங்கரிக்கிறது. சங்கீதத்தையும் யுத்தப் பிரசாரத்தையும் பிணைக்கவேண்டிய நிர்ப்பந்தம் என்ன என்பது விளங்கவில்லை.

என்னும் ஏற்பாடுகள் அனைத்தும் செவ்வனே செய்யப்பட்டுள்ளன. நகரசபைத் தலைவர் டாக்டர் ஸ்ரீ எம். வி. தியாகராஜ ஐயர், பொருட்காட்சிக் காரியதரிசிகள் ஸ்ரீமான்கள் ஸி. ராமசாமி முதலியார், ஸி. எல். ஆராவமுதய்யங்கார் இவர்களின் பெருமுயற்சிகள் போற்றத்தக்கன.

தாராசுரத்தில் தஞ்சை ஜில்லா போர்ட்டார் ஒரு விவசாய கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி நிர்மாணித்துள்ளார்கள். இதில் பல பார்க்கத்தக்க காட்சிகள் இருக்கின்றன. கும்பேச்வரர் ஆலயத்தில் புராதன விக்கிரகங்களைத் திரட்டி ஒரு கண்காட்சி ஹிந்துமத ஸ்தாபன பரிபாலன போர்டாரால் நிறுவப்பட்டிருக்கிறது. இதில் ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஆக்கப்பட்ட பல விக்கிரகங்களும் கல்வெட்டுக்களும் காணக்கிடக்கின்றன. நமது புராதன கலை முன்னேற்றத்தை இக் காட்சி தெளிவுற எடுத்துக்காட்டுவதுடன் நாம் அவ்வுன்னத ஸ்தானத்திலிருந்து எவ்வளவு நழுவி இருக்கிறோம் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. சில விக்கிரகங்களில் அமைந்துள்ள முக விலாஸம் நவீன ஓவியர்களால் எட்ட முடியுமா என வியக்கச்செய்கிறது. நமது அறியாமையினாலும் அலக்ஷியத்தினாலும் பல விக்கிரகங்கள் லண்டனிலும் ஜெர்மனியிலுமுள்ள பல மியூயஸிங்களிலும் இருக்கின்றன என்றால் நமது மூடத்தனத்திற்கு வேறு நிதர்சனம் என்னவேண்டும்?

ஹிந்துமத ஸ்தாபன பரிபாலன போர்டார் மஹாமகத்தை உத்தேசித்து இங்கு ஏற்படுத்தியிருக்கும் காட்சி மிகவும் போற்றத்தக்கதே. எஞ்சியிருக்கும் விசேஷ விக்கிரகங்களாவது பிறநாட்டினருக்கு விற்கப்படாமல் பாதுகாக்கப்படுமென நம்புகிறோம். திருவிடைமருதூர் ஆலயத்தைச் சார்ந்த ஒரு நடராஜமூர்த்தி கண்காட்சிச் சாலைக்குட் செல்லும் எவர் கண்களையும் கவர்கிறது. ஆனால் அது கால் முறிந்து கிடப்பதைக் கண்டால் மனம் நோகாமல் வெளிவரமுடியாது. இது டிரஸ்டிகளின் அதிக கவனிப்பினாலா அல்லது காலத்தின் ஜீரண சக்தியின் விளைவா என்பதைக் குறித்து நாம் விசாரிக்கப்புகுவது அனாவசியம்.

மஹாமக தீர்த்தாடனத்திற்காகத் திரளும் கூட்டத்தைச் சரிவர நிர்வகித்து நடத்தப் போலீஸாரும் சாரணர்களும் அமர்க்களமான ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இப்படையினர் கூட்டமே பெருங்கூட்டமாக இருக்கிறது.

மக ஸ்நானம் செய்யவரும் அனைவரும் சௌகரியமாக நீராடிச் செல்வார்கள் என நம்புகிறோம். அவர்களை நம் நகருக்கு வரவேற்கிறோம். கன்னியா தீர்த்தத்தில் நீராடின பலன்கள் அனைத்தும் அவர்களுக்குக் கிட்டுமாறு பிரார்த்திக்கிறோம்.

திருக்குடந்தை மான்மியம்

(கும்பகோண மாஹாத்மியம்)

(உரை நடை)

எழுதியவர்: ஸ்ரீ. பி. ஸ்ரீநிவாஸய்யர் (N. H. S. ரிடயர்டு தமிழ் ஆசிரியர். கும்பகோணம்.)

பதிப்பாளர்: S. கல்யாணஸுந்தரமய்யர், ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிக் ஒர்க்ஸ் மானேஜர், கும்பகோணம்.

இவ்வுரைநடை டெம்மி 1இல் 8பக்கம் 40 பாரங்கள் (320 பக்கங்கள்) கொண்டுள்ளது; விலை ரூ. 3—0—0

கும்பகோணப் பெருமையைப் பற்றி இதுவரையில் வெளி வந்துள்ள உரைநடை நூல்களிலே இது மிகவும் விரிவானது; தெளிவுள்ள தமிழ்நடை; பாராயணம் பண்ணுவதற்கேற்ற தோத்திரப்பாக்கள் நிரம்பப் பெற்றிருப்பது; முன்னோர் நூலின் முறையையே பின்பற்றியது. அறிஞர் நால்வர் இதற்கு முன்னுரை முதலானவை வரைந்துளர். தெய்வ நம்பிக்கை, மக்கள் ஒழுகலாறு முதலியவற்றைச் செவ்வையாக விளக்குவது; தமிழர் அனைவரும் படித்து இன்புறத்தக்கது. அழகான காகிதத்திலே படங்களுடன் அச்சியற்றப்பெற்று விளங்குவது. இந் நூலுக்குப்போதிய ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றோம். இந்நூல் இந்த மஹாமக புண்யகாலத்திலே வெளிவந்ததைப் பற்றி மகிழ்ச்சியுறுகின்றோம்.

மஹாமக நீராட்ட வைபவம்



கதம்பம்

பயனற்ற கூச்சல்

ஓஹோய்! ஓஹோய்! என்று எல்லோரும் கை தட்டிக் கத்திவிட்டு, நீவட்டித் தடியன்களாக வடத்தைத் தொட்டுச் சும்மாவிருந்தால் தேர் நகருமா? ஊக்கத்துடனும் பலத்துடனும் இழுக்கவேண்டும். தேர் மேல் வீற்றிருக்கும் மகா வல்லமை வாய்ந்த கடவுள் "மக்கள் இழுக்காவிட்டால் தொலையட்டும். நாம் நமது சக்தியை உபயோகித்து, தேரை ஓடச்செய்து விடுவோம்" என்று கருணை காட்டமாட்டார்!

உணர்ச்சியற்ற—நம்பிக்கை ஏற்படாத—உபயோகமில்லாத "அதிக ஆகாரப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்" என்ற கூச்சலைக் கேட்டு, பயிர்களும் செடி கொடிகளும் மரங்களும் மற்றத் தாவரங்களும் பலன் கொடுக்குமா? ஏராளமான பொருள் செலவும் பிரமாதமான விளம்பரமும் இடைவிடாத அதிகாரிகளின் கூச்சலும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் மந்திர சக்தி பெற்றனவாயிருப்பின் இன்று பஞ்சம் தாண்டவமாடாது. மக்களின் வயிற்றெரிச்சலைக் கிளப்பும் ரேஷன் திட்டமும் அவசியமாயிராது.

ஆகாரப் பொருள்களின் உற்பத்தி குறைவாயிருப்பதற்கு அதிகாரிகளின் அசட்டையே காரணம்! விவசாயிகளிடமோ ஊக்கமில்லை. அப்படிப்பட்ட ஊக்கத்தைப் பிரசாரத்தினால் மட்டும் கிளப்பமுடியாது என்பதை அதிகாரிகள் உணரவில்லை. விவசாயிகளின் வரிச்சுமை குறையவில்லை. விளைபொருள்களுக்கு நியாமான விலையில்லை. அவன் பாடுபட்டு உற்பத்தி செய்யும் உணவுப்பொருள்களை உண்டு களிக்க அவனுக்கே சுதந்திரமில்லை! கடன் சுமை வேறு அவனைக் கீழே அமுக்குகிறது. வாழ்விற்கு அவசியமான இதர பொருள்களின் விலைகள் இன்றும் அவனது சக்திக்கு ஏற்றவாறு குறையவில்லை. ஆகவே உற்பத்தி செய்யுங்கள் என்ற உபதேசம் உறைக்கவில்லை அவனுக்கு! இந்த உண்மைகளை உணராது சமீபத்தில் டில்லியில் கூடிய 'அகில இந்திய உணவுப்பொருள் திட்டக் கூட்டத்தார்' உணவுப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கப் பிரசாரத்தை மும்முரமாகப் நடத்த வேண்டுமென்று கூறியது நகைப்புக்கிடமாகத் தோன்றுகிறது.

அக்கூட்டத்தாரின் மற்றொரு உபயோகமற்ற தீர்மானம் மக்களுக்குப் பழக்கமில்லாத உணவுப்பொருள்களின் சத்துப் பொருள்களை ஆராய்ந்து பகிரங்கப்படுத்துவதாம்! சுலபத்தில் கையாளக்கூடிய முறையாகத் தோன்றவில்லை,

பள்ளிக்கூடத் தோட்டங்களிலும், கிராமங்களிலும் காய்கறிகளை உற்பத்தி செய்ய வேண்டுமாம்.

பால் உற்பத்தியைப் பன்மடங்காக்க ஓர் உத்தியோகஸ்தர் நியமிக்கவேண்டுமாம். அந்த உத்தியோகஸ்தரை மட்டுமே நல்ல பாலின் சுவையையும் மகிமையையும் அறியச்செய்யலாமே அன்றி மக்களுக்கு ஏதாவது பயன்படுமா? பால்கறக்கமாடுகள்? மிலிடரி சப்ளைக்குத்தான் ஏராளமாக ஆடு மாடுகள் வேண்டியுள்ளன. மாட்டுக்குத் தீனி? காற்றைப் புசித்துப் படி நிறையப் பால் கறக்கும் பசுவைப் பூவுலகில் யாரும் கண்டதில்லை!

உணவுப் பொருள் விஷயங்களில் மக்கள் ஊக்கமெடுத்துச் சிரமப்பட்டால்தான் பயனளிக்கும். மக்களது ஊக்கத்தைத் தூண்ட இப்பொழுதுள்ள அரசாங்கத்தால் கண்டிப்பாய்ச் சாத்யமில்லை. தேசிய அரசாங்கம்வேண்டும்! அப்பொழுது நமது தொல்லைகள் நீங்கும்,

புதிய சரக்குகளின் இறக்குமதி

சபாஷ்; ரேஸர் பிளேடுகளா? வந்துவிட்டனவா? பஞ்சம் தீர்ந்ததெனக் கூறுவோர் பலர்!

நல்ல விஸ்கி, ஒயின் எல்லாம் ருசிபார்த்து வெகு நாளாச்சு சார் என்போர் சிலர்!

கோதுமையா? அட இழவே! போருமே வந்தது! என்போரும் அனேகர்.

அவைகளைப் பற்றி நாம் கூறப் போவதில்லை! நாம் சொல்லப்போகும் சரக்கு மக்களுக்கு உபயோகமில்லாதது. பின் யாருக்கு உபயோகப் படக்கூடிய சரக்கு? யுத்தத்துக்குக்கூட உபயோகமில்லாத சரக்கு! ரொம்ப மட்டச் சரக்கு!

இப்பொழுது வங்காளகவர்னராக உள்ள கேஸிதுரை முன்பு ஒருதரம் "ஆஸ்திரேலியர்கள் நிரம்ப இந்தியாவுக்கு வந்து உத்தியோகங்களில் அமரவேண்டும்" என்ற ஆசையை வெளியிட்டது ஞாபகமிருக்கிறதா?

முதன் முதலாக அவரது தம்பிக்கே உத்தியோகம் கிடைத்துவிட்டது இந்த நாட்டில்! வாத்தியார் உத்தியோகம்: ஆனால் சம்பளம் ஆயிரக்கணக்கில். என்ன வாத்தியார்? டாக்ஸிலா என்ற ஊரில் பழைய சின்னங்கள் விஷயமாய்ப் பள்ளிக்கூடமொன்று வைக்கப் போகிறார்களாம் இந்திய சர்க்கார்.

இன்னும் சில வெள்ளையர்களுக்கும் உத்தியோகங்கள் பல சிருஷ்டிக்கப்படப்போகின்றனவாம். வர வர வெள்ளைச் சரக்குகள் இந்த நாட்டில் குவித்துத் தள்ளப்படுவதைப் பார்த்தால் இந்தியா என்ற முழுப்பெயரைப் பிரித்து 'வெள்ளை இந்தியா' 'சுதேசி இந்தியா' என்ற பெயர்கள் ஏற்பட்டுவிடலாமெனத் தோன்றுகிறது.

ஒரு சந்தேகம்? பிரிட்டன் இன்னும் ஆஸ்ரேலியா போன்ற வெள்ளையர்கள் குடியேறியுள்ள நாடுகளில் இந்தியர்களைக் கொண்டு போய் உயர்ந்த உத்தியோகங்களில் வைக்கலாமே? ஏன் அப்படிச்செய்வதில்லை? இந்தியா மட்டும் குப்பை, கூளம் எறியப்படும் குழியா? பதில் சொல்லுங்கள்!

மடமும் மரியாதையும்!

வைணவத் திருகோயில்களில் மூலைக்கு ஒரு கிணறும் அடிக்கு ஒரு பம்புக் குழாயும் வைத்துவிட்டால் "தீர்த்தச் சண்டைகள்" ஒழிந்துவிடலாமெனக் கூறினார் ஒரு நண்பர்.

'தீர்த்த வழக்கு' ஒன்றில் ஐரோப்பிய நீதிபதி ஒருவர், வழக்கு தம் இலாகா சம்பந்தப்பட்டதில்லையென்றும் மராமத்து இலாகா வைச்சார்ந்ததென்றும் கூறி, வழக்கைத் தள்ளிவிட்டதாகக் கதை சொல்லுவார்கள்.

தீர்த்தச் சண்டையென்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மகாபழமை வாய்ந்தது. யாருக்கு முதல் தீர்த்தம்? மகா சிக்கலான கேள்வி. தாகமெடுத்தவர்கள் முதலில் சாப்பிடலாமென்றால் வீர வைணவர்கள் கன்னத்தில் பளாரென்று அறைவிடவும் துணிவார்கள்! கோயிலில் தீர்த்தம் முதலில் பெற்றுக்கொள்வது உயர்ந்த மரியாதையெனக் கொள்ளப்படுகிறது. இந்த மரியாதை பெற மண்டைகள் உடைபடுவதுமுண்டு. ஒரு 'ஸ்பூன்' தண்ணிக்காக ஆயிரக் கணக்கில் பணத்தை விரயம் செய்யத் தயங்கமாட்டான் மரியாதைப் பாத்யம் கொண்டாடும் வைணவன். இந்த மரியாதைப் பாத்யத்தைப் பற்றியவிஷயம் அறியாதவர்களே கேவலமாகவும் பரிகாசமாகவும் பேசத் துணிவர். சென்னை ஐகோர்ட் நீதிபதியொருவர் வெகு சுலபமாக, 'தீர்த்தமரியாதை' வழக்கொன்றில் "கடவுளின் உண்மை அடியார்கள் கேவலம் இத்தகைய மரியாதைகளை விரும்பமாட்டார்கள்." என்று சொல்லிவிட்டார்.

நீதி ஸ்தலத்தில் 'யுவர் ஆனர்' போட்டு வக்கில்கள் பேசாவிட்டால் தம் மரியாதைக்கும் கௌரவத்துக்கும் ஹானி நேர்ந்துவிட்டதாகக் கருதும் நீதிபதிகள் பலர் உளர் என்பதை மறுக்கமுடியாது. கருப்புச்சட்டைகளே வக்கில்கள் அணியவேண்டும் தலைப்பாகைகள் அணிந்தே நீதி ஸ்தலத்தில் அவர்கள் நுழையவேண்டும், நீதிபதிகள் ஆசனத்தில் வந்து உட்காரும்பொழுது யாவரும் நிற்கவேண்டும், என்ற அர்த்தமற்ற விதிகளை யாவரும் அறிவர்! எதற்காக? அதுதான் மரியாதையாம்.

இப்படியாக ஒவ்வொரு மதத்தினரிடமும், ஜாதி, வகுப்பாரிடமும், சமூகத்தினிடமும் உத்தியோகங்களிலும் தொழில்களிலும் பலவித அர்த்தமற்றவையெனச் சிலரால் கருதப்படும் மரியாதை முறைகள் தாண்டவமாடுகின்றன. ஆகவே 'தீர்த்த மரியாதை' கொண்டாடுவதை அவ்வளவு கேவலமாக நினைத்தல் நியாயமல்ல. ஆனாலும் நாகரிக மக்கள் இத்தகைய மரியாதை முறைகளினால் வீணான வழக்குக்களும், அடிதடிகளும், பணவிரயம், காலவிரயம், இவைகள் ஏற்படுவதைக்கண்டு மனம் கலங்கத்தான் செய்வார்கள். அதிலும் அறிவாளிகளெனப் போற்றப்படும் மடாதிபதிகள் ஒருவருக்கொருவர் மரியாதை நிமித்தம் சண்டை சச்சரவுகள் செய்வது அழகுள்ளதாய்த்தோன்றவில்லை.

சமீபத்தில் மடாதிபதிகள் நால்வருக்குள் 'மரியாதைப்போர்' ஒன்று நடந்தது. ஆழ்வார் திருநகரி எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமிகள் நியாயக்காரராகத் தோன்றி, அநியாயக்காரர்களெனச் சொல்லப்படும் அகோபில மடம் ஜீயர்ஸ்வாமிகள், வானமாமலை ஜீயர்ஸ்வாமிகள் திருக்குறுங்குடி ஜீயர்ஸ்வாமிகள் இவர்கள் மீது பேசும் தெய்வமாகிய திருநெல்வேலி முன்சீப் அவர்களிடம் காணிக்கை செலுத்தி வழக்கிட்டுப் பிரார்த்தித்தார். ஏதோ ஒரு கோயிலில் தமக்கே முதல் தீர்த்த மரியாதை கிடைக்க உரிமையளிக்கவேண்டும் என்பதே எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமிகளின் பிரார்த்தனை. முன்சீப் அவர்கள் 'மெஜாரிட்டியான அநியாயக்காரர்கள் பக்கம் தீர்ப்புக் கூறி வழக்கைத் தள்ளிவிட்டார்! எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமிகள் பெரிய சாமியாகிய சப்-ஜட்ஜ் அவர்களிடம் முறையிட்டார். பெரியசாமி புத்திசாலி. தமக்கேன் வீண் சங்கடமென நினைத்து, வழக்கை மறுபடி விசாரணை செய்ய முன்சீப் அவர்களிடமே திருப்பி அனுப்பி வைத்தார்.

அநியாயக்காரர்களெனச் சொல்லப்படும் மடாதிபதிகள் பெரிய பெரிய கோயிலாகிய ஐகோர்ட்டை அடைந்து அங்குள்ள தெய்வமாகிய நீதிபதி முன் சப்ஜட்ஜ் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டிக்கொண்டார்கள்.

வழக்கை விசாரித்த ஐகோர்ட் நீதிபதி ஒரு சுத்த சைவர்! வழக்கின் ஞாயம் அவருக்கு விளங்கவில்லையோ என்னவோ? 'முன்சீப்பே மறுபடி விசாரிக்கட்டுமே? அதில் தவறென்ன?', என்று கூறிவிட்டார். அதோடு நில்லாமல் அந்தச் சைவ நீதிபதி வைணவப் பெரியார்களைப் பார்த்து "மரியாதை கொண்டாடுவதெல்லாம் கேவலம். உண்மை ஞானிகளும் கடவுளது திருப்பணியை மேற்கொண்டவர்களும் மரியாதை நிமித்தம் மண்டையை உடைத்துக்கொள்ளமாட்டார்கள்" இந்த ரீதியில் உபதேசம் செய்யவும் முற்பட்டுவிட்டார். என்னே காலத்தின் கோலம்!

முஸ்லீம்களும் முகமதியர்களும்

"பிரபுவே!"

"யாரப்பா?"

"எங்களுக்கு ஒரு சந்தேகம்!"

"கேளப்பா"

"முஸ்லீம்களும் முகம்மதியர்களும் அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டிருக்கிறார்களாமே;" —

"ஹஹ்ஹா—ஹா;

லார்ட் ஹெய்லி என்ற துரை உத்தியோகத்தினின்றும் விலகிச் சீமை சென்றவுடன் ஒரு கூட்டத்தில் இந்தியாவைப்பற்றிப் பேசினார். ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லையாம். ஒரு புத்திசாலி வெள்ளையன்மட்டும் இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டு ஹெய்லி துரையைக் கேள்விகள் கேட்டானும். மேலே கண்டவை அந்தச் சம்பாஷணைதான், இந்த ருசிகர விஷயத்தை ஹெய்லிதுரையே பிரபுக்கள் சபையில் சொல்லிச் சிரித்தார்.

நீங்களும் சற்றே சிரியுங்கள்! ஆய்விட்டதா? மறுமுறை சிரிக்கத் தயாராகுங்கள்!

இப்பொழுது வரவரப் பிரிட்டிஷ் மக்கள் இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொள்ள துடியாய்த்துடிக்கின்றார்களாம். உதாரணமாக இந்தியாவிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் நிலைமையைப்பற்றித் தெரிந்துகொள்ளச் சில வெள்ளைமக்கள் ஆவல் கொண்டுள்ளார்களாம்!

இவ்வளவு சிரத்தையுடன் இந்திய விஷயங்களைக் கவனித்துவரும் பிரிட்டிஷ் மக்களைக் கடவுள்தான் கண் திறந்து பார்க்கவேண்டும்! நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும்!

நரிக்குக் கொண்டாட்டம், நண்டுக்கு............?

இந்தச்சனியன் பிடித்த யுத்தம் எப்பொழுது முடியுமென ஏங்குகிறார்கள் ஏழை மக்கள். பகவானே! இன்னும் குறைந்தது பத்து வருஷங்களாவது நீடிக்கலாகாதா எனப் பிரார்த்திக்கின்றார்கள் முதலாளிகள். யுத்தம் நாளைக்கே முடிவடைவதை எந்த அரசாங்கமும் விரும்பவில்லை.

ஏராளமாகத் துப்பாக்கிகளையும் குண்டுகளையும் தயார் செய்துகொண்டிருக்கையில் திடீரென்று யுத்தம் முடிவடைந்தால் அவைகளை என்ன செய்வது? என்ற கடினமான பிரச்னை மூளையைக் கலக்குகிறது. நேசநாடுகளுக்குள் குவிந்துள்ள சிக்கலான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கக்கூட அவகாசமில்லாமல் யுத்தம் முடிவடைந்துவிட்டால் நிச்சயமாகச் சர்ச்சிலுக்கும், ரூஸ்வெல்ட் துரைக்கும் பைத்தியமே பிடித்துவிடலாம்!

இன்னும் யுத்தத்துக்குப்பின் செய்யவேண்டியவைகளைப்பற்றி விதவிதமான திட்டங்களை நேசநாடுகள் தயார் செய்துகொண்டிருக்கின்றன. இன்னும் அவைகள் உருவாகவில்லை. அதற்குள் யுத்த முடிவா, என்ன அநியாயம்?

அடிமை நாடுகளுக்குச் சுதந்திரம் யுத்தத்துக்குப்பின் நிச்சயம் உண்டு என்று காலங்கடத்திச் சால்சாப்புகள் செய்துவரப்பட்டன. 'யுத்தம் முடிந்துவிட்டது, எங்கே சுதந்திரம்?' என்று கேட்டால் அதற்கு ஏதாவது தப்புக் காரணங்கள் யோசித்துச் சொல்வதற்காவது அவகாசம் வேண்டாமா?

எல்லாரையும்விட யுத்தம் முடிவாகும் தறுவாயிலிருப்பதைப்பற்றி கவலைக் கொள்ளுவது சீமையிலுள்ள கழுகுகளாம்! "பிணத்தைத் தின்று ஜீவித்த எங்கள் வாயில் மண்ணைப்போட ஏன் இந்த யுத்தம் முடியவேண்டும்?" என்பதாகச் சீமைக் கழுகுகள் அழுகின்றனவாம்.

'நியூ லீடர்' (New Leader) என்ற சீமைப் பத்திரிகையின் தலையங்கம் வெகு ருசிகரம்.

"சமாதானம் ஏற்பட்டுவிடுமோ?
என்று லண்டன் நகரில் பீதி"

(City of London afraid of Peace)

"நகரக் கழுகுகள் யுத்தம் முடிவடைந்துவிடுமோ என்று கலங்குகின்றன. அவைகளின் வேட்டைக் கொண்டாட்டம் பாதிக்கப்படுகிறதல்லவா? லாபமடிப்பவர்கள் திகில் அடைந்துள்ளார்கள். ருஷ்யாவின் மின்னல் தாக்குதல் லண்டனில் லக்ஷக்கணக்கான மக்களிடையே யுத்த முடிவதைப்பற்றிக் கலக்கமும் குழப்பமும் (Panic) உண்டாக்கிவிட்டது. பங்கு மார்க்கெட்டுகளில் பீதி அதிகமாகிப் பங்குகளின் மதிப்புக் தலைகீழாக விழுந்துவிட்டது. எங்கும் கவலையே காணப்படுகிறது.',

காவேரியின் வேதாந்தம்

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

நதி மூலமும் ரிஷி மூலமும் கேட்கக்கூடாதாம். அப்படியோர் பழமொழியுண்டு. பழமொழியென்பது அநேகருடைய அநுபவத்தைத் திரட்டி உருட்டி ப்ராஸத்தோடு அழகாய் அமைக்கப்பெற்ற ஒரு சிறு வாக்கியம். ஒவ்வொரு பழமொழியும் ஒவ்வொரு உண்மையை உள்ளடக்கியதாயும் ஸர்வஜன ஸம்மதமாயுமிருப்பது.

உத்பத்திஸ்தானம் விட்டு அநேக மைல் தூரம் ப்ரவஹித்த பிறகு மஹாநதிகளென்றும், புண்ணிய நதிகளென்றும் பெயர்பெற்று விளங்கும் ஒவ்வொரு நதியினுடைய உத்பத்தி ஸ்தானமும் வெகு அல்பமாயும், ஹேஈனமாயுங்கூட இருப்பது, ப்ரஸித்தமான விஷயம். அவ்விதமேதான் பிற்காலத்தில் ரிஷிகளென்றும் மஹரிஷிகளென்றும் மஹா ஜனங்களால் கௌரவிக்கப்பட்டுக் கொண்டாடப்படுபவர்களது உத்பத்தியும் விசாரிக்கப் புகுமிடத்து அது ஏதோ ஒரு குறைவும் தாழ்மையும் உடையதாகவே புலப்படும்.

காவேரி நதியானது மஹாநதியாகக் கொண்டாடப்படுகிறது என்னும் விஷயத்தில் ஸம்சயமே இல்லை. இதைத் தக்ஷிணகங்கையென்றே வியவஹரிக்கலாம். "கங்கையில் புனிதமாய காவிரி" யென்றல்லவோ ஆழ்வார்கள் இந்த நதியைப் புகழ்ந்து பாடுகிறார்கள். கங்கையிலும் மேம்பட்டதாகத்தான் கவிச்சக்ரவர்த்தி கம்பனும் அழகாகப் பாடுகிறான். அதுவுமல்லாமல் கங்கா ப்ரதேசங்களை வர்ணிக்கும்பொழுது சோள தேசத்திற்குச் சமானமாக வர்ணித்ததால் சோள தேசமன்றோ பெருமை பெறுகிறது! கங்கை என்கிற பதமானது எல்லா நதிகளுக்கும், ஜலத்துக்கும் பர்யாய (ஒரே பொருள் கொண்ட) பதமாய் வழங்குவதுண்டு. அவ்விதமே காவேரி விஷயத்திலும் எந்த நதியையும் காவேரி என்றே வியவஹரிப்பது சோள தேசத்தார் வழக்கம்.

காவேரி என்னும் இப்புண்ணிய நதிக்குப் புராண ரீதியில் உற்பத்தி கூறப்பட்டிருக்கிறது. அதாவது அகஸ்திய மஹரிஷியினுடைய கும்பத்தினின்றும் உண்டானதாம். இதனால் அம்மஹாநதிக்கு உத்கிருஷ்டமானதும் மஹா பாவனமுமான உற்பத்தி நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொழுது போய்ப் பார்த்தாலோ உற்பத்தி ஸ்தானமானது மிகச் சிறியதாகக் காணப்படுகிறது. ஓர் அருவியிலிருந்து வருகிற தீர்த்தம் ஒரு தொட்டியில் விழுந்து, அதிலிருந்து வெளிவருகிறதாகத் தென்படுகிறது. யோசிக்கும் வேளையில் அவ்விதமேயன்றோ மஹான்களுடைய உற்பத்தியும்! பெரிய நற்குடியில் பிறந்து ப்ரஸித்தியுள்ள பேர்களும் ஏதோ ஒரு மூலையில் ஒரு சிசுவாகத்தானே பிரஸவிக்கப்பட்டனர். அக்காலத்தில் அந்தச் சிசுவானது வருங்காலத்தில் மிகுந்த உன்னத தசையை அடையப் போகிறதென்று எவர்தாம் நிச்சயமாகச் சொல்லவல்லவர்?

உத்பத்தி ஸ்தானத்திலிருந்து வெளிவரும் நதியினுடைய ஜலமானது ஒரு சிறு கல்லினால் கிழக்கே திருப்பப்பட்டு, அது கிழக்கு நோக்கும் நதியாகிறது. அப்படியின்றி அந்நதியே உத்பத்தி ஸ்தானத்தில் ஒரு சிறு கல்லினால் மேற்குத் திக்காகத் திருப்பப்பட்டால், மேற்கு நோக்கும் நதியாக ஆய்விடுகிறது. அதுபோலவே சிறு பிராயத்தில் நமக்கு நேரிடுகிற சிறு காரணங்களால் நம் வாழ்நாள் முழுதும், மாற்றப்படுகிறது.

காவேரி நதியானது உற்பத்திஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டு அநேகவிதமான பூமி, மண், கல், உலோகங்கள் இவைகள் எல்லாவற்றினுடைய சம்பந்தத்தையும் பெற்று அவைகளால் தன் நிறம் போக்கு வேகம் முதலிய அம்சங்களில் வேறுபாடடைகிறது. அவ்விதமே ஒவ்வொரு மனுஷ்யனுடைய சிறு பிராயத்தில் நேரிடுகிற ஸம்ஸர்க்கங்களால் (சேர்க்கைகளால்) அவனுடைய நடை, உடை பாவனைகள் — சரித்திரமும்கூட — மாறுவது நன்றாய் அறியப்பட்டதொரு விஷயமே.

ஒரு நதியின் பிரவாஹமானது பள்ள வழியை அனுசரித்ததேயாம். அவ்விதமே தான் மனுஷ்யனுடைய போக்கும் சாதாரணமாகச் சிரமம் இல்லாத வழியையே நாடிச் செல்வதாகும்.

காவேரிநதி சில விடங்களில் அகலமாயும் சில விடங்களில் ஓர் ஆட்டுக்கடா தாண்டக்கூடிய அளவிலே (மேகதாடு) குறுகியும் செல்வதைப்போலவே மனுஷ்யர்களும் சில காலங்களில் விசால தசையையும் மற்றும் சில காலங்களில் மிகவும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி, குறுகிய தசையையும் அடைவதைக் கண்டிருக்கிறோம்.

நதி சில இடங்களில் ஆழமாயும், சில இடங்களில் மேலோட்டமாயும், இருப்பதற்கும், மனிதர்களுடைய வாழ்நாளில் ஸாம்

யம் காணலாம். காவேரியாற்றிற்குச் சில பிரதேசங்களில் சோலை சூழ்ந்த கரைகளும், மற்ற இடங்களில் கல் பிரதேசமான கரைகளும் இருப்பதுபோல் மனுஷ்ய ஜன்மாவிலும் வெவ்வேறுவிதமான அனுபவங்கள் உண்டாவதும் நாம் நன்கு அறிந்ததே.

காவேரி நதியானது பிரவஹிப்பது தனக்காகவோ அல்லது பூலோக ஹிதத்திற்காகவோ? உலகத்தின் நலத்திற்காகவேயென்பதுதான் பதில். அவ்விதமேதான் மனிதன் தன்னுடைய ஜன்மத்தையும் வாழ்நாளையும் நினைக்கவேண்டும்.

பசு, பக்ஷி, ஆபாலவிருத்தர்கள் ஸ்திரீ புருஷர்கள் யாவரும் தங்களுடைய பஞ்சேந்திரியங்களும் ஆனந்திக்குமாறு காவேரியைக் கணிசிக்கிறார்களன்றோ? ஒரு நதியினுடைய பிரவாஹத்தைக் கண்டால் திருப்தி பெருகி எப்பொழுதும் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். பிரவாஹத்தின் வெவ்வேறு சப்தங்கள் காதுக்கு மிகவும் இனிமையானவை. க்ரீஷ்ம காலத்தில் ஸ்நானமாடுவது மோக்ஷானந்தம் போன்றது என்று பெரியதோர் சுருதி சொல்லி இருக்கிறது.

தாகசாந்திக்கும் அவ்விதமே. பயிர்களுக்கும் விருக்ஷங்களுக்கும் பாய்ந்து நமக்கு அவசியமான அன்னத்தையும் ருசியான பழங்களையும்கூடக் கொடுக்கிறதன்றோ? அவ்விதமே ஒருவன் மஹானாக இருப்பானாகில் அவனை யணுகி அவனுடன் நெருங்கிப் பழகுவதால் கிடைக்கக்கூடிய ஆனந்தமும், பலனும் கணக்கிடமுடியா.

மஹான்களுக்குத் தீர்த்தர்கள் என்கிற பெயரும் உண்டு. அது யாது காரணம் பற்றி யென்றால், புண்ய தீர்த்தங்கள்போல் தம்மை ஸ்மரிக்கிறவர்களை யெல்லாம் பரிசுத்தமாக்கும் தன்மையுடையாராகையாலே.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க, காவேரியை எத்தனை இடங்களில் அணைபோட்டுக் கட்டியிருக்கிறார்கள்? அப்படிக் கட்டாவிட்டால் அவ்வளவு ப்ரவாஹமும் வீணே ஓடியோடிச் சமுத்திரத்திற் சேர்ந்து நிஷ்ப்ரயோஜனமாகி விடுமல்லவா? ஓடுகிற பிரவாஹத்தைக் கட்டினாலல்லவா நமக்கு இஷ்டமான படி உபயோகித்துக்கொள்ளச் சாத்யமாகிறது. அடக்கி வைக்கப்பட்ட சக்தியை மின்சாரமாகவும் வேறு பல வகைகளாகவும் மாற்றி, மாந்தர்களுக்கு மிகுந்த நன்மைகளையும் நலங்களையும் தேடமுடிகிறது. அப்படியே நாமும் நம் ஐம்புலன்களைக் கட்டிவைத்தால்தான் ஆத்மசக்தி அபிவிருத்தியாகி நமக்கும் பிறருக்கும் நலத்தைச் செய்ய வல்லவராவோம்.

காவேரி நதிக்கு நீரூட்டும் உபநதிகள் எத்தனை? காவேரி நதியினின்றும் பிரிந்து நீரூட்டப்பெறும் கிளை நதிகள் எத்தனை? பவானி போன்ற பல நதிகளால் தான் போஷிக்கப்பட்டுக் கொள்ளிடம், வெண்ணாறு (விண்ணாறு) வெட்டாறு, குடமுருட்டி. என்று பல நதிகளைத்தான் போஷிக்கிறது. தன் நீரை எல்லாம் பரோபகாரமாகப் பலருக்குப் பகிர்ந்து கொடுத்துக் கடைசியில் தான் ஸாகர ஸங்கமத்தையடையும்போது எத்தனை மெலிந்து விளங்குகிறது. ஒரு பெரிய குடும்பி நன்றாகப் பலமார்க்கங்களில் பொருளை ஈட்டித் தன் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் உற்றோருக்கும் உறவினருக்கும் பொது ஸமூகத்திற்கும் நிரம்ப உதவி, இறுதியில்தான் அனைத்துந் துறந்து சோபிப்பதை நமக்கு நினைவூட்டுகிறதன்றோ காவேரியின் பெருக்கு?

இப்படிப்பட்ட பல காரணங்களால் காவேரியாறு நமக்குப் பலவித இன்பங்களையும் இன்ப உணர்ச்சிகளையுமளிக்கிறது, நமக்கு மட்டுமா? எல்லாம்வல்ல இறைவனும் காவேரியினிடத்தில் இன்புறுகிறானென்று சொல்வது மிகையாகாது. திருப்பாற்கடலை விடுத்து இக்காவிரியின் மத்தியில் திருவுள்ளம் மிக உகக்கிறான் திருமால்.

“இன்னமுதக் கடற் பள்ளி தன்னிலும் காவிரியுள்ள முகந்தபிரான்” என்று அவனை ஆசிரியர் பெருமான் ஒருவர் போற்றுகிறார். காவேரிக்கரையில் பல க்ஷேத்திரங்களில் கோயில் கொண்டதுபோக, காவேரியின் நடுவிலே—அதுவும் மூன்று ஸ்தலங்களில்—சயனித்துக்கொண்டிருக்கிறான். ஆதிரங்கம், மத்தியரங்கம், கடைரங்கம் என்னும் இம் மூன்றையும் அனைவரும் அறிந்திருப்பார். சிலவிடங்களில் காவேரி மஹாநதியின் பிரவாஹம் பிரிந்து திரும்பவும் ஒன்றுசேரும் வகையால் மூன்று தீவுகள் ஏற்பட்டுள்ளன. இவைகளையே மூன்று ஸ்ரீரங்கங்களாக நம்மவர்கள் கொண்டாடுகிறார்கள். இவைகள் ஒரு வேதாந்தியின் மூன்று யோகஸ்தானங்களைக் குறிப்பனபோலும். புருவ மத்தியிலுள்ள இடமும் மார்பின் மத்தியிலுள்ள ப்ரதேசமும், நாபியென்று வழங்கும் ஸ்தலமும், யோக சாஸ்திரத்தில் குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பகவானுடைய அந்தர்யாமித்வம் இம்மூன்றிடங்களில் விசேஷித்திருக்கின்றன வென்பது அநுபவஸித்தம். இவ்வுபமானத்தை விரிப்பது ப்ரத்யேகமான பெரிய விஷயமாதலால் இவ்வளவு மட்டும் ஸூசிப்பித்து (குறிப்பாகக் காட்டி) நிறுத்திக்கொள்ளலாயிற்று.

காவேரியின் இத்தகைய வேதாந்தத்தைப் படிக்குமவரெல்லாம், இவ் வியாஸத்திலுள்ள விஷயங்களை உள்ளத்துக்கொண்டு, மேம்பாடடைந்து அகமகிழ்வார்களென்று நம்புகிறேன்.



ஸ்ரீ நாகேசுவரர் கோயில்

மகாமகக்குளத்தின் ஸமீபத்தில் இந்தக் கோயில் இருக்கிறது. இதுவும் மிகப் புராதனமானது. பிராகாரத்தில் ஸூரியபகவானுக்கு ஒரு ஸந்நிதி இருக்கிறது. முன்னொரு காலத்தில் ஸூரியனுக்கு ஒளி போய்விட்டதாகவும் அவன் நாகேசுவரரைப் பூஜை செய்து ஒளி யடைந்ததாகவும் கதையுண்டு. இப்பொழுது, வருஷத்தில் மூன்று நாள் கர்ப்பக்கிருஹத்திலுள்ள லிங்கத்தின் மேல் சூரிய கிரணம் விழுகிறது. இந்தக் கோயிலிலிருக்கும் நடராஜரின் மண்டபம் குதிரைகள் பூட்டின ரதரூபமாய் அமைக்கப் பட்டிருக்கிறது.

(கர்ப்ப க்ரஹ விமானம்)

நாகேசுவரஸ்வாமி கோவில் அம்மன் ஸந்நிதியும் இரண்டாம் கோபுரமும்.



திரிமூர்த்திகள்



ருத்ராவதாரம்

மோகனவதாரம்

பிரும்மாவதாரம்

ஐரோப்பாவை புனர் உத்தாரணம் செய்ய அவதரித்துள்ள புண்யமூர்த்திகள். அடிமை நாடுகளின் அவதிகளை அலட்சியம் செய்வதில் இவர்களில் பெரியவர் யார்?

நோயற்ற வாழ்வு

தி. சே. சௌ. ராஜன்

"மக்கள் எல்லோரும் சுகமாக வாழ வேண்டும்" இது நமது நாட்டினரின் கொள்கையும் கோட்பாடும். சுப முகூர்த்தங்கள், சுப விசேஷங்கள், சுப வேலைகள் எல்லாவற்றின் முடிவில் "ஸர்வ ஜனஸுகினோ பவந்து" என்பது நாம் மனமார வாழ்த்தும் இயல்பு. மனிதன் சுகமாக வாழ்வதற்காகப் பிறந்திருக்கிறான். சுகத்தைப் பெறுவதே மனித முயற்சியின் எல்லை. அதற்காகவே வாழ்நாட்கள் முழுதும் பாடுபடுகிறான். உணவு உண்பது சுகத்திற்காக. ஆனால் சுகம் என்பது மனதைப் பொறுத்ததா, அல்லது உடலைப் பொறுத்ததா? என்பதைப்பற்றி வீண் விவாதம் வேண்டியதில்லை. மனிதனைப் பற்றிய மட்டில் இரண்டையும் பொறுத்தது என்பதில் சந்தேகமில்லை. பெரும்பாலான மக்கள் யோகிகளுமல்லர், பயில்வான்களுமல்லர். மனத்துயரம் உண்டானால் உடலிற்கு நோய் உண்டாகும். உடலிற்கு நோய்வந்தால், மனம் துயருற்று வாடும். கண்ணிற்குப் புலப்படும் ஜீவராசிகள் உடல் உயிர் இரண்டும் சேர்ந்திருக்கின்றன. தனித்து நிற்க முடியாது, வாழமுடியாது. ஆகையால் சுக வாழ்வு என்று சொல்லும் காலத்து உடலும் உயிரும் சேர்ந்து சுகம் பெறவேண்டுமென்பது பொருள்.

படைக்கப்பட்ட ஜீவராசிகளில் பெருத்த மூளை உடையவன் மனிதன். அதுகாரணமாகப் பகுத்தறிவு, மற்ற ஜீவராசிகளை அடக்கி ஆளும்திறன், நன்மை தீமைகள் செய்யக் கூடிய சக்தி ஏற்படுகிறது. சாத்திரங்களின் தத்துவ பரிசீலனை, ஆராய்ச்சி செய்யக் கூடிய மாண்பும் பெற்றிருக்கிறான். அன்பு, ஆனந்தம், துயரம், சுகம், துக்கம் முதலியவைகளை அறிந்து அனுபவிக்க முடிகிறது. இயற்கையாகத் தனது நுண்ணறிவை உபயோகப்படுத்திச் சுகம்பெற வழிதேடுகிறான். போதிய அளவு கல்வியும், பழக்க வழக்கங்களும் அவனுக்கு வழிகாட்டுகின்றன. நோயற்ற வாழ்வு சுகவாழ்வின் அடிப்படை. நோயற்ற வாழ்வு நடத்தமுடியுமா என்று கேட்டால் நன்றாக முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆனால் மனிதனுக்கு உற்பத்தி காலம் தொடங்கி நோயும் கூடவேயிருந்து கொண்டுதானிருக்கிறது. வியாதியும், வைத்தியனும் இடைவிடாத நண்பர்களாகவே இருந்து வருகிறார்கள். அமரத்துவம் பெற்ற தேவர்களுக்குக்கூட நோயுண்டு. தன்வந்திரி என்ற வைத்தியருமுண்டு என்று புராணங்கள் பறை சாற்றுகின்றனவே? ஆம், அவர்களுக்கும் கர்மபலன் உண்டு. அனுபவித்தே தீரவேண்டும். அவர்கள் மேம்பட்ட மனிதர்களே தவிர வேறில்லை. அவர்களும் நோயுற்று துன்புறாமலிருக்க முடியும். அவ்வாறு செய்துமிருக்கிறார்கள். நாமும் அவ்வாறு செய்ய முடியும். பிறப்பவை யெல்லாம் அதனதன் அமைப்பிற்கு ஏற்றவாறு அந்தந்தகாலத்தில் இறந்தே தீரும். ஆகையால் நோயற்ற வாழ்வென்றால் சாகாவரம் பெறுவதென்பது பொருளன்று. இறப்பதற்கென வரும் முடிவான காலத்தில் காணப்படும் சின்னங்களை நோய் என்று சொல்வது வழக்கமாக இருந்தாலும், உண்மையில் அவைகள் நோயைச் சேர்ந்தவைகளல்ல. இறந்துபோகவேண்டிய முயற்சிகளேயாகும். மனிதன் பிறந்த பிறகு தான் நோய் வருகிறதெனப் பொதுஜன அபிப்பிராயம். இளம்பிராயத்தில் வரும் நோயைக் கர்மபலனென்றும், முன்ஜன்மத்தில் செய்த பாவங்களின் மிகுதியென்றும் சொல்வது வழக்கம். குழந்தைகள் தங்களுடைய நோயை தாங்களே வரவழைத்துக் கொள்வதில்லை. கர்ப்பத்திலிருக்கும் பொழுது, தாயின் நோய்க்காரணங்களாலும், வெளிவந்த பிறகு அதே நோயின் தொடர்ச்சியினாலும், தாயின் அறிவீனத்தினாலும் அவற்றிற்குத் தொல்லை ஏற்படுகிறது. புராதன சமூகக் கட்டுப்பாடுகள், ஆசாரங்கள் எல்லாம் மனிதன் சுக வாழ்வுபெற்று நீண்டகாலம் உயிரோடிருக்க வேண்டுமென ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளை உண்டாக்கியவர்கள் தீர்க்கமான ஆலோசனை, அனுபவம், ஆராய்ச்சி இவைகளைக்கொண்டே சுகவழியின் விதிகளை இயற்றியிருக்கிறார்கள். நாளாவட்டத்தில் நமது நாட்டினர் ஆயுள் குறைவுற்று வருவதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் அறியாமையும், பழக்கவழக்கங்களின் நுட்பத்தை மறந்து குருட்டுத்தனமாக, காலதேச வர்த்தமானங்களைக்கவனியாது, சோம்பேறித்தனமாகப் பின்பற்றுவதும் முக்கியமானவை. இந்த மதியீனத்திற்குப் பல உதாரணங்களுண்டு. ஓடும் தண்ணீர் புனிதமானதென்

பது சாத்திரம். அதை எவ்விதத்திலும் அசுத்தப்படுத்தக்கூடாதென நமது பெரியோர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் காண்பது என்ன? அதற்கு நேர் விரோதம். நமது நாட்டிற்கே பெயர்பெற்ற கங்கை, யமுனை நதிமுதல் தெற்கே தாம்பிரபரணி முடிய, எல்லா நதிகளையும் பாழாக்குவதே வழக்கமாக இருக்கிறது. பாழாக்குகிறோமென்கிற உணர்ச்சிகூட போய்விட்டது. வெந்ததும், வேகாததுமான பிணங்களைக் கங்கையில் மிதக்க விடுகிறார்கள். ஓடும் தண்ணீரில் எச்சில் துப்புவது, மலத்தைக் கழுவுவது, அழுக்கைக் கரைப்பது, எல்லாம் சர்வ சாதாரணமாகத் தினசரி நடந்து வருகின்றன. ஓடும் தண்ணீர் குடிக்கும் தண்ணீரென்று தெரிந்தும், இவ்வழக்கம் மாறுவதில்லை. அழுக்கடைந்த தண்ணீரைக் குடிப்பதால் நோயுற்று, நூற்றுக் கணக்காக நாம் மடிந்து போகிறோம் என்கிற அறிவும் மறந்து போய்விட்டது. இம்மாதிரி உதாரணங்கள் எண்ணற்றவை. தனி மனிதன் தான் எவ்வளவு சுத்தமாக இருப்பினும் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் அசுத்தமாக இருந்தால் அதனின்று வரும் நோயை அவனுக்குத் தடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஒரு சமுகமே சீர்பட்டாலொழியத் தொத்து நோய்களை—ஒட்டுவாரொட்டி என்று சொல்லப்படும் வியாதிகளை—நாம் தடுக்கமுடியாது. உணவின்றி, அரைப் பட்டினியாகவே வருஷங்களாக அவதிப்படும் கஷ்டத்தால் உண்டாகும் நோய் ஒருபுறமிருக்க, தடுக்கக்கூடிய நோய்களையும் தடுக்க இயலாமல் மாய்ந்து விடுகிறோம். நீதி சாத்திரங்களும், சுக வழிமுறைகளும் கட்டுக் கட்டாக நமது நாட்டிலிருக்கின்றன. மனித சமுகம் கேவலமடைவதை எண்ணியே நமது பெரியோர்கள், சுக வழிமுறைகளில் தவறுதல் உண்டாகுமானால் அது பாவம் என்றும், பின் பற்றுவதால் புண்ணியமென்றும் கூறியிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் நம்மவர்கள் அதையும் கவனிப்பதில்லை. தன்னலம் இன்னதென்பது கூட தெரியாத மனப்பான்மை நமது சமூகத்தில் பரவியிருக்கிறது. சமூகக் கட்டுப்பாடு கலைந்து, பொறுப்பற்ற அரசாங்கம், வரி வசூலித்து ஆட்சி புரிவது இதற்குக் காரணம். அடிமை வாழ்வின் பயனாக நமது மக்கள் ஆயுள் குன்றி வருகிறார்கள். அப்படி ஆயுள் குறைந்து வருவதை அவர் கவனிக்காமலில்லை. அதற்குக் காரணம் மட்டிலும் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. அடிமை வாழ்வு பல காலம் நடந்துவிட்டால், முன்னேறும்முயற்சியும் ஊக்கமும் சமூகத்தில் தொலைந்து விடுகின்றன. அதிகாரிகளின் உத்தரவுகளை எதிர்பார்த்து வேலை நடக்கிறது. அதிகாரிகளின் கவனம் எதில் இல்லையோ, அதில் ஊழல் சொல்ல இயலாது. பொறுப்புள்ள அரசாங்கம் பிறகு ஏற்பட்டால், இந்த ஊழல்களை நீக்கும் முறையில், நமது மக்களினிடமிருந்தே எதிர்ப்பும் உண்டாகிறது. சுக வழிகளைக் கட்டாயமாகப் புகுத்தும்பொழுது இந்த விபரீதத்தை நன்கு காணலாம். அழுக்கிலிருந்து பழக்கமாகிவிட்டால் சோம்பேறித்தனம் அதிகமாகிச் சுத்தம் என்கிற உணர்ச்சியே மறந்துவிடுகிறது. அழுக்கை நீக்க முயன்றால் எதிர்ப்பும், வேதாந்தமும், விதியும், சான்றாகக் கூறப்படுகின்றன. இந்த மனப்பான்மை நீங்கவேண்டுமானால், அறிவு, பழக்கம், சாத்திர உணர்ச்சி, சமூகக் கட்டுப்பாடு, தேசீய ஆட்சிமுறை, இவைகள் வேண்டும். ஒழுங்கு முறைகளுக்குச் சமூகச் சட்டங்களும் நிறுவவேண்டும்.

மனிதன் சுகவாழ்விற்கு முதல் தேவை நல்ல குடிதண்ணீர். மனித உடலில் மூன்றில் இரண்டு பாகம் தண்ணீர் மயமானது. தினசரி இரண்டுபடிக்கு மேலாகத் தண்ணீர் உடலைவிட்டு வெளியாகிறது. பெரும் பகுதி மூத்திரத்தில் கழிகிறது. மற்றவை மலத்திலும், மூச்சிலும். வியர்வையின் மூலமாகவும் வெளியாகின்றன. இதற்குத் தகுந்த அளவு உணவின் மூலமாகவும், தண்ணீர் மூலமாகவும் உட்கொள்ள வேண்டியது அவசியம். உணவில்லாமல் சில காலம் உயிர்வாழ முடியும். ஆனால் தண்ணீர் குடிக்காமல் பத்துநாட்களுக்குமேல் உயிர் பிழைப்பதரிது. தண்ணீர் மட்டிலும் குடித்துக்கொண்டு நூறுநாட்களுக்கு மேலாக உயிர் வைத்திருக்கமுடியும். எங்கெங்குக் குடிதண்ணீர் கிடைக்குமோ அங்கங்கு மனிதர்கள் குடியிருப்பைக் காணலாம். காட்டில் திரியும் யானை, சிங்கம், புலி, கரடிபோன்ற மிருகங்கள்கூட நீரோடைப் பக்கங்களில்தான் வசிக்கின்றன. பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய தண்ணீரின் அவசியத்தைப்பற்றி வியாசம் தேவையில்லை. கால்நடைகள் பட்சி பறவை, கள், எங்கெந்தத் தண்ணீரை வேண்டுமானாலும் குடிக்கலாம். மனிதன் மட்டும் சுத்தமான தண்ணீர் குடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பார்ப்பதற்குமட்டிலும் தெளிவாக இருந்தால் போதாது. கண்ணிற்குப் புலப்படாத சிறிய அணுக்கள் போன்ற கிருமிகள் ஏராளமாகத் தண்ணீரில் தங்களது வாழ்வை நடத்துகின்றன. அவைகளுள் சில மனிதனுக்கு நோயை உண்டாக்கி மரணத்தை உண்டுபண்ணுகின்றன. ஆனால் குடிக்கும் தண்ணீரில் நோய்க்கிருமிகள் இருக்கின்

றனவா இல்லையா என்று தெரிந்துகொள்வது நடைமுறையில் முடியாத வேலை.

உடலிற்கு இயற்கைப் பாதுகாப்பு உண்டு. மனித உடல் எவ்வளவு காலம் வாழமுடியுமோ அவ்வளவு காலம் வாழவேண்டுமென்பது சிருஷ்டியின் கருத்து. இல்லாவிட்டால் இவ்வளவு பாதுகாப்பு உடலில் இருக்க நியாயமில்லை. மனித உடலில் சிறந்த பாகம் தலை. மிகவும் மிருதுவானவையும், உணர்ச்சி மிகுதியானவையுமான, அவயவங்களின் வேலைகளையெல்லாம் சரிவர முறை தவறாது கணக்குப்படி நடத்தவேண்டிய சாதனங்கள் எல்லாம் மூளையிலிருக்கின்றன. அது மிகவும் நுட்பமான நரம்புகளாலும், பெருத்து சிறுத்து, வேலைக்குத் தகுந்தபடி மாறுபாடுகளுக்கிணங்க அமைக்கப்பெற்றுள்ளது. இந்த அவயவம் சீதோஷ்ண மாறுபாடுகளாலும், திடீரென ஏற்படக்கூடிய ஆபத்துக்களாலும் காப்பாற்றப்படவேண்டியது அவசியம்; ஆகையால் கெட்டியாக இணைக்கப்பட்டுள்ள பட்டையான கனத்த எலும்புக் கூட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டிற்குள் காயமுண்டாகாமலிருக்கும்படி அதைச்சுற்றிலும் ஓர் தண்ணீர்ப் பையினுல் மூடப்பட்டுமிருக்கிறது. புத்தி, சிந்தனை, யுக்தி, பகுத்தறிவு, முயற்சி, இவைகளுக்கெல்லாம் இருப்பிடம் மண்டை ஓட்டிற்குள்ளிருக்கும் மூளையிலிருக்கிறது.

கண்கள் மிகவும் அவசியமான உறுப்பு. இயற்கையில் இந்த அவயவம் ஒன்றிற்கு இரண்டாக அமைந்திருக்கிறது. ஆபத்து ஏற்படா வண்ணம், மண்டை ஓட்டின் முன்புறத்தில் இரண்டு குழிகளில் வைக்கப்பட்டு, மூடிக்கொள்ளும் இறமைகளால் காப்பாற்றப்பட்டு வருகின்றன. ஆனுல்கண்கள் பார்ப்பதில்லை. வெளிச்சத்தையும், தென்படும் பிம்பங்களையும், உள்ளே புகவிடும் ஓர் பலகணி. வீட்டிற்கு எப்படிப் பலகணிகள் தேவையோ அதுபோலப் பார்க்கும் மூளைக்குக் கண்கள் பலகணி. கண்கள் நன்ருயிருந்தாலும், மூளையிலுள்ள காட்சிப்படலம் நோயுற்ருலும் அல்லது காயப்பட்டு விட்டாலும் பார்வை மறைந்துவிடும். அதுபோலவே காதுகள், மூக்கு, நாக்கு, தோலிலுள்ள ஸ்பரிச உணர்ச்சியும். பார்ப்பதும் அறிவதும், மூளை. உணர்ச்சிகளைக் கொண்டு செல்வது இந்த அவயவங்களிலிருக்கும் நரம்புகள். இவ்வளவும் அடங்கியுள்ள அவயவம் மனிதனுக்கு எவ்வளவு முக்கியமானது? அதற்கு இயற்கைப் பாதுகாப்பு எவ்வளவு? இதை ஆராய்ந்து பார்த்தால் மனித சிருஷ்டி எவ்வளவு விநோதமானது என்பதுதெளிவாகும்.

மனிதன் தண்ணீர் அருந்தும் காலத்து அதனிலிருக்கும் நோய்க்கிருமிகளைக் காண முடியாதென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. அந்தத் தண்ணீரைக் குடித்தால் நோய் உண்டாகுமென்பது நிச்சயமா என்று கேட்டால் நிச்சயமில்லை என்று பதில் சொல்ல வேண்டும். பெரும்பாலோருக்கு நோய் உண்டாவதில்லை. ஒரு சிலருக்கு ஏற்படலாம். நோயுற்றவன் உடலில் தற்காப்புச் சாதனங்கள் குறைந்தோ, அல்லது இல்லாமலோ போயிருக்கவேண்டும். மனிதனுடைய இரைப்பையில் (வயிற்றில்), தண்ணீரோ, அல்லது உணவோ செல்லும் காலத்து அதில் காடியான புளிப்புச்சத்துள்ள நீர் பெருகுகிறது. அது நோய்க் கிருமிகளைக் கொல்லக்கூடியது. மனிதனுக்கு இது இயற்கைப் பாதுகாப்பு. நல்ல சுகத்திலுள்ள மனிதனுக்குக் கெட்ட தண்ணீரைக் குடித்தாலும் நோய் உண்டாவதில்லை. அஜீரணத்தாலோ, ஆகாரக் கேடுகளாலோ, மலச்சிக்கலாலோ, வயிற்றிலூறும் காடிநீர் சத்தி குறைந்துவிட்டால், கிருமிகள் உடலில் சார்ந்து நோயை உண்டாக்குகின்றன. இந்தக் காரணத்தால் தான் சிலருக்கு நோயும், மற்றவர்க்கு நோயில்லாமையும் நிகழ்கிறது. நோயும், கிருமியும், எல்லாம் பலக்குறைவு, சுகவீனமுள்ள

நின்றுபோன மாதவிடாய்

எந்த முதிர்ந்த நிலையானுலும் **குமாரி** மாத்திரைகளை உபயோகியுங்கள். கர்ப்பத் தடை நிச்சயம். யாதொரு அபாயமுமில்லை. திருப்தி நிச்சயம். விலை ரூ. 3/-

முதிர்ந்த பிடிபடாத கேஸுகளுக்கு ரூ. 5/-

(வி. பி. பி. அணு 12 உபரி.)

Mrs. P. DEVEE, F. D. S., (C. M.
Tollygunge, Calcutta.

கீழ்க்கண்ட ஸ்டாகிஸ்டுகளிடமும் கிடைக்கும்:—

(1) ஹாரி & ஸன்,
93, சைனு பஜார் ரோடு, மதராஸ்.

(2) நாதம் & கோ.,
மட்டஞ்சேரி, கொச்சின்.

(3) ராஜா மெடிகல் ஹால்,
31, தர்மராஜா தெரு,
பங்களூர் கண்டோன்மெண்ட்.

வர்களைத்தான் தாக்குமென்பது வெளிப்படை. ஆனால் நோயுற்றவன், உதாரணமாக வாந்தி பேதி (காலரா), சீதபேதி (வயிற்றுக் கடுப்பு) முதலிய நோய்களில் அவதிப்படு பவன், குடிதண்ணீரை மலம் கழுவுவதாலும், மலங்கலந்த பாய், படுக்கை, துணிகளை நல்ல தண்ணீரில் போட்டு அசுத்தப்படுத்துவதாலும், நோய்க்கிருமிகள் ஏராளமாகக் குடிதண்ணீரில் விடப்படுவதால் நல்ல சுகத்திலிருப்பவர்களைக்கூட நோய் தாக்கி விடுகிறது. கெட்ட தண்ணீரைக் குடிப்பதால் மனிதன் சாகிறதில்லை. விதிமுடிந்தால் இறந்துவிடுகிறான் என்பது பொதுமக்களின் எண்ணம். இது முற்றிலும் தவறு. தண்ணீரை அசுத்தப்படுத்தி உபயோகப்படுத்தினால் மேற்கூறிய நோய்கள் வராமல் தடுக்கமுடியும் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். தடுப்பு ஏற்பாட்டினால் உயிரைக் காப்பாற்றமுடியும் என்ற ஞானம் நமக்கு உண்டாகவேண்டும். காலரா நோயின் போக்குச் சுலபமாகக் கவனிக்கக்கூடியது. ஜனங்கள் திரளாகக்கூடும் திருவிழாக்கள், சந்தை, முதலிய இடங்களில் ஆரம்பமாகி, அங்கிருந்து திரும்பும் பிரயாணிகள்மூலம் தொற்றிக்கொண்டு பல ஊர்களில் ஆங்காங்குப் பரவி ஆயிரக்கணக்காக மக்கள் இறந்துபோவது இந்த நோயின் சரித்திரம். இதைத் தடுக்கமுடியும்; தடுத்திருக்கிறார்கள். இதற்கு மக்களின் ஒத்துழைப்பும், வைத்தியர்களின் சேவையும் அவசியம். அரசாங்கத்தாரால் கட்டுப்பாடான முறையில் செய்யக்கூடியது. சமீபத்தில் பம்பாய் மாகாணத்தில் பண்டரிபுரம் என்னும் மகாராஷ்டர தேசத்தில் நடைபெற்ற முறையை நேரில் கண்ட விவரத்தை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பண்டரிபுரம் என்னும் க்ஷேத்திரம் மகாராஷ்டர தேசத்தில் வெகு முக்கியமானது. ஆடி மாதம் ஏகாதசியன்று அந்தத்தேசத்தின் பல பாகங்களிலிருந்து வருஷக் கணக்கான மக்கள் அந்த ஊரில் கூடுவது வழக்கம். பாகவத தர்மத்தைப் பரப்பி, ஜாதி வித்தியாசம் ஏற்றத் தாழ்வு முதலிய கொடுமைகளினின்று விடுபட்டு, பக்தி பரவசத்தால், இறைவன் அடிபணிந்து, முக்தி அடையும் ஒரு முறை, புரந்தரதாஸர், கோரகும்பர், ராமதாஸ் முதலிய பெரியோர்களால் கையாளப்பட்டு வந்தது. ஆடி மாதம் ஏகாதசிக்குச் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பே மகாராஷ்டிரத்தின் பல கிராமங்களிலுள்ள பல மடங்களினின்று காலஞ்சென்ற பாகவத உத்தமர்களின் (பாதுகைகளை) மிதி அடிகளை, பல்லக்கில் வைத்துப் பஜனைக் கோஷ்டிகளுடன் ஊர்வலங்கள் பண்டரிபுரத்தை நோக்கிப்புறப்படும். போகும் வழியிலுள்ள கிராமங்களில் ஒன்றிரண்டு நாட்கள் ஆங்காங்கே தங்கி, கிராமத்தாரால் உபசரிக்கப்பட்டு, அந்தந்த ஊரில் பண்டரிபுரம் வரவிருக்கும் யாத்திரீகர்களையும் சேர்த்துக்கொண்டு, கூட்டம் கூட்டமாக ஏகாதசிக்கு முதல்நாள் சாயங்காலம் பண்டரிபுரம் வந்து சேரும். ஊருக்கு வெளியேயுள்ள மைதானத்தில் அன்றிரவு சுமார் இரண்டு லக்ஷம் ஜனங்கள் வரையில் தங்கியிருப்பார்கள். சமையல், சாப்பாடு, ஓய்வு எல்லாம் முடித்துக்கொண்டு கோஷ்டி கோஷ்டியாகப் பல்லக்குகளை எடுத்துக்கொண்டு, பஜனையுடன் பண்டரிநாதன் சன்னிதிக்கு விடியுமுன்பு வந்து சேருவார்கள். பண்டரிபுரம் வந்து சேருவதற்கு முன்பாகச் சிலருக்குக் காலரா நோய் கண்டுவிடும். பண்டரிபுரம் மைதானத்தில் அநேகருக்குத் துவக்கும். பண்டரிபுரத்திற்குப் பக்கத்தில் ஓடும் பீமாநதிக்கரையில் அநேகருக்கு நோய் கண்டு மாண்டுவிடுவார்கள். ஏகாதசி கழிந்த மறுநாள் கூட்டம் கலைந்து தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்புவார்கள். திரும்பும் வழியில் சிலர் இறந்துவிடுவார்கள். கிராமம் போய்ச் சேர்ந்து அங்கு நோய்கண்டு அதன் மூலம் திருவிழாவிற்குச் செல்லாதவர்களும் அவதிப்பட்டு மாண்டு போவது வழக்கம். இந்தத் திருநாளையொட்டி மகாராஷ்டிரம் பூராவும் இரண்டு மாதங்களுக்கு நோய் பரவி, வருஷந்தோறும் சுமார் முப்பதினாயிரம் மக்களுக்குமேல் இறந்துபோவது வழக்கம். வழிகளிலும், பண்டரிபுரம் மைதானத்திலும் செத்த பிணங்களை எடுத்து அப்புறப் படுத்தமுடியாமல் அநேக நாட்களுக்கு துர்நாற்றமெடுத்துச் சகிக்கமுடியாமலிருக்கும். இது பழைய கதை, இப்பொழுது அந்த நோய் காண்பதில்லை, இந்தக் கோரக் காட்சிகளையும் காணமுடியாது. இதை எவ்விதம் தடை செய்தார்கள் என்பதைச் சுருக்கமாகத் தெரிவிக்கவேண்டியது அவசியம்.

மைதானத்தில் பெரிய கிணறுகள் வெட்டி, தண்ணீரைச் சுத்தப்படுத்திக் குழாய்கள் மூலம் கூடியிருக்கும் மக்களுக்கு அளித்தார்கள். சுத்தப்படுத்தின தண்ணீரைத்தவிர வேறு தண்ணீர் கிடைக்காதபடி, குளங்களை மூடி, குட்டைகளைத் தூர்த்து கால்வாய்களைத் திருவிழாவிற்குச் சில நாட்கள் முன்பாகக் காயப்போட்டுவிட்டார்கள்.

மைதானத்தில் பல குடிசைகள் கட்டி வைத்திய வசதிகள் உண்டாக்கி, நோய் வராமல் தடுக்கும் மருந்தை ஊசியிலேற்றி எல்லோருக்கும் குத்தினார்கள். இதில் தயை, தாட்சண்யம், சிபார்சு, மதக்கொள்கைகள்

அபிப்பிராய பேதங்கள், சர்ச்சைகள் ஒன்றிற்கும் இடங்கொடுக்காமல் எல்லோருக்கும் ஊசி ஏற்றினார்கள். ஊசியேற்றிக் கொள்ளாவிட்டால் ஊருக்குள் போகாமல் மைதானத்திலேயே தடை செய்யப்பட்டு, தங்கியிருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதால், திருவிழாவன்று பண்டரிநாதன் தரிசனத்திற்காக மாதக்கணக்காக நடந்து வந்து, தடைமருந்தை ஏற்காமல் வெளியே தங்க யாத்திரிகர்கள் இஷ்டப்படவில்லை.

பம்பாய், பூனா மற்ற இடங்களில் வைத்தியக்கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை நூற்றுக்கணக்காகத் தருவித்து, ஊரைச்சுற்றிலும் காவல் பொட்டு, சாலை மார்க்கமாகவும், ரயில் மார்க்கமாகவும் வரும் எல்லோர்க்கும் அம்மாணவர்களால் மருந்து குத்த ஏற்வாடு செய்யப்பட்டது.

பீமா நதியின் தண்ணீரை யாரும் குடிக்கா வண்ணம் காவல் செய்து தடுத்துவிட்டார்கள்.

இந்தத்தடை ஊசி மருந்தினால் ஊருக்குத் திரும்பிப்போகும் பொழுதும் தேவையான பாதுகாப்பு ஏற்பட்டு விடுவதால் நோய் வராமல் தடுக்கப்பட்டுவிட்டது.

இந்த ஏற்பாடுகளுக்கு ஆகவேண்டிய செலவு முழுவதும் யாத்திரிகர்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டது. நபர் ஒன்றுக்கு நான் கணாவீதம் வசூலிக்கப்பட்டு, பிறகுதான் ஊருக்குள் போக அனுமதிச்சீட்டும் கொடுக்கப்பட்டது.

முதல் வருஷம் பொதுமக்களிடத்துச் சற்று அதிருப்தி இருந்ததாகசொல்லக்கேள்விப்பட்டேன். நான் சென்னை மந்திரியாய்ப் பார்வையிடப் போனபொழுது இந்தத் தடை முறை மூன்றாவது வருஷம் நடைபெற்றது. அதைப் பற்றி ஒருவரும் புகார் செய்யவில்லை. அது மட்டுமல்லாமல், தடை முறைகளை வரவேற்றுப் புகழ ஆரம்பித்துவிட்டார்கள்.

சுமார் நூறு காலரா நோயாளிகள் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆஸ்பத்திரியும் மூன்று வருஷமாகக் காலியாக இருந்தது. இன்றும் அவ்விதமே நடைபெற்று வருகிறதென்று நினைக்கிறேன். இதனின்றும் சில உண்மைகள் வெளியாகின்றன.

1. நமது மக்கள் அறியாமையால் தற்காப்புச் செய்வதற்குக் கூட தடைசெய்கிறார்களென்பது உண்மையன்று.

2. மக்களின் க்ஷேமத்தை நாடும் பொறுப்புள்ள ஆட்சி முறை நடந்தால், மக்களை அணுகும் முறையை நன்கு கையாண்டால் வேண்டுவனவற்றைச் செய்யக்கூடும் என்பது தெளிவு.

3. நாகரிகத்தில் மேம்பட்ட தேசத்திலிருக்கும் எதிர்ப்பைக்காட்டிலும் இம்முறைக்கு நமது நாட்டில் அதிக எதிர்ப்புக் கிடையாது.

4. தேவையான முயற்சி, அரசாங்கம், பொருள், இவைகள் உண்டானால் நமது மக்களைத் தொற்றுநோய்களினின்றும் காப்பாற்றக்கூடும்.

5. இதெல்லாம் யுத்தம் முடிந்து புனர் அமைப்பு யோசனைகளில் செய்யப்போவதாகப் பேச்சுநடக்கிறது. இது வரையில் தடுக்காமல் இறந்த உயிர்களுக்கு யார் ஜவாப்தாரி? மக்களா? அரசாங்கமா? இதன் முழுப்பொறுப்பும் அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதில் என் மனதில் சந்தேகமே இல்லை.

(தொடரும்)

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★

★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

சுதந்திரம்

க. சந்தானம்.

1929-ஆம் வருஷத்திய இறுதி தினத்தன்று இரவு பன்னிரண்டு மணிக்கு லாகூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் பூரண சுதந்திரத்தை இந்தியாவின் லக்ஷ்யமாகக் கொண்டது. முன் வருஷத்தில் கல்கத்தாவில் பூரண சுதந்தரத்திற்கும், குடியேற்றநாட்டு அந்தஸ்துக்கும் கடுமையான விவாதம் நடந்தது. காந்திஜீயும் அவரது திறம்பெற்ற சாராரும் சுயராஜ்பத்தை லக்ஷ்யமாகக்கொண்டு, பூரண சுதந்தரத்திற்கான வழிகளைக் கடைப்பிடிக்கலாமென வாதாடினார்கள். பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸ்ரீ சுபாஷ்சந்திர போஸ், காலம் சென்ற எஸ். சீனிவாஸய்யங்கார் இவர்கள் தேசியப்போராட்டத்திற்குப் போதிய உணர்ச்சியளிக்க வேண்டுமாயின் லக்ஷ்யத்தைப் பூரண சுதந்திரமாக மாற்றுவதவசியமென வற்புறுத்தினார்கள். மறு வருஷம் இருசாராரின் சம்மதத்தின்பேரில் காங்கிரஸ் சுதந்திர லக்ஷ்யத்தை மேற்கொண்டபொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இது எவ்வளவு முக்யமானதென்பதை உணரவில்லை. 1930 ஜனவரி 26உ அன்று பூரண சுதந்தர தினம் முதலாவதாகக் கொண்டாடப்பட்டது. அதுமுதல் இப்பொழுது பதினைந்து வருஷங்கள் ஆகின்றன.

ஆயினும் இதுவரையில் நடந்தவைகளைப் பற்றியும் இனி நடக்கவிருப்பதைப்பற்றியும் பாரபட்சமற்ற, சாஸ்திரீய ரீதியில் நோக்கும் சக்தி நமக்கு இருப்பதைப் பொறுத்துத்தான் தேசத்தின் அரசியல் முன்னேற்றம் நிற்கிறது.

நமது தேசம் சுதந்திரப் பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்று ஒவ்வொரு இந்தியனும் ஆராய்வது அவசியம். இதன் விடை அவனவனுடைய மனவிலாசத்தையும், நம்பிக்கையையும் பாசங்களையும் பொறுத்திருக்கும். இப்பிரச்னை நமது புத்தியைக் கலக்கி, உணர்ச்சிகளை எழுப்பி, சுயநலத்திற்கும் பொதுநலத்திற்கும் தீவிர போராட்டத்தை உண்டு பண்ணக்கூடும்.

சுதந்திரப் போராட்டம் பலவகைப்பட்டது. அதில் லக்ஷிய அம்சம் முதன்மையானது. இத்துறையில் தேசம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது? சுதந்திரப் போராட்டம் ஆரம்பமானால் வெற்றியில் முடிந்தே தீரும் என்று பதிலளிப்பான் தேச பக்தன். வாய்ச்சொல் வீரம் கவைக்குதவாது, தேசம் முன்னேறவில்லை என்று பறைசாற்றுவான் எதையும் தூற்றிப்பேசும் சுவபாவமுள்ள போலி விஷயவாதி. ஆனால் சென்ற பதினைந்து வருஷங்களில் இந்தியாவில் அரசியல் வளர்ச்சியின் இயற்கையான லக்ஷ்யம் பூரண சுதந்திரம்தான் என்பதை இந்தியர்களின் எல்லாச் சாரார்களும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஒருகாலத்தில் உயர்ந்த நோக்கமாகக் கருதப்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்து இப்பொழுது அடிமை மனப்பான்மையின் அறிகுறியாகக் கருதப்படுகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இளைய பாகஸ்தனாக ஆவது இப்பொழுது நமது லக்ஷ்யமல்ல, அதற்குப் பதிலாகச் சைனாவுடன் கூடி, முடியுமானால் ஸோவியத் ரஷியாவையும் அழைத்துக்கொண்டு, ஆசியாவின் ஆதிக்யத்தைக் கைப்பற்றுவதுதான் இப்போதைய நமது கனவு. கிரிப்ஸ் திட்டத்தில், பிரிட்டிஷ் அரசாங்கம் கூட, இந்தியாவைப் பிரிட்டிஷ் காமன்வெல்த் தொடரில் பிணைக்க இயலாதென்பதை உணர்ந்திருக்கிறது.

இரண்டாவதாக மற்றொரு அம்சம் மிகவும் முக்யமானது. நாம் கொண்டுள்ள நோக்கங்களும் கையாளும் முறைகளும் ஒன்றோடொன்று இணைந்தவையெனக் காந்திஜீ எப்பொழுதும் உபதேசிக்கிறார். இந்திய அரசியலில் அவர் புகுமுன் அரசியல் இயக்கம் கிளர்ச்சி ரூபமாகத்தானிருந்தது. ஸத்யாக்ரஹம் என்ற அஹிம்ஸா முறையை இந்திய அரசியலில் புகுத்தியவர் அவர். ஹிம்ஸை முறையில் விடுதலைபெறும் எண்ணம் ஒரு காலத்திலுமில்லை என்று கூறமுடியாது; ஆனால் அம்முறை ஜனங்கள் மனதுக்குகந்ததாக எப்பொழுதும் இருக்கவில்லை. 1942 ஆகஸ்டுமாதச் சம்பவங்களைப் பாரபட்சமின்றி, கவனிக்கும் எவருக்கும் இரண்டு விஷயங்கள் புலப்படும். காங்கிரஸோ, அதன் தலைவர்களோ, அதன் தொண்டர்களில் பலரோ, அஹிம்ஸைக் கொள்கையில் எவ்வித மாறுதலையும் தியானிக்கவில்லை. காங்கிரஸ்காரர்களில் பலர் அதினின்றும் விலகினார்கள்.

அவர்களுக்குப் பொதுஜனங்களின் ஆதரவு அதிசயிக்கக்கூடிய அளவு கிடைத்ததென்பதையும் மறுக்கமுடியாது. யுத்தத்திற்குப் பிறகு இந்திய அரசியல் மூன்றுவித முறைகளின் போட்டியில் அகப்படும். இவைகளுள் எது மேலோங்கும் என்பது பெரும்பாலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பொறுத்தது. பொருளாதாரத் துறையில் இருதிறத்தாருக்கும் கௌரவமான ஒத்துழைப்புடன், ஒரு நேர்முகமானதும், நாணயமானதுமான அரசியல் ஏற்பாட்டை அரசாங்கம் செய்துகொள்ளுமேயானுல் இந்தியா எவ்வித கலவரமுமின்றி, சமாதானப்பாதையில் மேன்மேலும் அதன் வளர்ச்சியைத் தேடிக்கொண்டு செல்லும். ஆனுல், யுத்தவெற்றியினுல் சாதாரணமாக ஏற்படக்கூடிய ஏகாதிபத்யப் பேராசைக்குள்ளாகிச் சுயநலம் மேலிட்டு, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டு, சுற்று வழிகளையும் கரடு முரடான பாதைகளையும் பிரிட்டன் காட்டும் என்பதுதான் நமக்குத் தோன்றுகின்றது.

இந்தியா கவர்மெண்டு சட்டம் (1935) 93-ஆம் பிரிவு ஆட்சிக்குள்பட்ட மாகாணங்களில்ஏற்பட்டுள்ள பிற்போக்கான நிலைமையைப்பார்த்து, எளிதில் மனம் தளர்ந்துபோம் சுபாவமுள்ளவர்கள் இந்தியா மிகவும் பிற்போக்கடைந்துவிட்டது எனக் கருதக்கூடும். மந்திரிப் பதவிகளைத் தாமாக ராஜீனமா செய்ததும், அதன் விளைவால் ஏற்பட்ட 93-ஆம் பிரிவு ஆட்சியை மனச்சாந்தியில்லையேனும் கலவரமின்றி ஏற்றுக்கொண்டதும் முதல்தரமான அரசியல் முட்டாள்தனம் என்பது எனது அபிப்பிராயம்.

அதிகாரம் இழந்ததைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

ஆனுல் ஜனநாயக அரசாங்கம் யாதொரு புரட்சியுமின்றி ஏகாதிபத்திய ஆட்சியாக மாறக்கூடும் என்பதற்கு இது ஒரு வழிகாட்டியாக அமைந்துவிட்டது வருங்கால நிலையைப் பாதிக்கக் கூடும் என்பதைக் குறித்து விசனிக்கிறேன். எந்த அதிகார வர்க்கமேனும் இந்தியா அடையப்போகும் சுயராஜ்ய திட்டத்தை மீற முயலுங்கால் மக்களிடையே உடனே கொதிப்பு ஏற்பட்டு, கலகம் ஏற்படாவிட்டால் அத்திட்டம் அது எழுதப்பட்டிருக்கும் காகிதத்தின் மதிப்புக்கூடப் பெருது. இவ்விஷயத்தில் மக்களிடையே நாம் சிரமப்பட்டாவது ஓர் உணர்ச்சி உண்டாக்கியாக வேண்டும்.

மேலே குறிப்பிட்ட பிற்போக்கான நிகழ்ச்சி ஏற்பட்டபோதிலும், பல துறைகளில் கால அனுகூலத்தினுல் தேசம் முன்னேறியிருக்கிறது. பிரிட்டனுக்குச் செலுத்த வேண்டிய கடனை இந்தியா செலுத்திவிட்டது. இந்திய மக்களில் பெரும்பாலோர் யுத்தப் பயிற்சிக்கு லாயக்கானவர்களல்ல என்ற பித்தலாட்டம், யுத்த நெருக்கடியினுல் ஏற்பட்ட படை திரட்டலில் பொய் எனத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. கவர்மெண்டாராலும் பொது ஜனங்களாலும் வருங்காலத்திற்காக வகுக்கப்பட்டிருக்கும் திட்டங்களின் கதி என்னவாயினும் ஒன்று மட்டும் நிச்சயம். இந்தியத் தொழில் அபிவிருத்தி அடைந்தே தீரும். அந்த அளவுக்குப் பிரிட்டிஷாரிடம் நாம் அடிமையாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் கொஞ்சம் குறையும். யுத்தத்திற்குப்பிறகும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் நீடிக்குமானுல், அது பிரிட்டிஷ் திறமையினுல் அல்லது உயர்வினுல் என்று எவரும் கூறமுடியாது. வகுப்புவாதம் மத வித்தியாசம் இவைகளைப் பயன் படுத்திக்கொண்டு மக்களைக் கிளப்பிவிடுவதினுல்தான் இனி நீடிக்கக் கூடும்.

மூன்ருவதாக, பூரண சுதந்திரப் போராட்டத்தின் தன்மையை நன்குணர்வது அவசியம். இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள நேரடியான சண்டை இது எனச் சொல்லப்படுகிறது. இந்திய—பிரிட்டிஷ் போராட்டம்தான் தற்பொழுது வெளிப்படையாக முன் நிற்கிறது. ஆனுல் அதன் மறைவில் இரண்டு கடுமையான போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன.

ஹிந்து முஸ்லீம் பிளவு என்ற ஒரு ரூபத்தில் தோன்றும் போராட்டம் உண்மையில் இந்திய சமூகம் தனது பழைய ஜாதி மத விலங்குகளினின்றும் மீளுவதற்கு எடுத்துக்கொள்ளும் தீவிர முயற்சியேயாகும். வகுப்புப் பேதங்களினின்றும் விளையும் ஒரு போராட்டமும், இளம் பயிராக இருந்துவருகிறது. லக்ஷக்கணக்கான ஏழைக் குடியானவர்களின் ஓலமும், நிலமில்லாத உழைப்பாளிகளின் தீனக்குரலும், இன்று செவிகளைத் துளைக்க ஆரம்பித்துவிட்டன. உள் அடங்கிக் கிடக்கும் இவ்விரண்டு போராட்டங்களும் முதல் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்தால்தான் முற்றின வடிவை எடுத்துக்கொள்ளும்.

இந்திய—பிரிட்டிஷ் போராட்டம் சில

அம்சங்களில் சூழ்ச்சிகரமானது. இன்றைய நிலைமையைப்போலப் பிரிட்டிஷ் ஆதிக்யத்தின் ஓங்கல் இந்தியாவில் என்றுமிருந்ததில்லை. ஆயினும் பிரிட்டன்மீது அருவருப்பும் அதன் ஆட்சிக்கு ஆட்சேபமும் இன்று இருப்பதுபோல் அவ்வளவு அதிகமாக என்றுமிருந்ததில்லை. ஜனநாயக, சாம்யவாதவர்க்கங்கள் ஒருபுறமும், யதேச்சாதிகார ஜாதிப்பித்த வர்க்கங்கள் மற்றொரு புறமுமாக நின்று புரியும்இந்த யுத்தத்தின் பொழுதுகூட ஜனநாயக பிரிட்டனுக்கும் அஹிம்ஸாவாத இந்தியாவுக்கும் அருவருப்பு மேன்மேலும்அதிகரிப்பது விசனகரமானதே. ஹெச். ஜி. வெல்ஸ் கூறுவது போல், பிரிட்டனிடம் இந்தியா நம்பிக்கைஇழந்ததற்குச் சர்ச்சில் அவர்களின் மனப்பான்மைதான் காரணம். இந்தியா அரசியல் காமாலையால் பிடிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவாளி ஆங்கிலேயர்கள் சிலர் சொல்வதை ஒப்புக்கொள்வோம். ஆனால் அதற்குப் பொறுப்பாளி பிரிட்டன்தான் என்பதை நாம் அவர்களுக்குச் சொல்வோம். ஆதலின் பிரிட்டன் இந்தியா இரண்டும் பரஸ்பர நல்லெண்ணத்தைக் கொண்டாலொழியப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள இயலாது. அவ்வித நிலைமை ஏற்படுவது சர்ச்சில் அவர்கள் அதிகாரம் பெற்றிருக்கும் வரையில், மிகக் கடினம்.

மகாமகம் அன்னதான கைங்கர்யத்துக்குச் செக் அனுப்பி இருந்தீர்கள். ரொம்ப சந்தோஷம். ஆனால்......தாங்கள் கையெழுத்துப்போட மறந்துவிட்டீர்கள்......

சிவன்வாள்! நான் மறந்து போகவில்லை. ஆனால்.........இந்த புனிதமான கைங்கர்யத்துலே என் பெயரை விளம்பரப் படுத்திக்கொள்ள எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லேன்னு. மன்னிக்கணும்.

வரம்

ரா. ஸ்ரீ. தேசிகன்

எங்கள் ஊர் மதுராபுரியில் ஜன நெருக்கம் அதிகரித்துவிட்டது. வசதியான வீடுகள் கிடைக்கவில்லை. பட்டணத்து நடுவே சாதாரணச் சம்பளம் வாங்குகிறவர்கள் குடித்தனம் செய்வது சாத்தியமான காரியமில்லை. எனக்கோ போதுமான வருமானம் இல்லை. மேலும் ஜனச்சந்தடியைவிட்டு விலகித் தனிமையாக இருக்கவேண்டும் என்ற ஆவல் எனக்குண்டு. ஆகவே நான் நகரத்தின் எல்லைப்புறத்தில் உள்ள வீட்டில் வசித்துவருகிறேன். ஆனால் என்னைக் காட்டிலும் ஏழை ஜனங்கள் என் வீட்டுக் கொல்லைப்புறத்துத் தெருவில் வசித்து வருகின்றனர். சிறிய சிறிய குடிசைகள் தென்படும். மழை கொட்டினால் என் வீடெல்லாம் ஈரமாய்ப் போய்விடும். அக்குடிசைகளில் கேட்கவேண்டியதில்லை. அவ்வேழை ஜனங்களுக்குப் பாயேது, படுக்கையேது? குடிசைகளெல்லாம் குழிகுழியாய்த் தண்ணீர் தேங்கிவிடும். குழிகளிலிருந்து கீழே அது அருவிபாயும். படுக்கையில்லாமல் வீட்டுக் கதவுகளைப் பிடுங்கிக் கீழே பரப்பி அவைகளின்மீது உறங்குவார்கள். பலகைகளுக்கு அடியில் ஜலம் சலசலவென்று ஓடவும் ஆரம்பித்துவிடும். வெய்யிற்காலத்தில் அத்தனை சிரமம் இராது. தெருவே படுக்கையாகிவிடும். தெரு சுத்தமாயிருக்குமா? ஒரு புறத்தில் குப்பை குவிந்து கிடக்கும். அக்குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கும் கோழிகள். மூலையில் ஒரு சொறி நாய் வெய்யில் காயும். மல மூத்திரங்கள் எல்லாம் அத்தெருவிலேதான். கொல்லையில் எருக்குழி. அக்குழியில் ஜலத்தேக்கம். அத்தேக்கத்தில் கணக்கில்லாத சில் பாடும். பக்கத்திலுள்ள குளம் எல்லாவற்றிற்கும் பயன்படும். தென்ன மட்டை ஊறுகிறதும் அக்குளத்தில் தான்; மாடுகளைக் குளிப்பாட்டுகிறதும் அங்கேதான்.

அவ்வேழைகளுக்குச் சில வசதிகள் இருக்கின்றன. வயிறுநிறையப் போதுமான அரிசி கிடைக்காமற் போனாலும் காய்கறிகளைத் தின்று பசி ஆற்றுவார்கள். கூரைகள்மீது சுரை படர்ந்திருக்கும். பூசினி பரங்கிக் கொடிகள் கொல்லையில் ஓடும். குட்டைகளிலுள்ள மீன்களைப்பிடித்து வற்றல் போட்டுவிடுவார்கள். அந்நாற்றம் சகிக்கமுடியாது. வறுமையினால் சண்டை சச்சரவுகளுக்குக் குறைவில்லை. ஒரு கோழி மற்றொரு கூரையில் உட்கார்ந்தால் அதற்கொரு சண்டை. ஆடு மாடுகள் தோட்டத்தில் புகுந்தால் ரணகளப்படும். பக்கத்துவீட்டு மரத்தில் காய்ந்த சுள்ளிகளை முறித்தால் வெம்பகை எழுந்துவிடும். கணத்திற்கொரு பூசல், நிமிஷத்திற்கொரு வசவு. வசைச்சொல் அகராதி முழுவதும் அங்கே தீர்ந்துவிடும்.

அமைதியை நாடுகிற நான் ஏன் சண்டை சச்சரவுகளுக்கு இடையே வந்து சிக்கிக் கொண்டேன் என்று நினைத்தது உண்டு. ஆனால் குடிசைகளுக்கு அப்புறம் சற்றுப் போய்விட்டால் ஒரே பசுமைதான். கண்ணிற் கெட்டினவரையில் கழனிகள் கடல்போல் விரிந்துகிடக்கும். பிள்ளைத்தென்றல் அதன் மீது தவழ்ந்து வரும்பொழுது இன்னதென்று சொல்லமுடியாத இசை ஒன்று காதில் விழும். பக்கத்திலுள்ள ஆற்றங்கரை ஓரத்திலுள்ள மூங்கிற் காடுகளில் காற்றின் பாட்டொலி கேட்கும். அடிவானத்தைத் தொடுகிற வயலின் நடுவிலிருந்து எழும் கம்பீரமான சூரியோதயக் காட்சி, மாலைப்பொழுதில் சிதறிய சுவர்ணத்தைக் காட்டும் செவ்வானம், குட்டைகள், குளங்கள், ஏரிகள், ஆறுகள், சோலைகள், காடுகள், மலைகள் இவைகள்மீது உறங்கும் அமைதி தோய்ந்த நிலவு, கங்குலில் கண்விழித்துக் காவல் செய்யும் தாரகா கணங்கள், இவை யாவும் என் உள்ளத்தில் சாந்தத்தைச் சொரிந்தாலும் என் கொல்லைப்புறத்தில் கிளம்பும் சண்டையும் சச்சரவும் ஆண்டவன் சிருஷ்டித்த உலக மஹா காவியத்தில் இடம்பெறத்தானே பெறும் என்று உன்னுவேன். என் சுக மனச் சச்சரவுகள்தாம் அங்கே பூசலாக எழுகின்றனவோ என்ற எண்ணம் என் மனத்தில் மெல்லப் புகும். ஆனால் 'கோலம்கொள் சுவர்க்கமும் யானே என்னும்—கோலமில் நரகமும் யானே என்னும்' என்று தைரியமாகச் சொல்ல என்னால் முடியாது. கொல்லைப்புறத்தில் இருக்கிற ஏழை மக்கள் சம்பந்தமற்ற—தொடர்பற்ற-ஏதோ வேறு இனம் என்றுதான் அநேகமாய்த் தோன்றும். ஆனால் ஒரு கோரச் சம்பவம் என்னைத் திடுக்கிடச்செய்துவிட்டது.

ஒரு நாள் காலையில் இருவர் பூசல் செய்யும் இரைச்சல் கேட்டது.

"அறிவில்லை, கழுதை! ஏண்டா என் கத்தியை எடுத்தே?"

"யாருக்குடா அறிவில்லை, நாயே! கத்தியெடுத்தா குறைஞ்சு போயிடுத்தோ, நீ அண்ணைக்கு என் கத்தியைக் களவாடிட்டுப் போனியே"

"யாருடா களவாடினு? இந்தப் பேச்செல்லாம் பேசிக்குட்டு வந்தால் பாத்துக்கோ, இந்தக் கத்தியாலே ஒரு பார்வை பாத்துடுவேன்"

"எங்கே குத்து பாப்போம் பேமானி"

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி, சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்த மற்றது.

எங்கும் கிடைக்கும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிளோ - இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்—2

"யாருடா, பேமானி? கோபம் வந்திடுச்சோ யாருன்னு பாக்கமாட்டேன். இதாலே கொன்னுபோட்டிடுவேன்"

பேச்சுக்கள் முற்றுகின்றன. கண்களில் தீ எழுகின்றது. பற்களை நரு நரு வென்று கடிக்கின்றனர். சினத்தில் உதடுகளை மடிக்கின்றனர். 'அப்பன் ஆயி' என்று சொல்லத்தகாத வார்த்தைகள் வெடித்து விடுகின்றன. கை கலந்து விட்டது. இருவருக்கும் குத்தும் வெட்டும் ஏற்பட்டுவிட்டன. ஓர் அம்பட்டன் மற்றொருவனைப் படாத இடத்தில் குத்திவிட்டான். அவன் இரத்தம் கீழே குளம்பட விழுந்துவிட்டான். கொலை செய்தவனைப் போலிஸார் கைது செய்துவிட்டனர்.

இக்கோரமான காட்சியை நேரில் கண்டும் போய்த் தடுப்பதற்குத் தைரியமில்லை. என் உயிர் எனக்கு வெல்லமில்லையா, என் பிராணனுக்கு ஆபத்து வந்தால் என்ன செய்வது என்று வாளா இருந்தேன். மனத்திலே இக்கோர சம்பவத்தைப்பற்றி ஒரு நீண்ட சிந்தனைச் சரடு என் முன் அவிழ்ந்து விழுந்தது. அற்ப விஷயத்திற்காகக் குத்திக் கொன்றானே. இதற்குச் சூழ்நிலை காரணமா? இவனைப் பெற்ற தாய் தகப்பன் காரணமா? அல்லது அவன் பெற்றோர்கள் தீச்செயல்கள் அவன் இரத்தத்தில் ஓடிற்றா? பல தலைமுறைகளாக உள்ளத்தில் ஊறின கோபதாபங்களின் காரணமா? சாரமில்லாத ஒரு அற்ப விஷயத்திற்கு இக்கொலை நேரிடுமானால் ஏதோ ஓர் உணர்ச்சி வெள்ளம் இவன் அறிவை அடித்துக்கொண்டு போயிருக்கவேண்டும். ஒரு பெரும் புயல் இவன் மனதைச் சூறையாடியிருக்கவேண்டும். அதன் வசமாய் அது போகிற இடமெல்லாம் சுழன்று ஆடும் ஒரு துரும்பு போல ஆகிவிட்டானா? ஒன்றுந்தோன்றவில்லை. சந்தேகம் என்னை வாட்டவே என் சற்குருவை அடைந்தேன்.

மதுராபுரிக்குப் பக்கத்திலுள்ள மலை அடிவாரத்தில் ஓர் ஆறு ஓடுகிறது. அதற்கு அருகில் ஒரு பர்ணசாலை. அதில்தான் என் குருநாதர் வசிக்கிறார்.

காலை எட்டு மணி இருக்கும், அவரை அணுகினேன். காலை இளம் வெய்யலில் முறுவல் காட்டி ஓடும் ஆற்றின் மீது அவர் கண்கள் பதிந்து கிடந்தன.

நான் போனதும் அவர் அருள் நோக்கு என் மீது விழுந்தது.

"என்ன விசேஷம்? இந்த அதிகாலையில் இங்கு வருவானேன்!"

"என் வீட்டுக் கொல்லைப்புறத்தில் கோரமான கொலை ஒன்று ஏற்பட்டுவிட்டது'.

"அதற்கென்ன?"

"ஓர் அற்பக்கத்திச் சண்டைக்குக் கொலையா!

"யார் கொலை செய்தது"

"ஒரு நாவிதன்"

"நாவிதனா? இல்லை, நானும் நீங்களும்தான்"

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"நம்முடைய தீய எண்ணங்கள்தாம் அவனை இப்படி ஆட்டிவைத்துவிட்டன?"

"உலகத்தில் நடக்கிற கெடுதல்களோ நல்லவைகளோ எல்லாம் நம்மைச் சார்ந்தவைகளா?"

"அதைப் பற்றிச் சந்தேகப்படுகிறீர்களா"

"அப்பொழுது ஒருவரும் மோக்ஷம் அடைய முடியாதா?"

"முடியாதுதான். உலகத்தின் அறியாமை நம்முடைய அறியாமைதான், உலகத்தின் ஞானமும் நம்முடைய ஞானம்தான்"

"பகவானுக்குக் கலியாண குணங்கள்தான் என்று சொல்லுகிறார்களே"

"அதெல்லாம் வெறும் கதை"

"அப்படியென்றால் பகவானிடத்தில் குறையிருக்கிறதா? அவன்கூட மோக்ஷத்தை அடையவில்லையா"

"அவனும் பிரயத்தனம் செய்கிறான். நாமும் அவனோடு சேர்ந்து உழைக்கவேண்டும். ஆழ்வார் பாட்டு உங்களுக்கு ஞாபகமிருக்கிறதோ?"

"ஆம் ஞாபகமிருக்கிறது."

"நல்குரவும் செல்வமும் நரகமும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்ப்
பல்வகையும் பரந்த பெருமான் என்னையாள்வானை
செல்வம் மல்குகுடித் திருவிண்ணகர்க் கண்டே-
னே."

பார்த்தீர்களா நம்மாழ்வாரின் தைரியத்தை! நரகமும் சுவர்க்கமுமாய் நிற்கிறான் பகவான் என்று பாடுகிறார். நமக்குக் குறை இருந்தால் நம்மைப் படைத்தவனுக்கு அக்குறைதானே. ஆகையால் தனித்து மோக்ஷம் அடையமுடியாது. நாம் சிறையிலிருக்கிறபொழுது அவன் எப்படி விடுதலை அடைய முடியும்? பகவானும் சிறையில்தான் இருக்கிறான். ஒரு குருவியின் ஓலம் குவலயத்தை முழுவதும் ஆட்டிவிடும் என்பது உண்மையன்றோ?"

"அதிருக்கட்டும், நம்முடைய எண்ணங்கள்தான் அவனைப் படுகுழியில் தள்ளிவிட்டன என்று சொன்னீர்களே, அதெப்படி".

"மனமொன்றே. நம்முடைய உணர்ச்சிகள் பிறர் உள்ளங்களிலும் பாய்கின்றன. அவைகள் பலமற்றவைகளாய் இருந்தால், அவைகள் அவ் உணர்ச்சி அலைகளினால் அலைக்கப்படுகின்றன. பூமியின் அடியில் அக்கினிப் பிழம்பு ஓர் ஆறாய் ஓடுகிறது. பல இடத்திலும் ஓடி முட்டிப் பார்க்கிறது. எந்த இடத்தில் கடினமில்லாமலிருக்கிறதோ, அந்த இடத்தில் பிய்த்துக்கொண்டு வெளியிலே வந்து விடுகிறது. நம்முடைய தீய எண்ணங்கள் பல இடங்களைப் போய்த் தட்டுகின்றன. செயலற்ற உள்ளங்கள் அவைகளுக்கு இரையாகி விடுகின்றன.

அவர் சொல்லுகிற தத்துவத்தின் உண்மையை அறிய முடியவில்லை. அதில் ஏதோ ஒரு நியாயம் இருக்கிறது என்று தோன்றிற்றே தவிர அதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள என் மனம் இடம் கொடுக்கவில்லை. எத்தனை உண்மையான உபதேசமாயிருந்தாலும், அதுவும் இரத்தத்தோடு கலந்து ஒலிக்காமல்போனால், அதை நாம் நம்புவோமா? குருநாதர் செய்த உபதேசத்தைப் பலதரம் சிந்தித்துப் பார்த்தேன். சிந்தித்தென்ன? மீளாச் சந்தேக இருட்குகையில் நுழைவதுபோலப் பட்டது.

* * *

மதுராபுரிக்கு இரண்டு மைலுக்கப்பால் ஓர் அழகிய நந்தவனம் உண்டு. அந்த நந்தவனத்தின் நடுவே ஒரு மண்டபம் மிகக் கவின்பெற அமைந்து கிடக்கிறது. அருகிலிருந்தும் அதை நான் ஒருதரமாவது போய்ப் பார்த்ததில்லை. அம்மண்டபத்திலிருந்து வரும் பலவித இசைகளைப்பருகிக் களித்து வந்திருக்கின்றனர் அங்கே சென்றவர்கள். சிந்தனைப் பாதையில் என் மனம் செல்ல நான் அத்திசையை நோக்கி ஒருநாட் காலையில் மெல்ல ஊர்ந்துசேர்ந்தேன். அங்கே எங்கே பார்த்தாலும் ஓர் அமைதிதான். பறவைகள் கூவவில்லை. வண்டுகள் கூட ரீங்காரம் செய்யவில்லை. இலைகள் அசையவில்லை. ஏதோ சித்திரத்தில் அலர்ந்தது போல எல்லாம் நின்றன.

எங்கேயோ கூட்டில் பதுங்கித் துயின்ற காற்று மெல்ல வீச ஆரம்பித்தது. புல்லாங்குழல் ஒலிபோல ஒரு குரல் மிதந்து வந்தது. வீணை நாதம் போல ஓர் இசை எழும்பிற்று. அழுவதுபோல ஓர் ஓலம் கேட்டது. கணகணவென்று சிரிப்புக்கள் திடீரென்று வெடித்தன போல அரவங்கள் காதில் விழுந்தன. பல ரசங்களைக் காட்டக்கூடிய பல ஒலிகள் கறங்கின. சிறிது நேரத்திலே ஓசைகள் அமைதியில் ஒன்றுபட்டுவிட்டன. அந்த மண்டபத்திற்குள் நுழைந்தேன். பல காற்றிசைக் கருவிகளைப் பார்த்தேன். என் குருநாதரின் உபதேச உண்மை என் மனத்தில் ஒளிவீச ஆரம்பித்துவிட்டது. இக்காற்றே இப்படிச் செய்துவிட்டதே; காற்றைக் காட்டிலும் நுட்பமான என் எண்ணங்கள் கணக்கில்லா உள்ளக் கருவிகளைத் தொட்டால், அவ்வுள்ளங்கள் என்ன பாடுபடும். ஆண்டவனே சும்மா இருக்க அருள்வாய்; மோன மௌலி கவிழ்ப்பாய் என் மீது; நான் யாசிக்கின்றது இதுவே.

மெய் காவலன்

வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

நள்ளிரவு. நிர்மலமான ஆகாசம். எண்ணற்ற விண்மீன்கள் சுடர் தெறிக்கின்றன. விண்மீன்களின் ஒளியே இருளின் கருமையை மட்டுப்படுத்துகின்றது.

அந்த நள்ளிரவில், விண்மீன் ஒளிகொண்டு, ஒரு சிறிய உருவம் மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்து, சுவரைப்பிடித்துக்கொண்டு தடவித் தடவிச் செல்கிறது. படிப்படியாக மேலேறி அந்த அறைக்குள் நுழைந்துவிட்டது.

அந்த அறைதான் அரசனின் பள்ளியறை. சிவாஜி மகாராஜா ஆழ்ந்த துயிலில் அமிழ்ந்திருந்தார். அந்தச் சிறிய உருவம் சிவாஜியின் கட்டிலை நெருங்கியது. அந்த உருவம் ஒரு சிறுவனுடையது! பையன் கையில் நெடிய, கூரிய வாளிருந்தது! சிவாஜியின் முகத்தை உற்றுநோக்கினான் பையன். உறக்கத்திலும் சிவாஜியின் வதனத்தில் வீரமும், கம்பீரமும், உறுதியும் தெளிவாகத் தோன்றின. ஒரு "ஹிந்து ராஜ்ய"த்தை நிலை நாட்டி விட்டோம் என்ற திருப்தியும், அமைதியும் கூட அவ்வப்பொழுது தோன்றித் திகழ்ந்தன அம்முக மண்டலத்திலே.

ஆனால், சிவாஜியின் முகப்பொலிவைக் கண்டு ஏமாறுவதற்காக வரவில்லை அந்தச் சிறுவன். அவரது சிரம் கொய்ய வந்திருந்தான் வாளுடனே!

அந்த மூலையில் மங்கலாக எரிந்துகொண்டிருந்த சுடர் க்ஷத்ரபதியின் முகத்திலே பட்டது. க்ஷத்ரபதியின் புருவங்கள் நெரிந்தன; நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின. திரும்பிப் படுத்துக்கொண்டுவிட்டார்.

திரும்பும்போது பையன் மெதுவாக நகர்ந்து தலைமாட்டில் மறைந்துகொண்டான். சந்தடி ஒன்றும் காணோம்! மன்னர் ஏதோ சொப்பனம் கண்டிருக்கவேண்டும்!

பையன் மறுமுறை கட்டிலின் பக்கத்திலே வந்து நின்றான். சிவாஜியின் முதுகுப் புறமே பையனை நோக்கியிருந்தது. உறுதியான மனத்துடன் தான் நினைத்து வந்த வினையைச் செய்து முடிக்க வாளை ஓங்கி விட்டான் மன்னனின் கழுத்தை நோக்கி.

புஜம் உயர்ந்துவிட்டது! ஆனால் உயர்ந்த புஜம் கீழே தாழவில்லை; கல்லாகி விட்டதா? இல்லை, இல்லை. ஏதோ ஒரு வலுத்த கரம் பின் புறத்திலிருந்து சமயம் பார்த்துப் பிடித்து விட்டது.

"கொலைகாரப் பயலே" என்று கோபமும் வெறுப்பும், கம்பீரமும், எடுப்பும் நிரம்பிய குரல் கிளம்பியது! இந்தச் சொல்லரவம் கேட்டு விழித்துக்கொண்டுவிட்டார் மன்னர் சிவாஜி.

எழுந்து உட்கார்ந்து தம் கண்களைத் துடைத்துக்கொண்டு, கைகளைப் பார்த்துக்கொண்டு பின்னர் எதிரே நிமிர்ந்து பார்த்தார்.

ஆருயிர் நண்பர் தானாஜி, ஒரு சிறுவனைப் பிடித்துக்கொண்டு, சினம் பொங்கும் முகத்துடன் காட்சி கொடுப்பதைக் கண்டார்.

"என்ன இது தானாஜி?" என்று மகாராஜா நினைந்து கேட்பதற்கு முன்னதாகவே தானாஜி முற்பட்டு, "இந்தப் பையனைத் தொடர்ந்து வந்தேன். இவன் தங்களைக் கொலைசெய்வதற்கிருந்தான்; தங்களை நோக்கி வாளை வீசும் பொழுது பிடித்துவிட்டேன்", என்றார்.

பையனுடைய கையிலிருந்த வாள் அவன் செய்யவிருந்த செய்கைக்குச் சாட்சி சொல்லியது.

பையன் வறிதே நின்றுகொண்டிருந்தான். அவன் பயங்கொண்டதாகவே தெரியவில்லை!

இழந்த சக்தி

மூல் சக்தியை இழந்து தாம்பத்ய வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லையா ?
அப்படியானால்—

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ்
தயாரிக்கும்
ரெஜூவெண்டா வை
இன்றே உபயோகியுங்கள்

3 மணி நேரத்தில் நல்ல பலன் அளிக்கும்
புத்துயிர், ஊக்கம், வலிமை வரும்.
ஸ்திரீகளின் போக வெறுப்பை நீக்கும்.

பாட்டில் ஒன்றுக்கு	ரூ. 2—8—0
டஜன் பாட்டில்கள்	ரூ. 27—0—0

வினியோகிப்பவர்:—
டாக்டர் R. மோஹலநோவிஸ்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 10013, கல்கத்தா.

குறிப்பு:—நம்பத்தகுந்த ஹோமியோபதி, பயோகெமிக் மருந்துகள் டிராம் ஒன்றுக்கு ரூ. 0—3—6 வீதம் ஷை விலாசத்தில் கிடைக்கும்.

அவனுடைய உடலில் ஒரு நடுக்கத்தையோ, பார்வையில் ஒரு மருட்சியையோ காணோம்! பையனும் ஏதோ எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்போலும்!

"நீ யாரப்பா குழந்தாய்?" என்று கனிவுடன் வினவினர் சிவாஜி மன்னர்! தானுஜியின் பிடி தளர்ந்தது.

"எனது பெயர் மாலோ, மகாராஜா" என்ருன் பையன். பையனுடைய குரலில் பதற்றத்தையே காணோம்.

"நீ என்ன எண்ணத்துடன் இங்கு வந்தாயப்பா?"

நண்பர் தானுஜியின் மீது அவநம்பிக்கையா? இல்லை, விஷயத்தைப் பையன் கூற, நேரடியாகத் தெரிந்துகொள்வோமே என்ற மனப்பான்மையா?

"தங்களைக் கொல்வதற்காகத்தான் அரசே!" என்ருன் சிறுவன். இப்படிச் சொல்லும்போது பையனுடைய குரலிலே அழுத்தமும், உறுதியும் இருந்தன.

"இதன் விளைவு என்ன ஆகும் என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியாமலென்ன; பிடிபட்டால் மரண தண்டனை தான்!"

"அப்படித் தெரிந்திருந்தும் என்னைக் கொல்ல முயன்றதேன்? உன் உயிர்பற்றி உனக்குக் கவலை கிடையாதா?"

"இல்லை, மன்னவ! வயது முதிர்ந்த எனது தாய் பசியால் படுக்கையிற் படுத்து, இப்போதோ எப்போதோ என்று மூச்சை இழுத்துக்கொண்டிருக்கிருள். அப்படி இருக்கும்போது நான் எப்படி எனது உயிர் பற்றிக் கவலைகொள்வது?"

தானுஜி கதை கேட்பவர்போலக் கையைக் கட்டிக்கொண்டு கம்பம்போல நின்ருர்.

"உனது தாயார் பசியால் வாடுவதற்கும், நான் கொலை செய்யப்படுவதற்கும் என்னப்பா சம்பந்தம்?" என்ருர் சிவாஜி.

"சம்பந்தம் உண்டு, மகாராஜா! நெருங்கிய சம்பந்தம் உண்டு" என்று பதிலிறுத்தான் பையன்!

"தாங்கள்தான் இதற்குக் காரணமென்று தங்களுக்கெப்படித் தெரியும்? என் தந்தை, தங்கள் படையிலிருந்து, தங்களுக்கே பணி செய்து தமது ஆவி போக்கியவர். நானும், எனது அன்னையாரும் பிழைப்பதற்கு வகை தெரியாது வாடுகின்ருேம். தாயார் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையோடு படுக்கையாகக் கிடக்கிருள். மூன்று நாட்களாக அவள் வாய்க்கு ஒரு பருக்கை கிடையாது!"

இதைச் சொல்லும்போதே பையனின் களங்கமற்ற முகம் வாட்டமுற்றது; வாதனையால் வதங்கியது. திறந்த கண்களில் நீர் தளும்பியது. அவனது மனேதிடம் எங்கே ஓடி மறைந்தது?

சிவாஜி யோசனையில் ஆழ்ந்தார்!

சிந்தனை சிதறிய பின்னர், "என்னைக் கொன்றுவிட்டால், உனக்கு இந்தக் கஷ்டம் எப்படி விடியும், மாலோ?" என்ருர்.

விடை எப்படி இருக்குமோ என்ற எண்ணத்தால் சிவாஜியின் நெற்றியில் சுருக்கங் கண்டது.

"விடியும் மகாராஜா! விஷயத்தைத் தெளிவாக்கிச் சொல்லிவிடுகிறேனே! சுபாக்பராயர் தான் தங்களைக் கொன்றுவிடும்படி என்னை அனுப்பினர். அவர்தான் தங்கள் பரம விரோதியாயிற்றே. தங்களைக் கொன்று முடித்தால் எனக்கு ஏராளமான ஐசுவர்யம் தருவதாக வாக்களித்திருக்கிருர்" என்று மொழிந்தான் சிறுவன்!

பையனின் இந்த மொழி சிவாஜி மன்னருக்கு வியப்பையே கொடுத்தது. அவருடைய கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன!

சிவாஜி மறுபடியும் சிந்தனையில் லயித்துவிட்டார்!

"மாலோ, இறப்பதற்குச் சித்தமாயிரு. உனது இக்கோரப் பெரும் பிழைக்கு மகாராஷ்டிர நாடே நடுங்குகிறது என்பதை நினைவிலிருத்திக்கொள். இக் கொலையை முடித்து, நாட்டின் உயிரொளியையல்லவா அவிக்க விருந்தாய். மகாராஷ்டிரத்தையே கோர அந்தகாரத்தில் அமிழ்த்திவிட இருந்தாயே ...." என்ருர் தானுஜி!

"நான் சாவிற்கு அஞ்சவில்லை! இவ்விதமான சாவென்பது க்ஷத்திரியர்களின் வாழ்விலே எப்போதும் நிழல்போல் தொடர்ந்து வருவது தானே! ஆனல்..............."

வியப்புக் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த சிவாஜி நிமிர்ந்து பார்த்தார். பையனுடைய முகத்தில் பிரகாசமிருந்தது. அந்தப் பிரகாசம் சிவாஜியின் மனத்துள் புகுந்து வேலை செய்தது. இருந்தாலும் பையனைப் பயமுறுத்துவதற்காக, "ஆனல்......என்ன?" என்ருர் அதட்டும் குரலில்!

"நான் சாவதற்கு முன்பு எனது கிழத் தாயை ஒரு முறை பார்க்கவேண்டும். அவளும் இறந்து கொண்டிருக்கிருள். அவளது பாத கமலங்களைத் தொட்டு வணங்கி, ஆசி பெற்று வந்துவிடவேண்டும். அப்படிச் செய்ய நான் அவசியம் வெளியே செல்லவேண்டும். நான் வெளிச் செல்லத் தாங்கள் அவசியம் விடை தரவேண்டும்.........விடிந்ததும் நானே வந்து விடுகிறேன்" என்ருன் பையன்.

"உன்னை எவ்வாறு நம்புவது? நீ அப்படியே ஓடிவிட்டால்.........?" என்றார் சிவாஜி எகத்தாளமாக.

"நான் ஜாதியில் க்ஷத்திரியன். க்ஷத்திரியன் பொய்சொல்வது கிடையாது. சொன்னது சொன்னதுதான். தன் சொல்லைக் காக்கத் தன் உயிரையும் மதியான்" என்றான் சற்று ரோசத்துடன்.

"சரி, நீ போகலாம்" என்று விடை கொடுத்தார் சிவாஜி மன்னர்.

ஃ ஃ ஃ

விடிந்தது. கதிரவனின் பொன்னொளி வெள்ளொளியாக மாறியது. க்ஷத்ரபதி சிவாஜி அறையில் கொலுவீற்றிருந்தார்! அருகிருந்த அன்பு நண்பர் தானாஜியிடம் ஏதோ உரையாடிக் கொண்டிருந்தார்.

காவலாளி உள்ளே வந்துபணிந்து, "தங்கள் சமுகத்தைக் காணவேண்டி ஒரு சிறுவன் வந்திருக்கிறான்" என்று அறிவித்தான்.

சிவாஜியின் முகம் மலர்ந்தது. தானாஜியின் முகம் தெளிந்தது.

பையன் அரசவைக்குள் நுழைந்தான், ஆம் க்ஷத்திரிய வம்ச, கிஷோர்குலச் சிறுவன் மாலோதான்!

'அரசரேறே! இதோ வந்துவிட்டேன்" என்று அறிவித்துக்கொண்டான் சிறுவன்.

''எனக்கு இவ்வுலகில் எவ்வித ஆசையோ, பாசமோ கிடையாது; கோபமோ வருத்தமோ கிடையாது; நான் நிச்சலமாக நிற்கிறேன். எனக்குற்ற தண்டனையை நிறைவேற்றி வைக்கலாம்," என்றான்.

சிவாஜி மன்னரின் மகிழ்ச்சியும், வியப்பும் எல்லை மீறின! தானாஜி திகைப்படைந்தார்.

இப்படிப்பட்ட, நேர்மையும், அஞ்சா நெஞ்சும், மன வலியும் படைத்த ஒருவனுக்கா மரண தண்டனை? சீ, சீ! அவன் பிழைத்தால் நாட்டிற்கல்லவோ நலன். அவனை நல்ல முறையில் பயன் படுத்திக்கொள்ளலாமே!

சிவாஜியின் கண்கள் ஒளி வீசின. இருக்கையினின்று இழிந்து வந்தார்! சிறுவனைத் தழுவிக்கொண்டார்.

"மாலோ, நீ நாட்டின் நன் மணி! பொறுப்பறியாச் சிறு வயதிலேயே நீ மனவலியும், அஞ்சா நெஞ்சும் உடையவனாக இருக்கிறாய். பொறுப்பும், விவகாரமும் புரிந்துவிட்டால் நீ இணையற்ற சேவை செய்வாய்! உன்னைப் போன்ற ஒப்பற்ற அரிய மணிகள் தோன்றித்தான் நமது தாய்த் திருநாட்டிற்கு நல்ல பெயரையும் மதிப்பையும் கூட்டி வைக்கிறீர்கள், உனது பணி மகாராஷ்டிர நாட்டிற்கு மிக மிக அவசியம்.

"இதோ எனது உடம்பை உயிருடன் உன்னிடமே அடைக்கலமாகத் தந்துவிட்டேன். எனது அருகிலிருந்து எனது உடலை எப்போதும் நீதான் காப்பாற்றவேண்டும். நீதான் இன்று முதல் எனது மெய்காப்பாளன்" என்று மனப்பூர்வமாக மொழிந்தார் சிவாஜி!

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

இல்லறத்தில் வீரம்

மாரார்

"இந்த இதழுக்குத் தருகிறேன் என்று தாங்கள் சொல்லிய கட்டுரை தயார் ஆகிவிட்டதா? பத்திரிகை வெளியாவதற்கு இன்னும் பத்து நாட்கள் தான் இருக்கின்றன. சென்ற இதழில் உங்கள் கதையோ கட்டுரையோ ஒன்றும் இல்லாதது ஒரு குறை என்று எங்கள் ஆசிரியர் எண்ணுகிறார்; ஆகையால் இந்த இதழுக்காவது தவருமல் சீக்கிரம் கட்டுரை ஒன்று கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கும்படி என்னை அனுப்பியிருக்கிறார்" என்று "பிரதீப" பத்திரிகையின் உதவி ஆசிரியர், சதாநந்த சர்மா விடம்வந்து பேசிக்கொண்டிருந்தார்.

அதற்குச் சதாநந்த சர்மா, "கட்டாயம் தருகிறேன். இதோ எழுதிக்கொண்டிருப்பது உங்களுக்காகத்தான். முக்கால்வாசி எழுதியாகிவிட்டது. பாக்கியையும் இரண்டொரு நாட்களில் முடித்து அனுப்புகிறேன். காலதாமதமானதற்கு மன்னிக்கும்படி உங்கள் ஆசிரியரை வேண்டிக்கொண்டதாகச் சொல்லுங்கள்" என்ருர்.

அப்பொழுது அவர் ஐந்தாவது குழந்தை, "அப்பா, சீதா என்னைக் கிள்ளிவிட்டாள். சிரங்கில் பட்டுவிட்து, ரொம்ப நோகிறது" என்று அழுதுகொண்டு தந்தையிடம் சலுகையாக ஓடிவந்தது.

சதாநந்தர் குழந்தையை வாரி எடுத்தணைத்துக்கொண்டு, "அழாதேயம்மா, சீதாவை நான் அடித்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு, உதவி ஆசிரியரை நோக்கி, நீங்கள் போய்வாருங்கள். சீக்கிரம் அனுப்பிவிடுகிறேன்" என்று கூறினர்.

அவர் சென்றவுடன் சதாநந்தர் மனைவி அங்கே வந்து, "விஜயாவைப் பார்க்கிறதற்கு அந்தப் பிள்ளையும் அவன் தாயார், தகப்பனும் அடுத்த வெள்ளிக்கிழமை வருகிருர்களே. அதற்கு முன்னல் யாரிடமாவது கடன்வாங்கி, காதை கழுத்தை மூடிக் காண்பிக்க வேண்டாமா? காதிலும் கழுத்திலும் ஒன்றுமில்லாமல் பிறந்தமேனிக்கு இருந்தால் பெண் பிடிக்கவில்லை என்பார்களோ, என்னவோ" என்ருள்.

அதற்குச் சதாநந்தர், "கடன் வாங்கி நகை ஒன்றும் போடாதே, விஜயாவிற்குத் தன் அழகு ஒன்றே போதும். ஏதோ பகவான் அவளை மூக்கும் முழியுமாகப் படைத்திருக்கிருர். அதைப் பார்த்துச் சம்மதித்தால் சரி, இல்லையெல் வேண்டாம். நமக்கில்லாத அந்தஸ்து இருக்கிறது என்று கடன் வாங்கி எதற்காகக் காண்பிக்கவேண்டும்" என்று வினவினர்.

அவர் பாரியை, "ஒரு நல்ல சிற்ருடையாவது கட்டிக்கொள்ள வேண்டாமா? சீட்டி தினுசுகளில் மலிவாகச் சிற்ருடை ஒன்று வாங்கினல் தேவலை. அவள் அதை உடுத்திக் கொண்டாலே மேலாகக் காண்பிக்கும்" என்ருள்.

அப்போது சதாநந்தர் "இப்பொழுது நான் எழுதிக்கொண்டிருக்கிற கட்டுரைக்குப் பதினைந்து ரூபாய் கிடைக்கலாம். அது கிடைத்தால் நீ சொல்லியபடி செய்வோம். நீ காயலாவாகப் படுத்துக்கொண்டதினல் சமையற்காரி வைக்கவேண்டியதாய் இருக்கிறது. அதனல் இருபது இருபத்தைந்து ரூபாய் மாதத்திற்கு அதிகச் செலவு இல்லாவிட்டால் இவ்வளவு பணத்தட்டு இராது. ஈசுவரன் கிருபையால் நீ பிழைத்துக்கொண்டாய். எனக்கு இனி என்ன குறை? இன்னும் இரண்டு மாதத்திற்கெல்லாம் நீயே வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டால் இந்த இருபத்தைந்து ரூபாய் மிச்சம்தானே. அதைக்கொண்டு நம் செலவுகளைச் சுலபமாய்ச் செய்துகொள்ளலாம். ஒரு கஷ்டமும் இல்லை" என்று கூறினர்.

"மறந்துபோய்விட்டேன். மருந்துக் கடையிலிருந்து ஒன்பது ரூபாய் சொச்சத்திற்குப் பில் வந்தது. அதைக் கொடுத்துவிட்டால் தேவலை" என்று அம்மாள் தெரிவித்தாள்.

சதாநந்தர், "பரவாயில்லை. நான் நேரில் போய் நாயுடுவிடம் இரண்டு மாதத்திற்குப் பிறகு மற்றும் ஏற்படுகிற மருந்துக் கிரயத்தையும் சேர்த்துக்கொடுக்கிறேன் என்று சொல்லி வருகிறேன். அவர் நல்ல மனுஷன், சரி என்று ஒப்புக்கொள்வார்" என்று பதில் உரைத்தார்.

அவர் பாரியை, "மருந்துக் கடைக்குப் போனல் மீனுவும் அப்புவும் சொரி சிரங்கு ஊசிகுத்தஇடமில்லாமல் கஷ்டப்படுகிறதுகள், ராத்தூக்கம் இல்லை. பகல் தூக்கம் இல்லை. எப்போதும் சொரிந்துகொண்டு இருக்கிறதுகள் என்று சொல்லி ஏதாவது நல்ல மருந்து வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்று வேண்டிக்கொண்டாள்.

"ஆகட்டும். வாங்கிவருகிறேன். குழந்தையை எடுத்துக்கொண்டுபோ. இந்தக் கட்டுரையை நான் சீக்கிரம் முடிக்கவேண்டும்.

சாதாரணமாக ஆற்றிலோ குளத்திலோ நீராடும் தென்னிந்திய மக்கள் முன்னேயெல்லாம் தேய்த்துக் குளிக்க ஸோப்புக்குப் பதில் இலுப்பைப் பிண்ணுக்கை உபயோகித்து வந்தனர். அந்நாளில் ஸோப்பென்ருல் என்னதென்பதே அவர் அறியார். ஆனல், இன்ரே உடனடி சுத்தம் செய்யும் ஏராள குளிர்நுரையுடைய ஹமாம் தானிருக்கிறதே அவர்கள் ஸ்நானத்தை இன்பமயமாக்க! தூய்மையான தாவர எண்ணெய்களைக்கொண்டு தயாரிக்கப்படும் ஹமாம் பண்டைய முறைகளின் குணவிசேஷங்களோடு நவீனஸோப்பின் சகல குணும்சங்களும் பொருந்தியமையப்பெற்றிருக்கிறது.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா

19, வாணியர்வீதி, P.B. நெ. 31, சென்னை.

ஆசிரியருக்கு இரண்டு நாள்களுக்குள் அனுப்புகிறதாகச் சொல்லியிருக்கிறேன்'', என்றார் சதாநந்தர்.

அவர் பாரியை குழந்தையை எடுத்துக் கொண்டு, ''ஆமாம். விஜயாவைப் பார்க்க வருகிறார்களே. அவர்களுக்குச் சொத்து ஏதாவது இருக்கிறதா என்று விசாரித்தீர்களா?'' என்று கேட்டாள்.

சதாநந்தர், ''என்ன சொத்து இருக்கப் போகிறது? சொத்து உள்ள பேரானால் எதிர் ஜாமீன் கேட்பார்கள். நாம் எங்கிருந்து எதிர் ஜாமீன் கொடுக்கிறது? மனுஷாள் நல்லவர்கள் என்று சொல்லுகிறார்கள். பையன் யோக்கியன், கெட்டிக்காரன் என்று அவன் படித்த பள்ளிக்கூடத்து வாத்தியார்கள் உறுதி கொடுக்கிறார்கள். வேறு என்ன வேண்டும்? பெண்டாட்டிக்குச் சம்பாதித்துப் போடாமல் இருக்கப்போகிறானா? இப்போது பூனாவில் மிலிடரியில் நூறு ரூபாய் மாதம் சம்பாதிக்கிறானாம். நீ என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்ளும்பொழுது எந்தச் சொத்தை நம்பி உன் அப்பா அம்மா உன்னை எனக்குக் கொடுத்தார்கள்? ஏதோ இதுவரையில் கோப்பியமாகக் குடித்தனம் செய்துவருகிறோம். மனம் ஒத்திருந்தால் கூழைக் குடித்தாலும் கந்தையை உடுத்தினாலும் புருஷன் பெண்ஜாதி சுகமாகவும் ஆனந்தமாகவும் இருக்கலாம். மனம் ஒத்திராவிட்டால் கோடீசுவரர்களாயிருந்தாலும்.ஒருவர்க்கொருவர் மனஸ்தாபம், சண்டை சச்சரவு ஏற்படும். ''எலியும் பூனையும் போலத் தான் வாழ்வு'' என்று குட்டிப் பிரசங்கம் ஒன்று செய்தார்.

அதற்கு அம்மாள் ''அதெல்லாம் சரிதான். நாளைக்குப் பெண் சோற்றிற்கு இல்லாமல் நாலு குழந்தைகளையும் பெற்றுவிட்டு, கண்ணைக் கசக்குகிறதைப் பார்த்தால் வருத்தமாயிருக்காதா?'' என்று இழுத்தாற்போல் கூறினாள்.

சதாநந்தர், ''நீ இப்போது கண்ணைக் கசக்கிக்கொண்டுதான் நிற்கிறாயோ? அப்படி நேர்ந்தாலும் நேரலாம். என்ன செய்கிறது!? விஜயாவுக்குப் பதினெட்டு வயது நிரம்பியாய் விட்டது. எங்கேயாவது பார்த்துக்கொடுக்காமல் இருக்கலாமா? அப்படியிருந்தால் ''ஏன் இத்தனை நாள் இந்தப் பெண்ணுக்குக் கலியாணம் ஆகவில்லை என்று அளப்பார்கள்'' என்று பதிலுரைத்தார்.

அவர் பாரியை ''இப்போது வருகிறவர்கள் சம்மதித்தால் கார்த்திகை மாதம் பிறந்தவுடன் முகூர்த்தம் ஒன்று வைத்துவிடலாம். இந்த வீட்டில் எப்படிக் கலியாணம் நடத்தமுடியும்? கார்த்திகை மாதத்தில் மழை பெய்யலாம்—கூரை அவரைப்பந்தல்மாதிரி ஒழுகுகிறது. என்ன செய்கிறது? கலியாணம் என்றால் சொற்பமாகச் செய்தாலும்கூட முந்நூறு ரூபாயாவது ஆகாதா? அதைப்பற்றி யோசிக்கவேண்டாமா?'' என்றாள்.

அப்பொழுது அவள் கணவன் ''இன்ஷியூரன்ஸ் கட்டின பணத்தில் கடன் முந்நூறு வாங்குகிறேன். இதைவிட நல்ல வீடு வேண்டுமானால் வாடகை ஜாஸ்தி கேட்பார்கள். நம்மால் கொடுக்கமுடியாது. வீடு ரிபேர் செய் என்று கேட்காமல் நாம் இருப்பதினால்தான் இந்த வாடகையைப் பெற்றுக்கொண்டு சும்மா இருக்கிறான். ரிபேர் என்று கேட்டால் நூறு ரூபாய் முன் பணம் வேண்டும் என்பான். தானப்பசெட்டி சத்திரத்தில் கலியாணத்தை நடத்திவிட்டு மறுபடியும் இங்கே வந்துவிடுவோம். இதற்கென்ன கவலை'' என்று மனைவிக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, பேனாவை எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார். அம்மாளும் குழந்தையுடன் அவ்விடத்திலிருந்து அகன்றாள்.

சதாநந்தர் முன் எழுதிவிட்டிருந்த இடத்திலிருந்து மேலும் தொடர்ச்சியாக எழுதுகிறார். அவர் எழுதினதைக் கவனிப்போம்!

''உலகம் எங்கும் அழகுக் களஞ்சியமாகக் காட்சியளிக்கிறது. எழிலின் ஒளி வீசாத இடமும் காலமும் இல்லை. காலையில் சூரியன் உதிக்கும் வனப்பு உலகத்தைத் தேஜோமயமாக மாற்றுகிறது. காண்கிறவர்கள் மனத்தில் அதன் அற்புதம் மற்றெல்லாவற்றையும் மறைத்து வியப்பைத்தருகிறது. சாயங்காலத்தில் மேற்குக் கடலில் அவன் ஆழ்ந்துசெல்லும் அழகும் மனத்தைக் கவர்ந்து ஒரு நிம்மதியையும் சாந்தியையும் பெருகச்செய்கிறது. செடிகளும் மரங்களும் நிரம்பப் பூத்து நிற்பதைக் கண்டு ஆநந்திப்பதும் ஒரு பெரும் பாக்கியம். குழந்தைகளை அணைத்துக் குலாவும்பொழுது அமிர்தபானம்செய்வதுபோல் தோன்றுகிறது. அவைகளின் புன்முறுவலால் உண்டாகும் மகிழ்ச்சிக்கு ஓர் அளவுண்டோ? 'வீணையின் இசை இனிது, யாழின் இசை இனிது என்று தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்கும் பாக்கியம் இல்லாதவர்களே கூறுவர்' என்றார் திருவள்ளுவநாயனாரும். சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள தத்துவங்களை அறிந்து அனுபவிப்பதிலும் ஒரு பேரானந்தம் உண்டு. மனிதன் தன் மதிமகிமையால் இயற்கையின் சொரூபத்தையறிந்து, ஆகாயத்தில் பறவைகளைப் போல் பறந்து இலக்ஷம் மைலுக்கப்பால் பேசுபவர் பாடுபவர் குரல்களைக் கேட்கும்படியான சாதனங்களை அமைத்துமிருக்கிறான். இதை நினைக்குங்கால் உண்டாகும் ஆச்சரியம் பிரமிக்கச்செய்கிறதல்லவா? காவிய நாடகங்களில் மகாகவிகள் சித்திரித்துக்காட்டும் காட்சிகளும் வருணனைகளும் சொல்லழகும் ரஸபாவம் நிறைந்த இன்பக்கடலில் மூழ்கச் செய்கின்றன. பூரணசந்திரன் இரவில் ஆகாயத்தில் பவனி வருவதைக்கண்டு மகிழாதவருமுண்டோ? துக்கமும், பிணியும், பசியுமே உலகவாழ்க்கை என்று காமாலை உற்ற கண்ணையுடைய சிலர் கூறுவர். பிணி, பசி, யின்றி ஆரோக்கியம் ஆகாரம் இவற்றின் சுகத்தை எவ்வாறு அனுபவிக்கமுடியும்? நிழ

வின் அருமை வெயிலில் போனவர்க்கே தெரியும் என்பது முதுமொழி. முட்செடி ஒன்றை எங்கேயோ பார்த்துவிட்டு மல்லிகை, முல்லை, ரோஜாவை மறந்தவர்கள் பலர் காணப்படுகிறார்கள். குழந்தை நோயால் வருந்தும்போது பெற்றோருக்குக் கவலை என்பது உண்மையே. ஆனால் நோய் விலகி, கண்ணை விழித்துக் கொண்டு அக்குழந்தை மலர்ந்த முகத்துடன் அவர்களைப் பார்த்துச் சிரிக்கும்பொழுது எழும் ஆநந்தத்துடன் இக்கவலை கணக்கிட முடியுமா? மரணத்தையும் அதனாலுண்டாகும் துயரத்தையும் பெரிதாகக்கொள்வது பாமரரின் செயலாகும். தீரன் இவைகளுக்கு அஞ்சமாட்டான். அவைகளின் கொடுமையைப் பொருள்படுத்தாது எதிர்த்து நிற்பதில் தன் ஆண்மையைக் காட்ட அவகாசம் ஒன்று கிடைத்தது என்று எண்ணுவான். இல்லறத்தில் புருஷனும் பெண்ணும் புகுந்து, குன்றாத அன்புடையவர்களாய் ஒவ்வொருவர் உள்ளத்தில் உள்ளதை ஊகித்து உணர்ந்து, மனமுவந்து, பிரீதியுடன் தம் தம் கடமைகளை நடத்தி வருவதைக் கண்டபொழுது தேவர்களும் பொறாமைப் படுகிறார்கள்.

ஃ ஃ ஃ

இவ்வாறு வாழ்க்கையின் வனப்பையும் உலகத்தின் ஒளியையும் வருணித்து வரையும் சதாநந்தருக்கு வயது நாற்பத்தைந்து. ஒரு ஸர்க்கார் ஆபீஸில் ஐம்பத்தாறு ரூபாய் மாதச் சம்பளம் பெற்று வருகிறார். ஐந்து மக்கள். முதல் மூன்றும் பெண்மக்கள்-கடையிரண்டும் ஆண்மக்கள். மனைவி கௌரி அம்மாளுக்கு வயது நாற்பதிருக்கலாம். புருஷன் என்றால் உயிர். அவன் சொல்லே சட்டம் என்றிருப்பவள். வீட்டு வாடகை கொடுத்ததுபோக மிஞ்சினதைக்கொண்டு குடித்தனம் நடத்துவது பிரயாசம் என்று சொல்லவேண்டியதில்லை. இப்படி இருக்கையில் மனைவிக்குக் கொடிய நோய் ஒன்று கண்டு வைத்தியச் செலவும் வேலைக்காரி வைக்கவேண்டிய செலவும் சதாநந்தருக்குச் சேர்ந்தன. காலையில் ஆபீஸுக்குப் போகுமுன் ஒரு பையனுக்கு டியூஷன் சொல்லிக்கொடுத்து வருமானத்தில் பத்து ரூபாய் ஜாஸ்தி செய்துகொண்டார். இரவிலோ, மற்றும் ஒழிவு நாட்களிலோ, பத்திரிகைகளுக்குக் கதைகளும் கட்டுரைகளும் எழுதி, மாதம் இருபது, இருபத்தைந்து ரூபாய் சம்பாதிப்பார். சிற்சில மாதங்களில் இந்த வருமானம் குறைந்துபோவதுமுண்டு.

அயலாருக்குச் சதாநந்தரின் வாழ்க்கை ஒரு கஷ்ட ஜீவனம் என்றே காணப்படும். ஆனால் அவர் மனம் தளர்ந்து கடவுளின்மேல் குறை கூறிக்கொள்வதைக் கேட்டவர் ஒருவருமில்லை. எப்பொழுதும் எல்லோருடனும் கவலையற்றவர்போலவே, வேடிக்கையாகவும், விநோதமாகவும் பேசுவார். அவருடன் அரைமணி பேசிக்கொண்டிருந்தால் மற்றவர்கள் மனத்தில் ஒரு மலர்ச்சியும், மகிழ்ச்சியும் தோன்றி, உலக வாழ்க்கையில் ஓர் உற்சாகம் உதிக்கும்.

யுத்தகளத்தில் எதிரிகளின் பீரங்கியிலிருந்து வரும் குண்டுகளை லக்ஷியம் செய்யாமல் தேசாபிமானத்துடன் தன் உயிரைத் துரும்பாக எண்ணிச் சத்துருக்கள்மேல் பாய்ந்து அவர்களைக்கொல்ல-யத்தனிக்கிறவனை யுத்த வீரன் என்கிறோம். தன் அரண்மனையின் கூரையைப் பிரித்து, அதிலுள்ள உத்திரங்களையும், விட்டங்களையும் விறகு வேண்டுமென்று யாசித்தவனுக்குக் கொடுத்த கர்ணனையும் புறுவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகக் கழுகுக்குத் தன் மாமிசத்தையே துணிந்து கொடுத்த சிபிச்சக்ரவர்த்தியையும் தான வீரர் என்கிறோம். கௌதம புத்தரைப்போல் ஸகல ஜந்துக்களிடமும் தயை காட்டித் தன் உயிரையே இழந்தாகிலும், அவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற மன உறுதியுள்ளவனைத் தயாவீரன் என்கிறோம். சதாநந்த சர்மாவைப்போல், இல்லறத்தில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஒரு பொருட்டாக எண்ணாமல், ஒரு புறம் வறுமையின் கொடுமை, மற்றொருபுறம் வீட்டிலுள்ளோர் வியாதி, ஒரு பக்கம் வேலைத் தொந்தரவு, மற்றொரு பக்கம் ஸமூகக் கட்டுப்பாடுகள், இப்படி நாலா பக்கமும் இடையூறுகளும், ஆபத்துகளும் தாக்கும்போது, அஞ்சா நெஞ்சத்துடன் அவைகளை எதிர்த்து நிற்பதுடன் தன் மனத்தின் உற்சாகத்தையும் நல்லுணர்ச்சியையும் விடாது காட்டி வருபவர்களை வீரர்கள் எனச் சொல்வதற்குத் தடையென்ன? இவர்களை இல்லற வீரர்கள் என்று கொண்டாடுவதில் தவறு ஏதேனுமுண்டோ?

சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளிரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்.

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

பழிக்குப் பழி

அபர்ணா

"கன்னிமாரா" லைப்ரரிக்குள் நான் நுழைந்த பொழுது என் நண்பன் ஜகதீசனைப் பார்த்தேன். அவன் மிகவும் கவனமாக ஏதோ ஒரு புஸ்தகத்தில் குறிப்புக்கள் எடுத்துக்கொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்துச் சில வருஷங்களாகின்றன. அன்று திடீரென்று அவனைக் கண்டதும் ஆச்சரியத்துடன் அவன் கிட்டப்போய் முதுகில் பலமாய்த் தட்டினேன். எழுதுவதில் மூழ்கியிருந்தவன் அடி விழுந்ததும் திடுக்கிட்டு நிமிர்ந்தான். என்னைக் கண்டதும், "ராமுவா, உன்னைத்தான் பார்க்கவேண்டும் என்று நினைத்தேன். நல்ல சமயத்தில் வந்தாய்" என்றான் சந்தோஷத்துடன்.

"இப்பொழுதாவது என்னைப்பற்றி நினைவு வந்ததே, அதுவே சந்தோஷம். நீ எப்பொழுது வடக்கே இருந்துவந்தாய்? சௌக்யந்தானே?" என்று விசாரித்தேன். அவன் வந்து ஒருவாரமாகிறதென்றும், சில முக்கியமான விஷயங்களுக்கு ஆதாரங்களைத் தேடிக்கொண்டிருந்தபடியால் உடனே என்னைப் பார்க்க வரமுடியவில்லையென்றும் சொன்னான்.

ஜகதீசன் ஒரு சரித்திர ஆராய்ச்சி செய்பவன். அவனுக்குச் சரித்திரமென்றாலே அலாதிப் பிரியம். நானும் அவனும் கலாசாலையில் படிக்கையில், சரித்திர பாடம் நடக்கும்பொழுது, மற்றவர்கள் ஊர்வம்பு அளப்பார்கள். ஆனால் ஜகதீசன் மட்டும் வாத்தியார் வாயிலிருந்து வரும் வார்த்தைகளைத் தான் அப்படியே சாப்பிடுவதுபோல் கவனிப்பான். பரீக்ஷை முடிவில் அவன் ராஜதானிக்கே முதல்வனாகத் தேறியது ஆச்சரியமேயில்லை. பிறகு சரித்திரத்திலிருந்த ஆசையினால் வட இந்தியாவுக்குச் சரித்திர ஆராய்ச்சியாளனாகப் போயிருந்தான். அவன் சரித்திர சம்பந்தமாக எழுதியிருந்த சில அபூர்வமான கட்டுரைகள் எல்லோராலும் மிகவும் கொண்டாடப்பட்டன.

இப்பொழுது அவன் எதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறானென்று நான் விசாரித்தேன். உடனே ஜகதீசன் உற்சாகத்துடன், "டேய் ராமு, பத்மினி ராணியைப்பற்றிப் படித்திருக்கிறாயல்லவா?" என்றான். நான், "சித்தூர் அரசி பத்மினியைத் தானே" என்றேன்.

"ஆமாம். அவளைப்பற்றித்தான் நான் ஒரு புது விஷயம் சொல்லப்போகிறேன். மிக்க சுவாரஸ்யமானது. வா, இருவரும் ஹோட்டலுக்குப்போய் ஒரு அடி அடித்துவிட்டு, வீட்டுக்குப்போய்ச் சாவாகசமாய்ப் பேசலாம்" என்று சொல்லி, தன் நோட்டுப் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

இருவரும் என் வீட்டுக்கு வந்ததும் என் அறையில் போய் உட்கார்ந்தோம். ஜகதீசனைக் கதையைச் சொல்லும்படி தூண்டினேன். அவன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தான். "பத்மினி அரசியின் அற்புதமான அழகைக் கேள்விப்பட்ட டில்லி பாதுஷா அல்லாவுதீன் கில்ஜி என்ற மொகலாயன் அவளைப் பார்க்கவேண்டுமென்று சாக்கு வைத்துக்கொண்டு வந்து சித்தூரை அழித்ததாகத் தானே சரித்திரத்தில் படித்திருக்கிறாய். ஆனால் விஷயம் அப்படியன்று. வேறு காரணமும் இருந்திருக்கிறது. என்ன காரணம் என்று சொல்கிறேன்" என்றான்.

அவன் சொன்னது பின் வருமாறு :—

டில்லி அரசனான ஜலாலுத்தீன் தன் மருமகன் அல்லாவுத்தீன் கில்ஜியைத் தேவகிரிக் கோட்டையைமுற்றுகையிட அனுப்பியிருந்தான். ஆனால் அல்லாவுத்தீன் ஒரு நண்பனுடைய உதவியாலேயே தேவகிரிக் கோட்டையை ஜயிக்கமுடிந்தது. அந்த நண்பன் சித்தூர் இளவரசனான பீம்சிங் என்ற ரஜபுத்ரவீரன். வெற்றி வீரனாய்த் திரும்பிய தன் மருமகனைப் பாராட்ட ஜலாலுத்தீன் ஒரு பெரும் விருந்தளித்தான். அந்த விருந்திற்கு அல்லாவுத்தீன் பீம்சிங்கையும் அழைத்திருந்தான். விருந்து அன்றைக்கு டில்லி அரண்மனையில் ஒரே கோலாகலமாக இருந்தது. பாட்டும் நாட்டியமும் நடந்துகொண்டிருந்தன. விருந்தினர் மண்டபத்திலிருந்து இரண்டுபேர் அரண்மனைத் தோட்டத்தின் பக்கம் போனார்கள். அவர்களில் ஒருவன் மொகலாயன் அல்லாவுத்தீன். மற்றவன் பீம்சிங். இருவரும் நல்ல விருந்துண்டும் தாராளமாக வழங்கப்பட்டிருந்த உயர்ந்த மதுபானமும் அருந்தியிருந்த படியால் மிகவும் உற்சாகத்துடனும் மன எழுச்சியுடனும் இருந்தனர். அரண்மனைக்குள் ஒரே சந்தடியும், சங்கீதமும், நாட்டியமும் அவர்கள் காதுகளைத் துளைத்தபடியால் சிறிதுநேரம் வெளிக்காற்றில் உலாவ நினைத்துத் தோட்டத்திற்குள் சென்றனர்.

அன்று பௌர்ணமி. பூர்ணசந்திரன் ஆகாயத்தில் நிர்மலமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். பூஞ்செடிகளைத் தழுவிப் பூக்களிலுள்ள மகரந்தத்தை அள்ளிக்கொண்டு மெல்லென வீசும் குளிர்ந்த காற்று மிகவும் மனோரம்யமாக இருந்தது. இரண்டு நண்பர்களும் அங்கிருந்த சலவைக்கல் மேடைமீதமர்ந்தனர். சிறிது நேரம் அந்த இனிமையான ஏகாந்

த்தை அநுபவித்தபிறகு அல்லாவுத்தினுல் சும்மாவிருக்கமுடியவில்லை. ஆனால் பீம்சிங்கோ வாய்திறவாது ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான். சிறிது அதிக மதுவருந்தியிருந்த அல்லாவுத்தினுக்குப் பீம்சிங்கின் அமைதி பிடிக்கவில்லை.

"என்ன யோசனை பலமாயிருக்கிறதே. இன்னும் எந்தக் கோட்டையைப் பிடிக்கலாம் என்று யோசிக்கிருய்?" என்று பீம்சிங்கின் முதுகில் தட்டினுன் அல்லாவுத்தின். திடுக்கிட்ட பீம்சிங், "அதொன்றுமில்லை. எப்பொழுதுமே கோட்டையைப் பிடிக்க முடியுமா? ஜயமும் அபஜயமும் மாறி மாறித் தான்வரும். எதிர்காலம் எப்படியிருக்கும் என்று யோசித்துக்கொண்டிருந்தேன்" என்ருன்.

"ஹோ ஓ!" என்று உரக்கச்சிரித்தான் அல்லாவுத்தின்.

அவனுக்குப் பீம்சிங்கின் வார்த்தை சிரிப்பை உண்டாக்கிவிட்டது. "ஏன் அப்படி நினைக்கிருய்? எதிர்காலத்தைப்பற்றி அதற்குள் என்ன யோசனை? எதற்கும் நம்முடைய முயற்சிதான் காரணம். மேன்மையும் தாழ்வும் நம்முடைய கையில் இருக்கின்றன அப்பா! உதாரணமாக என்னைத்தான் பாரேன். ஒன்றுக்கும் உதவாக்கரை என்று என்னை நேற்று வரை நினைத்திருந்தார்கள். இன்று எனக்கு நடந்த மரியாதையைப் பார்த்தாயல்லவா?" என்ருன்.

"எனக்கென்னவோ எப்பொழுதும் சந்தேகம்தான். இனிமேல் நடக்கப்போவதை யார் கண்டார்கள்? இன்று அரசனுயிருப்பவன் நாளை ஆண்டி ஆகக்கூடும். உயிருக்குயிராய் இருக்கும் நண்பன்கூட ஜன்ம விரோதியாகி விடலாம். நம்முடைய சிநேகம்தான் என்றும் நீடித்திருக்குமென்பது என்ன நிச்சயம்? நீயும் நானும் வெவ்வேறு மதத்தினர்" என்று தத்துவார்த்தமாகப் பேசிக்கொண்டுபோனுன் பீம்சிங்.

அல்லாவுத்தினுக்கும் இந்த வேதாந்தம்பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது. அவன் தன்னைக்குறித்துப் பேசுவதாக நினைத்து, சிறிது வருத்தமடைந்தான்?

"இந்த வேதாந்தமெல்லாம் பிறரைப் பொறுத்தமட்டில் சரியே. ஆனுல் என் வரையில் நம்முடைய நட்பு ஒருநாளும் மாருது என்றுதான் சொல்வேன். நீ இன்னும் என்னைச் சரியாக அறிந்துகொள்ளவில்லை. இந்த அல்லாவுத்தின் தன் நண்பனுக்காக உயிரையும் கொடுக்கக்கூடியவன் என்று நினைவில் வைத்துக்கொள்" என்று சிறிது ஆவேசத்துடன் பேசினுன்.

"ஊம், அப்படியா!" என்ருன் பீம்சிங். அவன் குரலில் ஏளனம் தொனித்தது. பீம்சிங்கின் குரலில் தோன்றிய பரிகாசம் அல்லாவுத்தினுக்குக் கோபத்தையுண்டாக்கிற்று. மது வருந்தியிருந்த அவனுடைய புத்தி உணர்ச்சியின் வசப்பட்டது.

"நீ என்னை நம்பவில்லைபோலிருக்கிறது. வேண்டுமானுல் இப்பொழுது என்னைப் பரீக்ஷி. நீ எதைக் கேட்டாலும் நான் கொடுக்கத் தயார்" என்று பெருமையுடன் மார்பில் தட்டிக்கொண்டான்.

ரஜபுத்திரனுடைய மனதில் ஏன் அப்படியே செய்யக்கூடாது என்ற ஆவல் உண்டாயிற்று. இது ஒரு நல்ல சந்தர்ப்பம்தான் என்று அவன் நினைத்தான்.

"நிச்சயமாகத்தான் சொல்லுகிருயா?" என்று கேட்டான்.

"சத்தியம் ஒரு தடவை சொன்ன வார்த்தையை உயிருள்ளளவும் தவறமாட்டேன். பயப்படாமல் கேள்" என்ருன் அல்லா.

பீம்சிங் எதைக் கேட்கலாமென்று யோசித்தான். அல்லாவுத்தினுல் கொடுக்கக்கூடாத வஸ்துவாகக்கேட்டு அவனைத் திண்டாட வைக்கவேண்டும் என்ற அவா அவனுக்குச் சட்டென்று உதித்தது. ஆம், முசல்மான்கள் ஜனுனுவில் அநேக அழகான பெண்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிருன். தங்கள் ஸ்திரீகளைப்பற்றி அவர்களுக்கு மிகவும் பெருமை. அன்னியர்கள் தங்கள் ஸ்திரீகளைக் காணச் சகிக்கமாட்டார்கள். முகம்மதியர்

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

மேதாவின்
ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனுக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப் படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

கே. எஸ். மேத்தா & கோ.,
மதராஸ்.

ஸ்திரீகளும் பரபுருஷனைப் பார்க்க விரும்பார்கள். பீம்சிங்கின் தயக்கம் அல்லாவுத்தீனுக்குச் சிரிப்பையே அளித்தது. தைரியமாய்க் கேட்கும்படி தூண்டினான். பீம்சிங் கேட்டான். "எனக்கு உன் ஜனானாவைப் பார்க்கவேண்டும் என்று ஆசை. மொகலாயரின் அந்தப்புரத்தில் அழகில் மிக்க பல ஸ்திரீகள் இருப்பார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்".

இதைக் கேட்டதும் அல்லாவுத்தீன் திடுக்கிட்டுப் போனான். அவன் முகம் சவம்போல் வெளுத்து விட்டது. இதுவரையில் இருந்த மகிழ்ச்சியும் குதூகலமும் மறைந்து விட்டன. அவன் முகமாறுதலைக் கவனித்த பீம்சிங் "ஊம் இவ்வளவுதானா? உன் வாக்குறுதி." என்று ஏளனமாகச் சொன்னான்.

இதற்குள் அல்லாவுத்தீன் சமாளித்துக் கொண்டுவிட்டான்; பீம்சிங்கின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, "நண்பா, என்னை அவ்வளவு கேவலமாக மதித்துவிடாதே. கவரிமானைப்போல் அல்லாவுத்தீன் தன் உயிரையே விட்டாலும் விடுவானே தவிர சொன்ன சொல் தவறான்; வா போகலாம்" என்று அவனை அந்தப்புரத்திற்கு அழைத்துப் போனான்.

இருவரும் பல அலங்காரமான மண்டபங்களையும் அறைகளையும், சித்திர கூடங்களையும் தாண்டி, கடைசியில் ஸ்திரீகள் இருக்கும் ஜனானாவை அடைந்தனர். வழியில் காணப்பட்ட அலங்காரமான பொருள்களையும் விலையில்லா வஸ்துக்களின் மேன்மையையும் ரஜபுத்ரன் ஆச்சர்யத்துடன் பார்த்து வியந்தான். இவர்கள் நுழைந்த இடம் ஒரு அழகிய பெரியகூடம். அதற்கெதிரே ஒரு கதவு திறந்து காணப்பட்டது. அதற்கப்பால் தோன்றிய காட்சியைக் கண்டு, பீம்சிங் பிரமித்தே போய்விட்டான். விஸ்தாரமான ஓர் அறை.மேலேயிருந்து பூங்கொத்துகளைப்போல் தொங்கும் பலவர்ண விளக்குக்களின் பிரகாசத்தால் அவ்வறை தெய்வலோகம்போல் தோன்றியது. மகம்மல் மெத்தையினாலான ஒரு சிம்மாசனத்தின் மீது ஓர் அதிரூப சௌந்தர்யமான பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் அழகெல்லாம் ஓர் உருவாகச் செய்த சித்திரப் பாவைதானோ அல்லது - தெய்வலோகத்து அப்ஸரஸிகள் என்கிறார்களே அவர்களில் ஒருத்தியோ என வியக்கும்படியான பேரழகி. பீம்சிங்கின் காலடிச்சத்தம் கேட்ட அவள் அவன் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அன்னிய புருஷன் ஒருவன் அந்தப்புரத்திற்கு வந்திருப்பதைக் கண்டதும் அவள் முகத்தில் ஆச்சரியக்குறியுண்டாயிற்று. ஆனால் அடுத்த நிமிஷம் கோபத்துடன் அவனை வெறிக்கப் பார்த்தாள். பீம்சிங் குழப்பத்துடன் அவளுக்கு வந்தனம் செய்துவிட்டு, சிறிது தூரத்தில் நின்று ஒரு கோஜாவுடன் பேசிக்கொண்டிருந்த அல்லாவுத்தீனிடம் போனான். அடிமை விலகிச் செல்லவும் அல்லாவுத்தீன் நண்பனை வேறு இடங்களையும் காட்ட அழைத்துப் போனான். அப்பொழுது பீம்சிங் தான் பார்த்த பெண் யார் என்று வினவினான்.

"அவள்தான் என் ஹ்ருதயராணி" என்று வேதனையுள்ளவன்போலத் தீனக் குரலில், பதிலளித்தான் அல்லாவுத்தீன். அந்தப்புரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பும்பொழுது, பீம்சிங் தன் நண்பனிடம், "அல்லாவுத்தீன்! நீ மிகவும் பாக்கியசாலி. ஒப்பில்லா அழகுள்ள உன் பீகம் இவ் உலகத்தில் பிறக்கக்கூடிய பெண்மணியாகத் தோன்றவில்லை. அவள் தெய்வத்தன்மை பொருந்தியவள்" என்று மிகவும் புகழ்ந்துரைத்தான்.

ஆனால் அல்லாவுத்தினோ இப் புகழ்ச்சியால் மகிழ்ச்சி அடைந்தவனாகத் தெரியவில்லை. அதனால் பின்னும் வேதனையுற்றதாகத் தோன்றியது. சிறிது நாழிகை தலை குனிந்திருந்தவன், "பீம்சிங், நீ சொல்வது முற்றிலும் உண்மையே. எங்களைவிட்டு அவள் தன் சாசுவதமான இருப்பிடத்தை இந்நேரம் அடைந்திருப்பாள். வேண்டுமானால் அதையும் பார்" என்று அவனை முன் பார்த்த அறையண்டை அழைத்துச் சென்றான்.

ஐயோ! இதென்ன கோரம். சிறிது நேரத்திற்கு முன் உல்லாசமாய் வீற்றிருந்த அந்த மின்னாளின் தேகம் வேரறுபட்ட கொடிபோல் ஆசனத்தில் துவண்டு கிடந்தது. மார்பில் நீட்டிக்கொண்டிருந்த குத்துவாள் அப்படியே இருந்தது. மார்பிலிருந்து ரத்தம் 'குபுகுபு' எனப் பொங்கி வழிந்து, அவளது தூய்மையான வெண் பட்டாடையை நனைத்துக் கொண்டிருந்தது. சுற்றிலும் நின்ற அடிமைகளும் தோழியரும் தலை குனிந்து கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தனர். இப் பயங்கரமான காட்சியைக் கண்ட பீம்சிங், 'ஐயோ' என்று கதறிவிட்டான். சொல்லமுடியாத வருத்தத்துடன் இரு கைகளாலும் கண்களை மூடிக்கொண்டான்.

பக்கத்தில் நின்ற அல்லாவுத்தீன் சிறு குழந்தைபோல் விம்மி விம்மி, கண்ணீர் சொரிந்தபடி மிகவும் தீனமாக, "போய்விட்டாள். தன் குலப் பெருமையைக் காக்கப் போய்விட்டாள்" என்று புலம்பினான்.

மிகக் கவனமாகக் கேட்டுவந்த நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன்.

"இப்பொழுது தெரிந்ததா? சித்தூரின் அழிவிற்கும் பீம்சிங்கின் வம்சம் பத்மினியின் மூலமாய் அழிந்ததற்கும் காரணம்?" என்று ஜகதீசன் சொன்னான்.

"ஆம், பழிக்குப் பழி" என்றேன் நான்.

காகிதம்

ஆர். கே. விசுவநாதன்

மக்களிடையே அறிவைப் பரப்புவதற்கு ஏற்பட்டுள்ள சாதனங்களுள் காகிதம் முதன்மையானதாகும். பழைய காலங்களில் காகிதத்திற்குப் பதிலாக தோல், பனையோலை முதலியவற்றில் எழுதிவந்தார்கள். காகிதம் செய்யும் முறையை முதன் முதலில் சீன தேசத்தார் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் அவர்கள் கண்டுபிடித்தார்கள் என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றார்கள். பின்னர் அரேபியர்கள் ஒரு சமயம் இவர்களிடம் சண்டையிட நேரிட்டபொழுது சில சீனர்கள் கைதி ஆனார்கள் என்றும், அக்கைதிகளின் மூலம் இத்தொழிலை இவர்கள் தெரிந்துகொண்டதனால் இத்தொழில் உலகெங்கும் பரவிற்று என்றும் கூறுகிறார்கள். நம்நாட்டில் மொகலாயர்கள் ஆட்சியிலிருந்து இத்தொழில் பிரபலமாயிற்று என்று தெரிகிறது. எல்லா இடங்களிலும் வெகுகாலம்வரை கையினால் செய்யும் முறையே பரவி இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை மேனாட்டார்களும் கையினாலேயே காகிதத்தைச் செய்துவந்தார்கள். பின்னர் இயந்திர சாதனத்தின் மூலம் காகிதத்தைச் செய்யக் கற்றுக்கொண்டார்கள். இம்முறை நாளடைவில் விருத்தி அடைந்து, தற்காலம் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் பிரதிதினமும் ஆயிரக்கணக்கான டன் காகிதங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் இருபதினாயிரம் தினுசுகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. கையினால் செய்யப்படும் காகிதத்தைக் காட்டிலும் இயந்திரத்தினால் செய்யப்படும் காகிதம் மலிவாகவும், பகட்டாகவும் இருப்பதினால் எல்லோரும் அதையே விரும்புகின்றார்கள். மேலும் எல்லா நாடுகளிலும் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருந்துவரும் தினசரி பத்திரிகைகளுக்கு வேண்டிய காகிதத்தை இயந்திர முறையினால்தான் செய்ய முடியும். எனவே காகிதம் செய்வதில் இயந்திரத் தொழிலே கைத்தொழிலைக் காட்டிலும் எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றது. ஒருசமயம் நம் நாட்டில் காகிதம் செய்வது ஒரு முக்கிய கைத்தொழிலாக இருந்து அனேக மக்களுக்கு ஜீவனம் அளித்துவந்தது. பின்னர் பல காரணங்களினால் இத்தொழில் மறைந்தது. மகாத்மா காந்தி அவர்கள் கிராம புனருத்தாரண வேலையில் ஈடுபட்ட பின்னர்தான் இத்தொழிலுக்குப் புத்துயிர் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் நகரங்களுக்குச் சொல்லமல் தங்கள் இருப்பிடங்களில் இருந்துகொண்டே செய்யக்கூடிய கைத்தொழில்களில் இது ஒன்று என்று காந்தி அடிகள் உணர்ந்து, இத்தொழிலை எல்லோருக்கும் கற்றுக்கொடுக்க ஆங்காங்கே வசதி ஏற்படுத்தியுள்ளார். இது போன்ற காரியங்களுக்கென்றே வார்தாவில் அகில இந்திய கிராமத்தொழிற்சாலைச்சங்கம் ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. இச் சங்கத்தின்சார்பாக நடத்தப்படும் பள்ளிக்கூடத்தில் இதர குடிசைக் கைத்தொழில்களுடன் கையினால் காகிதம் செய்யும் தொழிலையும் சொல்லிக் கொடுக்கின்றார்கள். இந்தியாவின் பல பாகங்களிலிருந்து அனேகர் சென்று, இக் கைத்தொழிலைப் பயின்று, ஆங்காங்கே தொழில் நடத்தி வருகின்றார்கள். தென்னிந்தியாவில் பெருத்த அளவில் விருதுநகர், ராஜபாளையம், வேலூர், மேட்டூர் முதலிய இடங்களில் காகிதம் செய்யப்படுகின்றது. யுத்த நெருக்கடியால் காகிதப்பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் இக் கைத்தொழிலினால் செய்யப்படும் காகிதங்கள் நன்றாய் வியாபாரமாகின்றன. இனி, காகிதம் செய்யும் முறையையும் அதன் விஞ்ஞான தத்துவத்தையும் விளக்குவோம்.

காகிதம் செய்வதற்கு இன்றியமையாதது செலுலோஸ் (Cellulose) எனப்படும் மூல தாவரமாகும். நமது வாழ்க்கைக்குப் பயன்படும் பல பொருள்கள் இம் மூல தாவரத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக ஆடைகள் யாவும் இம் மூலதாவரப் பொருள்களே ஆகும். குழந்தைகள் விளையாடுவதற்கு நாம் வாங்கும் செலுலாயிடு பொம்மைகள் எல்லாம் இத் தாவரத்தினாலேயே செய்யப்படுகின்றன. மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலிய தாவர வர்க்கங்கள் எல்லாவற்றிலும் இப் பொருள் இருப்பதால் இதற்கு மூலதாவரம் என்று பெயரிடுதல் பொருந்தும். இப்பொருளின் உதவியினால்தான் மரம், செடி முதலியவை விறைப்பாகவும், நிமிர்ந்தும் இருக்கின்

றன. காகிதம் செய்வதற்கும் இப் பொருள் தான் வேண்டும். முற்கூறிய பொருள்களில் மூலதாவரத்துடன் மற்றப் பொருள்களும் கலந்து இருக்கின்றன. உதாரணமாக மரக் கட்டைகளில் பாதியே மூலதாவரமாகும். மிகுதியுள்ள பகுதியில் மெழுகு, கொழுப்பு, தைலம்போன்ற மற்றப் பொருள்களும் இருக்கின்றன. எனவே மூலதாவரத்தை மட்டும் பிரித்து எடுப்பதே காகிதம் செய்வதற்கு வேண்டிய முதல் வேலையாகும். சிற்சில இரசாயனப்பொருள்களின் உதவியினால் இம் மூலதாவரம் பிரித்து எடுக்கப்படுகின்றது.

முதலில் கைத்தொழில் முறையாகக் காகிதம் தயாரிப்பதற்கு எவ்வாறு இம் மூலதாவரத்தைப் பெறலாம் என்று கவனிப்போம். கிராமங்களில் வைக்கோல், புல், பூண்டுகள் முதலியவைஎளிதாகக்கிடைக்கும். இவற்றைக் கார ஸோடா (Caustic Soda) என்னும் திரவத்தில் போட்டு ஊறவைத்து, பின்னர் ஒரு தொட்டியில் போட்டு மிதித்தால் மூலதாவரம்வேறாகவும்மற்றப்பொருள்கள் வேறாகவும் பிரிந்துவிடும். தண்ணீரில் சுத்தம் செய்து, மூலதாவரத்தைமட்டும் எடுத்துவிடலாம். கந்தல்துணி, கழிவு காகிதங்கள் கிடைக்குமானால் இவற்றைத் துண்டங்களாக்கி, கார ஸோடாவில் போட்டு வேகவைத்து, பின்னர் மிதித்தொட்டியில் மிதித்து, மூலதாவரத்தைப் பெறவேண்டும். இம்மாதிரி தயாரித்த மூலதாவரத்தைப் பல்பு (Pulp) என்று சொல்லுவார்கள். இது கூழ்போன்று இருக்கும். இதை வெண்ணிறமாக்குவதற்குச் சலவைச் சூரணத்தை (Bleaching Powder) நீரில் கரைத்து, அத்திரவத்தில் கூழைப் போடவேண்டும். வெண்மையானவுடன் நல்ல தண்ணீரில் சுத்தம் செய்து எடுத்துவிடவேண்டும். பெருத்த அளவில் இயந்திரத்தினால் காகிதத்தைச்செய்யும் தொழிற்சாலைகளில் இக் கூழ் வேறுவிதமாகத் தயாரிக்கப்படும். உதாரணமாக, கானடா (Canada) தேசத்தில் உள்ள ஒரு பெரிய தொழிற்சாலையில் இக் கூழ் தயாரிக்கப்படும் விதத்தைக் கூறுவோம். அத்தேசத்தில் காடுகள் அதிகம் உள்ளன. அங்குள்ள மரங்களை வெட்டி, கட்டைகளைச் சிறு துண்டங்களாகச் செய்து, பெரிய இரும்புக் கொதிகொப்பரைகளில் போடுவார்கள். ஒரு கொப்பரையில் சுமார் ஐம்பது டன் துண்டுகளை ஒரே சமயத்தில் எடுத்துக்கொண்டு, கார ஸோடா நீருடன் அதிக அமுக்க நிலையில் கொதிக்கவிடுவார்கள். அதாவது கொதிக்கும்போது ஆவியின் இறுக்கம் (Pressure) மிக உயர்ந்திருக்கும். இந்நிலையில் மூலதாவரத்தைத் தவிர மற்றவை யாவும் காரஸோடாவால் தாக்கப்பட்டு அதில் கரைந்துவிடும். கார ஸோடாவுக்குப் பதிலாகக் கால்ஷியம் பைஸல்பைட் (Calcium bisulphide) என்னும் இரசாயனப் பொருளையும் உபயோகிப்பதுண்டு. பின்னர் இம்மூலதாவரம் இயந்திர சாதனத்தினால் நன்றாக அடிக்கப்பட்டுக் கூழாகச் செய்யப்படும். இதற்கு ஒரு பாத்திரத்தினுள் கூரான அனேக கத்திகள் பல வாட்டங்களிலே அமைக்கப்பட்டிருக்கும். பாத்திரம் சுழலும்போது மூலதாவரப் பொருள் கத்திகளினால் நன்றாக நசுக்கப்பட்டு, கூழாக மாற்றப்படுகிறது. சலவைச் சூரணத்தினால் வெண்ணிறமாகச் செய்தபின் சுத்தமான தண்ணீரில் கழுவுகின்றார்கள். இவ்வாறு கிடைத்த மரக்கூழை (Wood pulp) த்தான் காகிதம் செய்வதற்கு உபயோகிக்கின்றார்கள். காகிதம் நன்றாக இருப்பது பல்பைப் பொறுத்திருக்கிறது. கைத்தொழில் முறையில் மூலதாவரத்தை நன்றாக அமுக்கி மிதித்தால் தான் கூழ் சரியாகக் கிடைக்கும். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு, அதில் மிதிக்கப்பட்ட கூழில் கொஞ்சம் போட்டுக் கலக்கினால் அதிலுள்ள நார்கள் தனித்தனியாக மிதந்து நிற்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் திரிதிரியாக இருக்குமானால் நன்றாக மிதிபடவில்லை

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்

டானிக்

என்று உணரலாம். மேலும் காகிதத்தின் ஆயுள் கூழ் சுத்தமாக இருப்பதைப் பொறுத்திருப்பதால், கூழைத் தயாரிப்பதற்கும் வெளுப்பதற்கும் நாம் உபயோகித்த இரசாயனப் பொருள் எல்லாம் கழிந்துபோகும்படி கூழ் தண்ணீரில் நன்றாகச் சுத்தம் செய்யப்படவேண்டும். இயந்திர சாதனத்தினால் தயாரிக்கும் முறையில் கூழ் நன்றாக அமைவதற்குக் காரணம் இக் கெடுதல்கள் இல்லாமலிருப்பதே ஆகும். மில் நூலை வாங்கி, கையினால் நெசவு செய்வதுபோல், இயந்திரத்தினால் செய்த மரக்கூழை வாங்கி, கையினால் காகிதம் செய்வதும் உண்டு.

இப்பொழுது கூழிலிருந்து கையினால் காகிதம் செய்யும் விதத்தைக் கவனிப்போம். காகிதம் எந்த அளவிற்கு வேண்டுமோ அதற்குச் சற்று அதிகமான சுற்றளவு கொண்ட ஒரு மரச்சட்ட அமைப்பைத் தயார் செய்து, அதில் மெல்லிய கம்பிகளை நெருக்கமாக அடித்துக்கொள்ளவேண்டும். இச் சட்ட அமைப்பை (Mould) என்று கூறுவார்கள். அடியில் இக்கம்பிகளுக்குக் குறுக்காகச் சில சட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கும். இவை இல்லாவிடில் கம்பிகள் காகிதம் எடுக்கும்போது தொங்கிவிடும். இச் சட்ட அமைப்பின்மீது நான்கு பக்கங்களிலும் பொருந்துமாறு மற்றொரு சட்ட அமைப்பு ஒன்று வைத்துக்கொள்ளவேண்டும். இம் மேல் சட்டம், நாம் கம்பிகளின்மீது எடுக்கும் கூழ் ஓடாமல் காகித அளவுக்குச் சரியாக இருக்குமாறு செய்யும். இவ்வாறு சட்டங்களைத் தயார்செய்து கொண்ட பின்னர், ஒரு தொட்டியில் கூழைப் போட்டு, தொட்டியின் முக்கால் பாகம்வரை தண்ணீரை நிரப்பவேண்டும். ஒரு குச்சியைக்கொண்டு கூழை நன்றாகக் கலக்கவேண்டும். நன்றாகக் கலக்கிய பின்னர் கம்பிகள் அடித்த சட்ட அமைப்பின்மீது மேல் சட்டத்தை வைத்துக்கொண்டு, இரண்டு பக்கங்களையும் பிடித்துக்கொண்டு, இலேசாகத் தொட்டியினுள் முழுக்கி, கூழ் கம்பிகளின் மீது வரும்படியாக அரித்து எடுக்கவேண்டும். அந் நிலையில் சட்ட அமைப்பை இரண்டு முறை அசைக்க வேண்டும். இதனால் கூழில் உள்ள மூலதாவரப்பொருள் ஒன்றோடொன்று இணைந்து காகிதம் உறுதி பெறும். பின்னர் சட்ட அமைப்பைத் தொட்டியில் இருந்து வெளியே எடுத்து, மேல் சட்டத்தை வேறாக எடுத்துவிட்டு, கம்பிகளின் மீதுள்ள காகிதத்தில் நனைந்த துணியைப் போடவேண்டும். பிறகு ஒரு பலகையின்மீது, துணி கீழும், காகிதம் மேலுமாக இருக்கும்படி சட்ட அமைப்பை வைத்துத் தூக்கினால் காகிதம் பலகையில் நின்றுவிடும். இதைக் காயவைத்து உலர்ந்தபின் காகிதம் வேறாகவும், துணி வேறாகவும் எடுத்து விடலாம். இவ்வாறு தயாரித்த காகிதத்தில் எழுதினால் மை ஊறிவிடும். ஊறாமல் இருப்பதற்கு ஒருவிதப் பசையைத் தடவுவார்கள், இதற்குச் சௌகரியத்தை உத்தேசித்து மூன்று விதப் பசைகள் கையாளப்படுகின்றன. அவை குங்கிலியப் பசை, வஜ்ஜிரப் பசை, மாவுப் பசை எனப்படும். பின்னர் இக் காகிதத்தில் ஒரு வழவழப்பான கட்டையைத் தேய்த்து மெருகு கொடுப்பார்கள். இதுவே கையினால் காகிதம் செய்யும் முறையாகும்.

இப்பொழுது இயந்திரத்தினால் காகிதம் செய்யும் விதத்தை விளக்குவோம், முன்பு பெருத்த அளவில் மரக்கூழ் தயாரிக்கும் விதத்தைப் பார்த்தோம். அக் கூழைச் சலவைச் சூரணத்தினால் வெளுத்துக்கொண்டு இதனுடன் சீனக் களியையும் மாவையும் சேர்த்துக்கொள்வார்கள். பல நிறக் காகிதங்கள் செய்யவேண்டுமானால் அதற்கு வேண்டியபடி சாயத்தையும் சேர்த்துக் கொள்வார்கள். இக் கூழ்க் கலவையை இயந்திரத்தினால் நன்றாகப் பிசைந்து அடிப்பார்கள். பின்னர் சுத்தமான தண்ணீரில் இக் கூழைக் கலந்து, ஒரு பாத்திரத்தில் நிரப்பிக்கொள்வார்கள். கலவையில் கூழின் உறைப்பு (Concentration) நூற்றுக்கு இரண்டு அல்லது மூன்று வீதம் இருக்குமாறு தண்ணீர் சேர்க்கப்படும், உறைப்பைப் பின்னும் நூற்றுக்கு ஒன்றாக வேறொரு பாத்திரத்தில் குறைத்துக் கொள்ளுவார்கள். காகிதம் செய்யும் இயந்திரத்திற்கு இது கொண்டு போகப்படும். இயந்திரத்தின் ஒரு முனையை ஈர முனை (Wet end) என்றும் மற்றொன்றைக் காய்ந்த முனை (Dry end) என்றும் கூறுவார்கள். இறைவிகளின் (Pumps) உதவியால் கூழ்க் கலவை ஈர முனைக்குச் செலுத்தப்படும். காகிதத்தை எடுப்பதற்காகத் துணி போன்ற கம்பிச் சுருள் ஒன்று இயந்திரத்தினூடே ஓடிக்கொண்டிருக்கும். இச் சுருளின் நீளம் சுமார் ஐம்பது அடியும் அகலம் சுமார் எட்டு அடியும் இருக்கும். இதில் ஒரு அங்குல இடைவெளிக்கு அறுபது அல்லது எழுபது கம்பிகள் வீதம் பொருத்தப்பட்டிருக்கும். இச் சுருளின்மீதுதான் கூழ்க் கலவை இறைக்கப்படுகிறது. சுருளின் பக்கவாட்டங்களில் கலவை ஓடாமல் தடுப்பதற்காக இரண்டு பக்கங்களிலும் ரப்பர் பட்டைகள் சுருள் செல்லும் கதியுடன் ஓடிக்கொண்டிருக்கும். உருளைகளைக்கொண்டு கூழ்க் கலவைச் சுருளின்மீது நன்றாக பரப்பப்படுகின்றது. அடியின் வழியாகக் கசிந்துவரும்

நீர் திரும்பவும் கூழ் அறைக்குக் கொண்டு செல்லப்பட்டு மறுபடியும் உபயோகப் படுகிறது. ஈரக் காகிதம் கம்பிச் சுருளோடு ஓடிக்கொண்டிருக்கும். வேறு சில உருளைகளைக்கொண்டு இதன் பரப்பைச் சீர் படுத்துகின்றார்கள். பின்னர் Dandy roll என்று சொல்லப்படும் மற்றொரு உருளையைக்கொண்டு வாடர் மார்க்கை ஈரக்காகிதத்தில் அச்சடிக்கிறார்கள். பிறகு இக் காகிதச் சுருள் வேறு சில உருளைகளினால் உலர்த்தப்படுகின்றது. இதற்கு உருளைகளை நீராவியினால் சூடு செய்து கொள்ளுகிறார்கள். சீக்கிரத்தில் காகிதத்தை உலர்த்திவிட்டால் காகிதத்தின் பலம் குறைந்து விடுவதால் இது சற்றுத் தாமதத்துடன் நிகழுமாறு பல படிகளில் செய்யப்படுகின்றது. இதன் பிறகு காகிதத்துக்கு மெருகு கொடுக்கின்றார்கள். இதையே அவர்கள் (Calendering) என்று கூறுவது. வெளிவரும் காகிதம் அவ்வப்போது சுருட்டப்படும். தினசரி பத்திரிகைகளுக்கு உபயோகிக்கப்படும் ஒவ்வொரு காகிதச் சுருட்டிலும் சில சமயம் இரண்டு மைல் நீளத்திற்குக் காகிதம் இருக்கும். கானடாவில் உள்ள ஒரு தொழிற்சாலையில் பிரதி தினமும் எழுநூறு டன் காகிதம் தயாராகின்றது. நம்நாட்டில் வங்காளத்திலுள்ள டிடாகர் (Titagar) காகிதச்சாலை பெயர் போனது. இயந்திரத்தினால் காகிதத்தைத் தயாரிக்கும் வேறு தொழிற்சாலைகளும் நம் நாட்டில் இருக்கின்றன. காகிதம் செய்வதற்கு வேண்டிய மூலதாவரப் பொருள் ஏராளமாய் நம்நாட்டில் இருப்பினும், மரக் கூழ் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றது. இந்நிலைமை மாறவேண்டும். நாட்டில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் காகிதத்தை ஏராளமாக இயந்திரத்தினாலோ அல்லது கையினாலோ உற்பத்தி செய்ய இடமிருக்கின்றது. அவ்வாறு செய்து மக்களின் அறிவின்மையைப் போக்குவது நமது கடமையாகும்.



வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் **வின்ஸென்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

மல்லிகைச் செண்டு

கே. சுந்தரம்மாள்

"மாஸ்டர்! இன்று சாகுந்தலத்தில் எந்த அத்தியாயம் படிக்கவேண்டும்?" என்று ஓரக்கண்ணுல் ராஜுவைப் பார்த்த படியே புன் சிரிப்புடன் கேட்டாள் ஜீஜி.

அப் பார்வையின் வேகத்திஞல் நிலை தடு மாறிய இன்பவெறியில் கிழ்க்கண்ணுல் பார்த் துக்கொண்டே "சகுந்தலேயும் துஷ்யந்தனும் முதலாவதாகச் சந்திக்கும் அத்தியாயம்தான்" என்ருன் ராஜு.

கொஞ்சநேரம் சுலோகமும் அர்த்தமுமாகப் பாடம் நடந்தன. பாடம் சொல்லிக்கொண்டே வரும்பொழுது "ப்ரியே உன்னைப் பார்த்த நிமிஷமுதல் என்மனம் என் வசத்திலில்லே. உனது வேல்விழியினின்றும் விடும் பார்வைப் பாணம் என் ஹ்ருதயத்தை ஊடுருவுகின்றது. தெய்வ சங்கல்பத்திஞல் ஏற்பட்ட பிரேம பாசத்திஞல் பிணைக்கப்பட்டோம் என்பதை உன்வாய்ச் சொற்களிஞல் அறியாவிட்டாலும் உனது கண்கள் தெள்ளெனக் காட்டுகின்றன உனது உள்ளத்தை" என்று நிறுத்திஞன்.

"மாஸ்டர்! ஒரு சந்தேகம் கேட்கலாமா?"

"ஓ, தாராளமாக அச்சமில்லாமல் கேள்"

"இப்பொழுது கடைசியில் சொன்ன வாக் யம் சொல்வது யார்" என்பது எனக்கு விளங்கவில்லேயே" என்று சிரித்தவாறு கூறி ஞள்.

மேஜையின் எதிரெதிராக இருவரும் உட் கார்ந்திருந்ததிஞல் சிரிக்கும்பொழுதே தனது காலிஞல் மேஜையின் அடியில் துழாவிஞள். இவளின் பாதம், அவன் பாதத்தில் உரசிற்று. சில்லென்ற ஓர் உணர்ச்சி. இருவர் மனதிலும் ஒரு கொந்தளிப்பு.

"யார் என்பதைத் தெரிந்துகொள்ளாமலா இவ்வளவு நேரம் பாடம் படித்தாய்? சகுந்தலே யைப் பார்த்துத் துஷ்யந்தன் சொன்ஞன்" என்று தனது பாதத்தை அவள் பாதத்தின்மீது வைத்து ஓர் அழுத்து அழுத்தியவாறு கூறிஞன்.

"துஷ்யந்தன் சகுந்தலேயின் பாதத்தை எந் தச் சமயத்தில் மிதித்தான்?'

"இந்தச் சமயத்தில்தான்" என்று அவளது இரு கைகளேயும் பிடித்துக்கொண்டான். இரு வரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

சற்றுநேரம் ஒருவர் உள்ளத்தை மற்ருெரு வர் ஊடுருவி ஆராய்வதுபோல் பார்த்த வண் ணம் மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள். பெண்மையின் இயற்கையான லஜ்ஜை தோன் றவே, "கையை விடுங்கள், யாராவது வரப் போகிருர்கள்" என்ருள்.

பழையபடி பாடம்படிக்கத் தொடங்கிஞர் கள். மனம் அதைக் கண்டிப்பாக மறுத்தது.

"இப்படிப் பாடம் படித்தால் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறலாம்" என்று சிரித்தாள் ஜீஜா.

"உன்னைப் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறவைப்பது என் பொறுப்பு"

"எந்தப் பரீக்ஷயில்? காதல்........." என்று சிரித்தாள்.

"எல்லாப் பரீக்ஷயிலும்தான். என்ன குறு ம்பு. இந்தக் குறும்புப் பேச்சுத்தானே என்னே இந்த நிலேமைக்குக் கொண்டுவந்தது" என்று அவள் கன்னத்தை லேசாகக் கிள்ளிஞன்.

"என்ன? இடத்தைக் கொடுத்தால் மடத் தைப் பிடுங்குகிற விவகாரமாக இருக்கிறதே. நேற்றுவரை புஸ்தகத்தைக்கூடக் கையில் வாங்காமல் கிழே வைத்தபிறகு எடுத்து வந்த வர் இன்று கன்னத்தைக் கிள்ளும்வரை ஸ்வாதீ னம் கொண்டாட என்ன தைரியம்?"

"அது என் குற்றமா? இயற்கையின் வெற்றி. ஒருமாத காலமாக ஒருவர் மனதை மற்றவர் அறிந்தாலும் அச்சத் திரையை விலக்கும் வகையறியாது தவித்துவந்தோம். இன்று அந்தப் புண்யவான் மஹாகவி காளிதாஸின் காவ்யத்தின் உதவியிஞல் திரை விலகும் சந்தர்ப்பமேற்பட்டுவிட்டது. இயற்கையை வெற்றிகொள்ளும் சக்தி மனிதவர்க்கமென்ன ஜீவராசிகளுக்கே சக்தியுண்டா?"

"ஆஞல் இனிமேல் குருசிஷ்ய பரம்பரையில் பாடம் படித்து, பரீக்ஷ தேறுவது என்பது குதிரைக்கொம்புதான். ட்யூஷனை நிறுத்தவும் முடியாது. படிக்கவும் முடியாது. இதற்கு என்ன செய்வது? S S L C. என்னவாவது?"

"அந்தக் கவலே உனக்கு வேண்டாம். ட்யூ ஷன் சாக்கில் இன்பகரமாகக் கழியும் பொழு தைக் கெடுத்துவிடாதே. கேள்விப் பேப்பரில் இன்ன கேள்விகள் வரும் என்பது எனக்குத் தெரியும். எழுதித்தருகிறேன். வீட்டில் எழு திப் பழகிவிட்டு, கேள்விப் பேப்பரைக் கொளுத்திவிடு. ஒருவருக்கும் காண்பிக்காதே. பிறகு என் கவலே?

"அப்படிச் செய்தால் வெரி, வெரி தாங்க்ஸ். இப்படிப்பட்ட குரு வாய்ப்பதற்கு எப்படிப் பட்ட தவம் செய்தேனோ" என்றாள். இருவருக்கும் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

"ஒரு விஷயம் என் மனதைச் சமாதானமில்லாமல் செய்கிறது. அது போகட்டும்; பஸ்ட் கிளாஸில் பாஸ் செய்தால் எனக்கு என்ன தருவாய்?"

"அந்தச் சமயம் நீங்கள் எது கேட்டாலும் ஆக்ஷேபனையே இருக்காது. அது இருக்கட்டும்; உங்கள் மனதைச் சமாதானமில்லாமல் செய்யும் விஷயம் யாது?

"நீ எதுவும் செய்வதற்குத் தயார்தான். ஆனால் பெரியோர்களிடை எவ்வித ஆக்ஷேபனைகள் எழுமோ? முதல்தடவை ஜாதிப் பிரச்னை. இரண்டாவது பணப்பிரச்னை. எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுவதுபோல் எனது நிலைமை. உனக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுக்க ஏன் ஒத்துக்கொண்டோமென்று இப்பொழுதுதான் ஞான உதயமாகிறது. காதல் என்பது தெய்வீகம் என்றாலும் அது நிறைவேறக்கூடிய சாதனங்களாலேயே விருத்தியாகிறது. ஏதோ இப்படி உன்னிடம் நெருங்கிப் பழகாமலிருந்திருந்தால் மனப் போராட்டத்துடன் நின்றிருக்கும். இவ்வளவு பழகி, உனது சம்மதமும் தெரிந்தபின்பு மனதைக் கட்டுப்படுத்துவது என்பது எவ்வளவு கடினம். இந்த விஷயங்களை எண்ணி எண்ணியே ஒருமாத காலமாகத் தவித்தேன். விதியானது இன்று இவ்விதம் நடக்க வசதியளித்துவிட்டது. இந்த விஷயங்களின் போராட்டத்தில் உத்யோகத்தைக் காரணமாகக்கொண்டு வெளியூர் சென்றுவிடலாமென்று நினைக்கிறேன்.

"மனமொத்த காதலின் முன் எது நிற்கும்? ஜாதியாவது, பணமாவது? நான் என்ன தீண்டா வகுப்பா? பிராம்மண ஜாதியின் ஒரு வித பாகுபாடு. சமூக முன்னேற்றத்தில் எந்த விஷயமானாலும் பின்வாங்காத இக்காலத்தில் வாழ்க்கையின் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் நாம், அது விஷயத்தில்கூட நமது இஷ்டம்போல் நடக்க ஸ்வதந்திரம் கிடையாதா? நீங்கள் உறுதியாய் நிற்கும் பக்ஷத்தில் எல்லாம் நமது இஷ்டம்போல் நடக்கும். ஆனால் வண்டினத்தை ஒத்த ஆண்பிள்ளைகளின் மனம் பச்சோந்திபோல் மாறாமலிருக்கவேண்டும்" என்று சிரித்துக் கொண்டே கூறினாள்.

"ஓஹோ! உலகத்தின் போக்கைக் கண்டறிந்த மூதாட்டியோ தாங்கள், எத்தனை ஆண்

மேதாஸ்

மஸ்தானு மாத்திரைகள்

சிறந்த டானிக்

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு, தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல், காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை.

பிள்ளைகளின் போக்கை இதுவரை கண்டறிந்திருப்பீர்களோ? அனுபவம் அதிகம்போலும்” என்று அவள் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு சிரித்தவாறு கேட்டான்.

இச் சொற்கள் விளையாட்டான மனப்பான்மையில் எழுந்தபோதிலும், பெண்மையின் ஹ்ருதயத்தை முள்ளெனத் தைத்தது. வெடுக்கெனக் கையைப் பிடுங்கிக்கொண்டு, நாற்காலியைவிட்டு எழுந்து நின்ற வண்ணம், “அப்பா! பேச்சிலேயே சந்தேகமா? எல்லோரும் எல்லா விஷயங்களையும் அனுபவத்தின் பேரில்தான் சொல்லுகிறார்களோ? வழக்கச் சொல்லை மறுக்க முடியுமோ? உள்ளத்தைச் சொன்னால் யாருக்கும் கோபம்தான். ‘எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும்’ என்ற பழமொழி என் விஷயத்தில் உண்மையாகிவிட்டது. இவ்வளவு நாள் அடக்கிவந்த மனதை இன்று தளரவிடுவானேன். தங்கள் மனம் மாறினாலும் என் மனம் மாறாது என்பதற்காகச் சொல்லவந்தேன். வேண்டாம் விதிப்படி முடியட்டும்” என்று கண்களில் நீர் தளும்பக் கூறிவிட்டு, நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு உள்ளே செல்வதற்காகத் திரும்பினாள்.

“இது என்ன கஷ்டம்! அவசரப்பட்டு உளறிவிட்டோமே, இது ஏதாவது விபரீதத்தில் கொண்டுவிட்டால் என்ன செய்வது” என்ற பயம் ராஜுவைப் பற்றிக்கொண்டது. அதனால் தற்சமயம் பணிந்தே அவளைச் சமாதானம் செய்யவேண்டுமென நினைத்து எழுந்து, அவள் எதிரில் சென்று, அவள் கையைப்பிடித்து நிறுத்தி, “ஜீஜி என்னை மன்னித்துவிடு. நான் விளையாட்டாகத்தானே சொன்னேன். அதற்கு இவ்வளவு கோபமா? இப்படிப் பாதிப் படிப்பில் எழுந்து சென்றால் நிலைமை என்னவாகும்? முதற்படியில் காலை வைக்குமுன்பே சறுக்கிவிட்டால் பிறகு ஏறுவதெப்படி? இதைப் பார்! என்னை மன்னித்துவிடு, இனிமேல் இதுமாதிரியாக விளையாட்டாகப் பேசவே மாட்டேன். உஷாராகப் பேசுகிறேன். என் மனதை அறிந்தும் நீ விளையாட்டாகப் பேசினதால் எனக்குத் தைரியம் உண்டாயிற்று. நீ மாத்திரம் நான் மாறிவிடுவேனென்று சொல்லலாமா? போனது போகட்டும். இப்படி உட்கார்” என்று நாற்காலியின் பக்கம் இழுத்தான்.

“விளையாட்டிற்கும் ஒரு எல்லை வேண்டும்” என்று கையைத் திமிறியபடி திரும்பினாள்.

“சரி, உன்னிஷ்டம். இன்றைக்கு நான் வந்த வேளையின் பலன் போலும். நமது காதல் காட்டி மறைக்கும் தன்மைபோல் இவ்வளவு சீக்கிரம் முறியுமென்று நினைக்கவில்லை. எல்லாம் விதியின் செயல். இதுவே நமது கடைசி சந்திப்பாக இருக்கட்டும். நான் செல்கிறேன். குட் பை!” என்று துக்கம் நெஞ்சை அடைக்கக் கூறினான்.

இச் சொற்கள் தடை கட்டினாற்போல் செய்துவிட்டது. திரும்பிவந்து நாற்காலியில் உட்கார்ந்தாள். ராஜுவும் உட்கார்ந்தான்.

“மிஸ்டர், என்னை மன்னித்து விடுங்கள். யாருக்கும் தன் குற்றம் சட்டெனத் தெரிவதில்லை. விளையாட்டானாலும் சொற்கள் மனக்கொதிப்பை உண்டாக்கிவிடுகின்றன. இருவரும் மறந்துவிடுவோம்” என்றாள்.

“அம்மா! கோபம் மூக்கின் நுனியில் காத்திருக்கும்போலிருக்கிறது. ஆனாலும், பிணக்கு இன்பம் பயக்கும் என்ற பெரியார் வார்த்தை பொய்யில்லை. தற்சமயம் உன் முக வசீகரம் மனதிற்கு இன்னதெனச் சொல்ல இயலாத ஆனந்தத்தைக் கொடுக்கிறது.

‘சரி, சரி. வர்ணனையில் காளிதாஸைக்கூட மிஞ்சிவிடுவீர்கள் போலிருக்கிறதே. அதிருக்கட்டும். கல்யாணத்திற்குத் தடையாக எதைச் சொல்லுகிறீர்கள்? ஜாதிப் பிரச்னை உங்கள் பெற்றோரிடைதான் உண்டாகலாம்”

“ஜீஜி, ஜாதிப் பிரச்னை முக்கியமல்ல. ‘பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே’. என் பெற்றோர்கள் என் விருப்பத்தைத் தடைசெய்ய மாட்டார்கள். அப்படி நேர்ந்தாலும் அதை மீறி நடக்கும் சக்தி எனக்கு உண்டு. பணமும் கௌரவமும்தான் முக்யத்துவம் பெறுகின்றன. நீ ஓர் முனிசீப்பின் பெண். நான் ஒரு சாதாரண வக்கீலின் பிள்ளை. அனேக ஆயிரம் ரூபாய்களுக்கு அதிபதி உன் தந்தை. ஒரு நூறு ரூபாய்க்குக்கூட அதிபதியல்ல என் தந்தை. ஆனால் இரு குடும்பமும் சரியொத்த சம்சாரம். எனக்கு ஐந்தாறு சகோதர சகோதரிகள். உனக்கும் அப்படியே. உனது சகோதரிகள், உயர்ந்த உத்தியோகமும் நிறைந்த செல்வமும் படைத்த கணவர்களுடனிருக்கிறார்கள். நான் ஒரு வெறும் B A. தற்சமயம் போர்ட் ஸ்கூலில் ரூ. 40 சம்பளமும், டியூஷன் 20 ரூபாயுமே வருமானம். உயர்ந்த படிப்போ உத்தியோகமோ எனக்குக் குதிரைக்கொம்பே. எனக்கு உன்னைக் கொடுப்பதற்குப் பெற்றோர் மனம் விரும்புமா? நன்றாகச் சிந்தித்துப் பார்த்தோமானால், நாம் இப்படியே பிரிந்துவிடுவதுதான் இருவருக்கும் நன்மை என்பது புலப்படும். ஆனால் உன்னை மறப்பது என்பது முடியாத விஷயம். அதிகப் பழக்கத்திற்கு இடமில்லாத நிலைமையில் அதிகத் துக்கத்திற்கும் இடமில்லாமல் செய்யலாம்.”

“மிஸ்டர்! என்னைப் பற்றித்தானே சிந்தனை, கவலையை விடுங்கள். உங்கள் பக்கம் ஆக்ஷேபத்திற்கு இடமில்லை என்றால், என் பக்கம் ஆக்ஷேபனையைச் சமாதானம் செய்து விடுவேன். ஒரு விஷயம், நான் இண்டர்மீடியட் பூர்த்திசெய்யுமட்டும் தாங்கள் பொறுத்திருக்க வேண்டும். முதலில் கல்யாணம் வேண்டாம் என்று பிடிவாதம் செய்து, பிறகு எனது விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்; அதற்கு அவகாசம் வேண்டும்.

"வேண்டிய அவகாசம். எவ்வளவு காலமானாலும் தவம் செய்யத் தயார். தேவியின் அருள்தான் கிடைக்கவேண்டும்."

"பக்தா! கவலையுறாதே; உனது அபீஷ்டம் நிறைவேறும்" என்று சொல்லும்பொழுதே "ராஜு, பாடம் முடிந்துவிட்டதா? கொஞ்சம் சீக்கிரமாகவே முடித்துவிடு. கல்யாண வீட்டிற்குச் செல்லவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே வந்த ஜீஜியின் தாயார், என்னடி ஜீஜி, புஸ்தகம் படிக்காமல், 'பக்தா கவலையுறாதே' என்றாயே என்ன விஷயம்?" என்றாள்.

இருவர் மனமும் 'திக்'கென்றது. முகத்தில் கலவரம் தோன்றச் சிரிப்பை வரவழைத்தான் ராஜு. பெண்மையின் சமயோசித தந்திரத்தால் "ஒன்றுமில்லையம்மா. சம்பந்தருக்குச் சுவாமி காட்சி கொடுத்த படலம் வந்தது. அதைப் பாராமல் பாடம்செய்து ஒப்புவித்தேன்".

"மாமீ! வரவர பாடத்தைக் கவனிக்கவே மாட்டேனென்கிறாள். அவள் இஷ்டப்பட்ட பாட்த்தையேதான் நான் சொல்லிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. ஸ்கூலில் சாகுந்தலம். இவள் தமிழில் கரை காணப் போகிறாளாம். ஞானசம்பந்தர் பாடல்களைப் படிக்கிறாள், பரீக்ஷை முடிந்தபின் தமிழ்க் கவியாகலாம் என்று மாமாவிடம் சொல்லுங்கள்." என்றான்.

"எல்லாம் நீ கொடுக்கிற இடம்தான். தாக்ஷண்யமில்லாமல் கண்டிப்பாக நட. நாய்போல் பணியும்" என்றாள்.

"என்ன மாமி! இவள் சின்னக்குழந்தையா? பணங்கட்டும் மாணவியல்லவா?"

"அம்மா! அப்பாவிடம் சொல்லாதே. மாஸ்டர் ரொம்பவும் மிரட்டுகிறார். இனிமேல் தமிழ்ப் பேச்சையே எடுக்கவில்லை." என்று சொல்லியவண்ணம் பழிக்குப்பழி வாங்குவது போல் அவன் பாதத்தைத் தன் காலால் மிதித்தாள்.

"மாமி. பாடம் முடிந்துவிட்டது. நான் சென்று வருகிறேன்" என்று எழுந்திருந்தான்.

"ஜீஜி சீக்கிரம் டிரஸ் செய்துகொண்டு புறப்படு" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் தாயார்.

"ராக்ஷசி! நான் வெலவெலத்துப்போனேன். என்ன சமயோசித புத்தி" என்று அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"இனிமேல் அளவுக்கு மீறுவதாக இருந்தால் அம்மாவிடம் சொல்லிக்கொடுப்பேன், ஜாக்ரதை" எனச் சிரித்தாள்.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்

தியாகராயநகர் புரசவாக்கம் மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	33,48,561
ரிஸர்வ் நிதி	ரூ.	32,00,000
டிபாஸிட்டுகள்	ரூ.	10,0000000-க்குமேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B. N. கோபால அய்யர், செக்ரடரி

"ஐயோ! என்ன செய்வேன். அப்படிச் செய்துவிடாதே. புத்தி, புத்தி" என்று அவள் தலையில் குட்டிவிட்டுச் சென்றான்.

— 2 —

ஜீஜியின் தந்தை சுவாமிநாதய்யர் அவ்வூருக்கு மாற்றலாகி வந்தவர். ராஜுவிற்கு அது தான் ஜன்மபூமி. ராஜு வீட்டிற்கு நாலு வீடு தள்ளி ஜீஜியின் வீடு. ஊர்விட்டு மாறினதால் ஜீஜிக்கு ட்யூஷன் அவசியமாயிற்று. ராஜு எப்படி ட்யூஷன் உபாத்தியாயரானான்? ஜீஜியின் அமர அழகில் மயங்கியோ, பள்ளிக்கூடப் பழக்கத்தினாலோ? என்பதினாலும் இல்லை. ஜீஜி கறுப்புநிற ரகத்தைச் சேர்ந்தவள். சற்று உதடு நீண்டிருக்கும். ஆனால் மூக்கும் முழியும் பார்ப்பதற்குப் பரவாயில்லை என்று சொல்லும் படியான அழகு வாய்ந்தவள். ராஜு நல்ல கறுப்பு நிறம். ஆனால் களைபொருந்திய முகம். எடுப்பான மூக்கு. அவன் கண்கள் தனி அழகு பெற்றவை. நல்ல உயரம். சுருண்ட கிராப்புத் தலை. அவனது வெண்மையான உடையும், கண்களும் அவனது தோற்றத்தை மிகை படக் காட்டும். இதனால் இருவரும் ரூபத்தில் மயங்கிக் காதல் ஏற்படக் காரணமில்லை. ட்யூஷன் பழக்கத்தில் ஏற்பட்டதெனவே தான் முடிவு கூறலாம்.

முனிசிப் அவ்வூருக்கு மாற்றிவந்து பதினைந்து நாள் ஆகியிருக்கும். 'ஹாலிபாக்' என்ற இடத்திற்குச் சென்றார். ஹாலிபாக் என்பது சாதாரணமான தோட்டம் போன்ற அமைப்பில், ஒரு ரேடியோ பாடும், பேசும், கருங் கல்லினால் மேடைகள் போட்டிருக்கும் அவ்வளவே. யாவரும் சாயங்காலம் அவ்விடம் சென்று உட்காருவார்கள். ரேடியோவிற்குப் பக்கத்திலிருந்த மேடையில், "ஜாதிப்பிரியன்" என்ற பத்திரிகையைப் படித்தவாறு ராஜு உட்கார்ந்திருந்தான். அப்பத்திரிகையின் ஆசிரியர் சீர்திருத்தம் என்ற பெயரால் தோட்டி முதல் தொண்டமான் வரையில் பாரபக்ஷமின்றி, மறைபொருளின்றி, குற்றங்களை எடுத்துக் காட்டியிருப்பார். முனிசிப்பிற்கு என்றாவது அப்பத்திரிகையில் சட்டத்திற்கு விரோதமான செய்திவந்தால், உடனே, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது ஆவல். அதனால் அப்பத்திரிகையை விடாமல் வாங்கிப் படிப்பார். அவ்வூரில் அதற்கு ஏஜண்ட் இல்லையென்பது முதல் நாள்தான் தெரியவந்தது. நேர்மூல்யமாகச் சந்தா கட்ட அவர் மனம் விரும்பவில்லை. அதனால் அதை எவ்விதம் வாங்குவது என்ற பிரச்னை தீராத நிலைமையில் ராஜுவின் கையில் அப்பத்திரிகையைக் கண்டதும், நித்திய தரித்திரன் கண்ணில் புதையல் தென்பட்டதுபோலிருந்தது. ராஜுவின் பக்கத்தில் உட்காரவே ராஜுவின் மனம் அளவற்ற பெருமையை அடைந்தது. இன்னது பேசுவது என்பது புரியவில்லை. ஏதோ சொல்ல வேண்டும் என்ற நினைப்பில்,

"நீங்கள்கூட கிளப்பிற்குச் செல்லாமல், இவ்விடம் வந்தது, ஹாலிபாக் செய்த பாக்யம்தான்" என்று முகத்தில் அசடுதட்டச் சிரித்தவாறு கூறினான்.

"தினம்தான் கிளப்பிற்குச் செல்லுகிறேன். இன்று இவ்விடம் வரலாம் என்று வந்தேன். இந்தப் பத்திரிகை இவ்வூருக்கு வருவதில்லை என்று கேள்விப்பட்டேனே. உங்களுக்கு எப்படிக் கிடைத்தது" என்று "கருமமே கண்ணயினர்" என்பதுபோல் கேட்டார்.

"இதுவா? ஏஜண்ட் கிடையாதுதான். என் நண்பன் ஒருவன் ஸ்பெஷலாகத் தனக்கென்று தருவிக்கிறான். உங்களுக்கு வேண்டுமானால் வாரந்தோறும் கொண்டுவந்து கொடுக்கிறேன்."

"அப்படிச் செய்தால் மிகவும் வந்தனம்" என்றார். பிறகு அதன் ஆசிரியரின் எழுத்துத் திறன், அபிப்பிராயம், தவறுகள், இவைகளைப் பற்றிப் பேசியவண்ணம் முனிசிப், ராஜுவைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று, சற்று நாழி பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிரிந்தார்கள்.

ஜாதிப்பிரியன் அனுக்கிரஹத்தினால் முனிசிப்பின் அளவுகடந்த அன்பிற்குப் பாத்ரமானான் ராஜு. ஊரில், முனிசிப்பின் சிநேகம் கிடைத்துவிட்டதென்று, வக்கீல் வாரிஜாக்ஷ அய்யர் தலைநிமிர்ந்துதான் நடக்கிறார்' என்ற பேச்சுக் கிளம்பலாயிற்று. "உனக்கென்னடா முனிசிப்பின் தைரியமிருக்கிறது. என்ன வேண்டுமானாலும் செய்வாய்" என்று ராஜுவின் முதுகில் தட்டுவார்கள் நண்பர்கள். வாரிஜாக்ஷ அய்யருக்கு முனிசிப் வேண்டியவர் என்பதினால் அவர் வீட்டு வாசலில் கக்ஷிக்காரர்களின் கூட்டம் அதிகரிக்கலாயிற்று.

ராஜு அடக்கமான குணமுள்ளவன். யாராக இருந்தாலும் தாரதம்யம் பாராட்டாமல், கௌரவம் பாராட்டாமல், சமய உதவி செய்யப் பின்வாங்கமாட்டான். பள்ளிக்கூடத்தில், பெண்களிடத்தில் மிக்க மரியாதையாக நடந்து கொள்ளுவான். அவனது நேர்மையான குணம் யாரையும் அவனிடம் அன்புகொள்ளச் செய்தது. ஒன்றரை மாதப் பழக்கத்தில், அவனது நேர்மையான நடத்தையில் நம்பிக்கை கொண்ட முனிசிப் ஒருநாள் அவனிடம்,

"ராஜு! ஒரு விஷயம் உன்னிடம் கேட்கலாமென்று நினைக்கிறேன். நீ வித்யாசமாக நினைத்துவிட்டால் என்ன செய்வது என்று அச்சமாயுமிருக்கிறது" என்றார்.

"வித்யாசம் நினைப்பதென்ன. அப்படி நினைப்பதானால் சிநேகம் எதற்கு உபயோகம். எதுவானாலும் கட்டளையிடுங்கள். சிரசால் வஹிக்கிறேன்".

"ஒன்றுமில்லை. ஊர்விட்டு மாறினதில் ஜீஜிக்கு ட்யூஷன் அவசியமாகிறது. வயதுவந்த

பெண்ணாகையால் கண்டவர்களை வைக்க இஷ்டமில்லை. பெண் உபாத்தியாயினி இவ்வூரில் கிடைக்கவில்லை. அதனால் நீ சொல்லிக் கொடுப்பதானால் எனக்கு மிகவும் சந்தோஷமாகவிருக்கும்''

''அதற்கென்ன அப்படியே செய்கிறேன். இதற்குப் பீடிகையே அனாவசியம். ராஜு, ஜீஜிக்குப் பாடம் சொல்லிக்கொடு என்று ஸ்வாதீனமாகச் சொல்லியிருக்கலாமே''

பிறகு ராஜுவை அவ்வீட்டுக் குழந்தைகளில் ஒருவனாகவே நடத்திவந்தார்கள் முனிசீப்பும் அவர்மனைவியும். ஆனால் யௌவன காலத்தில் இயற்கையை வெற்றிகொள்வது என்பது சர்வசாதாரணமான காரியமன்று என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை. இவர்கள் படிப்பது வாசற்பக்கத்து ஹாலின் ஒரு பக்கத்திலுள்ள அறையில். அதற்கு வாசற் பக்கம் வராந்தாவிலிருந்துவர ஒரு வாசற்படியும், உள் பக்கம் ஹாலிலிருந்துவர ஒரு வாசற்படியும் இருந்ததினால் இவர்கள் ஏகாந்த நிலைமையில் வாசிப்பார்கள் என்று சொல்லமுடியாது. ஆள் நடமாட்டம் இருந்துகொண்டேயிருக்கும். அதனால் தலையில் குட்டுவதும், சமயம் பார்த்துக்கிள்ளுவதும், மேஜைக்கடியில் கால்களால் மிதிப்பதுமே அவர்களின் காதல் விளையாட்டாக அமைந்ததே தவிர மனம்போனபடி நடக்க வசதி கிடைக்கவில்லை. சினிமா ஹாலிபாக் செல்லுவதானாலும் ராஜுவின் தலைமையில் குழந்தைகள் யாவருமே புறப்படுவார்கள். ராஜுவின் மனம் சலனமடைந்தாலும், இயற்கையாக அமைந்த அடக்கமும் கௌரவமும் அவனைப் பாதுகாத்தன. ஜீஜியின் அன்றைய வார்த்தையில் நம்பிக்கை வைத்துக் காலத்தை ஓட்டிவந்தான்.

ஜீஜி அவ்வருஷம் முதலாவதாகத் தேறினாள். ராஜுவின் பெருமை ஒரு டிகிரி கூடவே ஏறிற்று. அந்த நிலைமையில் ஜீஜிக்கு வரன் தேடும் படலம் ஆரம்பமாயிற்று. இதை அறிந்த ராஜு ஜீஜியிடம் இதைப்பற்றிக் கேட்கத் துடித்தான். சமயம் கிடைக்கவில்லை. எட்டு நாட்கள் இந்தத் துடிப்பில் சென்றன.

அன்று சாயங்காலம் எவ்விதமாகவாவது கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆத்திரத்துடன் வந்தான் ராஜு. வாசல் வராந்தாவில் சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார் முனிசிப். இவனைக் கண்டதும்,

''வா அப்பா ராஜு! ஒரு விசேஷ சமாசாரம்''

இவன் மனம் படக் படக் என்று அடித்துக் கொண்டது. ஜீஜி ஏதாவது சொல்லி அதைப் பற்றிச் சொல்லப்போகிறாரோ, அது நல்ல விஷயமோ கெடுதலான விஷயமோ என்றெல்லாம் ஒரு விநாடிக்குள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிவிட்டது அவன் மனம்.

அந்த நிலைமையில் ''என்ன விசேஷம்?'' என்று கவலை தோய்ந்த குரலுடன் கேட்டவண்ணம் எதிரிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தான்.

''என்னைத் தெலுங்கு ஜில்லாவிற்கு மாற்றிவிட்டார்கள்'' என்றார்.

''மலைபுரண்டு தலையில் விழுந்ததுபோன்ற உணர்ச்சிதான் தோன்றினது ராஜுவிற்கு. அடடா! அதற்குள்ளாகவா மாற்றல்? உங்கள் பிரிவு எனக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுக்குமே. பிறகு?''

''பிறகு என்ன? மூட்டை கட்டவேண்டியதுதான். ஜீஜியின் கல்யாணங்கூட இவ்வருஷம் இல்லையென்று வைக்கவேண்டியதாயிற்று. அவளும் ஒரே பிடியாக இண்டர் பாஸான பிறகுதான் கல்யாணம் என்று சாதிக்கிறாள். நன்றாகப் படிக்கிறாள். அவள் இஷ்டப்படி நடக்கட்டுமே என்பது என் தீர்மானம். ஆனால் நான் போகுமிடத்தில் பெண்கள் கலாசாலை இல்லை. அதனால் க்வீன் மேரி காலேஜில் சேர்த்துவிட்டு, மூத்த மாப்பிள்ளை ராகவனைப் பட்டணம் மாற்றியிருப்பதால் பட்டுவினிடம் ஜீஜியைவிடலாமென்று தீர்மானம் செய்திருக்கிறது. காலேஜுக்குப் பக்கத்தில்தான் வீடு. மற்றவர்கள் என்கூடவேதான். இவ்வூர் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உங்களை விட்டுப் பிரியவேண்டுமே என்று வருத்தமாக இருக்கிறது.''

சேலத்தில்
கல்யாணப் பட்டு ஜவுளி
ரகங்கள் வாங்க சிறந்த இடம்
கோபால
பத்ம விலாஸ்
385, கடைவீதி, சேலம்.

Proprietors :
S. N. PATHMANABA CHETTIAR
P. R. JAYAGOPALA CHETTIAR

எட்டிக்காயையும், மாம்பழத்தையும் ஒரே சமயத்தில் தின்பதுபோலிருந்தது இவ்வாக்யம் ராஜுவுக்கு. கல்யாணம் ஒத்திப்போட்டது பற்றிச் சந்தோஷம். பிரிவு என்பது துக்கம். "த்சு! ஒருவரிடமும் அதிகம் பழகக்கூடாது. நான் ஒருவர் வீட்டிலும் இவ்வளவு தாராளமாகப் பழகினது கிடையாது. என்னை எல்லோரும் ஓராண்காணிஎன்றுபரிகசிப்பதுண்டு. உங்கள் குணம் என்னை அடிமைகொண்டது. மனஸு மிகவும் கஷ்டப்படுகிறது."

"என்ன செய்வது, எல்லாம் வயிற்றுப் பிழைப்பு. இருந்தாலும் மனமிருந்தால் இடமுண்டு. ரஜா கிடைக்கும்பொழுதெல்லாம் நான் இருக்குமிடம் வா. பணத்தைப்பற்றிச் சிந்திக்காதே. நான் ஏற்றுக்கொள்ளுவேன்" என்றார். அச்சமயம் இரண்டுமூன்று வக்கில்கள் அவரைப் பார்க்க வரவே, ராஜு உள்ளே சென்றான்.

சற்றுநேரம் மாமியிடம் துக்கம்கொண்டாடியவாறு ஜீஜியைத் தனியிடம் வருமாறு கண்களினால் அழைத்தவண்ணமிருந்தான்.

"ராஜு சற்று இரு. காப்பிபோட்டுக் கொண்டு வருகிறேன்" என்று எழுந்து உள்ளே சென்றாள்.

"அவ்விடம் வேறு ஒருவரும் இல்லாத நிலைமையில் "ஜீஜி! என் கதி என்ன?" என்றான் தாழ்ந்த குரலில்.

"எல்லாம் நல்ல கதிதான்"

"பரீக்ஷையில் முதலாவதாகத் தேறினதிற்குப் பரிசு?"

"நானே தான்"

"எப்பொழுதோ?"

"காலம் வரும்பொழுது"

"பிரிவு என்பதை நினைக்கவே முடியவில்லையே"

"பிரிவில்தான் அன்பு விருத்தியாகும்" எனச் சிரித்தாள்.

"என்ன கல்நெஞ்சு. மெல்லி நல்லாள் என்பது பொய்போலும்"

"நடக்கவேண்டியதைப்பற்றிப் பேசவேண்டுமென்பது தங்கள் உபதேசம்தானே"

"சரி. இண்டர்மீடியட் சேரப் போகிறாயாமே?

"அதுவும் உங்களுக்காகத்தான். படிப்பும் ஏறி, வயதும் ஏறினால் தைரியமாக நடக்கலாமல்லவா? எல்லாம் தந்திரமே.

"தந்திரமெல்லாம் பலிக்கவேண்டும். எல்லாம் உன் கைக்குள் அடங்கியிருக்கிறது. நம்மில் பிள்ளைவீட்டார் பெண்ணைத் தேடிவரும் வழக்கமில்லை. பிரிவோ மலைபோல் தோன்றுகிறது. நம்பிக்கைத் துரோகம் செய்துவிடமாட்டாயே" என்று அவள் கையைப்பற்றினான்.

"என்ன தைரியம்? அம்மா வந்தால், ஆண்பிள்ளைகள் அவசரக் குடுக்கைகள்......"என்று நிறுத்திவிட்டு, "ஐயோ தவறி வந்துவிட்டது, மன்னித்துவிடுங்கள். மறுபடி ஏதாவது வியாக்யானம் செய்துகொண்டு மனஸ்தாபம் வேண்டாம்" என்று கையை விடுவித்துக்கொண்டாள்.

"இப்பொழுதிருக்கும் மனநிலையில் நீ என்ன சொன்னாலும் அவையொன்றும் என் மனதில் உறைக்காது, வெண்ணெய் திரளும்பொழுது தாழி உடைந்தது போலாயிற்று இந்த மாற்றல் சமாசாரம். எவ்விடமிருந்தாலென்ன? மனம் சமீபத்தில்தான் இருந்துகொண்டிருக்கும். காலத்தின் சக்தியை மீற எதற்கும் சக்தி கிடையாதுபோலும்" என்று நீண்ட மூச்சு விட்டான்.

"ஜீஜி! இந்தக் காப்பியைக் கொண்டுபோய் ராஜுவினிடம் கொடுத்துவிட்டு. அந்தத் தூக்கிலிருந்து ஜிலேபியும் எடுத்துக்கொடு" என்றாள்.

ராஜு சமையலறைக்குள் வந்தான். ஜீஜி தாயார் சொன்னபடி செய்தாள்.

"ராஜு, பெத்த பிள்ளையைப்போல் பழகிவிட்டாய். தங்கமான குணம். எங்கேயாவது நன்றாக இருக்கவேண்டும். ஜீஜி முதலாவதாகப் பாஸானது உனது முயற்சியினால்தான். ட்யூஷன் அவசியம் என்ற நிலைமையில் இவ்வூரில் பெண் உபாத்தினி கிடையாதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு ஒளிவு மறைவு கிடையாது. உன்னை ஏற்பாடு செய்யும்பொழுது நான் ஆக்ஷேபித்தேன். மாமா ஒரே பிடியாக நான் ஆராய்ந்து பார்த்த பின்புதான் ஏற்பாடு செய்தேன், கூடப்பிறந்தவனுக்கு மேலாக இருப்பான் என்றார். பிறகு நாளாவர்த்தியில் உன்குணம் மிகவும் பிடித்துவிட்டது.

(தொடரும்.)

Estd. 1940 Tel: KETIOR

விஜயபுரம்

K. T. R.

பன்னீர் & சந்தனாதி

- அரைக்கீரைவிதை தைலங்கள் -

ஒயிட் ரோஸ் ஹேர் ஆயில்

- கிருஷ்ண அகர்பத்தி -

ராஜா பற்பொடி

முதலியவை குணத்தில் சிறந்தவை

K. T. R.

PERFUMER, VIJAYAPURAM

மதராஸ் ஸோல் ஏஜன்ஸி:

GIRISON & CO.

PARK TOWN :: MADRAS

ணமை நிகழ்ச்சிகளின் உன்னதசிருஷ்டி
அற்புதமான கலைநுணுக்கங்கள்
பிரமீக்கத்தக்க சம்பவங்கள்
விருவருப்பான கதையமைப்பு
மாடர்ன் தீயேட்டர்ஸ்
பர்மா ராணி
KESAVAN
டைரக்ஷன் T.R. சுந்தரம் B.A. B.Sc. (Leeds)
விபரங்களுக்கு:
தி. மாடர்ன் தியேட்டர்ஸ் லிட்., சேலம், மதுரை.

The Engineer....

எஞ்சினியரும் அவர் கடிகாரமும்.

மெஷீன் ரூம்களிலும் ஒர்க்ஷாப்புகளிலும் உபயோகப்படுத்தப்படும் கடிகாரங்கள் தூசி புகாமலும் குலுக்கல், காந்த இழுப்பு முதலியவைகளினால் கெடாமலும் இருத்தல் அவசியம். ஆகையினால்தான் அழுத்தமாயும் எத்தகைய உபயோகத்தினாலும் கெடாமல் மிக நுட்பமாக உழைக்கும் வெஸ்ட் எண்டு கடிகாரங்களை எஞ்சினியர்களும் மெக்கானிக்குகளும் விரும்புகிறார்கள்.



ஸெகண்டஸ் மாடர்ன்
நிக்கல் ஸில்வர் ... ... ரூ. 44

குறித்த காலத்தில் சரக்குகள் வருவதில்லையாகையால் விளம்பரம் செய்யப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய சாத்தியமில்லாமல் இருக்கிறது. ஆயினும் ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம். பேப்பர் கண்ட்ரோல் ஆர்டரின்படி கேட்லாக்குகள் அனுப்ப இயலவில்லை என வருந்துகிறோம்.

வெஸ்ட் எண்ட் வார்ட்ச் கோ. பம்பாய், கல்கத்தா

WEST END WATCH CO.

BOMBAY ◆ CALCUTTA



வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது 'பெரீஸ் பிஸ்கட்ஸ்'

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

பெரீஸ்

பிஸ்கட்ஸ்

PERRY & CO., USILAMPATTI. (Estd. 1917)

புண்யாத்மா

ரா. விழிநாதன்

அன்று தை வெள்ளிக்கிழமை. படிவாசல் பிள்ளையார் கோவிலில் ஏகக்கூட்டம். போகிறவர் வருகிறவர்களைக் கணக்கெடுத்து முடியாது. அநேகர், நண்பர்களையும் தெரிந்தவர்களையும் கண்டு புன்முறுவல் பூத்த வண்ணமும், கைகூப்பிய வண்ணமும், மலர்ந்த முகத்துடன் போவதும் வருவதுமாய் இருந்தனர். சந்நிதியில் ஒரு புறம் தேவாரம்! இன்னொருபுறம் வேதாத்யயனம்! பிராகாரத்தின் இடதுபுறத்தில் பிரபல நாதஸ்வரக் கச்சேரி! ஏக தடபுடல். நானும் கோயிலினுள் சென்றேன். மூச்சுத் திணறியது. மெதுவாக விடுவித்துக்கொண்டு பிராகாரத்தில் வந்து நின்றேன். இப்பெருங் கூட்டத்தில் ஜனங்கள் என்ன புண்யத்தைக் கட்டிக்கொள்ளப்போகிறார்களோ, தெரியவில்லை!

சிறிது நேரத்திற்கெல்லாம், தமிழ்நாடு ஹிந்தி பிரசார சபையின் மொட்டைமாடி மீது சென்று, விநாயகர் கோயிலுக்கு எதிராக நின்றுகொண்டேன். தெப்பக்குளத்தின் பாசி மணம் தவழும் காற்று 'ஜிலுஜிலு'வென வீசிக்கொண்டிருந்தது. மலையின் பொன்னிறக் கிரணங்கள், ஆகாயம் முழுவதிலும், அழகிய செந்நிறத்தைப் பூசியிருந்தன. கோயில் மணியின் இனிய நாதம் என் காதுகளில் பிரவேசித்தது! இயற்கையின் எழிலில் மூழ்கிய வண்ணம், சுவரின் மீது சாய்ந்து நின்றேன்.

சிறிது நேரம் கழிந்த பின்னர் என் கண்கள் கோயிலுக்குப் போகும் கூட்டத்தை நோக்கின. அவர்களில் பெரும்பாலோர் விதவைகள். தாம்பத்திய வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்காமல் போன, பாவச் சுமையைக் குறைத்து, மோக்ஷம் பெறும் நோக்கத்துடன் வந்திருந்தனர் போலும். அடுத்தபடியாக, வட்டிக்கடை வைத்துப் பணம் சேகரிக்கும் வியாபாரிகளின் கூட்டத்தைக் கூறலாம். அவர்கள் பணக்காரர்கள். ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி, பாவ மூட்டையைச் சுமந்தவர்கள் அல்லவா! அதைக் குறைப்பதற்கென வந்திருந்தனர். குடியானவர்களையும், கூலிகளையும் துன்புறுத்திப் பாவத்தைச் சேகரித்திருந்த சில கர்வம்பிடித்த அதிகாரிகளும் பாவத்தைக் கழுவும் நோக்கத்துடன் அங்கே கூடியிருந்தனர். சில யுவதிகள், ஒய்யாரமான ஆடை அலங்காரத்துடன், பிரம்மசாரியான விக்கினேச்வரரையே தம் மோகன வலையில் சிக்கச் செய்வதற்காகவேதான், வந்திருந்தனரோ என்றுகூடத் தோன்றுகிறது. இச்சமயம் எல்லாருமே ஆஸ்திகர்கள். சநாதன தர்மத்தினின்றும் வழுவாத மன்னர்கள்! ஆகா, இப்பக்திப் பெருக்கில் தேசத்தின் ஒற்றுமையை என்னவென்றுரைப்பது? (சுயஆட்சி பெறுவதில் இந்த ஒற்றுமையைக்காணுமே என்றுதான் வருத்தமாயிருக்கிறது) உண்மையிலேயே இவர்களது இப்பூஜையும் பக்தியும் மனப்பூர்வமானதாக இருக்குமாகில். கடவுள் இப்படி மௌனம் சாதித்தவண்ணம் அமர்ந்திருப்பாரா? இவர்களது ஆத்மாவின் உண்மையுருவத்தைச் சித்திரித்துக் காட்டக்கூடிய ஒரு யந்திரம் கண்டுபிடிக்கப்படுமேயாகில், பாவமூட்டையின் சுமை அதிகமாகிறது என்பதைக் கண்கூடாகக் காணலாம்.

எனது பார்வை அவர்களை விட்டு மறுபுறம் பாய்ந்தது. பூக்கடைவரை, உண்ணவும் உடுக்கவும் கிடைக்காத ஏழைப் பிச்சைக்காரர்கள் அமர்ந்திருந்தனர். ஏழைமைக்கோர் 'எல்லைக்கோடு' என்று அப்பிச்சைக்காரர்களைக் கூறலாம். தம்மெதிரில் ஒரு கந்தல் துணியை விரித்து, பாக்கியதேவதையின் தயவை எதிர்பார்த்தவண்ணம் தவங்கிடந்தனர். யாராவது காசோ, பழமோ, தேங்காய் மூடியோ போட்டுவிட்டால் போதும், அவர்கள் செய்யும் ஆசீர்வாதத்தைக்கேட்டு, 'கொடையில் கர்ணன்' என்போமே. அவனும் அவர்களிடம் பிச்சை வாங்கத்தான் வேண்டும். இம்மாதிரி எத்தனை தம்பிடிகள் சேர்ந்தால் அவர்களது வயிறு நிரம்புமோ? இதைப்பற்றிச் சிந்திக்ந நாம் யார்?

ஜனங்கள் செய்யும் தானதருமங்கள் எல்லாம், பகவானின் பிரதிநிதியான குருக்களுக்கும் தேவஸ்தானத்திற்கும்தான் சேரும். ஜனங்கள் போடும் கணக்கற்ற சதிர்த்தேங்காய்கள், எண்ணெயாக மாறிப் பணமாகத் தேவஸ்தானத்தின் இரும்புப்பெட்டியைச் சரணாகதி அடைந்துவிடும்.

ஊமைக்கடவுளுக்கு-கல்லுச்சாமிக்கு-தேங்காய் பழம் எல்லாம் படைக்கிறார்களே! அவைகளெல்லாம் கடவுளை அடையுமோ, என்னவோ! கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால், பாவம், இப்பிச்சைக் காரர்கள் கொடையாளிகளை ஏதாவது கேட்டுவிட்டால் போதும், வசைமொழிகளும், கோபச்சீறல்களும்தான், வெகுமதியாகக் கிடைக்கும்.

அப்பிச்சைக்காரர்களின் வரிசையில் ஒரு குருட்டுக்கிழவன் அமர்ந்திருந்தான். அவனது வாழ்வென்னும் கதிரவன் அஸ்தமிக்கும் தறுவாயிலிருந்தான் என்றுகூடக் கூறலாம். அவனது கண்களுக்கு இவ்வுலகம் இருண்டதுதான். ஆம், உண்மையில் இவ்வுலகம் இருண்

டதுதானே! மாயை கண்ணும்பூச்சி விளையாடி, நம்மை மயக்குகிறாளே தவிர......உண்மையில் உலகம் இருண்டதுதானே! நமக்கெதற்கு இந்த வரட்டு வேதாந்தம்.........அக்கிழவனும் ஒருகிழிந்த துணியை விரித்திருந்தான். அவன் பக்கத்தில் ஏழெட்டு வயதுள்ள சிறுமி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். ஏழைமைக்கு இதுவு மோர் பெரிய சுமை!

உலகத்தின் கண்களில் அக்கிழவன் உபயோகமற்றவன். அவன் உயிர் வாழ்வது வீண்; ஆனால் அவன்தான் அப்பெண்ணிற்கு ஊன்றுகோல், வழிகாட்டிக் காப்பவன் எல்லாம். அந்தக் கிழிசல் துணிதான் அவ்விரு ஆத்மாவின் வயிற்றை அலம்புவதற்கு உதவியாயிருந்தது. அதற்கும் ஒரு உதவி தேவை............தொண்டை கிழியக் கிழவன் கத்தியாகவேண்டும். அப்பொழுதுதான் ஏதாவது கிட்டும்.

ஐயா—காலணாக் கொடுங்கய்யா........
கண்ணில்லாத கபோதி அய்யா........
கோடிப் புண்ணியமுண்டு அய்யா....
கண்ணில்லாத கபோதி அய்யா...

இப்பாட்டிற்கு ஸ்வரமோ, தாளமோ கிடையாது. அவன் கவியோ விமரிசகனோ இல்லை. எதுகைமோனை சரியாக அமைந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு! நடமாடும் ஜனங்களின் உள்ளத்தை உருக்கிச் சோற்றுக்கு வழிதேடும் முயற்சியில்தான் இந்த வாக்கியங்கள் அவனுக்கு உதவியாயிருந்தன. லோபிகளும் சுயநலக்காரர்களும் இவ்வார்த்தைகளைக் கேட்டு அண்ணாந்து பார்த்தவண்ணம் நடுங்கிக்கொண்டே நகர்ந்துவிடுவர். உள்ளத்தில் 'இரக்கம்' என்னும் திரவபதார்த்முள்ளவர்கள் தம் சக்திக்கு இயன்றவாறு ஏதாவது கொடுத்துப் போவர். அவன் எவரையும் பலாத்காரம் செய்வதில்லை. அவன் கோர்ட்டிலுள்ள குமாஸ்தாவா என்ன? வாதிப்பிரதிவாதிகளிடம் பொய்ப் புளுகிப் பணம் பறிப்பதற்கு? இன்கம்டாக்ஸ் ஆபீஸரா, வியாபாரிகளின் கழுத்தைத் திருகிப் பணம் கழற்றுவதற்கு? அவன் 'பீட்' கான்ஸ்டபிள்கூட இல்லையே! போவோர் வருவோர்களைப் பயமுறுத்திக் காப்பிக்குக் காசு சம்பாதிப்பதற்கு?.........

உலகத்தின் கண்களில் அக்கிழவன் எதற்கும் உபயோகமற்றவன். வெறுப்பிற்கு உகந்த ஜீவன். கொடையாளிகளுக்கு நன்றி செலுத்தாமல் அவனால் ஒருகணமும் இருக்கமுடியாது. அச்சிறுமியும் தன் வருங்கால வாழ்க்கைக்கு இப் பாதையைத்தான் தேர்ந்தெடுத்திருந்தாளோ என்னவோ! கிழவனுடன் சேர்ந்து, தனதினிய குரலில் மெதுவாகக் கூறுவாள்:—

"*ஐயா காலணாக்கொடுங்கய்யா,*
கண்ணில்லாத கபோதி அய்யா,
கோடிப் புண்ணியமுண்டு அய்யா,
கண்ணில்லாத கபோதி அய்யா-" என்று, தனது சின்னஞ்சிறு கையை நீட்டுவாள். இதைக் கண்ணுற்ற எனது கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. மனமும் கற்பனை வெள்ளத்தில் மூழ்கியது.

'கீழே விழுந்துவிடலாமா' என்று ஊசலாடிக்கொண்டிருக்கும் பழுத்த இலை! அதன் கீழ் மிருதுவான, சிவந்த அழகிய துளிர்த்து நிற்கும் துளிர்! வாடி உலர்ந்து விழுந்தறுவாயிலிருக்கும் புஷ்பம்! இலைகளின் மறைவில் ஒளிந்துகொண்டு கண்ணும்பூச்சி விளையாடிக்கொண்டிருக்கும் மலராத பூ மொட்டு! மேற்குக் கடலில் மூழ்கும் பொருட்டுப் பயந்த வண்ணம். மெதுவாகப்போகும் சூரியனது தங்க நிறக் கிரணங்கள்! அதற்கு எதிர்ப்புறத்தில், மேகத்திரையை விலக்கிக் கண்ணைச் சிமிட்டிய வண்ணம், மதியை மயக்கிக்கொண்டு ஒய்யாரமாக வெளிவரும் தாரகைகள்!......அந்தோ! அந்த இளந்துளிரின் யௌவனத்தைக்கண்டு ஆனந்திக்கும் பாக்கியம், அந்தப் பழுத்த இலைக்குக் கிட்டக்கூடியதுதானா? வாடி விழப்போகும் அந்த மலருக்கு, புது மணம் கமழ மலர்ந்து பிறரைத் தன் வலையில் சிக்கவைக்கப்போகும் மொட்டின் நிலையைக்காணக்கூடிய அதிருஷ்டம் உண்டா? தாரகைகளின் எழிலைக் காண, அந்தச் சூரியனது கிரணங்கள்தான் கொடுத்துவைத்திருக்கின்றனவா?.........அதே போல்.

எவ்வளவோ பக்த கோடிகள் அவ்வழியே சென்றனர். எவ்வளவோ மகாத்மாக்கள் அவ்வழியே திரும்பினர். ஆனால் அக்கிழிசல் துணிகளைக் காணவே பிடிக்கவில்லை. கோயிலின் கர்ப்பக் கிரஹத்தில் அழுகிக்கொண்டிருக்கும் தேங்காய்களோ, பழங்களோ, அந்தப் பிச்சைக்காரர்களின் வயிற்றை நிரப்புவதில்லை. சதிர்த்தேங்காய்கள்தான் எண்ணெய்க்காகப் போய்விடுகின்றனவே! அவைகளுக்கும் அந்தத் துர்ப்பாக்கியம் கிட்டுவதில்லை. எல்லா ஜனங்களின் பார்வையும் கோயிலின் விநாயகர் மேலிருந்ததே ஒழியப் பிச்சைக்காரர்களின் பக்கம் திரும்பவே இல்லை.

படிவாசலில் ஒருவன், விளையாட்டுப்பொம்மைகளும் ஊதல்களும் விற்றுக்கொண்டிருந்தான். குழந்தைகளுடன் வரும் ஒவ்வொரு தாய்மாரும், குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமானோ ஊதலோ வாங்கிக்கொடுக்காமல் நகரவில்லை. சில விஷமக்காரப் பையன்கள், பாட்டிமார்கள் எவ்வளவோ தடுத்தபொழுதிலும், அழுது பிடிவாதம் பிடித்து வாங்கிக்கொள்ளாமல் நகரவில்லை. குழந்தைகள் மட்டும் என்று கூறுவானேன். வயதாகியும் குழந்தைப் பருவ நினைவுகளை மறக்காத சில பெரிய குழந்தைகள் வேடிக்கையாக வாங்கினர். இன்னும் சிலர் — அவர்களைத் தூரதிருஷ்டிக்காரர்கள் என்றுகூடக் கூறலாம்—வீட்டிலுள்ள குழந்தைகளுக்காகவோ, அல்லது பிறக்கப்போகும் குழந்தைகளுக்காகவோ, வாங்கிச்சென்றனர், ஒரு பணக்காரச்சிறுவன் இரண்டு

கைகளிலும், இரண்டு ஊதல்களுடன் சென்றான்.

கிழவனது அருகில் அமர்ந்திருந்த அச்சிறுமி தன் ஒளிவீசும் கண்களால் இவற்றை நோக்கினாள். சுகதுக்கத்தை அறியாத அந்த இளம் பெண்ணின் உள்ளத்திலும் ஓர் ஊதல் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் உதித்தது. கிழவனிடத்தில் கேட்க மனம் துடித்தது. ஆனால் சிறிது தயங்கினாள். ஆம், குருட்டுக் கிழவனுக்குத் தெரியாமலேகூட அவள் வாங்கி இருக்கலாம். ஆனால் இன்னும் அவளது இளம் உள்ளத்தில் இம்மாதிரி கெட்ட வழக்கங்களும், பொய்புனை சுருட்டும் இடம்பெறவில்லை. அவள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே ஊதல்கள் துரிதமாக விலையாகிக் கொண்டிருந்தன. ஊதல் வியாபாரியிடம் வெகு சொற்பமே மிஞ்சியிருந்தன. ஓர் ஊதல் காலணா! மூன்று புண்யாத்மாக்களிடமிருந்து காசு கிடைத்தால் ஓர் ஊதல் பெறலாப்! சுற்றிலும் அழகிய வர்ணக்காகிதம்! 'பூம்பூம்' என்ற இனிய நாதப்! சிறுமியால் மனத்தை அடக்கமுடியவில்லையே. ஆவல் அதிகரித்தது. பெரிய பெரிய ரிஷிமுனிகளால்கூடமனத்தை அடக்க முடியவில்லையே! பாவம்! சிறுமியால் எப்படி முடியும்? பயத்துடன், 'தாத்தா, நானு ஒரு ஊதல் வாங்கிக்கட்டுமா?' என்று வினவினாள்.

குழந்தையின் ஆவலுற்ற மொழியைக் கேட்ட கிழவனது முகத்தில் இனிய புன்முறுவல் தவழ்ந்தது. அமாவாஸ்யைக் கும்பிருட்டில் ஒரு மின்னொளி எழுந்தது. தன் தொண்டைத் தண்ணீரை வற்ற வைத்து இவன் இதுவரை சம்பாதித்திருந்தவை ஒன்பதே தம்பிடிகள்! தன் பேத்திக்காக அவன் ஒரு காலணா செலவழிக்கக்கூடாதா? அவன் கண்களில் நீர் துளிர்த்தது. 'வாங்கிக்கோ தங்கச்சி' என்றான் அவன் பரிவுடன்.

அச்சிறுமி தன் பாட்டனது கண்களில் நீரைக் கண்டு என்ன நினைத்தாளோ!......அல்லது கிழவனின் மனத்தைத் தெரிந்துகொண்டு விட்டாளோ தெரியாது. 'எனக்கெதுக்கு ஊதல் தாத்தா? சும்மாச்சொன்னேன். வேண்டாம்' என்று கூறினாள் சிறுமி. கிழவனின் கண்ணீர் அச்சிறுமிக்கு அடக்கத்தைக் கற்றுக் கொடுத்திருந்ததோ என்னவோ! கிழவனிடத்தில் என்ன பழுத்த அனுபவம் அப்பெண்ணிற்கு?.........

கிழவன் அவளது கையில் காசைக் கொடுத்த வண்ணம் 'வாங்கிக்கோ அம்மா' என்றான். ஆனால் அப்பெண் காசை வாங்கிக்கொள்ளவில்லை. 'இல்லை தாத்தா! அதெல்லாம் பெரியவங்களுக்குத்தான் தாத்தா' என்றாள்.

கிழவனது உள்ளக்கிடக்கையிலிருந்து குரல் வந்தது. 'ஆம், அதெல்லாம் காசு உள்ளவங்களுக்குத்தான்' என்று.

ஃ ஃ ஃ

அவனுக்குக் காலத்தின் கூற்றில் நம்பிக்கை இல்லை. 'உலகப்போக்கு' என்றுதான் சொல்லி

MAMMATONE

கருப்ப காலத்தில்
தாயாருக்கு
"மம்மாடோன்"
கொடுத்துவர
சரீர சௌக்யத்துடன்
சிசுவையும் புஷ்டியாக
வளரச்செய்யும்



KIDDYTONE

குழந்தைப் பருவத்தில்
ஏற்படும்
பல உபாதிகளைத் தடுக்கவும், குழந்தை
புஷ்டியாக வளரவும்
"கிட்டிடோன்"
கொடுங்கள்

விபரங்களுக்கு எழுதவும்:—

Indian Institute of Homoeopaths

Town Extensions — Kumbakonam

வந்தான். அவன் நல்ல நிலைமையில் இருந்தவன்தான். சாப்பாட்டிற்கும் ஒன்றும் குறைவில்லை. குழந்தை குட்டிகளுடன் சுகஜீவனம் நடத்திவந்தான். ஏழைகளின்மீது இரங்குவான். அவர்களது கண்களில் கண்ணீர் துளிப்பதைக் காணச் சகியான். எவ்வளவோ அநாதைகள், பசிப்பிணியினால் வாடும் கூலிகள், சோற்றுக்குத் தாளம்போடும் ஏழைகள், எல்லோருக்கும் அவன்தான் அன்ன தாதா! பணக்காரர்களை அவனுக்குச் சிறிதும் பிடிக்காது. இதயமற்று ஏழைகள்மீது கொடுமை புரியும் பணக்காரர்களைக் கண்டித்தல், பாட்டாளி மக்களின் உரிமையை நிலைநாட்டல் முதலிய விஷயங்களில் அவன் போராடியதுண்டு. அதனால் பணக்காரர்களுக்கு அவனைப் பிடிப்பதில்லை. அரசாங்கத்தாரும் அவனை வெறுத்தனர். பணக்காரர்களின் சூழ்ச்சியினால் அவனது ஒரே பிள்ளை மறைந்தான், தன் ஞாபகச்சின்னம் என்ற முறையில் ஒருமாதப் பெண் குழந்தையைவிட்டு. வெகு பரிவுடன் அதை வளர்த்துவந்தான். அவன் ஆஸ்தியும் அழிந்தது. ஆண்டியானான். இந்த மனோவியாதியில் அவன் மனைவி உயிர் நீத்தாள். மருமகளும் அம்மைக்கிரையானாள். இப்பொழுது உலகத்தில் அவனுடைய ஆஸ்தி இச்சிறுமிதான். ஆறு, ஏழு வருஷங்கள் எப்படியோ சிரமதசையில் அவன் வாழ்க்கை கழிந்தது. ஏதோ ஒரு வியாதியினால் அவனது இரண்டு கண்களும் அவிந்தன. இச்சிறுமிதான் அவனுக்கு ஊன்றுகோல். உதவி, உலகம், எல்லாம்.

ஃ ஃ ஃ

நான் மாடிமீதிருந்த வண்ணம் கற்பனையென்னும் விமானத்தில் பறந்துகொண்டிருந்தேன். 'இச்சிறுமியின் வாழ்க்கை இன்பமயமாக இருக்கக்கூடாதா?' என்று. நன்றாக இருட்டிவிட்டது. ஜனங்களின் கூட்டமும் சிறிது சிறிதாகக் குறையலாயிற்று. என்னுள்ளமும் வீட்டிற்குப்போகத்துடித்துக்கொண்டிருந்தது. பிச்சைக்காரர்களின் கூட்டமும் சிறிது சிறிதாகக் கலையலாயிற்று. கிழவனை ஊன்றுகோலின் உதவியினால் பிடித்து அழைத்துக்கொண்டு சிறு பெண்ணும் புறப்பட்டாள். நானும் உடன் கீழிறங்கி, அவர்களைப் பின்தொடர்ந்தேன். கிலேதார் தெரு திருப்பத்தில் வந்து நின்றுகொண்டு அன்றைய வரும்படியை எண்ணினர். 'தாத்தா. இன்னிக்கி மொத்தம் பதினேழு தம்பிடிதான் கிடைச்சிச்சு! எவ்வளவோ ஜனம் போச்சு! நம்மைப் பார்க்கவில்லை' என்றாள் அச்சிறுமி.

கிழவன், 'அவங்களெல்லாம் புண்ணியவானுங்க' என்றான்.

'உண்மையில் அவர்களெல்லோரும் புண்யவான்கள் தானா?' என்று என் மனத்தைக் கேட்டேன்.

அதற்குள் அவ்விருவரும் அங்கிருந்து நகரலாயினர். அன்று எங்கிருந்தோ, என்னுள்ளத்தில் இரக்கம் கசிந்தது. 'இப்பதினேழு தம்பிடியினால் இவ்விரு ஜீவன்களின் வயிறு எப்படி நிரம்பும்? நாளைக்கென்ன செய்வார்கள்? நாம் நாள் ஒன்றுக்கு எட்டணாவிற்கு மேல் ஊதாரிச்செலவு செய்கிறோமே!' என்று எண்ணினேன்! அவர்களது சிரம தசையையும் எனது ஊதாரித் தனத்தையும் நினைத்துப் பார்த்தபொழுது என் மனத்தை அரம் கொண்டுஅறுப்பதுபோலிருந்தது. இம்மாதிரி ஜனங்கள் ஒவ்வொரு நகரத்திலும் எத்தனை பேர் இருப்பார்களோ! இவர்களுக்கு எப்படி விமோசனம் கிட்டப்போகிறதோ? தெரியவில்லை.

அவர்கள் பின்னாலேயே நான் இன்னும் சிறிது தூரம் சென்றேன். ஒரு விளக்குக் கம்பத்தின் அடியில் சென்றதும் அப்பெண்ணைக் கூப்பிட்டேன். அப்பெண் வெகு நம்பிக்கையுடன் என்னருகில் வந்து கையை நீட்டினாள். நான் பையிலிருந்து காசை எடுத்து அவளது கையில் வைத்தேன். பெண் காசைப் பார்த்துப் பிரமித்தாள். சிறிது நேரம் என்னையும் சிறிது நேரம் காசையும் உற்றுப் பார்த்துவிட்டுக் கூறினாள். 'ஐயா இது காலணா இல்லிங்க. அரைரூபாயுங்க.'

நான் சிரித்தவண்ணம் 'தெரியும், நீ எடுத்துக்கோ; ஊதலும் அந்த ஓடும் ஓலைப்பாம்பும் வாங்கிக்க; பாக்கியைச் சோத்துக்கு வச்சுக்கோ' என்றேன்.

பெண் நாணித் தலைகுனிந்தாள். அருகில் நின்று எங்களது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த கிழவன். 'அப்பா! நீ ஆயுசோடே இருக்கணும். உன்னைப்போலவே உனக்கு ஒரு ஆம்பிளைப்பிள்ளை பிறக்கணும்' என்று ஆசீர்வதித்துவிட்டு நகர்ந்தான். அவனது கண்களில் ஆனந்தவெள்ளம் கரைபுரண்டோடியது.

ஃ ஃ ஃ

நான் வீட்டை அடைந்தேன். தாய் என் கையில் ஒரு தந்தியைக் கொடுத்தாள்.

'சாவித்திரிக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது' தாயும் குழந்தையும் சுகம். உடன் புறப்பட்டு வரவும்' இதுதான் தந்தியின் சாராம்சம்.



சின்னாத்தாவின் கதை

சாரி

"யப்பா.........சுந்து! கொஞ்சம் பாக்கு குடேன்."

"போடி. உனக்கு வேணுமென்கிறபோது இங்கே வந்து குழையடித்து எல்லாம் வாங்கிக் கொள்ளுகிறது; ஒரு நாள் எனக்காக நீ சீக்கிரம் வருகிறாயா? எண்ணெய்தேய்க்கிறாயா? அல்லது மஞ்சளாவது அரைத்துத் தருகிறாயா; நான் எதற்காக உனக்குப் பாக்குக் குடுக்க வேண்டும். போ, போ."

"யப்பா — யப்பா — அப்பிடிச்சொல்லிப்பிடாதே. இன்னக்கி வெள்ளிக்கிழமை யாச்சேன்னு, லா இருக்கையில் புறப்பட்டேன். ராவெல்லாம் மேலு திகுனு நெருப்பாக் காஞுசுது. என் மவ ஆப்பம் சுட்டுத்தாரேன், திண்ணுட்டுப்போ இன்னாள், நேரமாயிடிச்சு, அப்பா—நீ வேணுபாரு, அடுத்த கெடுத்தம் கோளி கூப்பிட வாரேனா இல்லையானு,"

"சுந்தா! நீ இன்னும் குளிக்கவில்லை? மணி என்ன தெரியுமா, இப்பொ?" இது அம்மாவின் குரல்.

"அம்மா, சின்னாத்தாவுக்குப் பாக்கு வேணுமாம்.

"பாத்தியப்பா—உன்னைக்கேட்டா நீ அம்மா கிட்ட சொல்லிப்பிட்டே. அடியாயே, அம்மா சண்டைபிடிப்பாங்களே—நான் போறேன்" என்று சின்னாத்தா ஓடிப்போய், பாத்திரம் விளக்க உட்கார்ந்துகொண்டாள்.

நான் அம்மாவுக்குத் தெரியாமல் அலமாரியிலிருந்து ஒரு பிடிபாக்கைக் கையில் எடுத்துக் கொண்டு, குளிக்கப்போகும் ஜாடையில் சின்னாத்தாவின் சமீபத்தில் அதைப் போட்டுவிட்டுப்போனேன்.

பாத்திரம் தேய்த்துக்கொண்டிருந்த சின்னாத்தா பாக்கையும், என்னையும் ஒரு முறை பார்த்தாள். மறுகணம் அவளுடைய பொக்கை வாய்ச்சிரிப்பு என்னை அவள் பக்கம் திரும்பும்படி செய்தது.

"யப்பா—சுந்து—நீ நல்லா இருக்கணும்."

— 2 —

வயது அறுபது இருக்கலாம். உலர்ந்த சிறியமேனி; தலையில் நரைத்த மயிர். முகவெட்டு. நல்ல அழகு. கண்ணில் எப்பொழுதும் குறும்புத்தனமும், நகைச்சுவையும் குறிக்கும் மினுமினுப்பு. இடையில் அம்மாவின் பழைய பட்டுச்சேலை. சின்னாத்தாவுக்கு என்ன குறைச்சல்?

எங்கள் வீட்டிற்கு வேலைக்கு வந்து இருபது வருஷமாகிறது. எங்களையெல்லாம் குழந்தைப்

பருவத்தில் வளர்ப்பதற்கு அம்மாவுக்கு மிக்க ஒத்தாசை புரிந்தவள்.

சற்றுக் கோபக்காரி. எந்த வேலையைச் சொன்னாலும் உடனே முணுமுணுப்புத்தான் அதற்குப் பதில்! ஆனால் எங்கம்மாவின் மெல் லிய குரல் "சின்னுத்தா" என்ன வேண்டியது தான், தாமதம்; பெட்டிப் பாம்பாக அடங்கிப் போவாள்.

மணிக் கணக்கில் பழங்கதை பேசுவதில் அவளுக்குச் சலிப்பே கிடையாது. ஆனால் அதையும், சமயமறிந்து, ஹாஸ்யச் சுவை பொருந்தச் சொல்வதில் கெட்டிக்காரி.

அம்மாவிடத்தில்மட்டும் மரியாதையாகத் தான் பேசுவாள். மற்ற ஒருவரிடமும் அவளுக்குப் பயம் இருந்ததாகத் தெரியவில்லை.

எங்கள் மனத்தைத் திறக்கும், திறவுகோல் அவளிடமிருந்தது. இச்சகமாகப் பேசியே எந்தக் காரியத்தையும் சாதித்துக்கொள்ளும் அவளுடைய வல்லமையை என்னவென்று சொல்வது? அம்மாவுக்குத் தெரிந்தும், தெரி யாமலும் அவள் கேட்டதையெல்லாம் நாங்கள் கொடுப்போம்.

பாவம், சின்னுத்தாவுக்குப் பாக்கும், வெற் றிலை புகையிலையும் இருந்தாற்போதும்; இந்த உலகில் வேறொன்றும் அவளுக்குத் தேவை யில்லை. வாயில் மருந்துக்குக்கூட ஒரு பல் கிடையாது. பாக்கையும் வெற்றிலையையும் அம்மிமீது வைத்துத் தட்டி வாயில் போட்டுக் கொள்ளுவாள். காலையில், அவள் வந்துவிட்ட தற்கு அடையாளமான இந்தச் சத்தம் கேட்டே நாங்கள் கண் விழிப்போம்!

காலெல்லாம் அதிக நடையினால் ஏற்பட்ட வெடிப்பு. அதற்கு மருந்து 'கிரிசெண்ணெ'! ஏன்? ஒருநாள் அவள் காலைப்பார்த்து மனம் இளகி, தம்பி கண்ணன், தன்னுடைய பணப் பையைத் திறந்து அப்படியே அவள் கையில் கொட்டி விடவில்லை? பயப்படாதீர்கள்! அப்படி ஒன்றும் அதிகமாகப் பணம் அதில் இருக்கவில்லை. கேவலம் எட்டணா, ஐந்து காசுதான்! கண்ணன் கோலி வாங்கும் நிமித் தம் சேர்த்திருந்த தனம்.

— 3 —

"அம்மா! சின்னுத்தாவை ஏன் திட்ட மாட்டேனென்கிறாய்? இன்னிக்கு மார்கழி மாதப் பிறப்பு, பரங்கிப்பூ வைக்கவேண்டும், சீக்கிரம் வா என்று நான் எத்தனைதரம் நேற்று அவளிடம் சொன்னேன். மணி 7½ ஆகிறது; இன்னும் காணோம்."

"சுந்தா, அவளைத் திட்ட மனம் வரவில்லையே. அவளுடைய கதையைக் கேட்டிருந்தால் உனக் கும் அப்படித்தானிருக்கும். பதினைந்து வய தில் புருஷனை இழந்தவள், பாவம்,........."

"போம்மா—இந்தக் கிழவிக்குப் புருஷன் போனதால் என்ன?"

"ஐயோ! இப்போதானே அவள் கிழவி; பேரன் பேத்தி எடுத்திருக்கிறாள். சிறிய வய தில் ஒரே பெண் குழந்தையை வைத்துக் கொண்டு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாள். தெரியுமா? சொல்லப்போனால், நம்ம வீட் டிற்கு வேலைக்கு வரும் வரையில் அவளுக்கு கஷ்டமேதான்........."

"பிறகு யோகம் அடித்தது சின்னுத்தாவுக்கு! தினம் உடுத்துவது பட்டுப் புடவை; இடுப்பில் பை நிறைய வெற்றிலை, பாக்கு. இரண்டு நேரமும் நல்ல சாப்பாடு. தலை வலித்தால் காபி...........போம்மா—நீ ரொம்ப இடங் கொடுக்கிறாய், அவளுக்கு."

"யப்பா...சுந்து! வாரியா கோலம்போட?" ஆச்சரியத்துடன் திரும்பினால் சின்னுத்தா பொக்கை வாயில் வெற்றிலை பாக்கு மென்று கொண்டு நிற்பாள். கண்களில் அதே குறும் புப் பார்வை. ஆனால் அவள் குரலில் எவ்வளவு அன்பு!

ஆமாம்.........அம்மாவைக் குற்றம் சாட்டி னேனே.

நான் ஏன் இப்பொழுது அவளைத் திட்டக் கூடாது. என்னவோ மனம்தான் வரவில்லை. அம்மா சொல்வதுபோல!

— 4 —

வீட்டிற்கு வருபவர்கள் இப்படிக் கிழவியை ஏன் வேலைக்கு வைத்திருக்கிறோமென்று நினைக் கக் கூடும். ஆனால் இரண்டு நாட்கள் எங்க ளுடன் தங்கினால் "சின்னுத்தாவின்றி ஓரணு வும் எங்கள் வீட்டில் அசையாது" என்பதைத் தெளிவாய்க் கண்டுகொள்ள முடியும்.

எவ்விதமான வேலையைச் சொன்னாலும், நாம் நினைத்ததைவிடப் பன் மடங்கு அழகுடன் அதைச் செய்து முடிக்கும் திறமை அவளுக்கு உண்டு.

துணி துவைத்தால் வண்ணான் சலவை தோற் றுப்போகும். அதுமட்டும் இல்லை; தனித்தனி யாக உலர்த்திப் பிரித்து, அவரவர்களுடைய இடத்தில் கொண்டுபோய் வைப்பாள்.

பாத்திரம் சுத்திசெய்தால் வெள்ளியைப் போல் மின்னும். வீடு பெருக்கினால், ஒரு வாரத்திற்கு மீண்டும் பெருக்கவேண்டிய அவ சியமிராது; அவ்வளவு சுத்தமாக இருக்கும். இவளில்லாமல் எங்கள் வீட்டுவேலை எப்படித் தான் நடைபெறும்?

அம்மா சொல்வதுபோல அவளுக்கு "வாயும் வாய்; கையும் கை"தான். ஆனால் தம்பி கண் ணன் மாத்திரம் "வாயும் பொக்கைவாய்; கையும் கோணக்கை" என்று அவளை வம்புக்கு இழுப்பான்.

எங்களின் சில்லறை நோய்க்கெல்லாம் அவள் வைத்தியர்—வயிறு கெட்டுப்போனால் கருக்கல் வைத்துக்கொடுப்பாள்; முகப் பருக்களுக்கு 'துண்ணூற்றுப் பச்சை' (திருநீற்றுப் பச்சை) கொணர்ந்து, சாறு தடவுவாள்.

வீட்டில் எவர்க்கேனும் நோய் வந்துவிட்டாலோ இரவில் தூங்கவே மாட்டாள். எந்த நேரத்தில் கண்விழித்துப் பார்த்தாலும், சின்னுத்தா படுக்கையின் அருகில் உட்கார்ந்து, வெற்றிலைபாக்கு மென்றுகொண்டிருப்பதைக் காணலாம். இவளை என்ன செய்கிறது?

சில நாட்களில் ஜோசியம் சொல்ல ஆரம்பித்து விடுவாள், "யப்பா......இன்னிக்கிப் பல்லி கிழக்கு மூலையில் சொல்லிச்சு—நம்ம வூட்டுக்கு யாரோ வாராங்க" என்பாள். அது சரியாகவே இருக்கும்!

— 5 —

அம்மாவின் அந்தரங்க காரியதரிசி என்று நாங்கள் அவளைக் கேலிசெய்வோம். இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இருபது வருஷகாலம் ஓர் ஆத்மாவுடன் தினந்தோறும் பழகி, தன் சுக துக்கம், லாப நஷ்டங்களைப் பேசி, அவளுடைய அன்பிற்கு முற்றிலும் பாத்திரமான பிறகு, வேலைக்காரி என்று அவளை அம்மா எவ்விதம் நினைப்பாள்?

தன் உள்ளம் உணர்ந்த தோழி என்றும், எக்காலத்திலோ பறிகொடுத்த தன் அன்னையே இந்த உருவில் தன்னுடன் நேசமுடன் வசிக்கிறாள் என்றும் சின்னுத்தாவைப்பற்றி நினைத்துக்கொண்டால் அம்மாவை யார் குறை சொல்ல முடியும்?

எங்களது பரிஹாஸங்களும் மேலுக்குத்தான். மனத்தின் உள் அந்தரங்கத்தில், அம்மாவுக்கு அடுத்தபடியாக, அவளைக் கௌரவிப்பதில் நாங்கள் சற்றும் பின்வாங்கினதில்லை.

இந்த அபூர்வப் பிறவியின் வரலாறு தான் என்ன? அதைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு ஆவலாக இருக்கிறதல்லவா? ஆனால் அவள் கதையோ மிக மிகப் பெரிது. அதின் ஒரு சில கட்டங்களை மட்டும் இங்கே ஆராய்வோம்.

அல்லயன்ஸ் அரிய வெளியீடுகள்

தமிழ் நாட்டுச் சிறுகதைகள்

இதுவரை 16 தொகுதிகள் வெளிவந்துள்ளன.
17-ஆம் தொகுதி விரைவில் வெளிவருகிறது.

ஒவ்வொரு தொகுதியின் விலை ரூ. 2—0—0

கதைக்கோவை

முதல் தொகுதி 40—எழுத்தாளரின் சிறுகதைகள்—40 அச்சில்
இரண்டாம் தொகுதி 50—எழுத்தாளரின் சிறுகதைகள்—50
ஆண்டிக் காகிதப் பதிப்பு .... ரூ. 7—0—0
மூன்றாம் தொகுதி 60 எழுத்தாளரின் சிறுகதைகள்-60 7—8—0
நான்காம் தொகுதி 75—எழுத்தாளரின் சிறுகதைகள் அச்சில்

விலை, எழுத்தாளரின் பெயர்கள்முதலிய விவரங்களுக்கும் புத்தக விலைப்பட்டிக்கும் எழுதினால் உடனே அனுப்பப்படும்.

எங்கள் வெளியீடுகள் யாவும் தம்பகோணம் பிரபல புத்தக வியாபாரிகளிடம் கிடைக்கும். **(மஹாமகம் 0—6—0.)**

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் சென்னை.

— 6 —

கரம்பக்குடிக்கு அடுத்தாப்போல் இலை விடுதி, பிலா விடுதி என்கிற சிறு கிராமங்களை நமக்கெல்லாம் தெரியாது. இதில் இலை விடுதியில் பிறந்தவள், சின்னாத்தா.

அந்த ஊரில் தெருக்களே கிடையாது. அங்கங்கே கேணிகளும், கொல்லையும், குடிசையும் அவரவர் இருப்பிடங்களைக் குறிக்கும். குடிசைகளை ஒட்டி நஞ்சை நிலங்கள். அவைகளுக்குத் தண்ணீர், குளங்களிலிருந்து பாயவேண்டும். இதன் பொருட்டு, வாணியங் குளம், குருந்தக் குளம், பண்ணைப் பள்ளம், பெரிய குளம், இப்படி அனேக அழகிய குளங்கள் அங்கேயுண்டு.

குடிக்கும் தண்ணீர் கொல்லைக் கிணற்றிலிருந்து எடுத்துக்கொள்ளுவார்கள். சின்னாத்தாவின் வருணனையில் "கேணித்தண்ணி எளனி மாதிரி இனிக்கும்"

கள்ளர், இடையர், நாய்க்கர் இப்படி மூன்று ஜாதி ஜனங்கள் அந்த ஊரில் உண்டு. அவர்கள், தங்களுக்கிடையில் சண்டை சச்சரவில்லாமல், ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்தனர்.

இதில் ரங்கக்கோனான் ஊருக்குப் பெரியவன். நிலபுலம், வண்டி, மாடுகள் கொல்லை இவையெல்லாம் அவனுக்கு உண்டு. இவனுடைய ஓட்டு வீட்டை யொட்டியிருந்த சிறிய வீட்டில், வைரா நாயக்கனுக்கும், கருப்பாயிக்கும், பிறந்த கடைக்குட்டிப் பெண், சின்னாத்தா.

கரும்பாயி என்கிற அக்காவும், வேலுச்சாமி ரங்கசாமி என்ற இரு அண்ணன்மாரும் இவளுக்கு உண்டு.

வைரா நாயக்கனுக்கு சின்னாத்தாவின்மேல் உயிர். பத்துப் பிராயம் வரையில் அவளைத் தோளின்மேல் வைத்துக்கொண்டே, களத்திலும் கொல்லையிலும் வேலை செய்வான். அன்று முதலே இஷ்டம்போலத் திரியவும், வேலை செய்யவும் அதிகாரம் பெற்றவள் சின்னாத்தா!

"அப்பொ எல்லாம் நான் சில்லுப்போலே இருப்பேன் அப்பா! தலைமயிரைத் தூக்கி முடியவே மாட்டேன். இரவு படுக்கத்தான் வூட்டுக்கு வருவேன். எங்க ஐயா என்னை ஒரு பேச்சு சொல்லமாட்டாரு." என்று சின்னாத்தா பெருமையாகச் சொல்லிக்கொள்ளுவாள். அதை நம்புவது கஷ்டமில்லை.

இலை விடுதி ஒரு காட்டுப்பூமி. ஊருக்குள் நுழைந்தால், ஜில்லென்ற சோலைக்குள் புகுவதுபோலத் தோன்றும். இயற்கைத் தேவி, தன் பூர்ண செல்வத்தையும் அந்தச் சிறு கிராமத்திற்கு அளித்திருந்தாள். இதன் நடுவில் வளர்ந்த அந்தக் காட்டுப்பெண்ணை, அவளுடைய எழிலுக்கும், திறமைக்கும், ஆனந்தம் பொங்கி வழிந்த அவளுடைய சுவபாவத்திற்கும், அந்த ஊரார் நேசித்தனர். என்றால் அதில் என்ன விந்தை? கிராமத்து எளிய ஜனங்களின் கண்மணியாகவிளங்கியவள்சின்னாத்தா.

— 7 —

பத்துப் பிராயத்தில் தாய் மாமனாகிய பொன்னுநாயக்கன் சின்னாத்தாவிற்குப் பரிசம் போட வந்தான். அவள் தமக்கை கரும்பாயி 15 வயதில், மணமாகாமல், வீட்டில் இருந்தும் அவளைத்தேடி ஒருவரும் வரவில்லை.

இதையே சாக்காக வைத்துக்கொண்டு, தன் மாமனைக்கண்ணெடுத்தும் பார்க்க, சின்னாத்தா மறுத்துவிட்டாள். வந்தவனுக்கு வேறுவழி இல்லை. முறைமைக்காரன் ஆகையால், கரும்பாயியைக் கட்டிக்கொள்வதாகப் பரிசம் போட்டுவிட்டுப்போனான்.

சின்னாத்தா ஏற்கனவே தனக்கு வரவேண்டிய கணவனை மனதில் வரித்திருந்தாள். அவளுடைய நேரான, தூய்மை உள்ளம் ஒளிவு, மறைவு என்பதை வெறுத்தது.

தன் தந்தையிடம் சென்று இலந்தைப்பட்டியில் உள்ள ராமா நாயக்கன் மகன் கஸ்தூரிக்குத் தன்னை மணம் செய்விக்கும்படி கேட்டுக்கொண்டாள். அதே பிரகாரம் சகோதரிகள் இருவருக்கும் அடுத்த ஆடி மாதத்தில் மணம் முடிந்தது.

"இதுக்கப்புறம் ஏழு வருசம் கழிச்சுத்தான் நான் ஆள் ஆனேன் அப்பா! என்னு கேளு. என்னைக் கட்டிக் கொடுத்தபோது எனக்குப் பல் விளுந்து மொளைக்கவில்லெ" என்பாள் சின்னாத்தா.

"நான் புருசன் வீடு வந்தப்போ அவருக்குக் கோட்டையிலே கேனல் துரை வீட்டுக் காவல் வேலை. நானும் என் மாமியாளும் இங்கே சோறாக்கிப்போட வந்தோம். இலந்தைப் பட்டியில் என் மாமனாருக்கு, மச்சினன், ஒப்படியா எல்லோரும் இருந்தாங்க. இங்கே வாரப்போ கடலை, சோளம், கம்பு கொண்டு வருவாங்க; கோட்டையிலே வித்துப் பணம் கொண்டுவருவாங்க" என்றும் சொல்வாள்.

— 8 —

இவள் கோட்டைக்கு வந்தபொழுது பதினைந்து வயதிருக்கும் என்று நினைக்கிறேன். சில நாளைக்கெல்லாம் கஸ்தூரிக்கு ரயில்வே இஞ்சினியரிடம் 'காங்கி' ஆளாக ஒரு நல்ல வேலை கிடைத்தது. அது முதல் இஞ்சினியர் பங்களாவில் காவல் வேலையும் செய்துகொண்டு பின்புறம் குடிசையில் வசித்து வந்தார்கள்.

கோளி கூவையில் கஸ்தூரி வேலைக்குப் புறப்பட்டுப்போனால், இரவு 7-மணிக்குத் தான் திரும்பிவருவான். போகுமுன்பு ஆப்பம் சுட்டுக் கொடுத்து, சின்னாத்தா சோறும் சமைத்துக்கட்டிக் கொடுப்பாள். இரவில் அவன் திரும்புமுன் அவனுடைய ஸ்நானத்

திற்காக வெந்நீர் போட்டுவைத்துச் சுடு சோறும் ஆக்கித் தயாராக இருப்பாள் சின்னாத்தா.

தானே இஷ்டப்பட்டு வரித்த நாயகனை மனதிலும் வெளிப்படையாகவும் பூஜித்தாள். கஸ்தூரி வீட்டில் இருக்கும் சமயம் சின்னாத்தாவின் சிரிப்பும் கலகலப்பும் மின்னல் மாதிரியிருக்கும். விதி தங்களை இவ்வுலகில் அதிக நாள் இன்புற விட்டுவைக்காது என்பதை அறிந்தே தான், இந்தப் பேதைப் பெண் அந்தக் குறுகிய காலத்தை அவ்வளவு ஆனந்த மயமாக்கிக் கொண்டிருக்க வேண்டும்!

கோட்டைக்கு வந்த மறு வருஷத்தில் சின்னாத்தா கருத்தரித்தாள்.

இலைவிடுதியிலிருந்து அண்ணன் ரங்கசாமி வந்து இவளை ஊருக்கு அழைத்துப் போனான். கரம்பக்குடியிலிருந்து கால் நடையாகப் பத்து மைல் பிரயாணம் செய்து ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

இது நடந்தது ஆனிமாதம். ஆடிமாதக் கடைசியில் அவளுடைய மகள் ரங்கம்மாவும் பிறந்தாள். அதன் பிறகு சின்னாத்தாவின் மனம் அங்கே இல்லவேயில்லை. கஸ்தூரியின் நினைவாகவே எப்பொழுதும் இருப்பாள்.

“குழந்தையை நீ வளர்த்துக்கொள். நான் கோட்டைக்குப் போகிறேன்” என்று அடிக்கடி தன் தாயிடம் சொல்லுவாள். பால் சாப்பிடும்போது தவிர, மற்ற நேரமெல்லாம் குழந்தையைச் சீராட்டித் தாலாட்டி வளர்த்தது பாட்டி கருப்பாயிதான்!

— 9 —

ஐப்பசி மாதத்தில் தன் மனைவி குழந்தையைப் பார்க்கும் பொருட்டு, கஸ்தூரி இலைவிடுதிக்கு வந்தான். ஒரே நாள்தான் அவனுக்கு லீவு கிடைத்திருந்தது.

கோட்டைக்குத் திரும்பிப் போகும் சமயம் தன் மனைவியிடம் “சின்னு! கார்த்திகைமாதம் 10 தேதிக்கு இங்கே வந்து உன்னையும், கூட்டிப்போறேன்” என்று சொல்லிப் பிரயாணமானான்.

அதன் பின், சின்னாத்தா உண்மையாகவே நாட்களை எண்ண ஆரம்பித்தாள். கார்த்திகை மாதம் பிறந்ததுமே மூட்டை முடிச்செல்லாம் கட்டித் தயாராக வைத்துவிட்டாள்.

இப்பொழுதுகூட குழந்தை ரங்கம்மாவிடம் அவள் மனது லயிக்கவேயில்லை. ஏனோ கோட்டைக்கு ஓடிப்போய்க் கஸ்தூரியை அடைய வேண்டுமென்று மனம் பறந்தது. இந்த அழும் குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் எப்படி வளர்ப்பது என்று தன்தாயை அடிக்கொருமுறை கேட்பாள்.

பத்தாம் தேதியும் வந்தது. அன்று காலை முதல் ஒரே துடியாகத் துடித்துக் கொண்டிருந்த சின்னாத்தா, ராமக் கோனார் வீட்டுக் கொல்லையில் போய்நின்றுகொண்டு, தன் கணவன் வரும் வழிபார்த்துக்கொண்டிருந்தாள்.

பார்த்துப் பார்த்துக் கண் சலித்துப் போயிற்று. இரவும் வந்துவிட்டது. ஆனால் கஸ்தூரி மட்டும் வரவில்லை. என்ன செய்கிறது?

களத்துக்குப் போயிருந்த அவள் தகப்பன் திரும்பிவந்தான். “சின்னாயி! இன்னிக்கு சகுனம் சரியாயில்லையே” என்று மகளைப் பார்த்துச் சொன்னான்.

அன்றிரவெல்லாம் நித்திரை யில்லாமல் தவித்த பிறகு, மறு நாள் வந்தது; ஆனால் அன்றும் மருமகனைக் காணோம். இப்படியாகக் கார்த்திகைமாதம் பதினைந்து தேதி வரையில் கழிந்தது.

அதற்குமேல் சின்னாத்தாவுக்குப் பொறுக்க முடியவில்லை. “ஆயா, நாளைக்கு நான் புறப்பட்டுக் கோட்டைக்குப் போறேன். பெரிய அண்ணனை என்கூட வரச்சொல்லு” என்று தன் தாயிடம் தீர்மானமாகச் சொல்லிவிட்டாள்.

விதியும் மறுநாள் நடக்க இருப்பதை நினைத்துப் பரிஹஸித்தது.

நரையை ஒழியுங்கள்!

நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலைன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ.,

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

கேடரைன்

மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2ப

ஏஜண்ட்ஸ்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பார் ரோட், மதராஸ்.

"அன்னிக்கி ராவு கெட்ட கெனு கண்டு முழிச்சேன். திண்ணையிலே யாரோ ரெங்கய்யா வுடன் உரக்கப் பேசுவது கேட்டது. "மெள்ளப் பேசு, சின்னுயி காதிலே விளப்போவது" என்று எங்க ஐயா எச்சரித்தும் என்காதில் விழுந்தது. உடனே ஒரேபாச்சலில் எளுந்தேன். உடம்பெல்லாம் வெட வெடவென்னு நடுங்கிச்சு. ஐயோன்னு ஒரு கூச்சல் போட்டேன். வாசல்லே இருந்த ஐயாவும், எங்க அக்கா புருசனும் உள்ளே ஓடியாந்தாங்க. ஐயையோ! சின்னுயி உன் விதி இப்படியா முடிஞ்சுது', என்று கட்டிக்கொண்டு கத்தினு"

ஆம். சின்னுத்தாவின் இனிய வாழ்க்கை அன்றுடன் முடிவுபெற்றது.

அக்கா புருஷன் 10ஆம் தேதி காலையில் திருவரம்பூர் போயிருந்தானும்; ரயில்வேஸ்டேஷனில் ஒரே கூட்டமாய் இருந்தது. கிட்டப்போய் விசாரித்ததில் இஞ்சினியரின் 'டிராலி' வேகமாய்ச் சென்றுகொண்டிருந்த சமயம், அதிலிருந்து கீழே குதித்த 'காங்கி' ஆள் ஒருவன் காயம்பட்டு, அங்கே கிடத்தப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

அப்பப்பா—இனி சொல்வதற்கு என்ன இருக்கிறது. காயம்பட்டு உயிர் துறந்த ஆள் சின்னுத்தாவின் கணவன் கஸ்தூரி நாயக்கன் தான்.

பிரேதத்தைக் கோட்டையில் ஆசுபத்திரிக்குக் கொண்டுபோய், விசாரணை முடிந்ததும், எடுத்து அடக்கம் செய்து, பிறகு ஊருக்குத் திரும்பி வந்தான், அவனுடைய சகலை.

— 11 —

இதற்குமுன் கோட்டையில் என்ன நடந்தது? அந்தப் பரிதாபமான கட்டத்திலும் உள் நுழைந்து பார்ப்போம். இல்லாவிட்டால் ஏழைகள் அனுபவிக்கும் சோகம், ஏமாற்றம் இவைகளின் எல்லையைத்தான் நாம் காண்பதெப்படி?

கார்த்திகை 10 ஆம் தேதி காலையில் இரண்டு நாட்கள் லீவு பெற்றுக்கொண்டு, இலை விடுதிக்குப் புறப்பட ஆயத்தமாக இருந்தான், கஸ்தூரி. பிரயாணத்திற்கு முன்பு சோறு தின்பதற்கு இலையில் உட்கார்ந்த சமயம், பங்களாவின் காவல்காரன் ஓடிவந்து துரை அவசரமாக அழைப்பதாகச் சொன்னுன்.

கஸ்தூரி, கையை உதறிவிட்டு, எழுந்து பங்களாவிற்கு ஓடினுன். அன்றைய தினம் முக்கிய மேற்பார்வை ஒன்று நடத்தவேண்டியிருந்ததால், 'டிராலி'யில் போவதற்குக் கஸ்தூரியும் தன்னுடன் வரவேண்டுமென்று துரை உத்தரவிட்டார்.

இதற்கு மறுபேச்சும் உண்டா? 'காங்கி' ஆளின் ஏற்பாடுகளெல்லாம் இதனுல் கெட்டுப்போயிற்றென்றுல், துரைக்கு ஏதாவது நஷ்டமா? அல்லது கஸ்தூரியின் மனம் ஏமாற்றத்தினுல் துடித்தது என்பதுதான் துரைக்குத் தெரியுமா? லீவு இல்லை யென்றுல் இல்லை தானே?

கஸ்தூரி சோர்ந்த மனத்துடன் வீட்டுக்குத் திரும்பி, அவசரமாகச் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினுன். அவனுடைய தாய் மட்டும், "அப்பா, சோறு திங்காமேயா போறே" என்று கேட்டு, சாப்பாட்டைத் துணியில் முடிந்து அவன் கையில் கொடுத்தாள்.

'டிராலி'யில் பத்துமைல் பிரயாணம் செய்ததும், திருவரம்பூரில் தங்கினுர்கள். துரை தம்முடைய காலை ஆகாரத்தை அங்கே முடித்துக் கொண்டார். மறுபடியும் 'டிராலி'யில் ஏறிக் கொண்டு புறப்படும் தருணம், தம்முடைய தொப்பி ஸ்டேஷன் அறையில் தங்கிவிட்டதைக் கவனித்துக் கூவினுர்.

மறு க்ஷணத்தில் கஸ்தூரி வேகமாகக் கீழே குதித்தான். அவ்வளவுதான்! அதே க்ஷணத்தில் 'டிராலி'யும் நகர ஆரம்பித்திருந்தபடியால், கஸ்தூரி பூமியில் கொஞ்ச தூரத்திற் போய்ச் சிதறி விழுந்தான். மண்டையில் பலத்த காயம்; ரத்தம் பெருகி ஆருக ஓடிற்று.

என்ன நேர்ந்ததென்று நிதானிப்பதற்குக் கூட அவகாசமில்லை; ஏழை கஸ்தூரியின் உயிர் பறந்து போய்விட்டது. கூட இருந்த இன்னெரு ஆள், அவன் சிரஸைத் தன் மடியில் கிடத்தி, 'உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டான்.

கஸ்தூரிக்குப் பேச முடியவில்லை. மெதுவாக உதடுகள் அசைந்தன. "சின்னு" என்று ஒருதரம் சொல்லிக் கண்ணை மூடிக்கொண்டான்.

இதையெல்லாம் கண்டு, கேலி செய்வது போல், கஸ்தூரியின் சோற்று மூட்டை அங்கே ஒரு பக்கத்தில் கவனிப்பாரின்றிக் கிடந்தது.

— 12 —

இத்துடன் சின்னுத்தாவின் வாழ்க்கையில் ஒரு முற்றுப்புள்ளி போட்டாயிற்று. நாட்களும், வருடங்களும் என்னவோ சென்று கொண்டேதானிருந்தன; ஆம், இந்த அபாக்கியவதிக்கும் கூடத்தான்!

கணவனின் அடையாளமான, இளங்குழந்தையைத் தன் இருதயத்துடன் சேர்த்துப் பிணைத்துக்கொண்டாள். நேரம் போவதே நினைப்பில்லாமல், குழந்தையை மார்பில் அணைத்துப் பைத்தியக்காரி போல இலை விடுதிக் காட்டுக்குள் போய்க் கிடப்பாள், அவள்

துயரத்தைக் கண்டு மனமிரங்காதவரே கிடையாது.

அவளை எப்படிக் கோட்டைக்கு அழைத்து வந்தார்கள்? நடைப்பிணமாக வந்து சேர்ந்தாள். துரை, ஆள்மேல் ஆள் அனுப்பி அவளை வரவழைத்து, பங்களாவின் காவல் வேலையை அவளிடம் ஒப்புவித்து, பின் பக்கம் குடிசையில் நிரந்தரமாய்க் குடியிருக்க அனுமதியும் தந்தார்.

ஆபீசில் சிபார்சு செய்து, கஸ்தூரியின் அகால மரணத்தினால் குடும்பத்திற்கு நேர்ந்த நஷ்டத்திற்கு ஈடாக ரூபாய் 85 சின்னாத்தாளுக்கு வாங்கிக் கொடுத்தார்.

ஆம், 85 வெள்ளி ரூபாய்கள் போதாதா சின்னாத்தாவுக்கு? ஒரு மனிதனின் உயிர் அதைவிடவா மதிப்புள்ளதாக இருக்கமுடியும்? அதுவும் 'காங்கி' ஆள் கஸ்தூரியின் உயிர்?

தன் வாழ்க்கை, அதன் இன்பம், உயிரினும் பெரிதாக மதித்த கணவன் இவற்றையெல்லாம் ஒரேயடியாக இழந்த சின்னாத்தாவும், அவைகளுக்கு ஈடாக, இந்த 85 ரூபாய்களைப் பெற்றுக்கொண்டாள்.

இன்றைக்கும் அவளை, "சின்னாத்தா, நிஜமாகவா துரை உனக்கு 85 ரூபாய் வாங்கிக் கொடுத்தார்?" என்று கேட்டால் உடனே உற்சாகத்துடன் கிளம்பி விடுவாள்.

"ஆமப்பா. நெசந்தாங்கிறேன்; துரைமாரெல்லாம் மிஷ்டங்கி கூடி ஒரு நா என்னைக் கூட்டியாரச் சொன்னாங்க. காவக்கார கூளா நாய்க்கன் என்னை அழைத்துப் போனான். உன் புருஷன் பேரு என்னன்னு துரை என்னை இங்கிலீசிலே கேட்டாரு."

"ஆனால் நீதான் புருஷன் பெயரைச் சொல்ல மாட்டாயே?"

"ஆமப்பா—உடனே மஞ்ச நெனப்பு வந்தது. கீழே ஓரச்சி முகத்திலே தடவுறமாதிரி சாடை பண்ணினேன். "ஓ. ஓ. தெரியும், மஞ்ச எண்ணாரு தொரை. இல்லிங்கனு தலையை ஆட்டி, வாசமாக இருக்கும்னு சொன்னேன். அங்கேயிருந்த ஒரு அய்யரு பேரைக்கண்டு கிட்டு, 'அதுவாண்ணாரு—'ஆமா'ன்னு தலை ஆட்டினேன். பிறகு துரையிடம் இங்கிலிசிலே சொன்னாரு"—"அப்புறம் என்ன செய்தாய், சொல்லு" என்போம்.

மேசைமேலே இருந்த பணத்தை எண்ணு என்று சொன்னாரு. நான் 20, 20 ஆக நாலு அடுக்கு வச்சேன். அப்புறம் ரூ. 4—15—0 இருந்தது. எம்பத்திநாலு ரூபாயும் ஏழரைப் பணமும் இருக்குங்க என்று சொன்னேன். உடனே துரை சிரிச்சுப்புட்டாரு—"பேஷ் வெரிநைஷ், உன் பணத்தை நான் எடுத்துக்கலை—ஒரு அணா ஷ்டாம்புக்கு போச்சு" என்று சொன்னாரு.

பணத்தைத் தலைப்பில் முடிந்துகொண்டு, குழந்தையை தோளிலே போட்டுக்கொண்டு, துரைக்கு சலாம் சொல்லிப்புட்டு வந்திட்டேன்" என்று கதையை முடிப்பாள் சின்னாத்தா.

13

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவள் குழந்தையை வளர்த்ததும், கட்டிக்கொடுத்ததும், கண்டிச் சீமைக்குப்போய்ப் பிழைத்ததும் பெரிய, பெரிய கதை. இன்னொரு முறை அவகாசமிருந்தால் அதையெல்லாம் சொல்லுகிறேன்.

சின்னாத்தாவின் மனதில் அன்றைக்கிருந்த ஆழ்ந்த காயம் இன்று இல்லை; ஆறிப்போயிற்றென்றே சொல்லலாம். அதன் தழும்பு மட்டும் ஆழமாகவே உருவப்பட்டிருக்கிறதென்பதைச் சில சமயம் அவளது சிரிப்பிற்கும், சம்பாஷணைக்குமிடையே நாம் கண்டுகொள்ளலாம். ஆனால் யாவற்றையும் மறைத்துக்கொள்ளும் சாமர்த்தியம் அவளுக்கு உண்டு.

கண்களில் என்றென்றும் மாறாத ஒரு ஏக்கம்தேங்கி அங்கே குடிகொண்டிருக்கும். அருகில் உள்ளவரிடம் அன்புப் பிச்சைக்காக கெஞ்சுவதுபோன்ற ஒரு பார்வை. அவளைப் புறக்கணிக்க யாருக்குத்தான் மனம் வரும்?

எப்பொழுதாவது ஒருநாள் பாத்திரங்களை விளக்கிய வண்ணம் தனக்குள் பிலாக்கணம் பாடத் துவக்கிவிடுவாள்; மெதுவான குரலில் தான் இருக்கும். ஆனாலும் கேட்பவர் நெஞ்சத்தை அள்ளிப்பிடுங்கும்.

"செல்லப்பிறப் பிழந்தேன்
சிரிடும் தோப்பனிழந்தேன். ஏன் ஐயா,
உன்னையுமிழந்து நான்
உயிருடன் வாழுவேனா—"

மகாமக பலன்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

புயல் ராமு ஏறாதமேடையில்லை; எழுதாத இதழில்லை. அவன் குரல் அதிராத ஊர் இல்லை. காலைக் காப்பியுடன் ஹிந்துப்பத்திரிகையைக் கரைத்துக் குடித்துக் கண்டசுத்தி பண்ணிக்கொண்டால், வயிறு கிண்டுமட்டும் வாய் வீரிட்டுக் கொண்டிருக்கும். பேச்செல்லாம் தேசம் சீர்திருத்தம், ஊர்த்திருத்தமாகவேயிருக்கும். சொந்த அந்தரங்கம் எதுவும் வெளிவராது;

நண்பர் "உன் சொந்த ஊர், அப்பா அம்மா பெயர் என்ன; கலியாணமானதா? குழந்தை குட்டி உண்டா?" என்றெல்லாம் கேட்டால் புயல் உங்களைச் சுற்றியடித்துவிடும் கவனம். அரசியற்புயல் வேதாந்த இடியாக மாறி மண்டை இடியைப் பொழிந்தாலும் பொழியும்

புயல்சீனு பொழுது போக்கிற்குச் சரியான ஆள்—ஆனால் நான் மட்டும் அவனுடைய வாய்ப்புயலை எப்படியோ தாண்டி, அந்தரங்கக் கோட்டைக்குள் நுழைய முயன்றேன். அதற்குக்காரணம் "கும்பகோணம்."

2

கும்பகோணம் என்றால் எனக்குப் பெருமதிப்புண்டு; அது மேதாவிகளின் பண்ணை; ஆரிய கலாபீடம்; என்றெல்லாம் நான் போற்றுவதுண்டு; எல்லா ஊர்களுக்கும் தலபுராணம் பாடும் புயல்சீனுவின் முகம் கும்பகோணம் என்றால், அஷ்டகோணமாகும்; "கும்பகோணமாம் கொசுக்கடியாம்; கும்பகோணம் மூளை நாகேசையன் வேலை "என்பான். எப்படியோ அவனையும் சரிபண்ணி மகாமகத்திற்கு அழைத்துவந்துவிட்டோம்.

3

"வராதே! என்று ரயில்காரன் படம்போட்டு மிரட்டுகிறான்—யார் கேட்கிறார்கள்? கால் வண்டியைத் தட்டிவிட்டு இலட்சக்கணக்கான ஜனங்கள் கும்பகோணக் குளத்தில் முழுக, சமுத்திரம்போல் நிறைந்துவிட்டனர். "சிவா, ராம, கோவிந்தா, ஹரிசங்கரா" என்றொரு புறம் திவ்ய நாமங்கள் கிளம்புகின்றன; "ஓய், ஏங்காணும், டலே, டேய், சீ, சு, உஸ், புஸ்—" என்று ஒருவருடன் ஒருவர் முட்டி மோதி இடித்துத் தள்ளி முன்செல்லும் போட்டிகள் எங்கும் நடக்கின்றன. தொண்டர்கள் தொண்டையும் கட்டிப்போனது; மூங்கில் தடியும் முறிந்தது—கூட்டத்தைச் சமாளிக்கமுடியவில்லை. நாங்கள் எப்படியோ முண்டி முரண்டி முன்சென்று முழுகி, மகாமகக்குளத்தில் பொங்கும் புண்ணியத்தை அள்ளிக்கொண்டு திரும்பினோம்.

அப்போது ஜனசமுத்திரம் பொங்கிக் கொந்தளித்து, அலைமோதிப்புரண்டது! அந்த அலைச் சுழலில் அகப்பட்டுத்தவித்தவர்களைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது! இப்படிக் கஷ்டப்பட்டுப் புண்ணியந்தேடுவோருக்குத் துணை செய்யாமல் நாங்கள் மட்டும் குளித்துவந்தது எங்களுக்குச் சுருக்கென்றது. புயல் ராமு காப்பியை மறந்தாலும் பரோபகாரத்தை மறக்கமாட்டான். மகாமக கூட்டத்தில் வாயால் பரோபகாரம் செய்ய வகையில்லை; நாங்கள் எல்லாருமே சாரணப் பயிற்சிபெற்ற தேசத்தொண்டர்; ஆதலால் கோயில் வாசலிலிருந்து கூட்டத்தை ஒழுங்குசெய்யத் தொடங்கி, அங்குமிங்கும் கைத்தடியை வீசிப் பாதையுண்டாக்கினோம். எங்களையும் மீறி ஒரு கும்பல் மேலேவிழுந்தது. பாறையில் மோதும் பேயலைபோலச் சீனு முதுகில் ஒரு கூட்டம் கவிழ்ந்தது. அக்கூட்டத்திற்கிடையே "ஐயோ பெருமாளே! ஐயையோ ஸ்ரீநிவாசா!" என்றொரு கிழட்டுக்குரல் கேட்டது. நாங்கள் அருகேசென்றோம். ஒரு முதிய கிழவி அங்கே தத்தளித்தாள். பழுத்த உடல்; உயிர்க்கிளை

யிலிருந்து உதிரப்போகிறது; மகாமகப் புண்ணியம் தேடுமுன் இப்பழத்தைக் கூட்டம் கீழே தள்ளி இதோ நசுக்கப்போகிறது—நாங்கள் பாய்ந்துவந்து, பாட்டியை அத்தாயமாகத் தூக்கினோம்.

அந்தச்சமயம் "ஐயோ பாட்டீ" என்ற குரல் கேட்டது—ஒரு இளமங்கைப்பெண் எப்படியோ மகாமக முழுக்கைப் போட்டுவிட்டு, ஒரு செம்புடன் ஓடிவந்தாள்; செம்பிலிருந்த மகாமக தீர்த்தத்தைப் பாட்டி, முகத்தில் தெளித்தாள்; வாயில் சிறிது ஊற்றினாள். "பேசாமல் வீட்டிலிருந்தால் இந்த விபத்தில்லையே—ஐயோ பாட்டி நீ பிழைப்பாயா"— என்று அழுதாள். நாங்கள் "அம்மா அழாதே; உன் பாட்டியை நாங்கள் வீட்டிற்குத் தூக்கிவந்து வேண்டியதைச் செய்கிறோம்—" என்றோம்; பெண் முன்சென்றாள்; நாங்கள் பாட்டியுடன் அவளைப் பின்பற்றினோம். புயல் சீனுமட்டும் ஏனோ மந்திரவாதியைக்கண்ட நாகம்போல் அஞ்சி நெளிந்தான்! அவன் வாய் புயல் வீசவில்லை—உள்ளேதான் புயல்; அவன் உதட்டில் ஓர் இரகசிய முத்திரை வைத்திருந்தது.

4

சந்துகளிற் புகுந்து, பாட்டிவீட்டில் நுழைந்தோம்; இளம் பெண் உடனே பாய்விரித்துத் தன் பாட்டியை அருமையாகத் தாங்கிப் படுக்க வைத்தாள்; உடனே "அம்மா கஞ்சிபோடு; நாங்கள் காயங் கட்டுகிறோம்" என்றோம். பெண் சிட்டாய்ப் பறந்து வேலைசெய்து, கஞ்சி கொண்டுவந்தாள்; அதற்குள் நாங்கள் கால் காயத்தைக் கட்டி, ஒத்தடங் கொடுத்துச் சிகிச்சை செய்து முடித்தோம்; பெண் உத்திரணியால் மெல்ல மெல்லப் பாட்டிக்குக் கஞ்சி புகட்டினாள். அவள் அன்பு எங்களை உருக்கியது. பாட்டி மயக்கந் தெளிந்து,

"ஹா சக்கரபாணி! என்னைக் கொண்டு போகாமல் மறுபடியுமா பிழைக்கவைத்தாய்?" என்றாள். பாட்டி சக்கரபாணி என்னைக் கொண்டுபோனதும் உன்னைக் கொண்டுபோகட்டும். இந்தக் கட்டை இருந்தென்ன—துக்கப்பட்ட ஜன்மம்?" என்று நொந்துகொண்டாள். எம் மனம் இளகியது; "அம்மா,நீங்கள் ஏன் இப்படி இங்கே தனியாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு வேறு பந்துக்கள் இல்லையா? முடிந்தால் உங்கள் குடும்ப விவரத்தை நாங்கள் கேட்க விரும்புகிறோம்" என்றோம்.

"ஐயா, நீங்கள் புண்ணிய சீலர்கள்; பரோபகாரிகள்; அதிதிகள்; முதலில் அதிதி ஸத்காரம் செய்து, பிறகு எங்கள் கதையைச் சொல்லுகிறோம்; நாங்கள் பரம ஏழைகள்—சக்கரபாணிதான் எங்களுக்குத்துணை. அவன் எங்களுக்குத் தந்தது உரல்—உலக்கை—அவலிடித்துப் பிழைக்கிறோம்; ஏழைகளின் உபசாரத்தை அங்கீகரிக்கவேண்டும்—" என்று அந்தப்பெண் முக்காட்டில் பாதி முகத்தை மறைத்துக்கொண்டு, எங்களுக்கு வெல்ல அவல் பரிமாறிக் காவேரித் தண்ணீரும் தந்தாள். பிறகு நாங்கள் ஆவலாக அவள் கதையைக் கேட்டோம்.

5

கண் கலங்குகிறது; மார்பு துடித்து வார்த்தை விக்கி விக்கி வருகிறது; "ஐயா எங்கள் வாழ்க்கை கண்ணீரிலும் புண்ணீரிலும் தோய்ந்து வறுமையில் காய்ந்து பொடியானது; போன மஹாமகத்தில் நாங்களும் சீரும் சிறப்புமாயிருந்தோம். அந்தக் கோயில் தெருவில் உள்ள காந்தி வாசகசாலைதான் எங்கள் வீடாயிருந்தது. சுவாமிமலையில் எங்களுக்கு ஒரு வேலி நிலமுண்டு.

நான்: எல்லாம் எப்படி இழந்தீர்கள்? ஏன் இப்படியானீர்கள்?

அவள்: நான், துரதிட்டக்கட்டை பிறந்த பிறகுதான் எங்கள் குடும்பம் இப்படியானது; இவள் எனது தாயைப்பெற்ற பாட்டி; அன்பு மயம்; அனாதையான எனது தெய்வம் இவளே.

நான்; அம்மா தாங்கள் அனாதையானதேன்? தங்கள் கணவன் ஊர் எது? அவரை எப்போது இழந்தீர்கள்?

அவள்: ஹா—பாட்டி, நீ சொல்லு பாக்கிக் கதையை!

பாட்டி: கேளப்பா கேள்—என் துக்கத்தைச் சொல்லித்தீர்க்கிறேன். என் கோமளத்திற்குக் கோகிலம் ஒரே பெண்—கிளிபோலப் பெண், கொள்ளைச் சமத்து; காரியக்கப்பல், என் மாப்பிள்ளை சீதாராமன் வக்கில் பண்ணி வரும்படியெல்லாம் ஒரு தட்டு வாணிக்குக் கொட்டிக்கொடுத்து தீராத ஜன்னிகண்டு உயிரையும் விட்டான். கோகிலம் அப்போது பள்ளிக்கூடத்தில் படித்தாள். எனக்கு உத்தமதானபுரம் சாமிநாதையரைத் தெரியும். பெரிய வித்வான். சமயோபகாரி. அவரிடம் என் குறையைச் சொன்னேன். அவர் இரண்டு ஜாதகங்களை வாங்கித் தந்தார். ஒன்றில் தசப் பொருத்தமும் சரியாயிருந்தது; பிள்ளையாண்டான் தஞ்சாவூர்; நானே தஞ்சாவூருக்குப் போய், அவன் தாயாரைக் கெஞ்சி இந்தச் சம்பந்தம் செய்தேனப்பா. தஞ்சாவூர்க்காரர் அழுத்தமும் மாப்பிள்ளை முறுக்கும், கெடுபிடியும் தடபுடலாகத்தான் இருந்தன. பிள்ளை ஸ்ரீநிவாசன் படிப்பை ஒப்புக்கொண்டு எதிர் ஜாமீன் மூவாயிரம் தந்தேன். சுவாமிமலை நிலம் இவள் கலியாணத்தில் தீர்ந்தது; மாப்பிள்ளை கும்பகோணம் காலேஜில் படித்தான்—அவன் பி. ஏ. பட்டம் பெற்றபோது எங்கள் வீடும் அடமானத்திலிருந்தது. பட்டமிருக்கிறது, எப்படியாவது மாப்பிள்ளை சம்பாதிப்பான்; கோகிலம் சுகமாயிருப்பாள் என்றே நம்பினோம்.

S. K. R. & CO.,

PERFUMERS

Arunachala Asari St. :: Jothi Building

SALEM

1 சக்தி அகர்பத்தி	7 சக்தி கூந்தல் தைலம்
2 சக்தி ஜவ்வாஜிபத்தி	8 சக்தி தசாங்கம்
3 சக்தி தர்பார்பத்தி	9 சக்தி அரகஜா
4 பத்மா அம்பர்பத்தி	10 சக்தி சென்ட்கார்டு
5 ஜோதி ஜவ்வாஜிபத்தி	எல்லாவிதமான வாசனை திரவியங்களும் கிடைக்கும்
6 S. K. R. ஸ்பெஷல் கஸ்தூரி பத்தி	

எஸ். கே. ஆர். அன் கோ., சேலம்

Sole Distributor :—

மைசூர் சக்தி பர்பியூமரி ஒர்க்ஸ்

1280, ராஜுலு வீதி, மைசூர்

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

கும்பகோணம் மஹாமகம் கண்காக்ஷி சாலையில் 80 No. கடைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

மாப்பிள்ளை பி. ஏ.வுக்குப் படித்தான்; மதிப்பாகப் போர்டு போட்டான். திண்ணையில் நாற்காலியும் தூங்கிவிழும் குமாஸ்தாவுந்தான் மிச்சம். கட்சிக்காரர் வரவில்லை. நாங்கள் ஏமாற்றமடைந்தோம். பிறகு மாப்பிள்ளை பேனா நாட்டிச் சம்பாதிக்கிறேன் என்று கிளம்பினான்.

பேனாச் சிலம்பம் பலிக்கவில்லை; கதை கிதை ஏதோ எழுதிப்போட்டான்; பத்திரிகை நிரம்பியது. சோற்றுப்பை நிறையவில்லை. மாப்பிள்ளைக்குப் பாட்டு வரும்—அவன் தஞ்சாவூருக்குப்போய் சங்கீத வித்வானாகக் கிளம்பினான். அங்கேயிருந்த பிதுரார்ஜிதமெல்லாம் முன்னேயே கடனுக்குப் போய்விட்டது. ஒரு வருஷம் பேச்சு மூச்சில்லை; அப்புறம் வித்வான் ஸ்ரீனிவாசன் பட்டும் ஜரிகையும் தோடாவுமாக ஒருநாள் இங்கே வந்து எனக்கு நமஸ்காரம் பண்ணி—பாட்டி நான் கச்சேரியில் அள்ளப்போகிறேன் என்றான். "எப்படியாவது கோகிலத்தை நன்றாக வைத்துக்கொள்" என்றேன்.

கோகிலம் பத்துவயதுப் பெண்; மாப்பிள்ளை சீனு ஐப்பசி மாசம் இங்கே வந்தான். அந்த வருஷம் காவேரியில் வெள்ளம் கரைபுரண்டோடியது. ஒருநாள் எல்லோரும் துலா ஸ்நானத்திற்குப் போனோம். நானும் கோமளமும் ஏதோ நினைவாயிருந்தோம். இந்தப் பெண் கால் தவறி விழுந்து ஐயோ என்றலறி வெள்ளத்துடன் போனாள்; மாப்பிள்ளையும் பதறிக் குதித்து அவள் கூந்தலைப் பிடிக்கப் பாய்ந்தான்; அவனையே வெள்ளச்சுழல் இழுத்துவிட்டது; ஆளை மறுபடியும் காணவில்லை; காலேஜிலிருந்து அப்போது ஓடம் வந்தது; அதிலிருந்து ஒரு புண்ணியவாளன் குதித்து, கோகிலத்தைமட்டும் பிடித்து, சிரமப்பட்டு ஓடத்தில் ஏற்றிவந்தான். சக்கரம் வைத்துச் சுழற்றிப் படாதபாடுபட்டுப் டாக்டர் ராமசாமி இவளுக்கு உயிர்ப்பிச்சை தந்தான்.

அவள்: ஐயோ! நான் ஏன் பிழைத்தேன்? இந்தக்கோலத்திற்கு ஆளாகாமல் அப்படியே காவேரியில் போயிருக்கக்கூடாதா?

பாட்டி: கர்மபலன் அனுபவிக்கத்தானே வேண்டுமம்மா. சீனு போனவன் போனவனே. ஆளைக்காணோம். பெண்ணைப்போலப் பேத்தியும் துக்கப்பட்டாள். இது வைதிகபுரி. அந்தத்தெரு குப்பாசாஸ்திரியும் சுப்பாசாஸ்திரியும் சேர்ந்து, பதினைந்து வயதுக் கோகிலத்தை வெள்ளைப் புடவையே உடுத்தச் செய்தார்கள். அதைக்கண்ட கோமளம் மனம் வெடித்து இறந்தாள். என்மனமும் துடியாய்த் துடித்தது; உலக நாடகம் வெறுத்தது; கோகிலத்தின் கண்ணீரைத் துடைத்து "அம்மா, அழாதே; நம் விதி அப்படி; இனிப் பாழும்

வான்கார்ட் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

308-309, லிங்கசெட்டி தெரு, மதராஸ்

நெருப்பு—மோட்டார்—கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு & எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸும் செய்யப்படும்.

எமது ஏஜண்டுகளாகவும், ஆர்கனைஸர் அல்லது பிரதம ஏஜண்டுகளாக வேலை செய்ய அனுபவமுள்ள நல்லவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உண்மையில் திறமையுள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

பிறவியே வேண்டாம்; உலகில் நமக்கு வேறு துணையில்லை; சக்கரபாணியைச் சரண்புகுவோம்; அவன் விட்டவழியே செல்வோம்'' என்றேன். சக்கரபாணிதான் எங்களுக்குக் கதி; அவன் சந்நிதானத்தில் வித்வான் சடகோபாசாரியார் இராமாயணமும் நாலாயிரப் படியும், ஸ்ரீ பாஷ்யமும், தேசிகப்ரபந்தமும் படித்தார்; அந்தப் புண்ணிய வாக்கைக்கேட்டு அனுஸந்தானம் பண்ணிப் பண்ணி ஒருவாறு கவலை தீர்ந்தது; ஆசாரியாருக்கு அவல் வேண்டும் என்று கேள்விப்பட்டோம். இரண்டு பேரும் அன்று முதல் அவலிடித்து வருகிறோம்; ஆசாரமான வைதிகர் சிலர் இங்கே வழக்கமாக அவல் வாங்குவார்கள்; அதில் வருவது எங்களுக்குப்போதும்; எப்படியோ காலம் நடக்கிறது. என் காலம் இதோ ஆய்விட்டது; ஆ—சக்ரபாணி—சக்ரபாணி—

பாட்டி இவ்வளவு பேசுவதற்குள் மேல் மூச்சு வாங்கிவிட்டது.

கோகிலம்: பாட்டி, நமது கதை போதும்; நமது கவலையெல்லாம் பெருமாள் பாதத்தில் வைத்துச் சரண்புகுந்த பிறகு பழைய கதை எதற்கு; இவ்வளவு பேசிய நேரத்தில் ஸ்ரீராமஜபம் செய்திருந்தாலும் புண்ணியமுண்டு; உலகம் ஏமாற்றம் என்று முடிந்தபிறகு ஸ்ரீராமன் கருணையைத் தவிர வேறு எதை நாம் நம்பமுடியும்? பாட்டீ, ஆற்றுடன் போனவர் உள்ளத்திலும் இருப்பவன் அந்தப் பரமாத்மனே! அந்த உடல் மறைந்த பிறகு இருப்பவன் என் ஆத்மநாதனான பரந்தாமனே; அவனுக்கு அழிவுண்டோ? மனிதர் அன்பும் உறவும் எத்தனை நாள்? இறைவன் அன்பும் உறவும் என்றும் இருக்கும்; அது தேக சம்பந்தம்; இது தேகி சம்பந்தம்; அது அற்பம்; இது அகண்டம். பாட்டி உலக விவகாரமெல்லாம் மனவிகாரப்புயல்தானே; அகங்காரப்புயல் ஒழிந்து அமைதியுண்டானால் உள்ளேயிருப்பதுதான் உலகம் என்பதை அறியாமலா போவோம். பாட்டீ, போனவர் வரமாட்டார்; உள்ளே இருப்பவர் போகார்.

— 7 —

இப்படி அவள் பேசும்போது புயல் சீனு விம்மி வீரிட்டான்.

"என் கண்ணே நான் போகவில்லை; கோகிலம், இதோ இருக்கிறேன்; நானே ஸ்ரீநிவாஸன்! என் அகங்காரப்புயல் ஒழிந்தது. என் அமுதமே, என்னை மன்னிக்க வேணும்!" என்று சீனு கோகிலத்தின் காலில் விழுந்து கண்ணீர் விட்டான். கோகிலம் சட்டென்று ஒரு மின் பார்வை பார்த்து "ராமா! உன் கருணை வந்ததா! பாட்டீ, சக்கரபாணி! நம்மைக் காப்பாற்றிவிட்டார் — பாட்டி — அவரே இவர்!" பார் என்றாள். பாட்டி "சக்கரபாணி! என்! னப்பா என்வயிற்றில் பால் வார்த்தாயா இனிக்கவலையில்லை—கோகிலம்—சீனு—நன்றாயிருங்கள்—என் கவலைவிட்டது-ஸ்ரீராம்ராம்—'' என்று கண்ணை அகலத் திறந்து சீனுவைப் பார்த்துப் புன்னகைத்தாள்—கண்ணை மூடினாள். அத்துடன் அவள் வாழ்வின் விளக்கு அணைந்துவிட்டது.

சீனு; தன் புயலை ஐந்து நிமிஷம் வீசினான்:—

''தோழர்களே! என்னருமைக்கோகிலத்தை இன்றே கண்டுபிடித்தேன்.''

நான்; ஆற்றுடன் போனவன் எப்படி மீண்டாய்? உடனே உன் மனைவியிடம் வராததேன்?

சீனு; நண்பரே,! வெள்ளத்தை வெல்ல நான் முயன்றேன்; என்னையே வெள்ளம் இழுத்துச் சென்றது, பிறகு நடந்தது தெரியாது, நினைவற்றேன். எனக்கு நினைவு வந்தபோது நான் ஆடுதுறையில் எனது நண்பன் சிதம்பரம் வீட்டில் இருந்தேன், எழுந்திருக்க முடியவில்லை, உடம்பெல்லாம் காயம். நான் ஆடுதுறையில் ஒரு புதரில் ஒதுக்கப்பட்டதாகவும், தற்செயலாக மாமனார் வீட்டிற்கு வந்த சிதம்பரம் பார்த்துப் பரிகாரம் செய்து என்னைக் கவனமாகக் காத்து வந்ததாகவும் சொன்னான். என் உடம்பு உடம்பாக ஆறுமாதமானது. வாழ்வில் ஒருமாறுதல் உண்டானது; உடம்பு அநித்யம்; உள்ளமட்டில் இதைப்பொதுநலத்தில் ஈடு படுத்துவோம் என்று வைராக்கியமாகக் கிளம்பினேன்.

அப்போதுதான் மஹாத்மாகாந்தி திருச்சிராப்பள்ளிக்கு வந்திருந்தார்' ஒத்துழையாமை இயக்கமும் வீரிட்டெழுந்தது—நான் மகாத்மாவைத் தரிசித்தேன். அவர் என்னைக்காங்கிரஸ் ஊழியனாக்கினார்—அன்றுமுதல் தேசத்திற்காகப் பேசிவருகிறேன். இடையே நான் கும்பகோணம் வந்து கோயில் தெருவில் தேடினேன்; ஊரில் விசாரித்தேன்—கோகிலம்—பெயரே மறைந்துவிட்டது. என் குயிலைக் காணமுடியாததால் என் வைராக்யம் தீவிரப்பட்டது—

"குயிலைக் கூடியாயிற்றே: இனி வைராக்கியம் ஐக்கியமாகலாமே! சீனு—கோகிலத்திற்கு ஜேய்" என்று நாங்கள் குதூகலித்தோம். எனது நண்பர் மனைவி கோகிலத்தை உள்ளே அழைத்துச்சென்று கிளிபோல் அலங்கரித்துக் கொணர்ந்தாள். சீனு கோகிலத்திற்கு மங்களம்பாடினோம். பிறகு நாங்கள் பாட்டியைக் கழுவிக்குளிப்பாட்டி அலங்கரித்து அவள் அன்பிற்குப் பல்லாண்டு பாடி அபரக்கிரியைகளை நடத்தினோம்.

மகாமக பலன் கிடைத்தது! சுபமஸ்து.

☘ ☘ ☘

சீனு தனது புயலை இப்போது சென்னையில் தனது "சுதந்தரா" பத்திரிகை மூலம் வீசித் தள்ளுகிறான் என்பது நண்பருக்குத் தெரியும்.

பிருத்வி

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 120, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

செலுத்தப்பட்ட மூலதனம்: ரூ. 15,00,000

டைரக்டர்கள்:

1 **ஸர். என். கோபாலசாமி ஐயங்கார்**
ஸி. எஸ். ஐ., ஸி. ஐ. இ., காஷ்மீர் பிரதம மந்திரி
1937—43 (சேர்மன்)
சேர்மன்:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பரேஷன் லிமிடெட்
பெர்டிலைசர்ஸ் & கெமிகல்ஸ் (திருவாங்கூர்) லிமிடெட்.

2 **மஹா வீரப்ரஸாத் ஆர். மொரார்கா அவர்கள்**
டைரக்டர்:
இந்தியா யுனைடெட் மில்ஸ் லிமிடெட்
ஜெயப்பூர் கிளாஸ் & போடரி ஓர்க்ஸ் லிமிடெட்
முதலியவை.

3 **மூல்ராஜ் கர்ஸன்தாஸ் அவர்கள்**
டைரக்டர்:
இண்டியன் ஸ்டாக் எக்ஸ்சேன்ஜ் லிமிடெட்
எலிபின்ஸ்டன் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
கர்னடிக் இஸ்டஸ்ரியல் & ப்ளைவுட் கம்பெனி லிமிடெட் முதலியன.

4 **வி. சேஷசாயி அவர்கள், ஓ.பி.இ.**
டைரக்டர்:
சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்
பெர்டிலைசர்ஸ் & கெமிகல்ஸ் (திருவாங்கூர்) லிமிடெட்
கர்னடிக் இண்டஸ்ரியல் & பிளைவுட் கம்பெனி லிட்.
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரீயல் கார்ப்பரேஷன் லிமிடெட்
எலிபின்ஸ்டன் பின்னிங் & வீவிங்ஸ் மில்ஸ் லிமிடெட்
முதலியன.

5 **ஏ. வி. தாமஸ், அவர்கள்**
டைரக்டர்:
ஏ. வி. தாமஸ் & கம்பெனி (இந்தியா) லிமிடெட்
நீலமலை டீ & காபி எஸ்டேட்ஸ் லிமிடெட்
ப்ரன்டன் & கம்பெனி என்ஜினியர்ஸ் லிமிடெட்
மிட்லண்ட் ரப்பர் & ப்ராட்யூஸ் கம்பெனி லிமிடெட்
ராஜகிரி ரப்பர் & ப்ராட்யூஸ் கம்பெனி லிமிடெட்
முதலியன.

6 **மஹமத்தலி அப்துலாலி தேககாம்வாலா அவர்கள்**
டைரக்டர்:
அஸோஸியேடட் ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

7 **ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டி, கே. ஸி. ஐ. இ.**
டைரக்டர்:
வஸந்தா மில்ஸ் லிமிடெட் சிங்காநல்லூர்.

8 **எஸ். எல். மன்னுஜிராவ் அவர்கள்**
டைரக்டர்:
பாங்கு ஆப் மைசூர் லிமிடெட்
மைசூர் லாம்ப் ஓர்க்ஸ் லிமிடெட்
இந்தியா சுகர்ஸ் & ரிபைனரீஸ் லிமிடெட்
ஜெயலக்ஷ்மி மில்ஸ் லிமிடெட் கோயமுத்தூர்
முதலியன.

9 **என். ரங்கநாதன் அவர்கள்**
டைரக்டர்:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்
அலைட் இண்டஸ்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
முதலியன

10 **கே.வி.ஏ.,எல்.எம். ராமநாதன்செட்டியார்அவர்கள்**
டைரக்டர்:
காரைக்குடி பாங்கிங் கார்ப்பரேஷன் லிமிடெட்
ஜானகிராம் மில்ஸ் லிமிடெட் ராஜபாளையம்
நியூ க்ளென் மோர்கன் எஸ்டேட்ஸ் லிமிடெட்
மதரூஸ் முதலியன.

11 **ஹெச் சீதாராம ரெட்டி அவர்கள் எம். எல். ஏ.**
டைரக்டர்:
ராயல் சீமா பாங்கு லிமிடெட் பெல்லாரி
கடப்பா எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்
முதலியன

மானேஜிங் டைரக்டர்:

12 **எஸ். பார்த்தசாரதி அவர்கள் பி.ஏ.,பி.எல்.**
டைரக்டர்:
சௌத் ஆற்காடு எலக்ட்ரிஸிடி டிஸ்ட்ரிபியூஷன் கம்பெனி லிமிடெட்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட்
இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி லிமிடெட்
நீலமலை டீ & காபி எஸ்டேட்ஸ் லிமிடெட்
இண்டோ யூனியன் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
முதலியன.

பிராஞ்சு ஆபீஸ்கள்:— ஆலப்புழை, பம்பாய், லக்னோ, அமிர்த்ஸார், சிதம்பரம், நாகபட்டணம்.

எல்லாவித இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பும் அளிக்கப்படும்

A. M. சாமிநாத செட்டியார்,

பிராஞ்சு மானேஜர், நாகபட்டணம்.

இவன் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டுபிடிப்பதற்கு முன் பிறந்திருந்தானானல், நிலைமை மோசமாய் இருந்திருக்கும். இன்று இம் மருந்தின் பயனாக ஜீவித்திருப்பான்.
குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டிக் கென தனி மருந்து கண்டுபிடிக்க ஜம்மி வெங்கட்ரமணய்யா பல வருஷ அனுபவ ஆராய்ச்சி செய்து அதன் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்ட லிவர்க்யூர், 36 வருஷ காலமாக ஆயிரக் கணக்கான குழந்தைகளே காப்பாற்றியிருக்கிறது.
அநேக கேஸ்கள், தர்மதத்தினாலோ, அசட்டையினாலோ, பிசகான மருந்தினாலோ, மோசமான நிலைமையடைந்த சமயத்தில் ஜம்மியின் லிவர்க்யூர் (காம்பிளிகேடட்) கைகொண்டதின் பயனாக குணமடைந்துள்ளன.
இந் நிலைமை (முதிர்ந்த கட்டி வியாதி), இக் கட்டி வியாதியில் மிகவும் மோசமானதும் ஆபத்தானதும் பற்றி, நோயின் அறிகுறிகள் காணப்பட்டவுடனே ஜம்மியின் லிவர்க்யூர் (சிம்பிள்) உபயோகிப்பது உசிதமானது.

சாதாரண கேஸ்களுக்கும், கடுமையான கேஸ்களுக்கும் தனித் தனியே மருந்துகள் கிடைக்கும்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா அண்டு சன்ஸ்
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்: பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

ஜம்மியின் லிவர்க்யூர்

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்

பெரிய தெரு :: கும்பகோணம்

சித்திரத்தின் குறை

லக்ஷ்மீக்ருஷ்ணதாஸன்

அந்திப் பொழுது. கண்களைக் கவரும் வர்ண ஆடைகளை அணிந்து ஜ்யோதி நடனம் புரிகிருள் ஸந்த்யா தேவி, நடனம் முடியும் தருணம். வர்ணக் கொந்தளிப்பால் ஜோதியுற்ற வர்ணக் கடல் அமைதி நீலத்தையடையும் தருணம்.

ஒரு சிறு சித்திரக்கூடம். சித்திரக் கோல்களும் வர்ணக் கிண்ணங்களும் சித்திரங்களும் அள்ளித் தெளித்த அலங்கோலத்தில் கிடக்கின்றன. சித்திரங்களில் சில அரைகுறையாய் விடப்பட்டவை. சிலவே கவனத்துடன் முடிக்கப்பட்டவை. ஆனால் எல்லாவற்றிலுமே ஒரு கவர்ச்சி, ஒரு கலை. கவனத்துடன் முடிக்கப்பட்டவைகளோ கலைமணிகள். எல்லாம் இயற்கைத் தேவியைப் பற்றியவை. கலை என்னும் மாலையில் பதிக்கப்பட்ட பொறுக்கி எடுத்த மணிகள்.

ஆனால் அந்த ஓவியன் நடராஜனின் கவனம் இவைகள் ஒன்றிலுமில்லை. சித்திரச் சாலையிலேயே இல்லை. சித்திரச் சாலையின் வாசற்படியில் உட்கார்ந்துகொண்டு வாயில் ஒரு சித்திரக் கோலின் பின்பக்கத்தை வைத்துக் கடித்துக் கொண்டிருந்தான்.

அவன் உட்கார்ந்திருந்த மாதிரியில் ஓர் அலக்ஷ்யம். அலக்ஷ்யத்தால் வந்த கம்பீரம். கண்கள் ஸந்த்யா நடனத்தைப் பருகிக்கொண்டிருந்தன. கனவுகள் காணும் கலைஞனின் கண்கள் மைதீட்டினது போன்ற கருமையையுடையவை. உயர்ந்த அகன்ற முன்நெற்றி சுருண்ட கேசத்தால் அலங்கரிக்கப்பட்டது. கூரிய மூக்கு. அழகுணர்ச்சி மிகுந்த வளைத்த முழு உதடுகள். எல்லாம் சேர்ந்து முகத்திற்குக் களையைக் கொடுத்தன. கட்டுமஸ்தான தேகம். அவன் முகத்தில் மாலைக் கதிரவனின் மஞ்சள்கிரணங்கள் விழ, அது தேஜஸுடன் ஜ்வலித்தது.

கண்கள் இயற்கையின் சௌந்தர்யத்தைப் பருக, மனது கட்டுக்கடங்காமல் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. சட்டெனத்திரும்பித் தான் வரைந்த ஸந்த்யா காலத்தைப் பார்த்தான். கண்களில் சற்றே மகிழ்ச்சி தோன்றியது. ஆனால் மறுபடியும் மேற்கு நோக்கி விட்டான். தனக்குள் முனகிக்கொண்டான்.

"என்ன பிரயோசனம்? எவ்வளவு அழகாய் இருந்தாலும், எவ்வளவு கம்பீரமாய் இருந்தாலும் உயிரற்றவைகள் தானே? உணர்ச்சியற்றவைகள் தானே? இயற்கையின் மேன்மையை ஒத்த மனித உருவம் தோன்றுமானல், அவ்வுருவத்தை, உயிரும் உணர்ச்சியும் தோன்ற வரைய முடியுமானல்"...........

அவன் எண்ணங்கள் சென்ற வழி அது. அவன் சித்திரக் கலைக்குக் கொடுத்த கௌரவமும் அந்தஸ்தும் எல்லையற்றது. கவலையும் களைப்புமடைந்த மனிதர்களுக்குச் சற்றுநேர திருப்தியையும் உத்ஸாஹத்தையும் அளிப்பது மட்டும் போதாது எனத் தோன்றிற்று அவனுக்கு. சித்திரக் கலையை, உயரிய நோக்கங்களைக் கற்பிக்கக்கூடியதாகச் செய்ய விரும்பினுன். உதாரணமாக, அவன் விரும்பியது இது. மாசு மறுவில்லாத, உலகத்தின் கொடூரங்களையும் சீர்கேடுகளையும் அறியாத, சமூகத்தின் அர்த்தமற்ற கோட்பாடுகளால் தன் ஆத்மாவை இழந்துவிடாத அழகான வனிதையை அவன் காண விரும்பினுன். அவள் உருவத்தை அவன் வரைந்தால் அந்தச் சித்திரத்தின் முன் கயவர்கள் கண் தூக்கக் கூசவேண்டும். கல் மனமும் உருகி ஓடவேண்டும். சக்தி வாய்ந்தவும், ஒழுங்காய் வைத்துக்கொள்ளப்பட்டவும் ஆன புகழ்பெற்ற தேவாலயங்கள் போல் விளங்கவேண்டும். ஆசாபாசங்களில் தோய்ந்து ஊறி, காய்ந்து, கடினமான தோல் ஹ்ருதயங்களும் நல் வாழ்க்கையை நோக்கவேண்டும். தயங்காமல் தவறு செய்தவர்கள், கூசாமல் அவைகளைப் புகழ்ந்தவர்கள்-ஆசாபாச உலகத்தின் வணங்காமுடி மன்னர்கள்—முடிவணங்கி, கைகூப்பி, ஆண்டவனின் கருணைக்குக் கெஞ்சவேண்டும். அதுதான் கலையின் உண்மை ஸ்வரூபம். உரிய தொழில். இளைஞனின் வாழ்க்கையின் ஒரே நோக்கம்: இப்படியாக......கனவுகள்.........நினைவுகள்.

ஸந்த்யா நடனம் முடிந்துவிட்டது. காதலனைப் பார்க்க எண்ணி, சந்து பொந்துகள் வழியாக எட்டி, எட்டிப்பார்க்கும் காதலிகள் போல, சந்திரனை எதிர்பார்த்து நக்ஷத்திரங்கள் மறைந்து, மறைந்து பிரகாசித்தன.

நடராஜன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். தூரத்திலிருந்து கண்ணனின் குழலோசை வெட்கமுறுமாறு தொனித்த இனிய குரலின் கானம் அவன் காதில் ஒலித்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் குரலின் ஒலி அதிகரித்தது. கண்ணன் குழலும் நாரதர் யாழும் கலந்ததுபோல் ஒலித்த அந்தக் குரல் அவன் சித்திரக்கூடத்தின் வாசலில் இருந்தே வந்தது. அந்தப்பாடகி அவன் எதிரிலேயே நின்று கொண்டிருந்தாள்.

அவள் அழகை வர்ணிக்க மனித பாஷைகளால் முடியாது. அவள் பாடிக்கொண்டிருந்த

மொழிகளே, அழகு ததும்பும் பாரதிமொழிகள்—

“மலரின் மேவு திருவே—உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்.
நிலவு செய்யு முகமும்—காண்பார்
நினைவழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்—தெய்வக்
களிதுலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—

அவளை ஒருவிதமாக வர்ணிக்கின்றன.

பால்வடியும் சிகப்பு. சுருள் சுருளாய்க் கடலின் அலைகள் போன்று வளைந்து ஜ்வலிக்கும் கறுத்து, அடர்ந்து திரண்ட கூந்தல். அதில் அழகிய, தூய வெள்ளைப் புஷ்பங்கள்—ஊர் பேர் அறியாத, காட்டுப் புஷ்பங்கள் நாலைந்து சொருகியிருந்தாள். மெலிந்து வளைந்த புருவங்கள். சிறிய அழகிய மூக்கு. குறு நகையில் லயித்த அதரங்கள். அழகும் லாகவமும் சேர்ந்து அமைந்த வளைவுகள் நிறைந்த உடலமைப்பு. வானக்கடலில் மிதக்கும் வெள்ளி மேகங்களின் சலனம் போன்ற நடை. தாழ்மையையும் கீழ்மையையும் எந்த விதத்திலும் அறியாத அரசிபோல் நின்றாள் அவள்.

அவள் பாடின பாட்டின் மொழிகள், குயிலின் இனிமையாலும். அவள் தமிழின் மழலையாலும் இனிமைகளின் சிகரத்தை அடைந்தன. மழலைத் தமிழும் முகவெட்டும் தமிழ்நாட்டுப் பெண்ணல்ல என்று தெரிவித்தன. அவளுடன் கூட, ஓர் உரம் வாய்ந்த பலிஷ்டனான கிழவனும், கையில் ப்ரம்மாண்டமான தடியுடன், நின்றுகொண்டிருந்தான்.

ஆனால் நடராஜன் அவளைக் கவனிக்கவேயில்லை. திறந்த வாயும் விரிந்த கண்களுமாக அந்த அழகியையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் அணிந்திருந்த புஷ்பங்கள், தங்கள் இனிய மணத்தால், அவளை அறியாமல் அவன் ஹிருதயத்தைத் தழுவின, எவளைத் தன் கனவுலகத்தில், பறந்து சஞ்சரிக்கும் தன் மனோதர்ம உலகத்தில், தினம் கண்டுகொண்டிருந்தானோ, அவளை இன்று நேரில் கண்டான்.

செய்து முடிக்கவேண்டிய காரியங்களில் எப்பொழுதும் தயங்காதவன், இப்பொழுது அறிவிழந்தவன்போல் நின்றான். ஆனால் சுய அறிவும் சீக்கிரமே வந்தது. அத்துடன் பழைய கம்பீரமும், அலக்ஷ்யமும் அவன் உதவிக்கு வந்தன. அவள் பாட்டை நிறுத்திவிட்டாள். உட்கார்ந்தபடியே.

“உங்கள் பேர் என்ன?” என்றான்.

அவன் பன்மையில் பேச நினைக்கவில்லை. அவனையறியாமல் அவன் நாவிலிருந்து பன்மைதான் வந்தது. அது அவன் அவளுடைய அழகுக்கும் கம்பீரத்துக்கும் அவனையறியாமல் அளித்த மரியாதை.

குறு நகையில் லயித்த இதழ்கள் புன்னகையில் மலர்ந்தன. கண்களில் குறும்பு நர்த்தனம் புரிந்தது.

“ஸலாம் மஹாரர்ஜ்! எதற்காகக் கேட்கிறீர்கள்?”

“எதற்காகவா? நான் ஒரு சித்திரம் எழுதுபவன். உங்களைச் சித்திரம் எழுத விரும்புகிறேன். நீங்கள் சம்மதித்தால் அது கலையின் பாக்யம்.”

சற்றுநேரம் அவளைக் கூர்ந்து கவனித்தான். மறுபடியும் முன்போல் லேசான கேலியுடன்,

“மிக்க வந்தனம். ஆனால் நான் இவ்வளவு பெரிய கௌரவத்துக்கு உரியவளா என்றுதான் எனக்குச் சந்தேகம்.”

“நீங்கள் அதற்காகக் கவலைப்படவேண்டாம். என்னுடைய கலையுணர்ச்சியில் எனக்கு பூர்ண நம்பிக்கையுண்டு!!”

கலீரென்று நகைத்தாள்.

“இருக்கலாம். ஆனால் நீங்கள் இப்பொழுது சொல்வதெல்லாம் கலையுணர்ச்சியின் தூண்டுதலால்தான் என்று எப்படி நம்பமுடியும்?”

நடராஜன் அவள் வார்த்தைகளில் மறைந்திருந்த கிண்டலைக் கவனிக்கவேயில்லை. படபடப்புடன்,

“எப்படியெனில் எனக்கு ஒரே ஒரு உணர்ச்சிதான் உண்டு—அதுதான் கலையுணர்ச்சி”

“நீங்கள் சொல்லுகிறீர்கள் அப்படி. அது உண்மை என்று எனக்கு எப்படித்தெரியும்? மேலும் தன்னைப்பற்றியே எல்லாம் அறிந்த மனிதன் அபூர்வ ஞானி என்று பெரியோர்கள் கூறுகிறார்களே?”

நடராஜனுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. சற்றுக் கோபமாகவே,

“நான் அபூர்வமல்ல, ஞானியுமல்ல, நான் கலைஞன். உங்கள் அழகைப் பூஜிக்கிறேன். உங்களைச் சித்திரம் வரைய இஷ்டப்படுகிறேன். சம்மதமில்லையானால் அப்படிச் சொல்லிவிடுங்கள். வீண் பேச்சு எதற்கு?”

“நான்பேசுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையாகில் மன்னித்துக்கொள்ளுங்கள். எனக்குச் சம்மதம்தான்”

நடராஜன் ஒரு பெருமூச்சுவிட்டான். கண்களில் மகிழ்ச்சி நிலவிற்று. ஆனால், சட்டென்று எதையோ நினைத்துக்கொள்பவன் போல், எழுந்து நின்றுகொண்டு,

“அப்படியானால் நீங்கள் ஒரு ஷரத்துக்குச் சம்மதிக்க வேண்டும். நீங்கள் இங்குப் பக்கத்திலேயே வசிக்கவேண்டும்”

நடராஜன் இந்த ஷரத்து விதித்ததின் காரணம் அவனுக்குத் திடீரென்று ஏற்பட்ட பயம்

தான். அவன் வரைய விரும்பினது அவள் அழகை அன்று. அதற்கு அடிப்படையாக நின்ற அவள் பரிசுத்தத்தையும் கம்பீரத்தையும்தான். அவள் வாழ்க்கையைப்பற்றி அவன் ஒன்றுமறியான். ஆனால் அவள் அன்று வரையில், அன்று மலர்ந்த பனிரோஜா மலர் போன்றவள் என்பதில் சந்தேகமே கிடையாது. ஆகையால் சித்திரம் முடிவதற்குள், ரோஜாமலர் பறிக்கப்பட்டுக் கயவர்கள் கையால் கசக்கப்பட்டுவிடக் கூடாதென்பதே அவன் விருப்பம். ஆகையால்தான், அவன் பார்வையில் இருக்கக்கூடிய இடத்தில் அவள் இருக்க விரும்பினான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. சிரிப்புத் தான் வந்தது. குறும்புதான் பார்வையிலும் நகையிலும் விளங்கியது.

"ஆனால் எனக்கு இங்கு ஒருவரையுமே தெரியாதே. வீடுகள்கூட காலியாக இருக்கின்றனவோ?"

"அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். என் வீடு விசாலமானதே. என்னுடன் கூட ஒருவரும் கிடையாது. எனக்கு ஓர் அறை போதும். நான் ஹோட்டலில்தான் சாப்பிடுகிறது. ஆகையால் நீங்கள் என்னைச் சித்திரம் எழுத அனுமதிப்பதற்குப்பதிலாக, பணத்துடன்கூட நான் உங்களுக்கு வீடும் உணவும் தரமுடியும்."

அவள் உடனே பதில் சொல்லவில்லை. அந்தக் கிழவனிடம், என்னவோ, நடராஜன் அறியாத ஒரு பாஷையில் பேசிக்கொண்டாள். இருவருக்கும் அபிப்பிராய பேதம் இருப்பது போல் தெரிந்தது. கடைசியில் கிழவன் சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிவிட்டான். அவள் அவன் பக்கம் திரும்பி,

"சரி. எனக்கும் சம்மதமே. நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். நாளைக் காலை உங்கள் வீட்டுக்கு வருகிறோம்" என்றாள்.

நடராஜன்தான் இருக்குமிடத்தைச் சொன்னான். தன் சித்திரச்சாலையை ஒருதரம் சுற்றிப் பார்த்தான். அவன் கண்களில் அடக்கமுடியா ஆர்வம் நிறைந்து வழிந்தது. அவள் பக்கம் திரும்பி,

"இப்பொழுதே படம் வரைய ஆரம்பித்துவிடலாமே" என்றான்.

கேலி நகைப்புக்கலகலவென்று முழங்கிற்று.

"நான் கலையை மட்டும் பழகுபவளல்ல. ஆகையால் எனக்குக் கலையுணர்ச்சி தவிர மற்ற உணர்ச்சிகளும் உண்டு. இப்பொழுது பசி உணர்ச்சியும், களைப்புணர்ச்சியும்தான் தெரிகின்றன. ஆகையால் நான் நாளைக்காலை வருகிறேன். சலாம், மஹாராஜ்?"

ஏளனச்சிரிப்புடன் சலாம் செய்துவிட்டு, கிழவன் பின்தொடர வெளியே சென்று, ஜன சஞ்சாரத்தில் மறைந்தாள்.

எழுத ஆரம்பித்தால் பேனா தங்கு — தடையற்று ஓடவேண்டும் — இல்லையேல் மிதந்து வரும் உணர்ச்சிகள் தடைபட்டு நின்று விடும். மன அமைதி குன்றும்.



உங்கள் பேனாவைத் தங்குதடையற்று லாகவமாகஓடச்செய்வது

ஜாப்கோ
பவுண்டிங்க்

பாரதத்தின் உன்னத தயாரிப்பு

எங்கள் மற்ற உயர்ந்த தயாரிப்புகள்

ஸ்னோ, லைம்கிளிஸ், ஹேர் குரோயர், கேஸ்டர், ஆயில், பிரில்லியன்டைன், ஷேவிங் —ஸ்டிக், சோப் முதலியன—

ஜயபாரதம் கம்பெனி

மல்லேஸ்வரம் P. O. — பேங்களூர்

நடராஜன் அங்குமிங்குமாக, குறுக்கும் நெடுக்கும் நடந்தான். அவனுக்கு அவள் கேலியும், குறும்பும் எதற்காக, என்று புரியவில்லை. அதற்காக அவளை வெறுத்தான். அரசியின் சுபாவத்தையும் பிச்சைக்காரியின் தொழிலையும் ஒருங்கே காண்பிக்கும் இவளைச் சூழ்ந்த மாயையை அவனால் கலைக்க முடியவில்லை. இவ்வளவு தூரம் பேசியும் கடைசியில் அவள் பெரைச் சொல்லாமல் போய்விட்டாளே என்ற ஆத்திரமும் வேறு. இவைகளுக்கு நேர் எதிராகத் தான் வாழ்க்கையில் உயிருக்கும் மேலாக நாடின பொருள் அகப்பட்டதைப் பற்றின சந்தோஷம். வரப்போகும் புகழ்சூழ்ந்த வாழ்க்கையைப்பற்றின பெருமை வேறு. அவன் தன் வீட்டையடைந்து குழப்பத்திலேயே தூங்கச் சென்றான்.

மறுநாள் காலையில் கிழவனும் குமரியும் ஒரு சிறிய மூட்டையுடன் வந்துசேர்ந்தார்கள். நடராஜன் அவளைப்பார்த்தவுடன் முதன் முதலாகக் கேட்ட கேள்வி:—

"உங்கள் பேரென்ன?" என்பதுதான். அவளும் சிரித்துக்கொண்டே

"ராத்திரி முழுவதும் இதே நினைவுதானோ? இதனால்தான் கலையுணர்ச்சி மட்டும் இருந்தால் போதாதென்பது. என் பெயர் மல்லிகா என்றாள்.

நடராஜன் பதில் பேசாமல் அறைகளைத் திறந்துவிட்டான். மாடியிலிருந்த ஓர் அறையை மட்டும் தனக்கு வைத்துக்கொண்டான்.

கிழவன் வாசலில் உட்கார்ந்துகொண்டான். மல்லிகா சமையல் செய்ய உள்ளே சென்றுவிட்டாள்.

சாப்பாட்டு நேரத்தில் நடராஜன் ஹோட்டலுக்குச் செல்லக்கிளம்பினான். வழியில் மல்லிகா நின்றுகொண்டிருந்தாள். நல்ல பக்குவமான உணவின் வாசனை எங்கும் பரவியிருந்தது.

மல்லிகா:—

"எங்கே செல்கிறீர்கள்? சாப்பிடவில்லையா?" என்றாள்.

"சாப்பிடத்தான் செல்கிறேன், ஹோட்டலுக்கு" என்றான்.

"ஏன் நாங்களும் மனிதர்கள் தானே? எங்களுடன் சாப்பிடக்கூடாதா" என்றாள்.

கொஞ்சம் தயங்கினான். பின்,

"சரி, சாப்பிடுகிறேன். ஆனால் அதற்கும் நீங்கள் பணம் வாங்கிக்கொள்ளவேண்டும்" என்றான்.

கலீரென்று நகைத்தாள்.

"நல்ல கலையுணர்ச்சி உங்களுக்கு!" என்றாள்.

நடராஜன் முகம் சிவந்தது. அவனுக்கு கோபம் வருவதைக் கண்ட அவளும், உடனே

"தவறாக ஏதாவது சொல்லியிருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்" என்றாள். கடைசியாக மல்லிகா பரிமாறக் கிழவனும் நடராஜனும் சாப்பிட்டார்கள். மத்தியானமாகச் சித்திரமும் ஆரம்பமாயிற்று.

நாட்களும், வாரங்களும், மாதங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி மறைந்தன..........

— 2 —

...............சித்திரமும் அநேகமாகப் பூர்த்தியடையும் தருணம். மேல் மெருகு தரவேண்டியதுதான் பாக்கி.

அமாவாசைக்கு நாலைந்து நாட்கள் முன்னால் ஒரு மாலை. சித்திரக் கூடத்தினுள்ளே மல்லிகாவும் நடராஜனும் மட்டும் இருந்தார்கள். அவன் சித்திரம் எழுதிக்கொண்டு இருந்தான். அவள் லோகமாதா தன் குழந்தைகளுக்கு அபயம் கொடுக்கும் மாதிரியில் நின்றுகொண்டிருந்தாள். அவன் அங்கங்கே மேல் மெருகு கொடுத்துக்கொண்டே, அப்போதைக்கப்போது மல்லிகாவையும் பார்த்துக்கொண்டான். மல்லிகாவைப் பார்க்கும்பொழுது கண்களில் ஒரு கூர்மையான ஒளிமட்டுமே—கவனத்தின் அடையாளம். அந்தச் சித்திரத்தைப் பார்க்கும் பொழுதோ ஆத்ம ஜ்யோதியைக் கண்ட யோகியினது மகிழ்ச்சி. மல்லிகாவும் இதைக் கவனித்தாள். அவள் முகம் கறுத்தது. ஆனாலும் சிரித்த முகத்துடனேயே,

"நான் அழகா, அல்லது அந்தச் சித்திரம் அழகா, சொல்லுங்களேன் பார்ப்போம்" என்றாள்.

நடராஜன் அதற்குப் பதிலே சொல்லவில்லை. ஆனால் அது அவளுக்கு அவமரியாதையாகப் படவில்லை. ஏனெனில் அப்படி நடக்கும் என்றே எதிர்பார்த்தாள். நடராஜன் சித்திரம் எழுதிக்கொண்டிருக்கிறபோது அனாவசியமான கேள்விகளுக்குப் பதில் சொல்வது பழக்கமில்லை.

அவள் மறுபடியும் குத்தலாக,

"அது கேவலம் என்னுடைய சாயைதானே" என்றாள்.

நடராஜன் நிமிர்ந்து பாராமலே,

"இல்லை. இல்லை. இது உன்னுடைய ஆத்ம ஜ்யோதி" என்றான்.

மல்லிகா கொஞ்சம் படபடப்பாகவே,

"என்ன இருந்தாலும் நான் கடவுள் சிருஷ்டி, அது மனித சிருஷ்டிதானே? என் அழகுக்குப் பக்க பலமாக உயிரும் உணர்ச்சியும் உண்டு. சித்திரத்துக்கேது அந்தப் பெருமை எல்லாம்?" என்றாள்.

உண்மையை நிர்ணயிக்கவே ஜமீன்தாரிணி தர்பார் கூட்டினார்களாம்.

சற்றுநேரம் கழித்து ஜமின்தாரிணி வரவைக் காண்பிக்கும் மணிகள் ஒலித்தன. அவள் தன் சிம்மாதனத்தில் அமர்ந்தாள். அவளை நாலா பக்கத்திலும் மெல்லிய மஸ்லின் திரைகள் மறைத்திருந்தன. முகத்தையும் லேசான முக மூடி மறைத்திருந்தது. ஆனாலும், தெரிந்த வரையிலும் அவள் மனதைக் கவர்ந்தாள். வைர நகைகள் ஜ்வலிக்க, இரண்டு மூன்று ஆண் மந்திரிகள் புடைசூழ, இந்திராணிபோல் விளங்கினாள். சபையில் சுத்தமான நிசப்தம்.

ஜமீன்தாரிணியின் குரல் கணீரென்று இனிமையாக ஒலித்தது.

"ஓவியரை வரச்சொல்லுங்கள்" என்ற கட்டளை பிறந்தது.

அந்தக் குரலின் இனிமைக்கு அந்தக் குரலேதான் உபமானம்.

இரண்டு மூன்று அதிகாரிகளுடன் ஓவியன் தோன்றினான். தலை எண்ணெய்கண்டு வெகு நாட்களாயிருக்கும். சடைசடையாய் இருந்தது. வறுமையாலும், பிணியாலும் மெலிந்த தேகம்; ஒட்டின கன்னங்கள்; ஒளி மங்கின விழிகள்; ஆனாலும் பரந்த நெற்றியும், கூரிய முகமும், அந்த முகத்திற்குக் களையைக் கொடுத்தன.

அவனைக் கண்டதும் ஜமீன்தாரிணி சற்றே திடுக்கிட்டாள். அவள் முகம் சற்றே வாட்டமடைந்தது.

அங்கிருந்த அதிகாரி ஒருவர் ஓவியனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"உங்கள் பெயர் என்ன?"

"நடராஜன்"

"நீங்கள் இந்தச் சித்திரத்தை வரைந்ததாகச் சொல்லுகிறீர்களா?"

"ஆமாம்"

"இது எப்பொழுது வரையப்பட்டது?"

"சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்பு" அந்த ஓவியனின் பதில்கள் ஈனஸ்வரத்தில், ஏதோ அக்கரையில்லாதவன் பதில்கள்போல் வந்துகொண்டிருந்தன. அடுத்த கேள்வி அவனைத் திடுக்கிடச் செய்தது. ஏனெனில் அடுத்து ஜமீன்தாரிணியே குறுக்கிட்டு,

"பின் இத்தனை வருஷங்களாக நீங்கள் ஏன் அதை வரைந்ததாக முன் வரவில்லை?" என்றாள்.

நடராஜனை அந்தக்குரல் என்னவெல்லாமோ செய்தது. அது அவனுக்குப் பழக்கமான குரல்போல் தோன்றிற்று. ஜமீன்தாரிணியை உற்று நோக்கினான். தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"இந்தச் சித்திரம் முடியும் தருணத்தில் ஒரு காரணத்தால் எனக்கு வாழ்க்கையிலேயே வெறுப்புத் தட்டிற்று. இந்தக் கடந்த மூன்று வருஷங்களுக்குள் இரண்டை ஊர்பேர் அறியாத காட்டில் கழித்தேன். பின் நோய் வாய்ப்பட்டேன். ஆகையால் நான் முன்வரவில்லை. மேலும் எனக்கு, நான் அதைவிட்டுச் சென்ற பிறகு, அச்சித்திரத்தின் கதி என்னவாயிற்று என்பது தெரியாது. நான் இங்கு வந்ததும், அதைக் கண்டதும்கூட தெய்வ வசத்தால் தான்."

சற்றுநேரம் சபையில் நிசப்தம் நிலவியது. ஜமின்தாரிணி எதையோபற்றிக் கவலைப்படுவள்போல் தோன்றியது. பிறகு,

"இந்தச் சித்திரத்தில் ஏதாவது குறைகளுண்டா உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"உண்டு" என்ற பதில் சபையையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. சபையோருக்கு ஒரே வியப்பு. ஓவியனைப் பார்த்தாலும் பொய்சொல்பவனாகத் தோன்றவில்லை. சித்திரத்திலோ குறைகள் இருக்கமுடியாது. மேலும் அறிய விரும்பி, சபையோர் ஆத்திரத்துடன் அமைதியாக இருந்தனர்.

"அது என்ன குறை? என்றாள் ஜமீன்தாரிணி.

"உற்றுப்பார்த்தால் தேவியின் பாதங்களின் அருகில் அநேக சிறிய வர்ணப்புள்ளிகள் இருப்பது தெரியும்" என்றான்.

சபையோர் எல்லோருமே, கொஞ்ச தூரத்தில் வைக்கப்பட்டிருந்த தேவியின் படத்தருகில் செல்ல முயன்றனர். அருகிலிருப்பவர்கள் உற்றுப்பார்த்துவிட்டு, மற்றவர்களுக்கு ஓவியன்சொல்வது உண்மைதான் என அறிவித்தனர். அதிகாரிகள் சிரமப்பட்டு மறுபடியும் அமைதியை நிலவச்செய்தனர். ஜமீன்தாரிணியும் ஒரு பெருமூச்சு விட்டாள்.

"நீங்கள் சொல்வது உண்மையே. தாங்கள்தான் அதை வரைந்த ஓவியரெனத் தோற்றுகிறது. எதற்கும், அச்சித்திரத்தைப்பற்றிய வரலாற்றை விவரமாகச் சொல்லுங்கள். ஒன்றையும் மறைக்கக்கூடாது" என்றாள்.

நடராஜனும் தான் மல்லிகாவை முதல் பார்த்த இரவு முதற்கொண்டு படம் எழுதி முடிந்தவரை சொன்னான். ஆனால் மல்லிகாவுடன் நடந்த சண்டையைப்பற்றிச் சொல்லவில்லை.

ஆனால் ஜமீன்தாரிணி விடுவதாயில்லை. அவனை "வர்ணம் எப்படிச் சிந்தியதென்று

சொல்லவில்லையே? உண்மையை மறைப்பதில் பிரயோசனமில்லை'' என்றாள்.

கடைசியாக அவள் பேசின வாக்கியத்தில் ஒலித்த குறும்பு நடராஜனின் சந்தேகங்களை விலக்கி, அவன் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்தது. எந்தக்குரல் இரவும் பகலுமாக அவன் காதில் சென்ற ஒருவருஷமாக ஒலித்து வந்ததோ அந்தக்குரல்தான் அது—மல்லிகாவின் குரல்.

முன்பு இருந்த நடராஜன் இல்லை இப்பொழுது. எவ்வளவோ மாறிவிட்டான். அப்பொழுது, கலைப்பைத்தியத்தாலும், யௌவனத்தின் முரட்டுத்தனத்தாலும், தேக மனோ பலத்தாலும், பூர்ணமாகப் பிடிக்கப்பட்டிருந்தான். காதலின் நளினமும், இனிமையும் அந்த முரட்டுத்தனத்தின் முன்பு பயனற்றவையாயின. மல்லிகாவையும் அவள் காதலையும் திரஸ்கரித்தான்.

இப்பொழுது, வறுமையிலும் பிணியிலும் கிடந்து உழன்றபிறகுதான் அவனுக்குப் பெண்ணின் அன்பின் மகத்துவம் தெரியவந்தது. அதுவும் மல்லிகாவை அடைய எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று இப்பொழுதுதான் உணர்ந்தான். வெய்யிலில் இருந்தவர்களுக்குத்தானே நிழலின் அருமை தெரியும். அவள் குரலில் ஒலித்த குறும்பு அவனை அறியாமல் அவன்முகத்தில் புன்னகையை வரவழைத்தது. ஆனால் அவள் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது? கொஞ்சம் யோசித்தான். ''அதுவா, அது வந்து......'' என்று இழுத்தான்,

''சொல்லுங்கள்'' என்றாள் ஜமீன்தாரிணி. நடராஜனும் படபடப்பாகவே,

''மல்லிகா ஒரு வர்ணக்குப்பியை அதன்மேல் விட்டெறிந்தாள். அதை நான் தடுத்துவிட்டேன். ஆனாலும் கொஞ்சம் திவலைகள் தெறித்துவிட்டன'' என்றான்.

''அவளுக்கென்ன பைத்தியமோ? எதற்காக விட்டெறிந்தாள்?'' என்றாள் ஜமீன்தாரிணி.

சபையில் கொல்லென்ற சிரிப்பு.

நடராஜனுக்குக் கோபம்வர ஆரம்பித்தது. ஆனாலும்திடீரென ஒருயோசனை தோன்றிற்று.

''அவளுக்கு ஏதோ கோபம்!' என்றான்.

''ஏன் கோபம்'' நடராஜன் சளைக்கவில்லை.

''நான் அவளைச் சரியாக நடத்தவில்லையாம்''

''எந்த விதத்திலோ?', இந்தக் கேள்வியை அவள் கேட்டவிதம் வர்ணிக்க முடியாது. அதில் நிரம்பியிருந்த கேலியையும் நையாண்டியையும் அவள் குரல் எடுத்துக் காட்டியது. சபையோர் மறுபடியும் சிரித்தனர்.

நடராஜன் முகம் சிவந்தது, வெட்கத்தால், கேலி செய்கிறாள் என்று கோபமும் வந்தது. காதல் உணர்ச்சியும் சேர்ந்தது. இந்த உணர்ச்சிகளின் வேகத்தை வறுமையினாலும் பிணியினாலும் வாடின அவன் உடலால் தாங்க முடியவில்லை. அவன் மூர்ச்சையானான்.

ஜமீன்தாரிணி 'ஆ' வென்று கதறிவிட்டாள். உடனே சபை கலைக்கப்பட்டது.

மல்லிகாவின் அரண்மனையிலேயே ஓர் அறையில் அவனை வைத்து அரண்மனை வைத்தியர்கள் அவனுக்குச் சிகிச்சை செய்தார்கள்.

— 4 —

பிறைமதி முழுமதியாய் பின்னும் தேய்ந்து மறுபடியும் வளர்ந்துகொண்டே வருங்காலம்.

நடராஜன் தன் அறையில் அங்குமிங்கும் மனக்கொந்தளிப்புடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தான். அன்று ஜமீன்தாரிணியைப் பார்த்து விடைபெற்றுக் கொண்டு புறப்படுவதாக இருந்தான்.

மூர்ச்சையான பிறகு முதல் சில வாரங்களுக்கு இன்பமயமான ஸ்வர்க்கலோகத்தில் இருந்தான். சிசுருஷை செய்ய அரண்மனை ஆட்கள், புஷ்பங்கள், பழங்கள். எல்லாவற்றிலும் மேலாக இனிய மல்லிகாவை யடைந்துவிட்டோம் என்கிற சந்தோஷம். தன் காதலை வெளியிட்டு அவளை அடையலாம் என்ற நம்பிக்கையால் உற்சாகத்துடன் இருந்தான்.

இந்த இன்பமயமான போதையில் இருந்த அவனை ஒரு வாரத்துக்குமுன் நடந்த சம்பவம் அதிரிடிபோல் அசத்திவிட்டது.

ஒருவாரத்துக்குமுன் ஒருநாள் ஓர் ஆள்வந்து அவனிடம் சில பழங்களைக் கொடுத்துவிட்டு, ''ஜமீன்தார் கட்டளையால் கொடுக்கப்பட்டன.'' என்று சொன்னான். ஜமீன்தார் என்றான் நடராஜன். ''ஆமாம் எசமான்! ஜமீன்தார்! தான்'' என்று சொல்லிவிட்டு அந்தஆள் போய்விட்டான்.

நடராஜன் மனம் படாதபாடு பட்டது. சஞ்சலத்தில் மூழ்கித் தத்தளித்தான். ஜமீன்தார் என்றால் மல்லிகாவின் தகப்பனார் அல்லது சகோதரனாகஇருக்கலாம் என்கிற நம்பிக்கைதான் அவனுக்கு உயிருடனிருக்கச் சக்தி அளித்தது. ஆனாலும் மல்லிகாவின் கணவராயிருந்தால் என் செய்வது என்ற ஏக்கம். கேட்பதற்கும் பயம். கணவர்தான் என்று சொல்லப்பட்டால்.........!

ஆனாலும் ஓர் அதிகாரியிடம் கேட்டுவிட்டான். அவனுடைய நம்பிக்கை அடியோடு ஒழிந்தது. கணவர்தான் என்று சொல்லப்பட்டான்.

அவன் பட்ட வேதனைக்கு அளவில்லை. மனதில் விகாரமான யோசனைகள் தோன்றின. 'ஜமீன்தாரைக் கொலைசெய்துவிட்டால்!'

இந்த வேதனையையும் மனச்சஞ்சலத்தையும் ஒழிக்க எங்காவது சென்று மல்லிகாவை மறப்பது என்று தீர்மானித்தான். தேனை மறக்க வண்டால் முடியாதென்பதை மறந்துவிட்டான்.

காலை சூரியோதயமாகும் சமயத்தில், உலகம் உறக்கத்தினின்றும் விழித்துக்கொள்ளும் சம

யத்தில் மல்லிகாவின் முன்னிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

நடராஜன் ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தான் அவளை. குங்குமம்போல் சிவந்த செந்நிறப் பட்டுச்சேலை கட்டியிருந்தாள். காலில் தங்கக் கொலுசுகள். இருந்தும் இல்லாததுபோன்ற அவளிடையில் சிகப்பும் வைரமும் பதித்த ஓர் ஒட்டியாணம். மேனியில் வைர ஆபரணங்கள். கரு நீலோத்பலத்தை வென்ற கண்களுடன், பவழத்தைப் பழித்த இதழ்களுடன் முத்தை வென்ற பற்களால் விளங்கும் முல்லை முறுவலுடன் உஷா தேவி மனித உருவம் எடுத்து வந்தது போல் தோன்றினாள்.

நடராஜன் மனவேதனை அதிகமாயிற்று. தலையைக் குனிந்துகொண்டான். உணர்ச்சியற்ற குரலுடன்,

"நமஸ்காரம். இவ்வளவு உதவியளித்ததற்கு மிக்க வந்தனம். எனக்கு உத்தரவு தரவேண்டும். நான் சென்று வருகிறேன்" என்றான்.

"ஏன் இப்படி அவசரப்படுகிறீர்கள்? கொஞ்சநாள் இருந்து எங்களுக்குச் சந்தோஷத்தையளித்துவிட்டுப் போகலாமே" என்றாள்.

"இல்லை, மன்னிக்கவேண்டும். இவ்வளவு நாட்களாகவே உங்களுக்குச் சிரமத்தை அளித்துவிட்டேன். இப்பொழுது போக விடை கொடுங்கள்."

"எங்களுக்கு ஒன்றும் சிரமமில்லை. ஒரு வேளை உங்களுக்குச் சிரமமாக இருக்கிறதோ என்னவோ, இங்கு இருப்பதற்கு"

"அதெல்லாம் ஒன்றுமில்லை............ஆனால் நான் அவசியம் போகவேண்டும்"

"சரி. அப்படியானால் சென்றுவாருங்கள். ஜமீன்தாரரையும் பார்த்து விடைபெற்றுக் கொண்டுசெல்லலாம், வருகிறீர்களா? அழைத்துச் செல்கிறேன்." என்றான்.

சற்றே தயங்கின நடராஜன் பிறகு, 'ஆஹா. அப்படியே' என்று பின்தொடர்ந்தான்.

மூடின கதவுயுள்ள ஓர் அறையைக் காண்பித்து, மல்லிகா—

'உள்ளே யிருக்கிறார்......சென்று பாருங்கள்' என்றாள்.

நடராஜன் பதில் பேசாமல் கதவைத்திறந்தான். உள்ளே ஒருவருமில்லை. எங்குப் பார்த்தாலும் அவன் பிரதிபிம்பம்தான் நிலைக்கண்ணாடிகளால் நிறைந்த அறையினுள் தெரிந்தது.

மல்லிகா பக்கம் திரும்பினான். விஷமப் புன்னகையுடன் "அதோ இருக்கிறாரே" என்று ஒரு கண்ணாடியைக் காண்பித்து, "விடை பெற்றுக்கொள்ளுங்கள். போகவேண்டாமா?" என்றாள்.

நடராஜன் கண்ணாடியைப் பார்க்கவில்லை. அவளைத்தான் கண்களால் பருகுகிறான். அவன் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியின்முன் அவள் வெட்கமுற்றுத் தலை குனிந்தாள். அவள் கன்னங்களில் ரோஜா மலர்ந்தது. கண்களில் நக்ஷத்திரங்கள் நடனம் புரிந்தன.

கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்



தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது. மிகவும் சுத்தமளிக்கும் சடங்காச்சார ஸ்நானங்களுக்கு அதிசுயமான ஸோப்பை மட்டுமே நாம் உபயோகிக்க வேண்டும். ஸோப்பில் ஏது கலப்புமிருக்கலாம். ஆனால், கோத்ரெஜ் ஸாண்டலில் நன்மைதரும் கலப்பற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே, கோத்ரெஜ் சௌந்தரியப் பொருட்களிலெல்லாம் உள்ளன போன்று, தனிமைப்பட உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. வெறுக்கத்தக்க மிருகக் கொழுப்புகள் யாதும் அவைகளில் இல்லை. சுய மைசூர் சந்தனத் தைலம் யதேஷ்டமாய்ப் பொருந்தப்பெற்ற கோத்ரெஜ் சந்தன ஸோப்பானது இன்பமான குளிர்மை, இதம், மணம் இவைகளையுடைய நுரையையளிக்கும். எனவே, சரீரம் கடவுளின் கோவிலாயிருக்க, அதைத் தூய்மைப்படுத்த கோத்ரெஜ் தாவர வஸ்து ஸாண்டல் ஸோப்பல்லாது வேறெதுதான் ஏற்றதாகும்?



கோத்ரெஜ் விம்டா - கிருமிகளைக் கொல்லவும் சௌஸ்தமளிக்கவும் வல்ல வேம்பின் குணங்களையுடைய ஸோப்.

Godrej Sandal
"chavi" brand

கோத்ரெஜ் சாவி மார்க் ஸாண்டல்
ஸ்நான ஸோப்

கோத்ரெஜ் ஸோப்ஸ் லிமிடெட்
சென்னை: 164, பிராட்வே.
கோயமுத்தூர்: 3, தாமஸ் வீதி.

★ சைபால் ★

CIBOL

(Registered)

★

முகப்பரு, சேத்துப்புண், சொறி சிரங்கு, வேனல்கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

★

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:

THE SOUTH INDIAN MFG. CO.

MADURA.

சமரசம்

"சித்ரா"

ஆண்டவன் அருள் ஒளி பலவர்ண வாழ்வின்மீது விழுகிறது. 'அவன் நிறம் பச்சை' என்று ஒருவர் கூறுகிறார். 'பச்சை இல்லை' 'நீல மேக வர்ணம்' என்று மற்றொருவர் வாதுக்கு இழுக்கிறார். 'பச்சையும் இல்லை நீலமும் இல்லை' 'பொன்னார் மேனியன்' என்று ஆவேசம் பொங்கப் பேசுகிறார், இன்னொரு வாதி. இவ்வாதங்களை கேட்டுப் புன்னகை புரிகிறான் அம்மாயோன். உலகச் சிருஷ்டி உதயகாலம் முதற்கொண்டு அநேக கனவுகள் காண்கிறான் மனிதன். அவ்வப்பொழுது அவன் மனத்தில் எழுகின்ற கனவுகள் கருத்துக்கள் அவனை ஆட்டிவைக்கின்றன. புதிய புதிய வாழ்வு நடத்துகிற புதிய மனிதன் தோன்றுகிறான். அவன் காண்கின்ற கனவுகளும் புதிய கனவுகளாகத்தான் விரிகின்றன. புதிய கனவுகளுக்கும் பழைய கனவுகளுக்கும் போராட்டம் நிகழ்கின்றது. எல்லாக் கற்பனைகளுக்கும் எல்லாக்கனவுகளுக்கும் கடவுளின் நிலை இடந் தருகிறது. ஒரு கற்பனையாலாவது அவ்விச்வாகார நிலைமை முழுவதும் அறிய முடிகிறதில்லை. மனம் தடுமாறுகின்றது, தத்தளிக்கின்றது. சொற்கள் சோர்வடைகின்றன, மனம் வாக்குக்கெட்டாதது என்று வேதம் அறைகின்றது. 'கடவுள்' என்ற சொல்லே அக்கருத்தைச் சுட்டுகிறதன்றோ? இது என்று சொல்லரமல் 'இருளுக்கப்பால்' என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. உபநிஷத்துக்களுக்கு உரைசெய்த மேதாவிகள்தாம் ஒரு துறையில் நின்று பேசுகின்றார்களா? இல்லை. அபிப்பிராயபேதங்கள் வந்துவிடுகின்றன. மூன்றுவிதமான வாதங்கள் தோன்றிவிட்டன. வாதிகள் இறந்தனர். வாதங்கள் ஓய்ந்தபாடில்லை.

இன்னதென்று கூறமுடியாத பரம்பொருளை அவரவர் சிற்றறிவுக்குத் தகுந்தபடி சித்திரிக்க முயல்கின்றனர். மனத்தியல்புக்கேற்றவாறு சுவர்க்க நரகங்களும் ஏற்படுகின்றன. மனிதன் தன் குறைகளைத் தீர்த்துக்கொள்கிறான். பாலைவனத்தில் இருப்போன் பரமபதத்தை ஒரு தண்ணீர்க்காடாகத்தான் வர்ணிப்பான். தண்ணீரில்லாத கஷ்டம் அவனைப் அப்படித் தூண்டுகின்றது. வெட்டு குளிர், கவ்வு இருட்டு சூழ்ந்த நாட்டிலுள்ளோன் இன்ப வெப்பம் தரும் ஒளிமிக்க நாடாக வைகுந்தத்தை வர்ணிப்பான். எத்தனை உள்ளங்களுண்டோ, அத்தனை மதங்களும், அத்தனை நரக சுவர்க்கங்களும் ஏற்படும். இது மேலா, அது மேலா என்ற சர்ச்சையில்தான் உட்கசப்பும் சீற்றமும் எழுகின்றன. இதை நோக்கியே "சமய கோடிகளெல்லாம் தம் தெய்வம், என் தெய்வம் என்று" ஆண்டவன் பொருட்டும் வழக்கிடும்நிலை என்றார் தாயுமானவரும். சாதி மதச் சழக்குகளில் நீங்கள் அழிவது அழகலவே என்று இராமலிங்க சுவாமிகளும் இரங்கிப் பாடுகின்றார். இப்போது நோக்கை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் ஒரு மஹான் கண்டுவிட்டார். ஒவ்வொரு மதமும் சிதறிய ஞான ஒளி என்று அவர் தேர்ந்தார்.

ஆண்டவனுடைய நிறம், அலங்காரம், திருநாமம், வடிவம் இவைகள் இன்னவை என்று பிறருக்குச் சமயிகள் சொன்னாலும் இவைகள் அவர்களுடைய ஞானச் சிறு விளக்கால் சற்று ஒளி பெற்றனவே ஒழிய மாயோனுடைய ஒப்புயர்வு அற்ற மஹிமை முற்றும் தென்படவில்லை.

நிறமுயர் கோலமும் பேருமுருவு மிவை
யிவை யென்று
அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலும்
அங்கங் கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர் விளக்காய்
நின்றதன்றி யொன்றும்
பெறமுயன் றாரில்லையால் எம்பிரான
பெருமையையே

இப்பெரிய உண்மையை அறிந்தே பிறமத கண்டனங்களில் நம்மாழ்வார் இறங்கவில்லை. மற்ற ஆழ்வார்கள், நாயன்மார்கள், இவர்கள் பாடல்களை வைத்துக்கொண்டு நோக்கும் பொழுதுதான் இவ்வாழ்வாரின் சமரச பாவனை நன்கு விளங்கும்.

ஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகங்களில் பத்தாம் பாட்டுச் சமணரை இழித்துக் கூறும் பாட்டாயிருக்கும். திருநாவுக்கரசும் இவ்விஷயத்தில் பின் வாங்குகிறதில்லை. திருமாலைக் குறை கூறுகிறார்.

ஆழியான் அன்னத்தானும் அன்றவர்க்
களப்பரிய
பாழியரர் பரவியேத்தும் பழனத்தெம்
பரமனாரே!

சமணர் பௌத்தர்கள் இவர்களை இவர் தூற்றுகிறார்.

தண்டரே சமணர் தறியறியாது நின்று
கண்டரே கருதுவார்கள் கருத்தென்னா-
தொழிமினீர்கள்

சைவர்களுக்கும் சமணர்களுக்கும் போராட்டம் இருந்ததைப்பற்றிச் சந்தேகமில்லை. வைஷ்ணவர்கள் பிறமதங்களைப் பிணச்சமயங்கள் என்று சிந்திக்கின்றனர். திருமழிசை ஆழ்வார் பாடியிருக்கும் பாடல் இங்கே நோக்கத் தகுந்தது.

பேசப் பெறாத பிணச் சமயர் பேசக் கேட்டு
ஆசைப்பட்டு ஆள்வார் பலர்
அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில்—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலால் இன்று

இப்படி வாய்கயப்புற மொழிகிறார் திருமழிசை ஆழ்வார். அரங்கனைத் தொழாதவரின் தலைகளை அறுப்பேன் என்று தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் உலகங் கேட்கச் சாற்றுகிறார்.

வெறுப்போடு சமணர் முண்டர் விதியில்
சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரியனகள் பேசிப் போவதே
நோயதாகிக்
குறிப்பெனக்கடையுமாகில் கூடுமேல்
தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்க
மாநகருளானே

ஆனால் திருமாலுக்குத் தொண்டு செய்கிற எந்தக் குலத்தையும் சிலாகித்துப் பேசுகிறார்.

பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர் களேலும் எம்மடியார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மின்
என்று நின்னோடும் ஒக்க
வழிபட அருளினாய்போல் மதிள்
திருவரங்கத்தானே

பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் இச்சுருதியில்தான் பாடுகிறார். சிவபிரானுக்குத் தொண்டுசெய்கிற எவரும் வணங்கத் தகுந்தவர் என்று அப்பர் மொழிகிறார்.

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே
குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து
எத்தனை
நலந்தானிலாத சண்டாள சண்டாளர்
களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்
காளென்று உள்
கலந்தார் அடியார் தம் அடியார்
எம்மடிகளே

இப்படி நம்மாழ்வார் பாடினாலும் அவருடைய மனப் பண்பு வேறு. எல்லோரையும் திருமால் உருவங்களாகப் பார்க்கின்றார். பல்வேறு மதங்களை ஒரே கடலில் கலக்கின்ற பல்வேறு ஆறுகளாக அவர் கருதியுள்ளார். எத்தெய்வத்தை வணங்கினாலும் அவ்வணக்கம் திருமாலுக்குப்போய்ச்சேரும் பல துறைகளைப் பகவான் காட்டியுள்ளான். பல தெய்வங்களையும் அவன் நாட்டினான்.

வணங்கும் துறைகள் பலபல வாக்கி
மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவை
யவைதோ
றணங்கும் பலபல வாக்கிநின் மூர்த்தி பரப்
பிவைத்தாய்
இணங்கு நின்னோரை யில்லாய் நின்கண்
வேட்கை யெழுவிப்பனே

அவரவர் தம்தம் கடவுளை வணங்குகின்றனர். அவரவர் இறையவர் குறைவிலர். ஆண்டவன் அவ்வுருவு தாங்கிக் காட்சி அளிக்கிறான்.

அவரவர் தமதமது அறிவறி வகை வகை
அவரவர் இறையவர் என அடி
யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

இது கீதையின் ஒரு சுலோகத்து மொழிபெயர்ப்பாய்த் தோன்றினாலும் அது ஒரு வெறும் மொழிபெயர்ப்பன்று. தம் அனுபவத்திலிருந்து சுரந்து வந்த அமுதவாக்கென்று கொள்ளவேண்டும்.

“இலங்கித்திட்ட புராணத்தீரும் சமணரும்
சாக்கியரும்
வலிந்து வாதுசெய் வீர்களும் மற்றும்
தெய்வமு மாகிநின்றான்”

என்ற பாசுரம் நம்மாழ்வாரின் பொது நோக்கை நன்கு காண்பிக்கிறது.

முடிவில் ஒரு பெரும் பாழ்தானா? நல்லதோர் சோதியா? ஞான இன்பந்தானா? இக்கேள்விகளெல்லாம் அவர் கேட்கின்றார்.

சூழ்ந்தகன்று ஆழ்ந்துயர்ந்த முடிவில்
பெரும் பாழேயோ
சூழ்ந்ததனில் பெரிய பரநன் மலர்ச் சோதீயோ
சூழ்ந்த தனில் பெரிய சுடர்ஞான
இன்பமேயோ

ஏதாவது ஒரு தெய்வத்தை நம்பி வழிபடுவாயாக.

அவா வறச்சூழ் அரியை, அயனை, அரனை அலற்றி. வீடு அடைவாயாக. ஆண்டவன் உண்மை நிலை அறிவது சாதாரண காரியமில்லை.

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று உயர்ந்துரு
வியந்த இந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலும் இறைநிலை
உணர்வரிது உயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்து ரைத்து
அரியயனரனென்னும் இவரை
உணர்ந் துணர்ந்துரைத் துரைத்து
இறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே.

அவனுடைய உணர்வுகொண்டு அவனை அடைந்துவிடலாம். எத்திறத்தாருக்கும் வைகுந்தநீள் வாசல் திறக்கும். விண்ணகம் புகுவது மண்ணவர் விதியே.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இந்த மலரில் "பெவர்லி நிக்கலஸ்" என்பவரைப்பற்றி எழுதப்போகிறேன். பெவர்லி நிக்கலஸ் என்பவர் யார் என்று கேடபீர்களோ? அவர் ஒரு பெரிய இவர்! அவ்வளவு தான்! வேறு ஒன்றும் சொல்ல முடியாது. அவர் ஒரு வெள்ளைக்கார ஆசிரியர். அநேக புத்தகங்கள் எழுதியிருக்கிறார். சமத்காரமான எழுத்தாளர் என்று கீர்த்தி பேற்றவர். சென்ற வருஷம் இந்தியாவுக்கு வந்தார். நம்முடைய துரதிர்ஷ்ட வசத்தால் ஏதோ நோய் வந்து ஆறுமாத காலம் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அந்தகாரணத்தால் நம் தேசத்திலுள்ள ஈ எறும்பு எண்ணாயிரம் ஜாதிகளின் மேலும், கல் மண் புல் பூண்டு எல்லா வஸ்துக்களின்பேரிலும் அபரிமிதமான வெறுப்புக்கொண்டு, இந்தியா தேசத்தைப்பற்றிச் சந்தி சிரிக்கும்படி ஒரு புஸ்தகத்தில் எழுதித் தள்ளிவிட்டார். நம் தேசத்து ஜனங்கள், அவர்களுடைய நடவடிக்கைகள், நாகரிகங்கள், பழக்க வழக்கங்கள், கொள்கைகள், எல்லாவற்றையும் முன் ஏழு தலைமுறை பின் ஏழுதலைமுறையைச் சேர்த்து நாக்கில் நரம்பில்லாமலும், வாயில் வர்ணாச்ரமம் இல்லாமலும் திட்டி எழுதியிருக்கிறார். ஆதலால் 'அவர் ஒரு பெரிய இவர்' என்று சொல்லிவிட்டுச் சும்மாவிருக்கும்படி ஏற்பட்டிருக்கிறது.

நம் தேசத்தைப்பற்றி ஏளனமாக எழுதியவர் அநேகர் உண்டு; இன்னும் அநேகர் வருவார்கள் என்றும் சொல்லலாம். ஆனால் பெவர்லி நிக்கலஸ் என்பவர் அவர்களில் ஒரு நூதன ஸ்ருஷ்டி. ஏனென்றால், இவர் நமக்கு ஒரு அன்பர்மாதிரி காட்டிக்கொண்டு, நமது ராஜதானியில் ராஜாங்கம் ஒன்றில் அநேக சௌகரியங்களை அனுபவித்துட்டு, ராஜாங்கத்தின் ஆதீனத்தில் அவருக்காகப் பிரத்தியேகமாகத்தயாரிக்கப்பட்ட சங்கீதக் கச்சேரி ஒன்றைக்கேட்டுவிட்டு, அந்த ராஜாங்க சமஸ்தான அதிபதியுடனும் சரஸ சல்லாபம் செய்துவிட்டு, பிறகு அவர் எழுதிய புஸ்தகத்தில் நமது கர்னாடக ஸங்கிதத்தைப்பற்றியும், வாத்தியங்களைப்பற்றியும், சங்கீத சாஸ்திரத்தைக் குறித்தும் எழுதத் தகாத துச்ச வார்த்தைகளால் நிந்தித்து எழுதியிருக்கிறார். நம்முடைய அந்தஸ்தும் நாகரிகமும் இவ்வளவு தாழ்மையான ஸ்திதிக்கு வந்திருப்பது இவருடைய புஸ்தகத்தைப் படித்தபிறகுதான் தெரிகிறது.

இப்பொழுது நடந்த விஷயத்தைக் கவனியுங்கள். நிக்கலஸ் துரை சமஸ்தான வித்வான்கள் செய்த ஒரு சங்கீதக் கச்சேரியைக் கேட்டாராம். அதைக் கேட்டுவிட்டு, தம் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார். மூன்று அங்கங்களில் சேற்றையும் மண்ணையும் கலக்கி நம் மேல் வீசுகிறார். அவர் எழுதிய விஷயங்களின் சாராம்சத்தைப் பின்னே சொல்லுகிறேன் கவனியுங்கள்.

நிக்கல்ஸ் துரையவர்களின் வர்ணனைகள்.

"ஆர்க்கஸ்ட்ராவைச் சேர்ந்த வித்வான்கள் பதின்மூன்று ஆட்கள் (சோடசத்துக்குப் பதினாறு என்பார்கள், இதில் மூன்று குறைவுபோலிருக்கிறதே என்கிறான் அம்மாஞ்சி) ஐந்து வீணைகள், இரண்டு தம்புராக்கள், இரண்டு மிருதங்கங்கள், ஒரு தபேலே, ஒரு புல்லாங்குழல், இரண்டு பிடில்கள் இவ்வளவும் இருந்தன. பாடப்போவது என்னவென்று ஒரு காகிதத்தில் எழுதிக்கொடுத்தார்கள். முதல் உருப்படி ஹிந்துஸ் ஆனி போர்காஹி மில நாபா: ஆஸாவாரி: த்ரிலாலா: தியாகராஜா. (இது என்ன பாஷை என்று கேட்கிறான் அம்மாஞ்சி. எழுதினவன் பைத்தியக்காரனா, அல்லது படித்தவனா, தற்குறியா ஒன்றும் தெரியவில்லை). இந்த உருப்படியைப் பாட ஆரம்பித்தவுடன் கலாடா ஆரம்பித்தது. எனக்கு விழி பிதுங்கிவிட்டது. பாடிய கிழவரின் கண்டத்திலிருந்து ஒலித்த சப்தம் காதால் கேட்க முடியவில்லை. மென்னைத் திருகப்பட்ட பன்றிகள், கனைக்கும் குதிரைகள், கொக்கரகோ என்று கதறும் வான்கோழிகள், எல்லாம் சேர்ந்து சப்தங்கள் செவியில் விழுந்தன. இந்த உருப்படி முடிந்தபின் இரண்டாவது உருப்படியைப் பாடினார்கள். அதாவது, "ஸ்ரீ ராகவேந்திரா, கௌளீபந்து, ஆதிதாளம், வைணிகப் பிரவீண வெங்கடகிரியப்பா

தேசத்தின் சேவைக்கு

சிறந்த பொருள்களைத் தயார் செய்து கொடுத்துவரும் எமது கைத்தொழில் ஸ்தாபனம் தன் சேவைக்கு நியாயமான பெருமை கொள்ளுகிறது.

அகண்ட பாரதத்தின்

பல்வேறு திசைகளிலிருந்து விஜயம் செய்யும் லக்ஷக்கணக் கானவர்களையும் மகாமக பொருட்காட்சியில் எமது ஸ்டா லுக்கு விஜயம் செய்யப் பணிவுடன் அழைக்கிறோம்.

ஸ்ரீராம் சாக் & இன்டஸ்ட்ரியல் பாக்டரி
கும்பகோணம்

"நேஷனல்" இங்க்
"நேஷனல்" அரக்கு குச்சிகள்
"நேஷனல்" ரப்பர் ஸ்டாம்பு இங்க்
"நேஷனல்" இங்க் பவுடர்
"சிங்கம்" மார்க் சாக்கு குச்சிகள்

மஹாமகம் ஜவுளி

மஹாமகம் நெருங்குகிறது. எல்லோரும் நீர் ஆடி புது ஆடை அணிந்து குதூகலமாய் இருக்கவேண்டிய காலம். உங்கள் தேவைக்குகந்த எல்லாவிதமான ஜவுளி தினுசுகளும் ஏராள மாய் எங்களிடம் கிடைக்கும். புத்தப் புதிய ஜவுளிகள்.

— நாகரிகமும் நாணயமும் உள்ளது. விலையில் நயம். —

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

நியூ பஜாரிஸ் ஹால்

பெரிய தெரு :: கும்பகோணம்

என்பது (சரி, இது சப்த வக்ரமற்று இருக்கிறது என்கிறான் அம்மாஞ்சி) இந்த உருப்படி பாடியபோதும் சப்தங்கள் கேட்கச் சகிக்கவில்லை. தபேலா வாசித்தவருடைய கூப்பாடு பிரமாதமாயிருந்தது. (லயவாத்தியக்காரர் பாடுவதுண்டா என்கிறான் அம்மாஞ்சி) பிறகு நான் இந்த ஸங்கீதத்தை ஸ்வரப்படுத்தினேன். வித்வான்களை மெல்ல மெல்லப் பாடச்சொன்னேன். ஸ்வரப்படுத்தினதில் எனக்கு ஒன்றும் குதிரவில்லை. நான் ஸ்வரப்படுத்திய காகிதத்தைப்பார்த்தால் ஒருபைத்தியக்காரன் உளறிக்கொண்டிருந்தது போலும் ஒரு குருடன் எழுதிய எழுத்துக்கள் போலும் காணப்பட்டன. (யார் பைத்தியக்காரன், யார் குருடன், விஷயம் தெரிந்து சொன்னால் நன்றாயிருக்கும் என்கிறான் அம்மாஞ்சி)

இந்த வர்ணனை இப்படியிருக்க, நிக்கலஸ் துரையின் அபிப்பிராயங்களைக் கவனிப்போம்—அவர் சொல்லுகிறார்:

1 இந்திய சங்கீதத்தில் உருப்படியென்பது கிடையாது. வாக்கேயர்கள் கிடையாது. இந்திய சங்கீதத்தை எழுதமுடியாது. ஆதலால் ஒரு ஊரிலுள்ள சங்கீதம் வேறொரு ஊருக்குப் பரவாது. வங்காளி சங்கீதத்தைச் சென்னையில் கேட்டால் சிரிப்பார்கள். சென்னையில் செல்லக்கூடிய சங்கீதம் கொச்சியில் கேட்பவர்களுக்குத் தலைகால் புரியாது.

2 இந்திய சங்கீதம் என்பது சமயோசித சுயங்கவன சங்கீதமே யொழிய நிர்ணயமான சாஸ்திர சம்பந்தப்பட்டதல்ல.

3 இந்திய சங்கீதம் இன்னும் பிறக்கவில்லை. இன்னும் கர்ப்பத்திலேயே இருக்கிறது.

4 காகிதத்தில் எழுதக்கூடாத சங்கீதம் என்ன சங்கீதம்? எழுத்துக்கு உதவுபடியில்லாத சங்கீதம், ஒரு மடையன் சொல்லும் கதையைப்போலல்லவோ?

5 வீணை யென்னும் வாத்தியம் வெகு தூரத்திலிருந்து கேட்கலாமே யொழிய கிட்டேயிருந்து கேட்பவனுக்கு விகல்ப வேதனை அதிகரிக்கும்.

6 இந்திய சங்கீதத்தில் சப்த சுகம் என்பது கிடையாது. சாரீர சௌக்கியம் முற்றிலும் அனாவசியம். பாடுபவன் சுந்தர புருஷனாகவும், பிரபலமான வித்வானாகவும் இருந்தால் அவன் பாடுவதெல்லாம் சரி.

நேயர்களில் அனேகர் பெவர்லி நிக்கலஸ் எழுதிய புத்தகத்தை வாசித்திருக்கமாட்டார்கள். மேலே நான் எழுதியதைப் படித்தால் போதும்; புத்தகத்தின் சாராம்சம் விளங்கிவிடும். ஆனால் அவரைப் பழித்துப் பயனில்லை, நம்முடைய புத்தி ஹீனம், தௌர்ப் பாக்கியம் ஏழ்மைத்தனம் எல்லாவற்றையும் நாம் குறைத்துக்கொள்ள முயன்றால் போதும். அதற்காகவே இந்த வியாஸத்தில் இந்த விஷயத்தைப் பற்றி மாத்திரம் எழுதி நிறுத்திக்கொள்ள நிச்சயித்தேன்.

அம்மாஞ்சி சொல்வதைக் கேளுங்கள். முதலாவது, இந்த நிக்கலஸ் துரைக்கு நம்முடைய சங்கீதத்தை ஊட்டும்படி ஏற்பட்ட கர்மசிரத்தை நம் நாட்டில் ஒரு மஹாராஜாவுக்குத்தானா வாய்க்கவேண்டும்? ஆங்கில தேசத்திலிருந்து நம் நாட்டுக்கு வரும் பேர்வழிகளுக்கெல்லாம் நம் நாட்டிலுள்ள ராஜாங்கங்களும், மாளிகைகளும்தானா கொல்லை வழிகள்? அவர்கள் காலால் உதைக்க நம்முடைய தலைப்பாகையை ஏன் குனிந்து காண்பிக்கவே

பெண்களின் அழகையும் ஆரோக்கியத்தையும் நாளுக்கு நாள் க்ஷீணித்து பலஹீனம், கைகால் களைப்பு, உணவில் வெறுப்பு, நாவரட்சி, வயிற்றுவலி, இடுப்புவலி, ஓயாத தலைவலி, சந்தான விருத்திக்குத் தடை இவைகளுக்கு மூலகாரணமாயிருப்பது

வெள்ளை என்ற கொடிய நோய்

டாக்டர் கோச்சையா அவர்களால் தயாரித்த

மேக ராஜன்

மிகவும் கைகண்ட ஔஷதம். பத்தியமில்லை.

20 நாள் மருந்து அடங்கிய புட்டி ரூ. 3

ARYAN MEDICAL HALL 100, L. J. ROAD, BOMBAY, 16

ண்டும்? இரண்டாவது, நம்முடைய சங்கீதத்திலுள்ள சாஸ்திர விதிகள் என்னவென்று தெரியாத ஒரு மனிதனுக்கு, ஆஸ்தான வித்வான்களை வைத்தா கச்சேரி செய்யச்சொல்வது? ஆஸ்தான வித்வான்கள் இத்தகைய பணிவிடைசெய்வதற்காகவா ஏற்பட்டிருக்கிறார்கள்? நம் நாட்டிலேயே பிறந்துவளர்ந்து வசித்து வரும் நமக்கே, நம்முடைய சங்கீதத்தினுடைய நுட்பங்கள் தெரிய வருஷக்கணக்காகக் காலம் வேண்டியிருக்கிறதே! மேல் நாட்டுப் பேர்வழிகளுக்கா ஒரு கச்சேரியில் விஷயம் தெரிந்துவிடும்?

ஆனால் நமக்கு இந்த மாதிரி சாட்டையடி வேண்டியதுதான்! வெள்ளைக்காரர் ஒருவரைப் பார்த்தவுடன் நமக்குச் சாதாரணமாகவே உடம்பெல்லாம் பூரித்துப்போய்விடுகிறது. துரையொருவர் வீட்டுக்கு வருகிறார் என்றால் ஒரு நாள் ஒரு கூத்துக்காக மீசையைச் சிரைக்கத் தயாராயிருக்கிறோமல்லவா? நம் இனத்தினரில் எவ்வளவு பெரிய மனுஷாளாயிருந்தாலும் நம் வீட்டுக் கலியாணங்களிலோ, விசேஷ தினங்களிலோ அவர்களை நாம் பாய், மணை, இவைகளில் அமர்த்துவோம். அரைக்கால் சட்டை போட்டுக்கொண்டிருக்கும் ஜான் ஸ்மித் ஒருவர் வந்துவிட்டால் அவரை ஒரு நாற்காலியில் அமர்த்தி, அவருக்கு மாலைபோட்டு அவருடன் நின்று பல்லைக் காட்டிக்கொண்டு சல்லாபிப்போம். நாள்தோறும் பழகிக்கொண்டிருக்கும் பக்கத்தாத்து மாமாவுக்கு நம்முடைய ஆத்துக்காரிகள் 'கதவின்பின் நின்று பதில் சொல்லவேண்டும். ஜான்ஸ்மித் துரை வந்தால், வெள்ளைக்கார சம்பிரதாயத்தில் நாற்காலியில் அமர்ந்து, "கெக்கே பொக்கே" என்று நாலு வார்த்தைகள் பேசி அசடு தட்டினாலும் போகட்டும் என்று நடிக்கவேண்டும்! நம்முடைய கலியாணங்களிலும் துரைகள் துரைசானிகளுக்காகப் பிரத்தியேக டீ பார்டிகள் நடத்துகிறோம். அவர்கள் வந்தால் நம்மைப் பார்த்து மெச்சிக்கொள்ளவேண்டுமே யென்று, பிரத்தியேகமாகச் சோபாக்களும், ஆசனங்களும் செய்து வைக்கிறோம். அவர்

கும்பகோணம் A. D. சுல்தான்

சங்கீத வித்வான்

19—2—45 மஹாமகம் எக்ஸிபிஷன், கும்பகோணம்.

10—3—45 தமிழ் இசைச் சங்கம், திண்டுக்கல்.

31—3—45 அகில இந்திய ரேடியோ, திருச்சி.

களைக் காணவேண்டி, உடுக்கிறோம், கண்ட வஸ்துக்களை உட்கொள்ளுகிறோம், ஆடுகிறோம், பாடுகிறோம்! அவர்கள் எதிரில் மனைவிமார் களை "டார்லிங்க" என்றும் "டியர்" என்றும் அழைக்கிறோம். அவர்கள் சென்ற பிறகு "என்ன முழுமூடமாயிருக்கிறயே." என்றும் எரிந்து விழுகிறோம்! நம்மை அவர்கள் ஏளனம் செய்யும்படியாக நாம் நடந்துகொண்ட பிறகு, அவர்கள் செய்யும் அபசாரத்தைக் குறித்து நாம் விம்மி விம்மி அழுது என்ன லாபம்?

இனியாவது நம்முடைய ஈன ஸ்திதியையும் க்ஷீண புத்தியையும் அறிந்து நாம் கௌரவத்துடன் நடந்துகொள்ளவேண்டும். மேல்நாட்டுக்காரருக்கு நம்முடைய சாஸ்திரங்கள், கலைகள் இவைகளைப்பற்றி நன்ருகப் புகட்டவேண்டுமானல், தற்காலத்தில் நாம் செய்யும் ஒழுக்கங்கள் சரியானதல்ல. நமக்குப்பிரசாரம் போதாது. நம்முடைய கலைகளை நாம் விபரீதமாகப் போஷிக்கிறோமேயொழிய, சரியாகப் போஷிப்பதில்லை 'நம்முடைய ஆசாரங்களைப் பற்றியும், சாஸ்திரங்களைப்பற்றியும், கலைகளைப் பற்றியும் நிந்தனையாகப் பேசுவது, நமக்கு முற்றிலும் கௌரவக் குறைவு ஆனபடியால், நாம் இவைகளைப்பற்றி அந்நிய தேசத்தினருக்கு நன்ருக விளங்குமாறு நூல்களைச் சிருஷ்டிக்கவேண்டும், இதற்காகவே இந்து தேசத்திலுள்ள தலைவர்கள் முன்வந்து சிரமப்படவேண்டும். இந்தச் சந்தர்பத்தில் நிக்கலஸ் துரைக்கு நாம் வந்தனம் அளிக்கவேண்டும். நம்முடைய சங்கீதத்தில் ஏளனத்துக்கே விஷயம் அதிகமாயிருக்கிறது என்று அவர் எழுதிருரல்லவா? இனிமேலாவது நமக்கு ரோசம் வரவேண்டும். சுக சங்கீதம் வேறு, சப்த சங்கீதம் வேறு என்று உணர்ந்து, நம் கச்சேரிகளைச் சீர்திருத்தவேண்டும்.

நிக்கலஸ்துரைமீது அம்மாஞ்சிக்கு வருத்தமேயில்லை. அவர் ஸ்ருஷ்டிகர்த்தாவாகவே நமக்கு வந்திருந்தார். ஏனென்ருல் நம்மிடமுள்ள குறைகளை அவர் பதினுயிரம் மடங்கு அதிகப்படுத்திச் சொன்னபோதிலும், அவைகளைச் சம்ஹாரம் செய்து, சரியான ஒழுக்கங்களைப் புதிதாகச் சிருஷ்டிக்குமாறு நமக்கு இனிமேலாவது ஊக்கம் வருமல்லவா? அது போதும்.

29017
சென்னை-600 008



"ஏ கழுதை, ஏன் நிக்கறே, போ"

"இல்லிங்க......இந்த ரோடு குளத்துக்குப் போவுதுங்களா?"

"ரோடு குளத்துக்கும் போவல்லே, குட்டைக்கும் போவல்லே. அது இங்கேயேத்தான்......நவரு ஜல்தி......"

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள்:

சைனா பஜார், மாம்பலம், மைலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —

பிராஞ்சுகள்:

அமதலவால்ஸா	கும்பகோணம்	சாலூர்	திருச்சினாப்பள்ளி
அனகாபல்லி	மதுரை	சீயாழி	திலாரு (சிகாகோல்)
சிதம்பரம்	மருடேரு	தாடபல்லிக்கூடம்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	பாலக்காடு	தஞ்சாவூர்	விஜயபுரம் (திருவாரூர்)
காஞ்சீவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி ஜங்ஷன்	விருதுநகர்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
காரைக்குடி			

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.



T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 6000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். நமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T.V.S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக் காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

- ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கியாஸ், மேற்பார்வை செலவு குறைவு.
- மெகனம்:—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்.

வாங்குமுன் மாதிரிகளைப் T·V·S கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVSK - 7 TM



தென் இந்தியாவில்—
தேநீர் அருந்தும் நேரம்

ஹைதராபாத்துக்குத் தெற்கேயும், கிழக்கேயும் உள்ள புராதன குடும்பங்களில் நீண்டகாலமாய் இருந்துவரும் பழக்க வழக்கங்கள் அநேகமாய் மாறுவது கிடையாது. உபயோகம் ஏதாவது உண்டு என்பதாய் இருந்தால்தான் புதிய வழக்கங்கள் அங்கே புகமுடியும். வரவர மோட்டார் வண்டிகளில் பிரயாணஞ்செய்வது சகஜமாய்ப் போய்விட்டது. ஜாதிபேதமில்லாமல் ஒன்றாய்ப் பிரயாணஞ்செய்யும் இந்த பஸ்ஸுகள் வந்ததிலிருந்து ஜாதி வேற்றுமைகள் அவ்வளவாகப் பாராட்டப்படுவதில்லை. பிராமணர்கள் பிராமணரல்லாதவர்களுக்கு விருந்து உபசாரஞ்செய்வது இப்போது வெகு சகஜம். சிற்றுண்டி எதுவும் இல்லாமல் தேநீர் மட்டும் உபசரிக்கும் வழக்கம் ஜாதி வேற்றுமையை ஒழித்துப் பல்வேறு மதத்தினருக்குள் பரஸ்பரம் அன்பைப் பெருக்கிவிட்டது.

பெரும்பாலான தென் இந்தியர்கள், சீனியும் பாலும் கலந்த தேநீரைப் பித்தளை டமரா டம்ளர்களில் ரஸிக்கிறார்கள். குடிக்குமுன், டமராவிலிருந்து டம்ளருக்கும், டம்ளரிலிருந்து டமராவுக்கும் ஆக ஊற்றித் தேநீரை ஆறவைத்துக்கொள்ளுகிறார்கள்.

வடதேசத்தைப் போலவே, இங்கும் புத்தப்புதிய ப்ரூக் பாண்ட் தேயிலையை ஜனங்கள் எல்லோரும் விரும்புகிறார்கள்.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒர் மொட்டும்"

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

அன்னபூரணி
ராகி மால்ட் -



உடல் வலிமையும்
ஆரோக்யமும் தரும்.

குழந்தைகளுக்கு
சிறந்த மால்ட் உணவு

நீர்ரோகி முதலிய
நோயாளிகளுக்கு
ஏற்ற ஆகாரம்.

அன்னபூரணி & தினசரி
பற்பொடிகளையே
உபயோகியுங்கள்

மலிவானது! பற்களுக்குச் சிறந்த டானிக்!

விபரங்களுக்கு எழுதவும்:-

அன்னபூரணி பிராடக்ட்ஸ்

பச்சயப்பமுதலித் தெரு :: கும்பகோணம்

Regd. No. M. 4405

27 FEB 1945
MADRAS

— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —
தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள். —

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையல

டி. எஸ். ஆர்.

கோகுல் கூந்தல் தைலம்,

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தை

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரா

மதராஸ் ஸிடி ஏஜண்டு: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ட்
திருவல்லி

T. S. R. & CO.
PERFUME
KUMBAKO

Cauveri Colour Press, Kumbakonam.